# ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு

## 2023

இலங்கை மத்திய வங்கி

# இலங்கை மத்திய வங்கி

# ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 80 (3)ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நியதிச் சட்டத் தேவைப்பாட்டை நிறைவேற்றும் வகையில் இவ்வறிக்கை வெளியிடப்படுகிறது.

## 2023

**பிரதியொன்றின் விலை**

கருமபீட விற்பனை - பிரதியொன்று ரூபா. 700

**ISBN 978-624-5917-62-4**

**ISSN 1391-359X**

பிறின்ட்கேயார் யுனிவர்சல் (பிறைவேட்) லிமிடெட், 77, நுன்கமுகொட வீதி, களணியில் அச்சிடப்பட்டு
இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 இலுள்ள இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டது.

**முனைவர். பி நந்தலால் வீரசிங்க**
**ஆளுநர்**

**இலங்கை மத்திய வங்கி**
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01, இலங்கை.

2024 ஏப்பிறல் 10

**மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க**
இலங்கையின் சனாதிபதியும்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரும்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
சனாதிபதி செயலகம்
கொழும்பு 01.

அன்புள்ள ஐயா,

**மத்திய வங்கியின் ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு - 2023**

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 80(3)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம், ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் நான்கு மாத காலப்பகுதியினுள், அதன் கொள்கைக் குறிக்கோள்களையும் நிதியியல் முறைமையின் நிலைமையையும் அழுத்திக்கூறி, அத்தகைய நிதியாண்டின்போது பொருளாதாரத்தின் நிலைமை பற்றி மத்திய வங்கியின் ஆளுகைச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட அறிக்கையொன்றை மத்திய வங்கியானது வெளியிடுவதற்கும், கௌரவ நிதி அமைச்சரினூடாக பாராளுமன்றத்தின் முன்னிலையில் சமர்ப்பிக்க வேண்டுமென்பதையும் தேவைப்படுத்துகின்றது. அத்தகைய நிதியாண்டின்போது பின்பற்றப்பட்ட மத்திய வங்கியின் கொள்கைகளின் மீளாய்வையும் மதிப்பீட்டையும் அவ்வறிக்கை உள்ளடக்குதல் வேண்டும்.

2023ஆம் ஆண்டு தொடர்பில், மத்திய வங்கியின் ஆளுகைச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட மத்திய வங்கியின் முதலாவது ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வானது இக்கடப்பாடுகளை நிறைவேற்றும் வகையில் இத்தால் சமர்ப்பிக்கப்படுகின்றது.

தங்கள் உண்மையுள்ள,

# உள்ளடக்கம்


முக்கியப் பொருளாதாரக் குறிகாட்டிகள்

முக்கிய சமூகக் குறிகாட்டிகள்

சுருக்க அறிக்கை

பக்கம்

1. பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் நிதியியல் முறைமையின் நிலைமைகள்

சுருக்கம் … … … 1

1.1 பணவீக்கம் மற்றும் விலை அபிவிருத்திகள் ..... ..... ..... 2

1.1.1 பணவீக்கம் … … … 2

1.1.2 விலைகள் … … … 12

1.1.3 நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் மற்றும் வாழ்க்கைச் செலவு … … 13

1.1.4 கூலிகள் … … … 14

1.2 உண்மைத் துறை அபிவிருத்திகள் … … … 16

1.2.1 பொருளாதார வளர்ச்சி … … … 16

1.2.2 உற்பத்தி … … … 16

1.2.3 செலவினம் … … … 18

1.2.4 வருமானம் … … … 19

1.2.5 குடித்தொகை, தொழிற்படை, மற்றும் தொழில்நிலை … … … 20

1.2.6 பொருளாதார உட்கட்டமைப்பு … … … 21

1.2.7 சமூக உட்கட்டமைப்பு … … … 25

1.3 நாணயத் துறை அபிவிருத்திகள் … … … 28

1.3.1 உள்நாட்டு பணச் சந்தை திரவத்தன்மை மற்றும் குறுங்கால வட்டி வீதங்கள் … … 28

1.3.2 சந்தை வட்டி வீதங்கள் … … … 29

1.3.3 கொடுகடன் கூட்டுக்கள் … … … 32

1.3.4 நாணயக் கூட்டுக்கள் … … … 34

1.4 வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் … … … 37

1.4.1 சென்மதி நிலுவை … … … 38

1.4.2 பன்னாட்டு முதலீட்டு நிலைமை, ஒதுக்குச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை... … 48

1.4.3 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் … … 51

1.4.4 செலாவணி வீத அசைவுகள் … … … 54

1.5 நிதியியல் துறை அபிவிருத்திகள் … … … 57

1.5.1 வங்கித்தொழில் துறை … … … 62

1.5.2 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறை … … … 68

1.5.3 நிதியியல் சந்தைகளின் செயலாற்றம் … … … 73

1.5.4 நிதியியல் உட்சேர்க்கை … … … 76

1.5.5 நிதியியல் உட்கட்டமைப்பு … … … 76

பக்கம்


1.6 இறைத் துறை அபிவிருத்திகள் … … … 83

1.6.1 முக்கிய இறை நிலுவைகள் … … … 83

1.6.2 அரசிறை, செலவினம், மற்றும் தேறிய கடன்வழங்கல் … … … 84

1.6.3 வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடல் … … … 87

1.6.4 மத்திய அரசாங்கத்தின் படுகடன் மற்றும் பொதுப் படுகடன் … … 88

1.6.5 மத்திய அரசாங்கத்தின் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் … … 91


## 2. மத்திய வங்கிக் கொள்கைகளின் மீளாய்வு


சுருக்கம் … … … 93

2.1 நாணயக் கொள்கைக் கட்டமைப்பு … … … 94

2.2 நாணயக் கொள்கை நிலைப்பாடு மற்றும் வழிமுறைகள் … … … 95

2.3 வெளிநாட்டுத் துறைக் கொள்கைகள் … … … 99

2.3.1 செலாவணி வீதக் கொள்கை … … … 99

2.3.2 செலாவணிக் கட்டுப்பாடுகள் மற்றும் மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகள் … 101

2.3.3 இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்வு … … … 103

2.4 நிதியியல் துறைக் கொள்கை வழிமுறைகள் … … … 103

2.4.1 பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையின் குறித்துரைப்பு... … … 103

2.4.2 உரிமம்பெற்ற வங்கிகளுடன் தொடர்பான கொள்கைகள் … … … 105

2.4.3 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் தொடர்பான கொள்கைகள் … … … 106

2.4.4 பொதுப் படுகடன் முகாமைத்துவக் கொள்கைகள் … … … 107

2.4.5 நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கொள்கைகள் … … … 107

2.4.6 கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு மீதான கொள்கைகள் … … … 108

2.4.7 பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் … 113

2.4.8 நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பிற்கான கொள்கைகள் ..... ..... 118

2.4.9 வைப்புக் காப்புறுதி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் தீர்மானம் மீதான கொள்கைகள் ..... 118

2.4.10 நிதியியல் துறைக் கொள்கைச் சீர்திருத்தங்கள் … … … 119

2.4.11 ஏனைய கொள்கைகள் … … … 120


## 3. பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாடு


சுருக்கம் … … … 127

3.1 உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும் … … … 128

3.2 உள்நாட்டுப் பொருளாதாரத் தோற்றப்பாடு … … … 130

3.2.1 பணவீக்கத் தோற்றப்பாடு … … … 130

3.2.2 வளர்ச்சி வாய்ப்புக்கள் … … … 133

3.2.3 நாணயத் துறைத் தோற்றப்பாடு … … … 135

3.2.4 வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாடு … … … 136

3.2.5 நிதியியல் துறைத் தோற்றப்பாடு … … … 142

3.2.6 இறைத் துறைத் தோற்றப்பாடு … … … 144


## புள்ளிவிபரப் பின்னிணைப்பு

## சிறப்பு புள்ளிவிபரப் பின்னிணைப்பு

# அட்டவணைகள்


பக்கம்

## 1. பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் நிதியியல் முறைமையின் நிலைமைகள்

| | | |
|---|---|---|
| 1.1 | பேரண்டப்பொருளாதார செயலாற்றல்கள். (2018-2023) … … | 6 |
| 1.2 | பணவீக்கத்தின் அசைவுகள் (ஆண்டிற்கு ஆண்டு) … … | 11 |
| 1.3 | நிலையான விலைகளில் (2015) கைத்தொழில் மூலத்தின் படி மொத்த தேசிய வருமானம் … | 17 |
| 1.4 | நடைமுறைச் சந்தை விலைகளில் கூட்டுக்கேள்வி மற்றும் சேமிப்புக்கள் … … | 19 |
| 1.5 | நடைமுறைச் சந்தை விலைகளில் பொருளாதார துறையில் வருமானக் கூறுகள் … … | 20 |
| 1.6 | குடும்ப அலகின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு … … | 20 |
| 1.7 | வட்டி வீதங்களின் அசைவுகள் … … | 30 |
| 1.8 | நாணயக் கூட்டுக்களின் அபிவிருத்திகள் … … | 35 |
| 1.9 | நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு … … | 38 |
| 1.10 | வணிகப்பொருள் வா்த்தகச் செயலாற்றத்தின் சுருக்கம் … … | 40 |
| 1.11 | வா்த்தக மாற்று விகித சுருக்கம் (2010 = 100) … … | 42 |
| 1.12 | இலங்கையின் முன்னுரிமை மற்றும் சுதந்திர வா்த்தக உடன்படிக்கைகளுக்கு கீழான ஏற்றுமதிகள் … | 43 |
| 1.13 | நிதியியல் கணக்கு … … | 47 |
| 1.14 | பன்னாட்டு முதலீட்டு நிலைமை (சுருக்கம்) … … | 49 |
| 1.15 | மொத்த அலுவல்சாா் ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை … | 50 |
| 1.16 | வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலைமை … … | 53 |
| 1.17 | வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் … … | 53 |
| 1.18 | செலாவணி வீத அசைவுகள் … … | 54 |
| 1.19 | பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள் … … | 57 |
| 1.20 | நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்கள் … … | 63 |
| 1.21 | வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளமைப்பு … … | 64 |
| 1.22 | வங்கித்தொழில் துறையின் வைப்புக்களின் உள்ளமைப்பு … … | 64 |
| 1.23 | வங்கித்தொழில் துறையின் இலாபம் … … | 65 |
| 1.24 | வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் உள்ளமைப்பு … … | 65 |
| 1.25 | ஊழியா் சேமலாப நிதியத்தின் ஐந்து ஆண்டுச் செயலாற்றச் சுருக்கம் … … | 73 |
| 1.26 | அரசின் இறைத் தொழிற்பாடுகளின் சுருக்கம் … … | 84 |
| 1.27 | அரசின் வெளிநின்ற படுகடன் … … | 89 |

## 2. மத்திய வங்கிக் கொள்கைகளின் மீளாய்வு

| | | |
|---|---|---|
| 2.1 | உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகைத் தொழிற்பாட்டின் சுருக்கம் … … | 107 |

## 3. பேரண்டப் பொருளாதாரத் தோற்றப்பாடு

| | | |
|---|---|---|
| 3.1 | உலகளாவிய பொருளாதாரச் அபிவிருத்திகளும் தோற்றப்பாடுகளும் … … | 128 |
| 3.2 | அண்மைய கால பேரண்டப் பொருளாதார எறிவுகள் … … | 132 |

# வரைபடங்கள்

பக்கம்


| | | |
|---|---|---|
| **1.** | **பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் நிதியியல் முறைமையின் நிலைமைகள்** | |
| 1.1 | இலங்கையின் அண்மைய பணவீக்க இயக்கவாற்றல் வாய்ந்த தன்மைகள் … … | 3 |
| 1.2 | வாழ்க்கைச் செலவு, நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் பணவீக்கம் … … | 14 |
| 1.3 | 2023 காலப்பகுதியில் முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணின் அசைவுகள் (பெயரளவு) … | 15 |
| 1.4 | ஆண்டு மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதங்கள் … … … | 16 |
| 1.5 | பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சி - 2023 … … … | 18 |
| 1.6 | வலு மற்றும் சக்தி துறை அபிவிருத்திகள் … … … | 23 |
| 1.7 | முக்கிய கொள்கை வட்டி வீதங்கள், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் மற்றும் ஓரிரவு பணச் சந்தை … … … | 28 |
| 1.8 | தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவுகள் … … … | 29 |
| 1.9 | அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி ..... … | 31 |
| 1.10 | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் … … | 33 |
| 1.11 | வங்கித்தொழில் முறைமையிலிருந்தான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனின் வருடாந்த மாற்றம் … | 34 |
| 1.12 | விரிந்த பணத்தின் ($M_{2b}$) ஆண்டிற்காண்டு வளர்ச்சிக்கான பங்களிப்பு … … | 36 |
| 1.13 | வெளிநாட்டுத் துறையின் முக்கிய பண்புகள் … … … | 39 |
| 1.14 | நடைமுறைக் கணக்கு நிலுவை மற்றும் அதன் உள்ளமைப்பு … … … | 40 |
| 1.15 | ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு … … … | 41 |
| 1.16 | இறக்குமதிகளின் உள்ளமைப்பு … … … | 41 |
| 1.17 | நாடுகள் ரீதியான வர்த்தக நிலுவை … … … | 43 |
| 1.18 | நிதியியல் கணக்கு … … … | 47 |
| 1.19 | பன்னாட்டு முதலீட்டு நிலைமை … … … | 49 |
| 1.20 | ஒதுக்குச் சொத்துக்கள் நிலைமையின் முக்கிய கூறுகள் … … … | 50 |
| 1.21 | வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் … … … | 52 |
| 1.22 | மத்திய வங்கியின் தலையீடுகள் மற்றும் ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் … … | 55 |
| 1.23 | செலாவணி வீத உயர்வு/தேய்வு … … … | 55 |
| 1.24 | தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 24 - நாணயம் (2017=100) … … | 56 |
| 1.25 | 2023 இறுதியில் உள்ளவாறு வங்கித்தொழில் துறையின் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் … | 64 |
| 1.26 | வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை விகிதங்கள் … … … | 65 |
| 1.27 | வங்கித்தொழில் துறையின் மூலதன விகிதங்கள் … … … | 65 |
| 1.28 | 2022 மற்றும் 2023இற்கான சாதனங்கள் வாரியான மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் … | 69 |
| 1.29 | 2023இல் திறந்த சந்தை தொழிற்பாடுகள், துணைநில் வீதவீச்சு மற்றும் பணச் சந்தை வட்டி விகிதங்களின் நடத்தை | 74 |
| 1.30 | விலைச் சுட்டிகளின் அசைவுகளும் சந்தை மூலதனமாக்கலும் … … … | 75 |
| 1.31 | கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் வெளிநாட்டுப் பங்கேற்பு … … … | 75 |

பக்கம்

1.32 சில்லறைக் கொடுக்கல்வாங்கல்கள் … … … 77

1.33 அரசிறையின் உள்ளமைப்பு - 2023 … … … 84

1.34 அரசிறை, செலவீனம் மற்றும் முக்கிய இறை மீதிகள் - 2023 … … … 85

1.35 அரச மீண்டெழும் செலவினத்தின் உள்ளமைப்பு … … … 86

1.36 மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் … … … 88

1.37 மத்திய அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) … … 91

## 3. பேரண்டப் பொருளதாரத் தோற்றப்பாடு

3.1 முதன்மைப் பணவீக்க எறிவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், (காலாண்டுச் சராசரி, ஆண்டிற்காண்டு, %) … … … 131

3.2 எறிவுசெய்யப்பட்ட காலாண்டு ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, %) … 134

## சிறப்புக் குறிப்புகள்

1 நாணயக் கொள்கை மீதான நிரம்பல் பக்க பணவீக்கத்தின் தாக்கங்கள்... … … 7

2 பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம் முன்னேற்றம் தொடர்பிலானதோர் இற்றைப்படுத்தல் ..... … … 58

3 நீடித்துநிலைத்திருக்கக்கூடிய பொருளாதார மீட்சியை ஆதரவளிக்கும் முகமாக உரிமம்பெற்ற வங்கிகளில் வியாபாரப் புத்துயிரளித்தல் பிரிவுகளை நிறுவுதல் … … … 66

4 சந்தை நடத்தைக்கான மேற்பார்வை: நிதியியல் முறைமையில் நம்பிக்கையை நிலைநிறுத்தல் … 81

5 இலங்கையின் நிதியியல் அறிவு வழிகாட்டல் (2024-2028) : நிதியியல் ரீதியிலான அறிவூட்டுதலை நோக்கி … … … 109

6 இலங்கை பற்றிய பரஸ்பர மதிப்பீடு 2025: அதன் தேசிய முக்கியத்துவம் … … 114

7 இலங்கையின் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு வெளியீடுகளை மேலும் நிலைபெறத்தக்கதாக்குதல்.. 137

முக்கிய சிறப்புக் குறிப்பு - இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது அதனுடன் தொடர்புடைய முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகள் … … … 121

# புள்ளிவிபரப் பின்னிணைப்பு

அட்டவணை


## 1. உண்மைத் துறை

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | … | … | … | 1 |
| குடித்தொகை, தொழிற்படை மற்றும் வெளிநாட்டுத் தொழில்நிலை.. | | … | … | 2 |
| கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2021 = 100) | … | … | … | 3 |
| தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (2021 = 100) | … | … | … | 4 |
| கூலி வீதச் சுட்டெண்கள் | … | … | … | 5 |

## 2. வெளிநாட்டுத் துறை

| | | | | |
|---|---|---|---|---|
| ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் | … | … | … | 6 |
| இறக்குமதிகளின் உள்ளடக்கம் | … | … | … | 7 |
| வர்த்தகத்தின் போக்கு - ஏற்றுமதிகள் | … | … | … | 8 |
| வர்த்தகத்தின் போக்கு - இறக்குமதிகள் | … | … | … | 9 |
| சென்மதி நிலுவை - நடைமுறைக் கணக்கு | … | … | … | 10 |
| சென்மதி நிலுவை - நிதியியல் கணக்கு | … | … | … | 11 |
| பன்னாட்டு முதலீட்டு நிலைமை | … | … | … | 12 |
| வெளிநின்ற வெளிநாட்டு படுகடன் | … | … | … | 13 |
| செலாவணி வீத அசைவுகள் (வெளிநாட்டு நாணய அலகொன்றிற்கான ரூபா) | | … | … | 14 |

## 3. இறைத்துறை

| | | | | |
|---|---|---|---|---|
| அரச இறைத் தொழிற்பாடுகளின் பொருளாதாரப் பகுப்பாய்வு | … | … | … | 15 |
| மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் (ஆண்டின் இறுதியில் உள்ளவாறு) | | … | … | 16 |

## 4. நாணய மற்றும் நிதியியல் துறை

| | | | | |
|---|---|---|---|---|
| வர்த்தக வங்கியினால் தனியார்துறைக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் | | … | … | 17 |
| நிதியியல் ஆற்றல் குறிகாட்டிகள் - வங்கித்தொழில்துறை | … | … | … | 18 |
| உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளின் விபரம் | … | … | … | 19 |

## சிறப்புப் புள்ளிவிபரப் பின்னிணைப்பு


அட்டவணை

### 1. உண்மைத் துறை

குடித்தொகையும் தொழிற்படையும் … … … 1
தேசிய வெளியீடு … … … 2
விலைகள் … … … 3

### 2. வெளிநாட்டுத் துறை

சென்மதி நிலுவை … … … 4
ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள், வெளிநாட்டுப் படுகடன் மற்றும் செலாவணி வீதங்கள் 5

### 3. இறைத் துறை

அரசின் இறைத் தொழிற்பாடுகள் … … … 6
மத்திய அரச படுகடன் … … … 7

### 4. நாணயத் துறை

நாணய அளவீடு ($M_{2b}$) … … … 8
வட்டி வீதங்கள் … … … 9


## புள்ளிவிபர அட்டவணைகள் மீதான வரைவிலக்கணங்களும் விளக்கக் குறிப்புக்களும்

பின்வரும் பொதுக் குறிப்புக்கள் தனிப்பட்ட அட்டவணைகளுக்குக் கீழே தரப்பட்டுள்ள அடிக்குறிப்புக்களைக் குறிக்கின்றன.

1. விபரச் சேர்க்கையைக் கால அடிப்படையில் நிறைவு செய்யும் முயற்சிகளின் பொருட்டு, சில அட்டவணைகளில் தற்காலிக எண் தொகைகள் சேர்க்கப்பட்டுள்ளன.
2. சில அட்டவணைகளில் உள்ள எண் தொகைகளில் இறுதி எண்ணானது அணித்தாகவுள்ள முழு எண்ணிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளது. எனவே காட்டப்பட்ட மொத்தத் தொகைகளுக்கும் அம்மொத்தங்களின் கூறுகளினது கூட்டுத் தொகைக்கும் இடையே சிறு வேறுபாடுகள் இருக்கக்கூடும்.
3. காட்டப்பட்டுள்ள எண் தொகைகளுக்கும், முன்பு வெளியிடப்பட்ட எண் தொகைகளுக்கும் இடையே வேறுபாடு இருப்பின், அது எண் தொகைகள் திருத்தியமைக்கப்பட்ட காரணத்தால் ஏற்பட்டதாகும்.
4. அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டுள்ள பெறுமதிகள் எதிர்மறைப் பெறுமதிகளைக் குறிக்கும்.
5. பின்வரும் அடையாளங்கள் அட்டவணைகளில் கையாளப்பட்டுள்ளன.

… = புறக்கணிக்கத்தக்கவை
வி.கி - = விபரம் கிடைக்கவில்லை

- = யாதும் இல்லை
வே.எ.கு.இ = வேறு எங்கும் குறிப்பிடப்பட இல்லை
வே.எ.ப.இ = வேறு எங்கும் பகுப்பாய்வு செய்யப்பட இல்லை
வே.இ.உ.இ = வேறு இடத்தில் உள்ளடக்கப்பட இல்லை

# முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டிகள்

| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 (அ) |
|---|---|---|---|---|---|---|---|
| **குடித்தொகை** | | | | | | | |
| நடுவாண்டு குடித்தொகை ('000 ஆட்கள்) (ஆ)(இ) | 21,453 (ஈ) | 21,670 | 21,803 | 21,919 | 22,156 | 22,181 | 22,037 |
| நடுவாண்டு குடித்தொகையின் வளர்ச்சி (சதவீதம்) (ஆ) | 1.1 | 1.1 | 0.6 | 0.5 | 1.1 | 0.1 | -0.6 |
| குடித்தொகை அடர்த்தி (ச.கி.மீற்றருக்கு ஆட்கள்) (ஆ) | 342 | 346 | 348 | 350 | 353 | 354 | 351 |
| தொழிற்படை ('000 ஆட்கள்) (உ) | 8,567 | 8,388 | 8,592 | 8,467 | 8,553 | 8,547 | 8,408 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (சதவீதம்) (உ) | 54.1 | 51.8 | 52.3 | 50.6 | 49.9 | 49.8 | 48.6 |
| தொழிலின்மை வீதம் (தொழிற்படையின் சதவீதமாக) (உ) | 4.2 | 4.4 | 4.8 | 5.5 | 5.1 | 4.7 | 4.7 |
| **வெளியீடு (ஊ)** | | | | | | | |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. (ரூ. பில்லியன்) | 14,387 | 15,352 | 15,911 | 15,646 (ஈ) | 17,612 (ஈ) | 24,064 (அ)(ஈ) | 27,630 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.தே.வ. (ரூ. பில்லியன்) | 14,034 | 14,962 | 15,470 | 15,223 (ஈ) | 17,217 (ஈ) | 23,433 (அ)(ஈ) | 26,734 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. (ஐ.அ.டொ. பில்லியன்) (எ) | 94.4 | 94.7 | 89.0 | 84.4 (ஈ) | 88.6 (ஈ) | 76.8 (அ)(ஈ) | 84.4 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.தே.வ. (ஐ.அ.டொ. பில்லியன்) (எ) | 92.0 | 92.4 | 86.5 | 82.1 (ஈ) | 86.6 (ஈ) | 74.9 (அ)(ஈ) | 81.7 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.உ.உ. (ரூ.) (ஏ) | 670,644 | 708,442 | 729,761 | 713,821 (ஈ) | 794,926 (ஈ) | 1,084,882 (அ)(ஈ) | 1,253,785 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.தே.வ. (ரூ.) (ஏ) | 654,196 | 690,463 | 709,516 | 694,520 (ஈ) | 777,073 (ஈ) | 1,056,424 (அ)(ஈ) | 1,213,159 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.உ.உ. (ஐ.அ.டொ.) (எ)(ஏ) | 4,398 | 4,372 | 4,082 | 3,851 (ஈ) | 3,999 (ஈ) | 3,464 (அ)(ஈ) | 3,830 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.தே.வ. (ஐ.அ.டொ.) (எ)(ஏ)(ஐ) | 4,290 | 4,263 | 3,968 | 3,747 (ஈ) | 3,910 (ஈ) | 3,378 (அ)(ஈ) | 3,706 |
| **உண்மை வெளியீடு (சதவீத மாற்றம்) (ஊ)** | | | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 6.5 | 2.3 | -0.2 | -4.6 | 4.2 (ஈ) | -7.3 (அ)(ஈ) | -2.3 |
| மொ.உ.உ. இன் முக்கிய பொருளாதாரச் செயற்பாடுகள் | | | | | | | |
| வேளாண்மை | -1.8 | 6.3 | 0.5 | -0.9 | 1.0 (ஈ) | -4.2 (அ)(ஈ) | 2.6 |
| கைத்தொழில் | 13.0 | -1.1 | -4.1 | -5.3 | 5.7 (ஈ) | -16.0 (அ)(ஈ) | -9.2 |
| பணிகள் | 3.6 | 4.3 | 2.9 | -1.9 | 3.4 (ஈ) | -2.6 (அ)(ஈ) | -0.2 |
| மொத்த தேசிய வருமானம் | 6.6 | 2.2 | -0.5 | -4.5 | 4.7 (ஈ) | -7.6 (அ)(ஈ) | -3.0 |
| **கூட்டுக் கேள்வியும் சேமிப்புக்களும் (மொ.உ.உற்பத்தியின் சதவீதம்) (ஊ)** | | | | | | | |
| நுகர்வு | 67.0 | 68.9 | 71.7 | 73.3 (ஈ) | 70.7 (ஈ) | 75.0 (அ)(ஈ) | 76.2 |
| தனியார் | 59.1 | 60.3 | 62.7 | 62.9 (ஈ) | 61.2 (ஈ) | 67.8 (அ)(ஈ) | 69.3 |
| அரசு | 7.9 | 8.6 | 9.0 | 10.4 (ஈ) | 9.5 (ஈ) | 7.2 (அ)(ஈ) | 6.9 |
| முதலீடு | 39.7 | 38.1 | 34.1 | 32.9 (ஈ) | 36.7 (ஈ) | 28.6 (அ)(ஈ) | 25.3 |
| பொருட்கள் மற்றும் பணிகளின் தேறிய ஏற்றுமதிகள் | -6.7 | -6.9 | -5.8 | -6.2 (ஈ) | -7.4 (ஈ) | -3.6 (அ)(ஈ) | -1.5 |
| பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் | 20.2 | 21.4 | 21.8 | 15.5 (ஈ) | 16.9 (ஈ) | 21.6 (அ)(ஈ) | 20.4 |
| பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 26.9 | 28.4 | 27.6 | 21.6 (ஈ) | 24.3 (ஈ) | 25.1 (அ)(ஈ) | 21.9 |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 33.0 | 31.1 | 28.3 | 26.7 (ஈ) | 29.3 (ஈ) | 25.0 (அ)(ஈ) | 23.8 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர மற்றும் இரண்டாந்தர வருமானம் | 4.2 | 4.0 | 3.7 | 4.7 (ஈ) | 3.6 (ஈ) | 2.2 (அ)(ஈ) | 3.4 |
| தேசிய சேமிப்புக்கள் | 37.3 | 35.1 | 32.0 | 31.3 (ஈ) | 33.0 (ஈ) | 27.2 (அ)(ஈ) | 27.2 |
| **விலைகளும் கூலிகளும் (சதவீத மாற்றம்)** | | | | | | | |
| கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2021 = 100) - ஆண்டுச் சராசரி | - | - | - | - | - | - | 17.4 |
| கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2021 = 100) - ஆண்டிற்காண்டு (கால முடிவில்) | - | - | - | - | - | - | 4.0 |
| கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013 = 100) - ஆண்டுச் சராசரி (ஒ) | 6.6 | 4.3 | 4.3 | 4.6 | 6.0 | 46.4 | - |
| கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013 = 100) - ஆண்டிற்காண்டு (கால முடிவில்) (ஒ) | 7.1 | 2.8 | 4.8 | 4.2 | 12.1 | 57.2 | - |
| தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2021 = 100) - ஆண்டுச் சராசரி | - | - | - | - | - | - | 16.5 |
| தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2021 = 100) - ஆண்டிற்காண்டு (கால முடிவில்) | - | - | - | - | - | - | 4.2 |
| தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013 = 100) - ஆண்டுச் சராசரி (ஓ) | 7.7 | 2.1 | 3.5 | 6.2 | 7.0 | 50.4 | - |
| தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013 = 100) - ஆண்டிற்காண்டு (கால முடிவில்) (ஓ) | 7.3 | 0.4 | 6.2 | 4.6 | 14.0 | 59.2 | - |
| உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் (2018 நான்காம் காலாண்டு = 100) - ஆண்டுச் சராசரி | - | - | - | 5.8 | 10.9 | 74.0 | 11.5 |
| மொ.உ.உற்பத்திச் சுருக்கி (ஊ) | 5.5 | 4.3 | 3.9 | 3.1 (ஈ) | 8.0 (ஈ) | 47.5 (அ)(ஈ) | 17.5 |
| மொ.தே.வருமானச் சுருக்கி (ஊ) | 5.4 | 4.4 | 3.9 | 3.0 (ஈ) | 8.1 (ஈ) | 47.3 (அ)(ஈ) | 17.6 |
| பெயரளவு கூலி வீதச் சுட்டெண்கள் | | | | | | | |
| முறையான தனியார் துறை ஊழியர்கள் (1978 திசெ = 100) - ஆண்டுச் சராசரி (ஔ) | 0.0 | 0.6 | 2.9 | 0.2 | 74.4 | 9.8 | 0.4 |
| அரச துறை ஊழியர்கள் (2016 = 100) - ஆண்டுச் சராசரி | - | 0.2 | 4.7 | 9.2 | 0.0 | 16.1 | 0.0 |
| முறைசாரா தனியார் துறை ஊழியர்கள் (2018 = 100) - ஆண்டுச் சராசரி | - | - | - | 6.4 | 9.2 | 24.5 | 11.4 |
| **வெளிநாட்டு வர்த்தகம்** | | | | | | | |
| வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. மில்லியன்) | -9,619 | -10,343 | -7,997 | -6,008 | -8,139 | -5,185 | -4,900 |
| ஏற்றுமதிகள் | 11,360 | 11,890 | 11,940 | 10,047 | 12,499 | 13,106 | 11,911 |
| இறக்குமதிகள் | 20,980 | 22,233 | 19,937 | 16,055 | 20,637 | 18,291 | 16,811 |
| வர்த்தக மாற்று விகிதம் (சதவீத மாற்றம்) | 1.2 | 0.02 | -1.6 | 2.5 | -8.6 | -11.6 | -0.6 |
| ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் (2010 = 100) (சதவீத மாற்றம்) | 2.4 | 4.2 | -6.3 | -6.8 | 5.4 | 0.9 | -11.3 |
| இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் (2010 = 100) (சதவீத மாற்றம்) | 1.2 | 4.1 | -4.8 | -9.1 | 15.2 | 14.1 | -10.8 |
| ஏற்றுமதி அளவுச் சுட்டெண் (2010 = 100) (சதவீத மாற்றம்) | 7.6 | 0.5 | 7.2 | -9.7 | 18.0 | 3.9 | 2.4 |
| இறக்குமதி அளவுச் சுட்டெண் (2010 = 100) (சதவீத மாற்றம்) | 8.1 | 1.8 | -5.8 | -11.4 | 11.5 | -22.4 | 3.0 |
| **வெளிநாட்டு நிதி (ஐ.அ.டொ. மில்லியன்)** | | | | | | | |
| பணிகள் மற்றும் முதலாந்தர வருமானக் கணக்கு (தேறிய) | 984 | 1,381 | 388 | -1,386 | -373 | 240 (ஈ) | 841 |
| நடைமுறை தனியார் மாற்றல்கள் (தேறிய) | 6,316 | 6,155 | 5,757 | 6,194 | 5,221 | 3,493 | 5,599 |
| நடைமுறை அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 11 | 8 | 9 | 13 | 6 | 3 | 20 |
| நடைமுறை கணக்கு நிலுவை | -2,309 | -2,799 | -1,843 | -1,187 | -3,284 | -1,448 (ஈ) | 1,559 |
| திரண்ட நிலுவை | 2,068 | -1,103 | 377 | -2,328 | -3,967 | -2,806 | 2,826 |

(அ) தற்காலிகமானது

(ஆ) பதிவாளர் நாயகத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டவாறு

(இ) 2012இன் குடித்தொகை மற்றும் வீடமைப்பு தொகைமதிப்பினை அடிப்படையாகக் கொண்டது

(ஈ) திருத்தப்பட்டது

(உ) தொழிற்படையின் கணக்கீட்டிற்கு 15 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குடியிருப்புக் குடித்தொகை கருத்திற்கொள்ளப்படுகிறது.

(ஊ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2024 மாச்சில் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் (தள ஆண்டு 2015) பயன்படுத்தப்பட்டுள்ளன.

(எ) 2015இலிருந்து காலாண்டு சராசரி செலாவணி வீதத்தை பயன்படுத்தி கணிப்பிடப்பட்ட ஐ.அ.டொலர் நியதிகளின் மொ.உ.உ./ மொ.தே.வ. இனை அடிப்படையாகக் கொண்டது.

(ஏ) அண்மைக்கால குடித்தொகை புள்ளிவிபரங்களுடன் மதிப்பீடுகள் இற்றைப்படுத்தப்பட்டன.

(ஐ) ஐ.அ.டொலர் நியதிகளில் மொ.தே.வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக வருடாந்த சராசரி செலாவணி வீதங்களுடன் ஒப்பிடுகையில் காலாண்டு சராசரி வீதங்களை பயன்படுத்துவதில் காணப்படும் வேறுபாடுகள் காரணமாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பெறுமதிகள் இத்தகைய பெறுமதிகளிலிருந்து வேறுபடலாம்.

(ஒ) 2023 பெப்ரவரி முதல் இந்தச் சுட்டெண்ணின் தொகுத்தல் நிறுத்தப்பட்டது.

(ஓ) 2023 சனவரி முதல் இந்த சுட்டெண்ணின் தொகுத்தல் நிறுத்தப்பட்டது.

(ஔ) முறையான தனியார் துறை ஊழியர்களின் பெயரளவு கூலிகள், கூலிச் சபையினால் நிர்வகிக்கப்பட்டு குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண்ணால் அளவிடப்பட்டு (1978 திசெ = 100) தொழிலாளர் திணைக்களத்தால் கணிக்கப்பட்டுள்ளது.

## முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டிகள் (தொடர்ச்சி)

| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 (அ) |
|---|---|---|---|---|---|---|---|
| நடைமுறைக் கணக்கு மீதி (மொ.உ.உ இன் சதவீதமாக) (ஊ)(க) | -2.4 | -3.0 | -2.1 | -1.4 | -3.7 | -1.9(ஈ) | 1.8 |
| மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (அதே ஆண்டு மாத இறக்குமதிகளில்) (ங) | 6.0 | 5.2 | 6.3 | 6.4 | 3.6 | 3.9 | 6.7 |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (அதே ஆண்டு மாத இறக்குமதிகளில்) | 4.6 | 3.7 | 4.6 | 4.2 | 1.8 | 1.2 | 3.1 |
| திரண்ட படுகடன் பணி விகிதம் (ச) | | | | | | | |
| பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளின் சதவீதமாக | 23.9 | 28.9 | 29.7 | 35.2 | 30.7 | 15.4 | 14.9 |
| நடைமுறைப் பெறுகைகளின் சதவீதமாக | 17.3 | 21.3 | 21.8 | 22.6 | 22.3 | 12.3 | 10.9 |
| மொத்த வெளிநாட்டுப் படுகடன் (மொ.உ.உ. இன் சதவீதமாக) (ஊ)(க) | 54.7 | 55.3 | 61.6 | 58.1(ஈ) | 58.4(ஈ) | 64.6(ஈ) | 65.0 |
| **செலாவணி வீதங்கள்** | | | | | | | |
| ஆண்டு முடிவில் | | | | | | | |
| ரூ./ஐ.அ.டொ. | 152.85 | 182.75 | 181.63 | 186.41 | 200.43 | 363.11 | 323.92 |
| ரூ./சி.எ.உ. (ஞ) | 217.69 | 253.51 | 251.17 | 268.48 | 280.53 | 483.24 | 434.60 |
| ஆண்டுச் சராசரி | | | | | | | |
| ரூ./ஐ.அ.டொ. | 152.46 | 162.54 | 178.78 | 185.52 | 198.88 | 324.55 | 327.53 |
| ரூ./சி.எ.உ. (ஞ) | 211.49 | 229.90 | 246.97 | 258.61 | 283.18 | 431.91 | 436.88 |
| பெ.தா. செலாவணி வீதம் (2017 = 100) (24 - நாணயக் கூடை) (ட) | 100.00 | 94.05 | 88.17 | 85.93 | 78.64 | 53.99 | 53.30 |
| உ.தா. செலாவணி வீதம் (2017 = 100) (24 - நாணயக் கூடை) (ட)(ண) | 100.00 | 95.45 | 90.42 | 91.52 | 83.58 | 77.49(ஈ) | 71.39 |
| **அரச நிதி (மொ.உ.உற்பத்தியின் சதவீதம்) (ஊ)(த)** | | | | | | | |
| அரசிறை மற்றும் கொடைகள் | 12.8 | 12.6 | 11.9 | 8.8 | 8.3 | 8.4 | 11.1 |
| அரசிறை | 12.7 | 12.5 | 11.9 | 8.7 | 8.3 | 8.2 | 11.0 |
| இதில் வரி அரசிறை | 11.6 | 11.2 | 10.9 | 7.8 | 7.4 | 7.3 | 9.8 |
| கொடைகள் | 0.1 | 0.1 | 0.0 | 0.0 | 0.0 | 0.1 | 0.1 |
| செலவினம் மற்றும் கடன் வழங்கல் | 17.9 | 17.5 | 21.0 | 19.4 | 20.0 | 18.6 | 19.4 |
| மீண்டெழும் செலவினம் | 13.4 | 13.6 | 15.2 | 16.3 | 15.6 | 14.6 | 17.0 |
| மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | 4.5 | 3.9 | 5.7 | 3.1 | 4.4 | 4.0 | 2.4 |
| நடைமுறைக் கணக்கு மீதி | -0.7 | -1.1 | -3.4 | -7.5 | -7.3 | -6.4 | -6.0 |
| ஆரம்ப மீதி | 0.0 | 0.6 | -3.4 | -4.4 | -5.7 | -3.7 | 0.6 |
| திரண்ட இறை மீதி | -5.1 | -5.0 | -9.0 | -10.7 | -11.7 | -10.2 | -8.3 |
| பற்றாக்குறையை நிதியிடல் | 5.1 | 5.0 | 9.0 | 10.7 | 11.7 | 10.2 | 8.3 |
| வெளிநாடு | 3.1 | 2.1 | 3.4 | -0.5 | -0.1 | 1.8 | 1.8 |
| உள்நாடு | 2.0 | 2.8 | 5.6 | 11.2 | 11.8 | 8.5 | 6.5 |
| மத்திய அரச படுகடன் (ந) | 72.2 | 78.4 | 81.9 | 96.6 | 100.0 | 114.2 (ப) | 103.9 (ப) |
| வெளிநாடு | 32.8 | 38.8 | 39.0 | 38.7 | 37.0 | 51.8 (ப) | 42.1 (ப) |
| உள்நாடு (ம)(ய) | 39.4 | 39.5 | 42.9 | 57.9 | 63.0 | 62.5 (ப) | 61.7 (ப) |
| **நாணயக் கூட்டுக்கள் (ஆண்டிற்காண்டு சதவீத மாற்றம்)** | | | | | | | |
| ஒதுக்குப்பணம் | 9.8 | 2.3 | -3.0 | 3.4 | 35.4 | 3.3 | -1.5 |
| குறுகிய பணம் ($M_1$) | 2.1 | 4.7 | 4.2 | 36.0 | 24.0 | -0.4 | 14.1 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 16.7 | 13.0 | 7.0 | 23.4 | 13.2 | 15.4 | 7.3 |
| வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 152.6 | -155.1 | 250.3 | -308.0 | -368.8 | -79.9 | 74.2 |
| வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 9.8 | 16.3 | 4.6 | 27.8 | 20.9 | 20.9 | -2.9 |
| வங்கித் தொழில்முறைமையிலிருந்தான உள்நாட்டுக் கொடுகடன் | | | | | | | |
| அரசு (தேறிய) | 10.0 | 16.1 | 11.1 | 62.7 | 28.2 | 28.1 | 10.9 |
| அரச கூட்டுத்தாபனங்கள்/ அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகள் | 4.5 | 40.7 | 8.3 | 22.5 | 18.6 | 47.3 | -56.0 |
| தனியார் துறை | 14.7 | 15.9 | 4.2 | 6.5 | 13.1 | 6.2 | -0.6 |
| $M_{2b}$ இற்கான பணப் பெருக்கி (ஆண்டு இறுதியில்) | 6.71 | 7.42 | 8.18 | 9.75 | 8.15 | 9.11 | 9.93 |
| $M_{2b}$ இன் சுழற்சி (ஆண்டிற்கான சராசரி) (ஊ) | 2.43 | 2.27 | 2.16 | 1.84 | 1.73 | 2.04(ஈ) | 2.19 |
| **வட்டி வீதங்கள் (ஆண்டிறுதியில் ஆண்டொன்றிற்கான சதவீதம்)** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25 | 8.00 | 7.00 | 4.50 | 5.00 | 14.50 | 9.00 |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 8.75 | 9.00 | 8.00 | 5.50 | 6.00 | 15.50 | 10.00 |
| வங்கி வீதம் (ர) | 15.00 | 15.00 | 15.00 | 8.50 | 9.00 | 30.22 | 14.50 |
| சட்ட வட்டி வீதம் / சந்தை வட்டி வீதம் (ல) | 7.06 | 9.08 | 11.50 | 11.64 | 10.12 | 7.48 | 16.97 |
| பணச் சந்தை வீதங்கள் | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் | 8.15 | 8.95 | 7.45 | 4.55 | 5.95 | 15.50 | 9.24 |
| திறைசேரி உண்டியல் விளைவுகள் | | | | | | | |
| 91 நாட்கள் | 7.69 | 10.01 | 7.51 | 4.69 | 8.16 | 32.64 | 14.51 |
| 364 நாட்கள் | 8.90 | 11.20 | 8.45 | 5.05 | 8.24 | 29.27 | 12.93 |
| வைப்பு வீதங்கள் | | | | | | | |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 9.07 | 8.81 | 8.20 | 5.80 | 4.94 | 14.06 | 11.64 |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 11.48 | 10.85 | 10.05 | 7.14 | 5.94 | 18.49 | 14.88 |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 10.06 | 10.94 | 8.89 | 4.93 | 6.45 | 23.07 | 11.06 |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 10.65 | 11.27 | 9.17 | 5.08 | 6.67 | 23.73 | 11.33 |
| தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு வீதம் | 4.00 | 4.00 | 4.00 | 3.50 | 3.50 | 3.00 | 3.00 |
| தேசிய சேமிப்பு வங்கியின் 12 மாத நிலையான வைப்பு வீதம் | 11.00 | 10.50 | 9.83 | 5.25 | 5.50 | 12.00 | 8.00 |
| கடன் வழங்கல் வீதங்கள் | | | | | | | |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதம் - வாராந்தம் | 11.55 | 12.09 | 9.74 | 5.81 | 8.61 | 27.24 | 12.13 |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 13.88 | 14.40 | 13.59 | 10.29 | 9.87 | 18.70 | 14.21 |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.31 | 14.54 | 12.80 | 8.38 | 9.48 | 26.20 | 14.38 |
| **மூலதனச் சந்தை** | | | | | | | |
| அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் (1985 = 100) | 6,369.3 | 6,052.4 | 6,129.2 | 6,774.2 | 12,226.0 | 8,489.7 | 10,654.2 |
| எஸ் அன்ட் பீ எஸ் எல் 20 சுட்டெண் (2004 திசெ = 1,000) | 3,671.7 | 3,135.2 | 2,937.0 | 2,638.1 | 4,233.3 | 2,635.6 | 3,068.4 |
| வர்த்தகப்படுத்தப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ. மில்லியன்) | 220,591 | 200,069 | 171,408 | 396,882 | 1,173,157 | 686,602 | 410,629 |
| இலங்கையல்லாதோரின் தேறிய கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | 17,655 | -23,239 | -11,735 | -51,356 | -52,648 | 30,625 | 4,363 |
| சந்தை மூலதனமாக்கல் (ரூ. பில்லியன்) | 2,899.3 | 2,839.5 | 2,851.3 | 2,960.7 | 5,489.2 | 3,847.2 | 4,248.9 |

(க) ஐ.அ.டொலர்களிலுள்ள மொ.உ.உ. மதிப்பீடுகளின் அடிப்படையில்

(ங) வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் வர்த்தகக் கொடுகடன் மற்றும் பெறப்பட்ட முற்பணங்கள் வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக

(ச) பன்னாட்டு நாணய நிதியத்தின் வெளிநாட்டு படுகடன் புள்ளிவிபரங்கள் வழிகாட்டி (2003) இற்கு இணங்க படுகடன் தீர்ப்பனவுகளை உள்வாங்குவதற்காக ஒட்டுமொத்த படுகடன் தீர்ப்பனவுகள் விகிதங்கள் மீள்வகைப்படுத்தப்பட்டன.

(ஞ) ப.நா.நிதியத்தின் அலகு கணக்கிற்கான சிறப்பு எடுப்பனவு உரிமை

(ட) செலாவணி வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதித் தேய்வு என்பது தாக்கமுள்ள செலாவணி வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியாக பிரதிபலிக்கப்படுகிறது.

(ண) உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதத்தை கணிப்பிடுவதற்காக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் பயன்படுத்தப்பட்டது. கூடையினுள் உள்ளடக்கப்பட்ட நாணயங்களின் நாடுகளுடனான பணவீக்க வேறுபாடுகளுக்கு பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதத்தை சீராக்குவதன் மூலம் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் கணிப்பிடப்படுகின்றது.

(த) நிதி அமைச்சின்படி 2020இற்கான வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு 2019இன் சில இறைத்துறை புள்ளிவிபரங்கள் மீள் எடுத்துரைக்கப்பட்டன.

(ந) 2014இல் பன்னாட்டு நாணய நிதியத்தால் வெளியிடப்பட்ட அரச நிதி புள்ளிவிபரவியல் கையேட்டிலுள்ள அரச படுகடன் புள்ளிவிபரங்களை தொகுப்பதற்கான வழிகாட்டுதல்களின்படி, 2019 முதல் வதியாதோர் வசமுள்ள வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறிகள் வெளிநாட்டு கடனின் கீழ்வகைப்படுத்தப்பட்டதுடன் வதிவோர் வசமுள்ள வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் உள்நாட்டு கடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் படுகடன் புள்ளிவிபரங்கள் தேறிய அடிப்படையில் (தேறிய வைப்புக்கள்) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ப) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் அறிவிக்கப்பட்ட இலங்கையின் வெளிநாட்டு பொதுப் படுகடனை தீர்ப்பனவு செய்வதுடன் தொடர்புடைய இடைக்காலக் கொள்கை திகதியான, 2022 ஏப்பிறல் 12 இற்கு பின்னர் பல்வேறு நிலுவையிலுள்ள படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரசு படுகடன் நீக்குகின்றது. இடைக்கால கொள்கைக்கு அமைவாக மூலதனவாக்கத்திற்கு உணரப்படும் பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளையும் அத்துடன் இலங்கை அபிவிருத்தி முறிகளுடன் தொடர்புடைய பல்வேறு நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளையும் இத்தயை படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் உள்ளடக்குகின்றன.

(ம) அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் வெளிநின்ற நிலுவை உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ய) மத்திய வங்கியின் நாணய அளவீட்டில் அறிக்கையிடப்பட்டுள்ள வர்த்தக வங்கிகளுக்கான மத்திய அரசாங்கத்தின் பொறுப்புக்கள் 2022 வரை உள்நாட்டுப் படுகடனைத் தொகுப்பதற்கு பயன்படுத்தப்பட்டன. 2023இலிருந்து, உள்நாட்டுப் படுகடன் தொகுப்பானது மாற்றப்பட்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டுள்ளது.

(ர) கடைசிக் கடன் வழங்குனராக வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு மத்திய வங்கி முற்பணங்கள் வழங்கும் வீதம்

(ல) சட்ட வீதமானது 1990ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தச் சட்டத்தின் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்படுவதுடன் பணத்தொகையை மீட்டெடுப்பதற்கான எந்தவொரு சட்ட நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும். சந்தை வீதமானது 1990ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடன் அறவீட்டு (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்படுவதுடன் இணங்கப்பட்ட வட்டி வீதம் அல்லாத வர்த்தக கொடுக்கல்வாங்கல்களிலிருந்து எழும் ரூ.150,000இற்கு அதிகமான படுகடனை மீட்டெடுப்பதற்காக கடன் வழங்கும் நிறுவனங்களால் நிறுவப்பட்ட எந்தவொரு சட்ட நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும். மத்திய வங்கியின் நாணயச் சபை சட்டவீதம் மற்றும் சந்தை வீதத்தை தீர்மானிக்கின்றதுடன் அரசாங்க வர்த்தமானியில் ஒவ்வொரு ஆண்டுக்கும் திசெம்பர் மாதத்தில் எதிர்வரும் ஆண்டிற்கு பிரயோகிக்கத்தக்கதாக வெளியிடுகின்றது. 2024இற்கான சட்டவீதம் மற்றும் சந்தை வீதம் ஆண்டிற்கு 15.15 சதவீதமாகும்.

# முதன்மைச் சமூகக் குறிகாட்டிகள்

## பௌதிக தோற்றமும் காலநிலையும்

**அமைவிடம்**

வடஅகலக்கோடு 5$^{0}$ 55' இற்கும் 9$^{0}$ 50' இற்குமிடையில்
கிழக்குநெடுங்கோடு 79$^{0}$ 31' இற்கும் 81$^{0}$ 53' இற்குமிடையில்

**தூரம்**

433 கி.மீ. (269 மைல்கள்) வடக்குத் தெற்காக
226 கி.மீ. (140 மைல்கள்) மேற்குக் கிழக்காக

**உயரம்**

ஆகக்கூடிய உயரம் 2,525 மீற்றர்கள் (8,284 அடி)

**பரப்பு**

| | | |
|---|---|---|
| மொத்தப்பரப்பு | : | 65,610 ச.கி.மீ. |
| நிலப்பரப்பு | : | 62,705 ச.கி.மீ. |
| உள்நாட்டு நீர்ப்பரப்பு | : | 2,905 ச.கி.மீ. |

**காலநிலை**

| | | |
|---|---|---|
| தாழ் நிலம் | : | ஆகக் குறைந்தது 24.8$^{0}$ செ - ஆகக் கூடியது 32.1$^{0}$ செ |
| மலை நாடு | : | ஆகக் குறைந்தது 18.8$^{0}$ செ - ஆகக் கூடியது 27.4$^{0}$ செ |
| ஆண்டு மழைவீழ்ச்சி (சராசரி) மி.மீ | : | 2023 : 2,536 |
| | | 2022 : 1,966 |

## குடித்தொகையும் முக்கிய புள்ளிவிபரங்களும்

**குடித்தொகை புள்ளிவிபரங்கள் (அ)**

| | | |
|---|---|---|
| நடுவாண்டுக் குடித்தொகை ('000) (2023) | : | 22,037 |
| வயதுப் பரம்பல் ('000) (2023) | | |
| 0 - 14 ஆண்டுகள் | : | 5,568 |
| 15 - 64 ஆண்டுகள் | : | 14,742 |
| 65 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல் | : | 1,727 |
| குடித்தொகை அடர்த்தி (2023) | : | சதுர கிலோ மீற்றருக்கு 351 ஆட்கள் |
| செப்பமற்ற பிறப்பு வீதம் (2023) | : | ஒவ்வொரு 1,000 ஆட்களிற்கு 11.2 |
| செப்பமற்ற இறப்பு வீதம் (2023) | : | ஒவ்வொரு 1,000 ஆட்களிற்கு 8.2 |
| இயற்கை அதிகரிப்பு வீதம் (2023) | : | ஒவ்வொரு 1,000 ஆட்களிற்கு 3.0 |
| சிசுமரண வீதம் (2019) | : | ஒவ்வொரு 1,000 பிறப்புகளிற்கு 7.4 (திருத்தப்பட்டது) |
| தங்கியிருப்போர் வீதம் (2023) | : | 49.4% |
| சராசரி குடியிருப்பு அளவு (2019) (ஆ) | : | 3.7 ஆட்கள் |

**தொழில்நிலை (2023)**

| | | |
|---|---|---|
| தொழிலிலுள்ள ஆட்கள் ('000) (ஈ) | : | 8,010 |
| வேளாண்மை | : | 26.1% |
| கைத்தொழில் | : | 25.5% |
| பணிகள் | : | 48.4% |
| அரச துறை ஊழியர்கள் ('000) (உ) | : | 1,354 |
| அரச துறை | : | 84.7% |
| அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சிகள் | : | 15.3% |

**வருமானப் பங்கீடு (ஆ)**

| | | |
|---|---|---|
| குடும்ப அலகுகளின் வருமான கினி குணகம் (2019) | : | 0.46 |
| சராசரி குடும்ப அலகு வருமானம் (2019) | : | மாதமொன்றிற்கு ரூ. 76,414 |
| இடைய குடும்ப அலகு வருமானம் (2019) | : | மாதமொன்றிற்கு ரூ. 53,333 |

**வறுமை (ஆ)**

| | | |
|---|---|---|
| நாளாந்தம் உட்கொள்ளும் சராசரி கிலோ கலோரி (2019) | : | 2,120 |
| தலைக்குரிய வறுமைச் சுட்டெண் (இ) | : | 14.3 (2019) |
| | : | 16.0 (2016) |
| | : | 22.5 (2012/13) |

| | | |
|---|---|---|
| **மனித அபிவிருத்திச் சுட்டெண் (2022)** | : | 0.780 |
| 193 நாடுகளிடையேயான நிலை | : | 78 |
| **இலங்கை சுபீட்ச சுட்டெண் (2021)** | : | 0.796 |
| பொருளாதார மற்றும் வணிக காலநிலை துணைச் சுட்டெண் | : | 0.825 |
| மக்களின் நல்வாழ்வுத் துணைச் சுட்டெண் | : | 0.786 |
| சமூக-பொருளாதார உட்கட்டமைப்புத் துணைச் சுட்டெண் | : | 0.777 |
| **பிறப்பில் வாழ்நாள் எதிர்பார்ப்பு (2017)** | : | 75.5 ஆண்டுகள் |
| **கல்வி அறிவு வீதம் (2021) (ஈ)** | | |
| சராசரி | : | 93.3% |
| ஆண் | : | 94.3% |
| பெண் | : | 92.3% |

## பௌதிக, சமூக மற்றும் நிதியியல் உட்கட்டமைப்பு வசதிகள்

| | அலகு | 2023 |
|---|---|---|
| **போக்குவரத்து** | | |
| தேசிய வீதிகளின் நீளம் (ஏ மற்றும் பீ) | கி.மீ. | 12,225 |
| கடுகதிப் பாதைகளின் நீளம் | கி.மீ. | 312.6 |
| தொழிற்பாட்டிலிருக்கும் புகைவண்டிப் பாதையின் நீளம் (2021) | கி.மீ. | 1,607.3 |
| **மின்வலு** | | |
| மின்னூட்டல் மட்டம் (2016) | சதவீதம் | 99.3 |
| தலைக்குரிய மின்வலுப் பாவனை | கிலோ வாற்று மணி | 642.2 |
| **தொடர்பூட்டல்** | | |
| தொலைபேசி அடர்த்தி | | |
| நிலையான இணைப்புக்கள் | ஒவ்வொரு 100 ஆட்களுக்கு | 10.5 |
| செலுலர் தொலைபேசி உட்பட | ஒவ்வொரு 100 ஆட்களுக்கு | 142.0 |
| இணைய அடர்த்தி (ஊ) | ஒவ்வொரு 100 ஆட்களுக்கு | 103.8 |
| ஒரு அஞ்சல் அலுவலகத்தினால் சேவையாற்றப்படும் சராசரி குடித்தொகை | எண்ணிக்கை | 5,317 |
| **நிதியியல் உட்கட்டமைப்பு** | | |
| வங்கிகள் | | |
| உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கிளைகள் (எ) | எண்ணிக்கை | 2,929 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கிளைகள் (எ) | எண்ணிக்கை | 706 |
| பாவனையிலுள்ள கொடுகடன் அட்டைகள் | ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கு | 8507 |
| வங்கித்தொழில் அடர்த்தி | ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கும் கிளைகள் | 16 |
| ஏனைய நிதியியல் நிறுவனங்கள் | | |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கிளைகள் | எண்ணிக்கை | 1,828 |
| சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் கிளைகள் (ஏ) | எண்ணிக்கை | 05 |
| உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் கிளைகள் | எண்ணிக்கை | 129 |
| தன்னியக்கக் கூற்றுப் பொறிகள், காசு மீள்சுழற்சி பொறிகள் மற்றும் காசு வைப்புப் பொறிகள் | ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கு | 32 |

| | அலகு | 2023 |
|---|---|---|
| **நீர் வழங்கலும் சுத்திகரிப்பும்** | | |
| பாதுகாப்பான குடிநீரைப் பெறுவோர் | சதவீதம் | 97.3 |
| குழாய் நீரைப் பெறுவோர் | சதவீதம் | 61.6 |
| **பொதுக் கல்வி (2022)** | | |
| பள்ளிக்கூடம் ஒன்று உள்ளடக்கும் பிரதேசம் (ஐ) | ச.கி.மீ. | 6.5 |
| மாணவர்/ஆசிரியர் விகிதம் (ஐ) | எண்ணிக்கை | 16.8 |
| வயது அடிப்படையில் அனுமதி பெற்ற விகிதம் (தரம் 1-9) | சதவீதம் | 90.6 |
| ஆரம்ப வகுப்புக்களில் அனுமதி பெற்றோரின் தேறிய விகிதம் | சதவீதம் | 85.1 |
| **பல்கலைக்கழக கல்வி (ஒ)** | | |
| மாணவர்/ஆசிரியர் விகிதம் | எண்ணிக்கை | 22.5 |
| வயது அடிப்படையில் அனுமதி பெற்ற விகிதம் (வயது 18-22 ஆண்டுகள்) (ஓ) | சதவீதம் | 9.9 |
| க.பொ.த உயர்தரத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு முன்னேற்றம் | | |
| பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் | சதவீதம் | 63.3 |
| தகுதி பெற்றோரின் சதவீதமாக அனுமதி | சதவீதம் | 25.2 |
| கல்வி மீதான அரச செலவினம் (ஔ) | மொ.உ.உ. இன் சதவீதமாக | 1.6 |
| **பொதுச் சுகாதாரம் (க)** | | |
| வைத்தியசாலை படுக்கைகள் | ஒவ்வொரு 1,000 ஆட்களுக்கு | 4.1 |
| வைத்தியர் ஒருவருக்கான நபர்கள் | எண்ணிக்கை | 985 |
| தாதிகள் | ஒவ்வொரு 10,000 ஆட்களுக்கு | 17.8 |
| சுகாதாரம் மீதான அரசின் செலவினம் | மொ.உ.உ. இன் சதவீதமாக | 1.5 |

குறிப்பு : 2023இற்கான தரவுகள் தற்காலிகமானவை

*மூலங்கள்:* தொடர்பான நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட புள்ளிவிபரங்கள்

(அ) பதிவாளர் நாயகம் திணைக்களம்
(ஆ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டினை (2019) அடிப்படையாகக் கொண்டது
(இ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டில் 2019இல் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டுச் சுற்றில், முன்னர் 2002 ஆண்டின் குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டுத் தரவுகளின் அடிப்படையிலமைந்த உத்தியோகபூர்வ வறுமைக் கோடானது 2012/13 ஆண்டு குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டுத் தரவுகளைப் பயன்படுத்தித் திருத்தப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டினது திருத்தத்துடன் தலைக்குரிய வறுமைச் சுட்டெண்ணும் திருத்தப்பட்டுள்ளது
(ஈ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் காலாண்டு தொழிற்படை அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டது
(உ) நிதி அமைச்சின் முகாமைத்துவ பணிகள் திணைக்களத்தின் தரவினை அடிப்படையாகக் கொண்டது.
(ஊ) செல்லிட இணைய சேவைகள் உள்ளடங்கலாக
(எ) மாணவ சேமிப்பு அலகுகள் நீங்கலாக அனைத்து வங்கித்தொழில் பிரிவுகளும்
(ஏ) ஏனைய கிளைகளை உள்ளடக்கியுள்ளது.
(ஐ) அரச பாடசாலைகள் மட்டும்
(ஒ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழான பல்கலைக்கழகங்களின் விபரங்கள்
(ஓ) மாணவர்களின் உள்ளக அனுமதிகளை மட்டும் உள்ளடக்கியுள்ளது.
(ஔ) பொது மற்றும் உயர்கல்வி மீதான அரச செலவினம்
(க) 2023 யூன் இறுதியில் உள்ளவாறு

# சுருக்க அறிக்கை

இலங்கைப் பொருளாதாரமானது அதன் சுதந்திரத்திற்கு பின்னரான வரலாற்றில் ஆழமான பொருளாதாரச் சரிவிலிருந்து படிப்படியான மீட்சியொன்றை 2023இல் எடுத்துக்காட்டியது. அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட தீர்க்கமான கொள்கைச் சீராக்கங்களும் கட்டமைப்புசார் சீர்திருத்தங்களும் பொருளாதார ஆர்வலர்களால் எதிர்கொள்ளப்பட்ட குறுங்கால இடர்பாடுகளுக்கு மத்தியில் பேரண்டப்பொருளாதாரத்தை பெருமளவில் மீட்சியடையச் செய்வதற்கு உதவிபுரிந்தன. நெருக்கடி மேலும் ஆழப்படுத்தப்படாமல் தடுப்பதற்கும் பொருளாதாரத்தை நிலைபெறத்தக்க மீட்சிப் பாதையினூடாக இட்டுச் செல்வதற்கும் இத்தகைய வழிமுறைகள் அவசியமானதாகக் காணப்பட்டன. அதிகளவில் காணப்படும் இடர்நேர்வுகளுடன் பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சிநிரலையும் படுகடனை நீடித்து நிலைபெறத்தக்க வகையில் மீட்டெடுப்பதற்கான முயற்சிகளையும் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு பொதுமக்களால் பரந்தளவில் ஏற்றுக்கொள்ளலுடன் கொள்கைவகுப்பாளர்களின் அசையாத அர்ப்பணிப்பு இன்றியமையாததாகும்.

பொருளாதார சீராக்க நிகழ்ச்சித்திட்டமானது நம்பிக்கைக்குரிய பெறுபேறுகளை 2023இல் ஏற்கனவே விளைவித்துள்ளது. பணவீக்கம் 2022இல் பதிவுசெய்யப்பட்ட அதன் உயர்வான மட்டத்திலிருந்து 2023இன் இறுதியளவில் ஒற்றை இலக்க மட்டங்களுக்கு கட்டுப்படுத்தப்பட்டு நாணயக் கொள்கையை இயல்புநிலைக்குத் திரும்புவதனை ஆரம்பிப்பதனை இயலுமைப்படுத்தியது. தொடர்ச்சியாக ஆறு காலாண்டுகளாக காணப்பட்ட பொருளாதார சுருக்கத்தை முடிவிற்கு கொண்டுவந்து 2023 இன் இரண்டாம் அரையாண்டு காலப்பகுதியில் பொருளாதாரமானது விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்தது. பொருளாதாரச் சரிவிற்கான அடிப்படைக் காரணமாக காணப்பட்ட ஒட்டுமொத்த அரச வரவுசெலவுத் திட்டம் மற்றும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கினதும் தொடர்ச்சியான இரட்டைப் பற்றாக்குறையை சீராக்குவதற்கான சமிக்ஞைகள் 2023இல் காணப்பட்டது. 2023இல் அரச ஆரம்பக் மீதியில் மிகையொன்று பதிவுசெய்யப்பட்ட அதேவேளையில் வெளிநாட்டு நடைமுறைக்கணக்கிலும் மிகையொன்று பதிவுசெய்யப்பட்டது. நெருக்கடியான காலப்பகுதியில் மிகவும் குறைவடைந்து காணப்பட்ட வெளிநாட்டு தாங்கிருப்புக்கள் இவ்வாண்டுக்காலப்பகுதியில் படிப்படியாக மீளக் கட்டியமைக்கப்பட்டன. மந்தமான இறக்குமதி கேள்விகளுக்கு மத்தியில், சுற்றுலா மற்றும் ஏனைய பணிகள் ஏற்றுமதிகள் மூலமாகவும் தொழிலாளர் பணவனுப்பல்கள் மூலமாகவும் மேம்பாடடைந்த வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்கள் நெருக்கடியான காலப்பகுதியில் நிலவிய கடுமையான வெளிநாட்டு செலாவணி பற்றாக்குறையை இல்லாதொழிப்பதில் நாட்டிற்கு ஆதரவளித்தன. பல்புடைப் பங்காளர்களிடமிருந்தான பெறுகைகளுடன் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களிலிருந்தான மத்திய வங்கியின் தேறிய கொள்வனவுகள் நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகளின் மேம்பாட்டிற்கு உதவிபுரிந்தன. சந்தையில் ஏற்பட்ட மேம்பாடடைந்த நம்பிக்கையுடன் இணைந்து இத்தகைய அபிவிருத்திகளின் விளைவாக 2023இலும் 2024இன் ஆரம்பகாலப்பகுதியிலும் இலங்கை ரூபா பெறுமதி உயர்வினை எடுத்துக்காட்டியது. அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலை மீள்கட்டியெழுப்புவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் இச் செயன்முறை நிறைவடைந்ததும் நீடித்து நிலைபெறத்தக்க மீட்சியொன்றை உருவாக்குவதற்கு தேவையான

இடைவெளியை நாட்டிற்கு வழங்கும். அதேவேளை, தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையுடன் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை தொழிற்பாட்டின் வெற்றிகரமான நிறைவைத் தொடர்ந்து அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளுடன் இணைக்கப்பட்ட இடர்நேர்வு மிகை குறைவடைந்ததுடன் உள்நாட்டுச் சந்தை வட்டி வீதங்கள் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தன. சந்தை வட்டிவீத கட்டமைப்பில் ஏற்பட்ட இத்தகைய கீழ்நோக்கிய சீராக்கமும் மேம்பாடடைந்த சந்தை மனப்பாங்குகளும் தனியார் துறைக்கான கொடுகடனின் சுருக்கத்தின் தொடர்ச்சியினை 2023 யூனிலிருந்து திரும்பலடையச் செய்தன. அதேவேளை, நிதியியல் துறையானது மத்திய வங்கியின் முனைப்புமிக்கதும் முன்மதியுடையதுமான கொள்கைகளிலிருந்தும் நிதியியல் நிறுவனங்களின் சிறந்த முறையில் நெருக்கடிக்கு தயாராகவுள்ள தன்மையிலிருந்தும் தோற்றம்பெற்ற அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையை எடுத்துக்காட்டியது.

பன்னாட்டு சிறந்த நியமங்களை நோக்கியதாகவும் கற்றறியப்பட்ட விடயங்களிலிருந்தான படிப்பினைகளையும் கொண்டு, 2023 செத்தெம்பரில் 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டவாக்கத்துடன் மத்திய வங்கியின் ஆணை மீள்வரையறை செய்யப்பட்டு மத்திய வங்கியின் சுயாதீனம் மற்றும் பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களிற்கும் பொறுப்பு கூறும் தன்மையை மேம்படுத்தும் விதத்திலான குறிப்பிடத்தக்க மைல்கல்லொன்று அடையப்பட்டது. முதலில் பொருளாதாரத்திற்கான உறுதிப்பாட்டை கொண்டுவருவதற்கும் அதன்பின்னர் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிப்பதற்கும் மத்திய வங்கி 2023இல் பல்வேறுபட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்தியது. இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டிலிருந்து தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கு 2023 யூனிலிருந்து நகர்ந்தமை, செலாவணி வீதத்தினை தீர்மானிப்பதில் பாரியளவான நெகிழ்ச்சித் தன்மை மற்றும் சில வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கப்பட்ட நிர்வாக மட்டுப்படுத்தல்களை படிப்படியாக அகற்றியமை என்பவற்றை இது உள்ளடக்கியுள்ளது. மத்திய வங்கியானது உள்நாட்டு நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பாதுகாக்கும் வகையில் முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளுடன் நிதியியல் துறைக்கான வழிகாட்டலை வழங்கியது. மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டவாக்கத்துடன், நிதியியல் நிறுவனங்களை மேற்பார்வை செய்து தீர்மானமெடுக்கும் அதிகாரசபையாக அதன் வலுப்படுத்தப்பட்ட வகிபாகத்திற்கு மேலதிகமாக, பேரண்ட முன்மதியுடைய கொள்கை உருவாக்கத்தில் மத்திய வங்கியின் வகிபாகம் திடப்படுத்தப்பட்ட அதேவேளை நிதியியல் உட்சேர்க்கையினை மேம்படுத்துவதற்கான அதன் பங்களிப்பு அங்கீகரிக்கப்பட்டது. அதேவேளை, வங்கித்தொழிலினதும் வங்கியல்லா நிதியியல் துறையினதும் பாதுகாப்பையும் ஆற்றல்வாய்ந்த தன்மையையும் வலுப்படுத்துவதற்கு பல்வேறு கொள்கை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதேநேரம், மத்திய வங்கியானது பொதுமக்களுக்கான கொடுப்பனவு முறைமைகளின் வினைத்திறனையும் அணுகலையும் மேம்படுத்துவதற்கு உதவக்கூடிய டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகளை உருவாக்குவதற்கான அதன் முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டது.

2023இன் இரண்டாம் அரையாண்டில் அவதானிக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியானது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான தொடர்ச்சியான சீர்திருத்த நிகழ்ச்சிநிரலால் ஆதரவளிக்கப்பட்டு எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து துறைகளிலும் பரந்த அடிப்படையிலான பொருளாதார விரிவாக்கம் எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை நாணயக் கொள்கை உருவாக்கத்தில் மத்திய வங்கியின் பாரியளவிலான சுயாதீனம் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் அரசாங்கத்தின் வரவுசெலவு திட்டப் பற்றாக்குறைக்கான நாணய நிதியிடல் தடைசெய்யப்பட்டதுடன் உள்நாட்டு விலை உறுதிப்பாடு பாதுகாக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதிகரிக்கும் வெளிநாட்டுத் தாங்கிருப்புக்கள், வெளிநாட்டு உட்பாய்ச்சல்களின் இயல்புநிலைத் திரும்பல் மற்றும் அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலின் மறுசீரமைத்தலின் நிறைவு என்பவற்றால் ஆதரவளிக்கப்பட்டு வெளிநாட்டுத் துறையானது அதன் உறுதிப்பாட்டை தொடர்ந்து தக்கவைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நிதியியல் துறையானது சட்டவாக்கத் திருத்தங்களாலும் பாரியளவான திரட்சிப்படுத்தலினாலும் வலுப்படுத்தப்பட்டு அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையை தொடர்ந்து கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

உற்பத்தித் திறனையும் வினைத்திறனையும் உயர்துவதனை நோக்காகக் கொண்ட மிகவும் அவசியமான நிறுவன ரீதியானதும் கொள்கை ரீதியானதுமான சீராக்கங்களை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளை பொருளாதாரத்தை நீடித்து நிலைபெறத்தக்க பாதையொன்றை நோக்கி மாற்றுவதை உறுதிசெய்வதற்கு அரசாங்கமானது அதன் இறைத்திரட்சி நடவடிக்கைகளுடன் கடும்முயற்சி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும், இலங்கைப் பொருளாதாரத்தின் இக் கடினமான மீட்சியானது இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட சீராக்கங்களின் தொடர்ச்சியில் தங்கியுள்ளது என்பதுடன் இத்தகைய செயன்முறையின் பாகமாக பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் வெற்றிகரமான தொடர்ச்சியும் படுகடன் மறுசீரமைப்பு செயன்முறையின் நிறைவும் முக்கியமானதாக காணப்படுகின்றன. நாடானது முற்று முழுதாக நெருக்கடியிலிருந்து வெளியேறாமையினால் அர்ப்பணிக்கப்பட்ட பாதையிலிருந்தான ஏதேனும் விலகல்களுக்கு இடமில்லை. குறித்தறியப்படாத கொள்கைப் பரீட்சிப்புக்களின் அழிவுகரமான சமூக பொருளாதாரத் தாக்கங்களை அண்மைய அனுபவங்கள் நிரூபித்தன. மேலும், நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றும் திட்டமிடப்பட்ட முக்கிய சீராக்கங்களிலிருந்து பின்வாங்குதலென்பது பொருளாதாரத்தை உறுதிப்பாடற்ற நிலையின் முனைப்பிற்கு இட்டுச்செல்லும். எனவே, நீடித்து நிலைபெறத்தக்க வளர்ச்சியினூடாக பொதுமக்களின் நல மேம்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கும் மீண்டெழும் கொள்கை மீள்திரும்பல்களையும் அதன் விளைவால் ஏற்படும் பொருளாதார சரிவுகளையும் தவிர்ப்பதற்கும் பொருளாதார சீராக்கங்கள் மீது பரந்தளவான அரசியல் மற்றும் சமூக இசைவைத் தொடர்தல் முக்கியமானதாகும்.

அத்தியாயம் 1

# பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் நிதியியல் முறைமையின் நிலைமைகள்

## சுருக்கம்

இலங்கைப் பொருளாதாரமானது முன்னைய ஆண்டில் எதிர்கொண்ட அதன் பாரிய பொருளாதாரப் பேரழிவினைத் தொடர்ந்து, 2023இல் மீட்சிப் பாதையை நோக்கி நகர்ந்தது. இம்மீட்சியானது துரிதமான பணவீக்கவீழ்ச்சி, மேம்படுத்தப்பட்ட வெளிநாட்டுத்துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மை, வலுவான இறை மீதிகள் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு பேணப்பட்டமை போன்றவற்றின் மூலம் ஆதரவளிக்கப்பட்டது. அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் கொள்கை வழிமுறைகளின் தொகுப்பின் உடனடியானதும் ஒருங்கிணைப்புமிக்கதுமான நடைமுறைப்படுத்தல் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டுடன் இணைந்த கட்டமைப்புசார் சீர்திருத்த நிகழ்ச்சி திட்டம் என்பன ஒட்டுமொத்த பேரண்டபொருளாதார உறுதிப்பாட்டை வலுப்படுத்தியது. உறுதிப்பாட்டை மீட்டெடுத்ததன் பயனாக, பொருளாதாரமானது வளர்ச்சிப் பாதைக்கு மாற்றமடையத் தொடங்கியது. தொடர்ச்சியாக ஆறு காலாண்டு காலமாகப் பதிவுசெய்யப்பட்ட பொருளாதாரச் சுருக்கத்தின் பின்னர், பொருளாதாரம், 2023ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்து, ஆண்டுகாலப்பகுதியில் ஆண்டு பொருளாதாரச் சுருக்கத்தை மட்டுப்படுத்தியது. கூட்டுகேள்வியில் ஏற்பட்ட வளர்ச்சியானது உள்நாட்டுக் கேள்வி மற்றும் தேறிய வெளிநாட்டுக் கேள்வி என்பனவற்றினால் தூண்டப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், தொழிலின்மை மாற்றமின்றி காணப்பட்டபோதிலும், 2023ஆம் ஆண்டில் தொழிற்படை பங்கேற்பு மேலும் வீழ்ச்சியடைந்தது. 2022 செத்தெம்பரில் எப்பொழுதுமில்லாத உயர்ந்தமட்டத்தையடைந்த பணவீக்கம், ஓர் ஆண்டிற்குள் ஒற்றை இலக்க மட்டங்களுக்குத் திரும்பியதுடன் 2023இறுதியளவில் இலக்கிற்கு அருகாமையில் தொடர்ந்துமிருந்தது. 2023ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து மத்திய வங்கி தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டைப் பின்பற்றியமை மற்றும் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் இறுதிப்படுத்தலைத் தொடர்ந்து இடர்நேர்வு மிகையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றுடன், அரச பிணையங்கள் மீதான விளைவுகள் உள்ளிட்ட சந்தை வட்டி வீதங்கள் 2023இல் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. தனியார் துறைக்கான கொடுகடன் 2023ஆம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து சாதகமான மாற்றமொன்றை அனுபவித்து, மாதாந்தச் சுருக்கங்களின் நீண்ட தொடர்ச்சியை முடிவுக்கு கொண்டுவந்தது. அதிகரித்த பணிகள் ஏற்றுமதிகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களுக்கு மத்தியில் வர்த்தகப் பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்க சுருக்கமொன்றினால் ஆதரவளிக்கப்பட்டு, வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு 2023ஆம் ஆண்டில் மிகையொன்றைப் பதிவுசெய்தது. மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய கொள்வனவு மற்றும் பல்புடை பங்காளர்களிடமிருந்தான நிதியிடல் ஆதரவு என்பனவற்றுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மேம்பட்டன. இடைக்கிடையேயான தளம்பல்களுக்கு மத்தியில், இலங்கை ரூபாவானது 2023இல் ஒட்டுமொத்த உயர்வடைதலொன்றைப் பதிவுசெய்தது. மத்திய வங்கி சந்தை அடிப்படையிலான செலாவணி வீத கொள்கையைப் பின்பற்றுவதனால், சந்தை நடத்தை மற்றும் மனப்பாங்குகளை இது பரந்தளவில் பிரதிபலித்தது. தொடர்ச்சியான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்வுகள் இருந்தபோதிலும், நிதியியல் துறையானது முனைப்புமிக்க மற்றும் முன்மதியுடைய கொள்கைகள் மற்றும் உயர்ந்தளவிலான நெருக்கடி தயார்நிலை போன்றவற்றிலிருந்து தோன்றுகின்ற அதன் தாக்குபிடிக்கும் தன்மையை வெளிப்படுத்தியது. சவால்களுக்கு மத்தியில், நிதித்துறையில் முன்னிலை வகிக்கும்

1

**மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் பெயரளவு நியதிகள் மற்றும் மொ.உ.உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரண்டு நியதிகளிலும் அதிகரித்தமைக்கு, மூலதனச் செலவினத்திலும் தேறிய கடன்வழங்கலிலும் குறிப்பிடத்தக்க குறைப்பு காணப்பட்டமைக்கிடையிலும் உள்நாட்டு வட்டிச் செலவினத்தில் ஏற்பட்ட கணிசமான உயர்வே தூண்டுதலாக அமைந்தது.** இதன்படி, பெயரளவு நியதிகளில் அரச செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 19.8 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில், மொ.உ.உற்பத்தி நியதிகளில் செலவினம் 2023இல் 0.8 சதவீதப்புள்ளிகளினால் மாத்திரமே அதிகரித்தது. உள்நாட்டு வட்டிச் செலவினத்தில் ஏற்பட்ட கணிசமான பெயரளவு உயர்விற்கு 2023 யூன் வரை நிலவிய இறுக்கமான நாணய நிலைமைகளிலிருந்து தோன்றிய உயர்வடைந்த உள்நாட்டு வட்டி வீதங்களின் செல்வாக்கும் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொடர்பிலும் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மை காரணமாக அரச பிணையங்களுடன் இணைந்து காணப்பட்ட உயர் இடர்நேர்வு மிகைகளும் காரணங்களாக விளங்கின. மேலும், வெளிநாட்டு நிதியிடலை அணுகுவதற்கான வழிவகைகள் அரசாங்கத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையின் காரணமாக உள்நாட்டு நிதியிடலில் அளவுக்கதிகமாக தங்கியிருந்தமையும் உள்நாட்டு வட்டிச் செலவுகள் உயர்வடையப் பங்களித்தன. வட்டிச் செலவு 2022இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 79.1 சதவீதம் மற்றும் 35.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த அரசிறையில் 80.5 சதவீதத்திற்கும் 2023இன் மொத்தச் அரச செலவினத்தில் 45.8 சதவீதத்திற்கும் வகைகூறியது. அதேவேளை, அரச துறை ஊழியர்களுக்கான ஓய்வுகால வயதினை 65 இலிருந்து 60இற்குக் குறைப்பது தொடர்பாக முன்னைய ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட திருத்தங்களின் காரணமாக ஓய்வுபெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்தமை காரணமாக ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் கணிசமானளவிற்கு அதிகரித்தது. மேலும், இலவச மருந்து மற்றும் அஸ்வேசும நலன்புரி நன்மைகள் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை என்பனவும் உதவுதொகைகளும் பரிமாற்றங்களும் அதிகரிப்பதற்குப் பங்களித்தன. மறுபுறத்தில் சம்பளங்களும் கூலிகளும் பெயரளவு நியதிகளிலும் அதேபோன்று மொ.உ.உற்பத்தி நியதிகளிலும் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு அரச துறைக்கான

வரைபடம் 1.35
அரச மீண்டெழும் செலவினத்தின் உள்ளமைப்பு - 2023




*மூலம்:* நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

புதிய ஆட்சேர்ப்புக்கள் முடக்கிவைக்கப்பட்டிருக்கின்றமை மற்றும் தொழிற்படையிலிருந்து கணிசமானளவு அரச ஊழியர்கள் ஓய்வுபெற்றமையும் காரணங்களாக அமைந்தன. அதேவேளை, மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் பெயரளவு நியதிகள் அதேபோன்று மொ.உ.உற்பத்தி ஆகிய இரு நியதிகளிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன. இக்குறைப்பிற்கு, இந்திய தொடர் கொடுகடன் வசதியூடாக 2022இல் இ.பெ.கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட கடன்வழங்கல் வசதி தீர்ப்பனவு செய்யப்பட்டமையின் காரணமாக தேறிய கடன்வழங்கலில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி காரணமாக அமைந்தது. தேறிய கடன்வழங்கலின் தாக்கம் நீங்கலான மூலதனச் செலவினம் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2022இன் 3.0 சதவீதத்திலிருந்து 2023இல் 3.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2023ஆம் ஆண்டிற்கான ஆரம்ப வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின்படி, மொத்தச் செலவினம் மொ.உ.உற்பத்தியில் 21.2 சதவீதமாக இருக்குமென எறிவு செய்யப்பட்டதுடன் மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல் முறையே மொ.உ.உற்பத்தியின் 16.8 சதவீதமாகவும் 4.4 சதவீதமாகவும் மதிப்பிடப்பட்டன. உள்நாட்டு வட்டிச் செலவினம் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்வாக இருந்தமைக்கிடையிலும் செலவினங்களை சிக்கனப்படுத்தும் வழிமுறைகளை தொடர்ந்து மேற்கொண்டமையினூடாக அவசரமற்ற மற்றும் அவசியமற்ற செலவினங்களைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் பாராட்டத்தக்க முயற்சிகள் மொத்தச் செலவினங்களைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கும் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு மிக மேலே மீண்டெழும் செலவினம் உயர்வடைவதனைத் தடுப்பதற்கும் உதவின.

### 1.6.3 வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடல்

**2023இல் பன்னாட்டு மூலதனச் சந்தைகளை அணுகுவதில் காணப்பட்ட தடைகளின் பெருமளவு காரணமாக, அரசாங்கம் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு உள்நாட்டு மூலங்களிலேயே தொடர்ந்தும் முக்கியமாக தங்கியிருக்க வேண்டியிருந்தது.** இதன்படி, ஆய்விற்குரிய காலப்பகுதியில் மொத்த நிதியிடலில் தேறிய உள்நாட்டு நிதியிடல் 78.3 சதவீதத்திற்கு வகைகூறியது. 2021இல் 100 சதவீதத்தினை விஞ்சிய கடந்த இரண்டு ஆண்டுகளுடனும் ஒப்பிடுகையில் சிறிதளவு குறைவடைந்து காணப்பட்ட போதும், இதையொத்த கட்டுப்பாடுகள் நடைமுறையில் இல்லாத வேளையில் தற்போதைய சதவீதம் முறையே 2019 மற்றும் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 62.3 சதவீதம் மற்றும் 57.5 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டு ரீதியில் இன்னமும் உயர்வாகவே காணப்படுகிறது. உள்நாட்டுப் படுகடனை மேம்படுத்துகை தொழிற்பாடுகளுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் தாக்கம் நீக்கப்படுகையில், மொத்த தேறிய உள்நாட்டு நிதியிடல் திறைசேரி உண்டியலினூடாக முனைப்புடன் நிதியிடப்படுகின்றமை, நீண்ட காலச் சாதனங்களிலும் பார்க்க குறுகிய காலச் சாதனங்களுக்குக் காணப்படும் வலுவான சந்தை முன்னுரிமைகளைப் பிரதிபலித்தமைக்கு ஆண்டின் முதலரைப்பகுதியில் நிலவிய நிச்சயமற்ற மற்றும் உயர் திறைசேரி உண்டியல் வீதங்களும் காரணங்களாக விளங்கின.[28] 2023இல் திறைசேரி உண்டியல்களிலிருந்தான தேறிய நிதியிடல் மொ.உ.உற்பத்தியின் 7.5 சதவீதமாக (ரூ.2,058.6 பில்லியன்) விளங்கி 2022இல் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 6.7 சதவீதத்தினை விட (ரூ.1,608.2 பில்லியன்) உயர்வாகக் காணப்பட்டது. மாறாக, திறைசேரி முறிகளிலிருந்தான தேறிய நிதியிடல் 2022இன் மொ.உ.உற்பத்தியின் 6.0 சதவீதத்திலிருந்து (ரூ.1,440.2 பில்லியன்) 2023இல் மொ.உ.உற்பத்தியின் 2.5 சதவீதத்திற்கு (ரூ.692.3 பில்லியன்) வீழ்ச்சியடைந்தது. வங்கித்தொழில் துறையிலிருந்தான தேறிய உள்நாட்டு நிதியிடல் மொ.உ.உற்பத்தியின் 0.02 சதவீதம் கொண்ட தேறிய முற்கொடுப்பனவுடன் (ரூ.6.4 பில்லியன்)[29] கணிசமானளவு சுருக்கத்தை கொண்டிருந்தது. இக்குறைப்பு வங்கியல்லா மூலங்களினால் எதிரீடு செய்யப்பட்டது. இது, 2023இன் மொ.உ.உற்பத்தியில் 6.5 சதவீதத்திற்கு வகைகூறியது (ரூ.1,798.5 பில்லியன்). அதேவேளை, மொத்தத் தேறிய நிதியிடலின் தேறிய வெளிநாட்டு நிதியிடலின் பங்கு முன்னைய ஆண்டின் 17.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023இல் 21.7 சதவீதத்தினால் அதிகரித்தது. 2023இல்

28 இவ்வாண்டுப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளும் மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்களும் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன.

29 இப்பிரிவின் கீழ், வங்கித்தொழில் துறையிலிருந்தான தேறிய உள்நாட்டு நிதியிடலில் பதிவுசெய்யப்பட்ட சுருக்கத்திற்கு மாறாக, இவ்வத்தியாயத்தின் நாணயத் துறை அபிவிருத்திகளின் கீழ் தரப்பட்டுள்ள அரசிற்கான தேறிய கொடுகடன் தொகை விரிவொன்றினைக் காட்டியது. இவ்வேறுபாட்டிற்கு மத்திய அரச படுகடன் இருப்புக்களான இ.பெ.கூட்டுத்தாபனத்தின் அரச உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடனுடன் இணைந்த படுகடன் மாற்றல்களைப் பதிவுசெய்யும் நேரம் காரணமாக இருக்கமுடியும். 2022 இறுதியில் இது, வங்கித்தொழில் துறையிலுள்ள 2023இன் பதிவுகளுக்கு மாத்திரம் வகைகூறுகிறது.

தேறிய வெளிநாட்டு நிதியிடல் பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் இரண்டாவது தொகுதியின் கீழ் பெறப்பட்ட மொத்த நிதியிடலை உள்ளடக்கியிருந்தது. இது, வரவு செலவுத்திட்டத்திற்கு உதவியாக வழங்கப்பட்டது. மேலும், குறிப்பிடத்தக்க பெறுகைகள் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு போன்ற ஏனைய பல்புடை முகவர்களிடமிருந்து பெறப்பட்டது. இத்தகைய நிதியங்கள் அரசாங்கத்தின் பொருளாதார உறுதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்காக சமூகப் பாதுகாப்பு வலையமைப்பின் மீதான செலவினத்திற்கு உதவுவதற்காகவும் வழங்கப்பட்டது.

**குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ஸ்தம்பிதப்பட்டமையின் காரணமாக நாட்டிற்கான தரமிடல் முகவர்கள் இலங்கைக்கான அவர்களின் குறைக்கப்பட்ட தரமிடல் அந்தஸ்தினை பேணினர்.** இதற்கமைய, பிட்ச் றேட்டிங் மற்றும் எஸ் அன்ட் பி குளோபல் தரமிடல் இலங்கைக்கான நீண்ட கால வெளிநாட்டு நாணய வழங்குநர் செலுத்தத் தவறும் தரமிடலை மட்டுப்படுத்தப்பட்ட செலுத்தத் தவறல் (RD) மற்றும் குறிப்பிட்ட செலுத்தத் தவறல் (SD) என்பனவற்றைப் பேணியது. மூடிஸ் தரமிடல் நீண்ட கால வெளிநாட்டு நாணய வழங்குநர் கொடுகடன் தரமிடலை 'Ca' (உறுதியானது) இல் பேணியது. அதேநேரம் உள்நாட்டுப் படுகடனை மேம்படுத்தும் தொழிற்பாடுகளின் அறிவித்தல், அரசாங்கத்தின் உள்நாட்டு நாணய உள்நாட்டுப் படுகடனின் தரமிடலை தரம் குறைப்பதற்கு நாட்டிற்கான பன்னாட்டு கொடுகடன் தரமிடல் முகவர்களைத் தூண்டிய வேளையில், உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகள் வெற்றிகரமாக நிறைவடைந்ததுடன் இவை தரமுயர்த்தப்பட்டன.

## 1.6.4 மத்திய அரசாங்கத்தின் படுகடன் மற்றும் பொதுப்படுகடன்[30]

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசாங்கத்தின் படுகடன் 2022இன் 114.2 சதவீதத்திலிருந்து 2023 இறுதியில் 103.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு உயர் பணவீக்கம் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் மீதான நாணய உயர்வின் தாக்கம் என்பனவற்றினால் தூண்டப்பட்டு மொ.உ.உற்பத்தியின் பெயரளவு நியதிகளில் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும்.** இதற்கமைய, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுப் படுகடன் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் இரண்டும் 2022இன் முறையே 62.5 சதவீதம் மற்றும் 51.8 சதவீதத்திலிருந்து 2023இல் முறையே 61.7 சதவீதத்திற்கும் 42.1 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன.[31] எனினும், மொத்தப் படுகடனின் பெயரளவுப் பெறுமதி[32] 4.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உள்நாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு ஏக காரணமாக அமைந்த வேளையில், உள்நாட்டு நாணயத்தில் மதிப்பிடப்பட்ட வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2022இல் அவதானிக்கப்பட்ட மட்டங்களிலிருந்து வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டுப் படுகடனில் ஏற்பட்ட பெயரளவு அதிகரிப்பு, கணிசமான நிதியிடல் தேவைப்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிதியிடல் தேர்வுகளுக்கு மத்தியிலும் உள்நாட்டுச் சந்தைகளிலிருந்து பூர்த்தி செய்யப்பட்டமையினைப் பிரதிபலித்தது. மொத்த உள்நாட்டுப் படுகடனின் சதவீதமாக நடுத்தர மற்றும் நீண்ட கால உள்நாட்டுப் படுகடனின் பங்கு 2022 திசெம்பர் இறுதியின் 65.7 சதவீதத்திலிருந்து 2023 இறுதியில் 74.2

30 அரசாங்கத்தின் படுகடன் புள்ளிவிபரங்கள் அரசாங்கத்தின் தேறிய வங்கி வைப்புக்களில் எடுத்துக்காட்டப்படுகின்றன.

31 ப.நா.நிதியத்தின் அரச புள்ளி விபரங்களின் கைநூல் 2014இல், அரசப்படுகடனின் புள்ளிவிபரங்களின் தொகுப்பின் வழிகாட்டல்களின்படி, படுகடனின் வதிவற்றோர் உடமைகள் வெளிநாட்டுப் படுகடன்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள வேளையில் வதிவோரின் படுகடன் உடமைகள் உள்நாட்டுப் படுகடன்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

32 வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைத்தல் தொடர்பில் நடைபெற்றுவரும் கலந்துரையாடல்களின் பின்னணியில், 2022 இறுதியிலும் 2023 இறுதியிலும் உள்ளவாறு வெளிநின்ற மத்திய அரசப் படுகடன் 2022 ஏப்பிறல் 12 இற்குப் பின்னர் நிலுவைக்கு மாறிய பல படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை நீக்குகிறது. இலங்கையின் வெளிநாட்டு அரச படுகடனைத் தீர்ப்பனவு செய்வது தொடர்பான இடைக்காலக் கொள்கை இலங்கையின் நிதி, பொருளாதார உறுதிப்பாடுமற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் அறிவிக்கப்பட்டது. இப்படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்குகிறது. இது, இடைக்காலக் கொள்கைக்கமைவாக, மூலதனமாகக் கருதப்படும். மேலும், 2022 திசெம்பர் இறுதியிலுள்ளவாறான நிலுவையானது 2022 ஏப்பிறலிலிருந்து 2022 இறுதி வரை நிலுவையிலிருந்த இலங்கை அபிவிருத்தி முறிகளுடன் தொடர்புடைய குறித்த நறுக்குக் கொடுப்பனவுப் பெறுமதிகளை உள்ளடக்கவில்லை.

வரைபடம் 1.36 மத்திய அரசின் வெளிநின்ற படுகடன்




மூலங்கள்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.27

## அரசின் வெளிநின்ற படுகடன் (அ) (ஆ)

ரூ. பில்லியன்

| விடயம் | 2022 | 2023 (இ) |
|---|---|---|
| **உள்நாட்டு படுகடன் (ஈ)** | **15,033.9** | **17,051.9** |
| முதிர்வு காலத்தின்படி | | |
| குறுங்காலம் (உ) | 4,267.7 | 3,616.2 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் (ஊ) | 9,882.1 | 12,646.9 |
| ஏனைய உள்நாட்டு (எ) | 884.1 | 788.7 |
| நிறுவனங்களின்படி (ஏ) | | |
| வங்கி (ஏ) | 8,525.7 | 9,102.8 |
| வங்கியல்லா (ஏ) | 6,164.0 | 7,506.3 |
| மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் ஒதுக்கீடு (ஐ) (ஒ) | 344.1 | 442.7 |
| **வெளிநாட்டு படுகடன் (ஓ) (ஔ)** | **12,458.2** | **11,644.1** |
| பல்பக்க | 3,611.6 | 3,817.0 |
| இருபக்க மற்றும் வர்த்தக | 8,846.6 | 7,827.1 |
| நாணயங்களின்படி | | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 1,604.7 | 1,737.1 |
| ஐ.அ.டொலர் | 8,716.9 | 7,943.9 |
| யப்பானிய யென் | 979.6 | 819.4 |
| யூரோ | 417.4 | 396.6 |
| ஏனையவை | 739.6 | 747.1 |
| **மொத்த மத்திய அரசின் வெளிநின்ற படுகடன்** | **27,492.0** | **28,695.9** |
| **பொது உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன் (க) (ங)** | **1,180.7** | **1,931.3** |
| **பொதுப் படுகடன்** | **28,672.7** | **30,627.3** |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக (ச) | | |
| **மொத்த மத்திய அரசின் வெளிநின்ற படுகடன்** | **114.2** | **103.9** |
| **உள்நாட்டு படுகடன்** | **62.5** | **61.7** |
| **வெளிநாட்டு படுகடன்** | **51.8** | **42.1** |
| **பொது உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன்** | **4.9** | **7.0** |
| **பொதுப் படுகடன்** | **119.2** | **110.8** |

*மூலங்கள்:* நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

(அ) 2014 பன்னாட்டு நாணய நிதியத்தால் அரச நிதி புள்ளிவிபரங்களுக்கான கையேட்டில் அரசாங்கம் படுகடன் புள்ளிவிபரங்களை தொகுத்தல் தொடர்பான வழிகாட்டல்களுக்கு அமைய வதியாதோர் வசமுள்ள வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறிகள் வெளிநாட்டு படுகடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டதுடன் வதியோர் வசமுள்ள இலங்கை அரசாங்கத்தின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் உள்நாட்டு படுகடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், படுகடன் புள்ளிவிபரங்கள் தேறிய அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன (வைப்புக்கள் நீங்கலாக).

(ஆ) இலங்கையின் வெளிநாட்டு பொதுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் தொடர்பில் 2022 ஏப்பிறல் 12 அன்று நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட இடைக்கால கொள்கை அறிவிப்பின் பின்னர் நிலுவையிலுள்ள பல்வேறு படுகடன் பணிக் கொடுப்பனவுகளை 2022 மற்றும் 2023 இறுதியிலான வெளிநின்ற மத்திய அரச படுகடன் உள்ளடக்கவில்லை. இப்படுகடன் பணிக்கொடுப்பனவுகள் இடைக்காலக் கொள்கையின் பிரகாரம் மூலதனமாக்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்டு பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கியுள்ளன. மேலும், 2022 திசெம்பர் இறுதியிலுள்ளவாறான நிலுவையானது 2022 ஏப்பிறல் தொடக்கம் 2022 இறுதிவரை செலுத்தவேண்டிய இலங்கை அபிவிருத்தி முறிகளுடன் தொடர்புடைய குறித்த கூப்பன் கொடுப்பனவுகள் நிலுவைத் தீர்ப்பனவு பெறுமதிகளை உள்ளடக்கவில்லை.

(இ) தற்காலிகமானது

(ஈ) 2023 தொடக்கம், உள்நாட்டு படுகடன் தொகுப்பு முறை மாற்றப்பட்டதுடன் இது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் உறுதிப்படுத்தப்படும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

(உ) வதிவற்ற முதலீட்டாளர்கள் வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் நீங்கலாக

(ஊ) வதிவற்ற முதலீட்டாளர்கள் வசமுள்ள திறைசேரி முறிகள் நீங்கலாக

(எ) 2022இற்கு பின்னரான தரவுகள் மத்திய அரச படுகடனினுள் உள்ளீர்க்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய படுகடனின் வெளிநின்ற நிலுவையினை உள்ளடக்குகிறது

(ஏ) நிறுவன ரீதியான வகைப்படுத்தலானது மத்திய வைப்பு முறைமையின் பதிவுகளை அடிப்படையாகக் கொண்ட 2022ஆம் ஆண்டறிக்கையிலிருந்து திருத்தப்பட்டது

(ஐ) உண்மையான சொத்துரிமை நிறுவப்பட முடியாதவைகளுக்கான மீள்கொடுப்பனவு உடன்படிக்கைகளின் கீழான பிணைய இருப்புக்கள் உள்ளடங்கலாக

(ஒ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய மீள் கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழான வைப்புக்கள் உரிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது தனியான முதனிலை முகவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

(ஓ) 2022 மற்றும் 2023 இற்கான வெளிநாட்டு படுகடன் புள்ளிவிபரங்கள் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் வகைப்படுத்தல் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் பேணப்பட்டு வந்த பொதுநலவாய செயலக படுகடன் பதிவிடல் மற்றும் முகாமைத்துவ முறைமையிலிருந்து 2023 மாச்சு 09, 10 மற்றும் 2024 பெப்ரவரி 26 அன்று பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டன.

(ஔ) இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் மற்றும் இலங்கைத் துறைமுக அதிகாரசபை என்பன முன்னர் வகைப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு வெளிநின்ற செயற்றிட்டக் கடன்கள் 2022 திசெம்பரிலிருந்து மத்திய அரச படுகடனின் கீழ் உள்ளீர்க்கப்பட்டன.

(க) 2024 பெப்ரவரி 29இல், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிலிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பொது உத்தரவாதக் கடன் தொகுக்கப்பட்டது

(ங) ஜூன் 2014 இல் வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் எயர்லைன்ஸ் வழங்கிய 175 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சர்வதேச முறிகள் உள்ளடங்கும். இது ஜூன் 2019 இல் முதிர்ச்சியடைந்து 5 வருட காலத்திற்கு மீண்டும் வெளியிடப்பட்டது.

(ச) 2024 மார்ச் 15ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் (தள ஆண்டு 2015) பயன்படுத்தப்பட்டுள்ளன.

சதவீதத்திற்கு அதிகரித்தது. இம்மாற்றத்திற்கு முக்கியமாக மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடமைகள் மற்றும் அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணங்கள், உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகளின் கீழ் நீண்ட கால திறைசேரி முறிகளுக்கு மாற்றப்பட்டன. நடுத்தர காலப் பங்குகளை நீண்ட காலப் படுகடனுக்கு அதிகரித்தமையின் காரணமாக படுகடன் இருப்புக்களின் முதிர்ச்சிக் காலம் நீடிக்கப்பட்டமையின் மூலம் அரசாங்கத்திற்கான மொத்த நிதியிடல் தேவை குறைவடைய உதவியது. இது, பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கிக் கொள்ளப்பட்ட படுகடன் உறுதிப்படுத்தல் இலக்குகளை எய்துவதற்கு இன்றியமையாததாகும். மேலும், 2023இன் முதலரைப்பகுதியில் அரசாங்கம் ரூபாக் கடன்களின்

வெளிநின்ற இருப்பினைத் தீர்ப்பனவு செய்த வேளையில், 2022 திசெம்பரில் மத்திய அரசாங்கத்திற்குள் ஈர்த்துக் கொள்ளப்பட்ட இ.பெ.கூட்டுத்தாபனத்தின் அரசாங்கத்தின் உத்தரவாதப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணயப் படுகடன் இருப்பின் வெளிநின்ற நிலுவை 2023 இறுதியில் மாற்றமின்றியிருந்ததுடன், இப்படுகடனை மறுசீரமைப்பதனைப் பூர்த்தி செய்வதற்கான நிலுவையில் காணப்படுகின்றது. அதேவேளை, பெயரளவு நியதிகளில் வெளிநாட்டுப் படுகடன் 2022 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு முக்கிய வெளிநாட்டு நாணயக்களுக்கெதிராக ரூபா உயர்வடைந்தமையே காரணமாகும். சமப்பெறுமதி தொடர்பான வெளிநாட்டுப் படுகடனின் குறைப்பு 2023இல் ரூ.1,431.4 பில்லியனாக அமைந்தது. எனினும், வெளிநாட்டுப் படுகடன் இருப்பின் ரூபாப் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி 2023 மாச்சிலும் திசெம்பரிலும் பெறப்பட்ட பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் இரண்டு தொகுதிகள் உட்பட பல்புடை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகளின் மூலம் பகுதியளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. முன்னைய பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்களில், பன்னாட்டு நாணய நிதிய நிதியிடல் மத்திய வங்கியின் பொறுப்பாகக் கருதப்பட்டது. எனினும், பிந்திய ஏற்பாடுகளில், இது, அரசாங்கத்திற்கு வரவு செலவுத்திட்ட ஆதரவுகளை வழங்குவதன் மீது கவனத்தினைச் செலுத்துவதுடன் பெறுகைகளை அரசாங்கத்திற்கு மாற்றல் செய்யப்பட்டதன் மூலம் அது அரசாங்கத்தின் பொறுப்பாகக் கருதப்படுவதுடன் மத்திய அரசாங்கத்தின் ஒட்டுமொத்த படுகடனையும் அதிகரிக்கிறது. 2023 இறுதியிலுள்ளவாறு மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனில் தொடர்பான பங்கு 2022 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 45.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த மத்திய அரச படுகடன் 40.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**வெளிநின்ற அரச படுகடன்[33] மொ.உ.உற்பத்தியின் நியதிகளில் மத்திய அரசாங்கத்தின் படுகடனில் ஏற்பட்ட குறைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் 2022 இறுதியில் மொ.உ.உற்பத்தியின் 119.2 சதவீதத்திலிருந்து 2023 இறுதியில் மொ.உ.உற்பத்தியின் 110.8 சதவீதத்திற்கு குறைவடைந்தது.** உண்மை நியதிகளில் மொத்த வெளிநின்ற பொதுப்படுகடன் 2022 இறுதியின் ரூ.28,672.7 பில்லியனிலிருந்து 2023 இறுதியில் ரூ.30,627.3 பில்லியனுக்கு அதிகரித்தது. இது 6.8 சதவீதம் கொண்டதொரு ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பாகும்.

**அரசாங்கம் இது தொடர்பான ஏனைய வழிமுறைகளுடன் சேர்த்து படுகடன் உறுதித்தன்மையினை எய்துகின்ற நோக்குடன் 2023இல் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது.** இதன்படி, தகைமையுடைய இலங்கை அபிவிருத்தி முறிகளின் உடமை ஐந்து புதிய வேறுபட்ட இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளுக்கு மாற்றப்பட்ட வேளையில் ஓய்வுகால நிதிகளினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி முறிகள் நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான தன்மையினைக் கொண்ட புதிய திறைசேரி முறிகளுக்கு மாற்றப்பட்டன. மேலும், மத்திய வங்கி வசமிருந்த வெளிநின்ற திறைசேரி உண்டியல்களும் அரசாங்கத்திற்கான மத்திய வங்கியின் வெளிநின்ற தற்காலிக முற்பணங்களும் பத்து புதிய படிமுறையிலான நிலையான கூப்பன் திறைசேரி முறிகள் ஏற்கனவேயுள்ள பன்னிரண்டு திறைசேரி உண்டியல் உடமைகளும் மாற்றப்பட்டன. உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டமை குறுங்காலப் படுகடன் முதிர்ச்சிகளை நடுத்தர காலத்திலிருந்து நீண்ட கால முதிர்ச்சிகளுக்கு மாற்றுவதற்கு வழியமைத்ததுடன், இதன் மூலமாக மீளநிதியிடல் இடர்நேர்வு தணிக்கப்பட்ட வேளையில் உள்நாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலம் நீளமாகியது. மீள்கொடுப்பனவு கடப்பாடுகள் பரவலாக்கப்பட்டமையினால் ஏற்பட்ட கால நீடிப்பு உடனடியான நிதியியல் அழுத்தங்களை ஒழித்து கூடுதலானளவிற்கு முகாமைப்படுத்தக் கூடியதும் உறுதித்தன்மை வாய்ந்த படுகடன் அமைப்பினை நிறுவுவதற்கும் வசதியளித்தது. அதேவேளை, அரசாங்கம் வெளிநாட்டுப் படுகடன் மீதான நிவாரணம் தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்காக வெளிநாட்டுப் படுகடன் வழங்குவோருடன் தீவிரமாக ஈடுபட்டது. இதன்படி, கொள்கை அளவிலான உடன்படிக்கையொன்று அலுவல்சார் கொடுகடன் வழங்குவோரின் குழுவுடனும் சீனாவின் எக்சிம் வங்கியுடனும் அடையப்பட்டிருக்கின்றமையானது

33 வெளிநின்ற அரச படுகடன் மத்திய அரசாங்கத்தின் படுகடன் மற்றும் அரச உத்தரவாதப் படுகடன் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றிற்கு கையெழுத்திடுகின்ற தற்போதைய செய்முறைக்கு வழியமைத்திருக்கிறது. ஒப்பீட்டு நடவடிக்கை மற்றும் இணங்கிக் கொள்ளப்பட்ட படுகடன் உறுதித்தன்மை இலக்குகளுடனும் இணங்கிக் கொள்ளும் விதத்தில் வெளிநாட்டு வர்த்தகப் படுகடன் மறுசீரமைப்பிற்காக தனியார் படுகடன் உடமையாளர்களுடன் அரசாங்கமும் பேச்சுவார்த்தைகள் நடத்தும் அதன் முயற்சிகளைத் தொடர்ந்தது.

## 1.6.5 மத்திய அரச படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

**மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2022இல் மொ.உ.உற்பத்தியின் 12.5 சதவீதத்திலிருந்து 2023இல் மொ.உ.உற்பத்தியின் 15.4 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு அதிகரித்த உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் முக்கிய தூண்டுதலாக அமைந்தன.** உள்நாட்டுப் படுகடன் தீர்ப்பனவு 2022இன் 10.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023இல் மொ.உ.உற்பத்தியின் 13.7 சதவீதத்திற்கு உயர்வடைந்தமையானது ரூ.1,283.1 பில்லியன் கொண்ட பெயரளவு அதிகரிப்பினை உருவாக்கியது. அதேநேரம், உள்நாட்டு கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவில் ஏற்பட்ட உயர்வு திறைசேரி முறிகளின் அதிகரித்த தீர்ப்பனவுடன் இணைந்து காணப்பட்டதுடன் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் ரூ468.7 பில்லியன் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. ஒப்பிடுகையில், வெளிநாட்டுப் படுகடன் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி 2022இன் மொ.உ.உற்பத்தியின் 2.0 சதவீதத்திலிருந்து 2023இல் மொ.உ.உற்பத்தியின் 1.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தமைக்கு 2022இல் அரசாங்கத்தின் படுகடன் இடைநிறுத்தப்படுகின்றது என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகள் தொடர்ச்சியாக நிறுத்தப்பட்டமையினைத் தொடர்ந்து இது பதிவுசெய்யப்பட்டது.

வரைபடம் 1.37 மத்திய அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)




*மூலங்கள்:* நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

# அத்தியாயம் 2

# மத்திய வங்கிக் கொள்கைகளின் மீளாய்வு

## சுருக்கம்

உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைந்து பேணுதல் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல் என்பவற்றினைக் கொண்ட மத்திய வங்கியின் ஆணையானது 2023 செத்தெம்பரில் நடைமுறைக்கு வந்த 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினால் வலுப்படுத்தப்பட்டுள்ளது. விலை உறுதிப்பாட்டினை மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளாகவும் நிதியியல் உறுதிப்பாட்டினை ஏனைய குறிக்கோளாகவும் இலங்கை மத்திய வங்கிச் சட்டம் குறித்துரைக்கின்றது. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பொன்றினால் ஆதரவளிக்கப்பட்ட நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலினை நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக இது அங்கீகரிக்கின்றது. மேலும், பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக மத்திய வங்கி நியமிக்கப்பட்டுள்ளது. 2022இல் நாட்டில் நிலவிய கடுமையான பொருளாதார நெருக்கடியுடன் தோற்றம்பெற்ற எண்ணிலடங்காத பொருளாதார சவால்களுக்கு மத்தியில் இலங்கை மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டது. மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நெருக்கடிப் பதிலிறுப்பு மற்றும் முன்மதியுடைய கொள்கை வழிமுறைகள் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தினால் ஆதரவளிக்கப்பட்டு, பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை 2023இல் பாரியளவொன்றிற்கு மீட்டெடுப்பதற்குத் துணைபுரிந்தன. சாதகமான பணவீக்க அபிவிருத்திகள் மற்றும் வெளிநாட்டுத் துறையின் மேம்பாடுகள் என்பன காரணமாக நாணயத் துறையில் இறுக்கமான நாணயக் கொள்கை நிலையொன்றிலிருந்து 2023 யூன் தொடக்கம் தளர்த்தப்பட்ட நிலையொன்றிற்கான நகர்வொன்று காணப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட கடன்வழங்கல் சாதனங்கள் மீதான வட்டி வீத உச்ச எல்லை விதிப்பு, நிச்சயமற்றதன்மைக்கு மத்தியில் வினைத்திறனான நாணயக் கொள்கைத் தொடர்பூட்டல் மற்றும் சந்தையில் காணப்பட்ட திரவத்தன்மை நிலைமைகளை மேம்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் என்பன துரிதப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை ஊடுகடத்தல் மற்றும் 2023 இறுதியளவில் சந்தை வட்டி வீதங்களில் குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய சீராக்கம் ஆகியவற்றினைத் தோற்றுவித்தன. தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளின் உண்மைப் பொருளாதாரத்தின் மீதான கசிவுத் தாக்கத்தின் சமிக்ஞைகளைக் காண்பித்து, தனியார் துறைக் கொடுகடன் சுருக்கப் போக்கின் திரும்பலொன்று 2023 யூன் தொடக்கம் பதிவுசெய்யப்பட்டது. வெளிநாட்டுத் துறையில், மத்திய வங்கி 2022இன் நடுப்பகுதியிலிருந்து சந்தைக்கு வழங்கிய நாளாந்த வழிகாட்டுதலினை இடைநிறுத்தி, 2023 மாச்சில் செலாவணி வீத நிர்ணயத்தில் பாரியளவிலான நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதித்தது. சந்தையில் காணப்பட்ட மேம்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையுடன் இசைந்து செல்லும் விதத்தில், செலாவணி வீதமானது அதன்பின்னர் சந்தைச் சக்திகளினால் நிர்ணயிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடானது ஏதேனும் தேவையற்ற விஞ்சியளவிலான தளம்பலினைத் தடுப்பதனையும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைத் திரட்டுதலினையும் மாத்திரம் நோக்காகக் கொண்டிருந்தது. மேம்பட்ட வெளிநாட்டுத் துறை நிலைமை மற்றும் நம்பிக்கையின் மீள்திரும்பல் என்பவற்றினைப் பிரதிபலித்து, இலங்கை ரூபா உயர்வடைந்த வேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டன. அதேநேரம், வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை நிலவிய காலப்பகுதியில் மத்திய வங்கியும் அரசாங்கமும் நடைமுறைப்படுத்தியிருந்த

**பெரும்பான்மையான நிர்வாகக் கட்டுப்பாடுகள் 2023இல் படிப்படியாகத் தளர்த்தப்பட்டன. நிதியியல் துறையில், மத்திய வங்கியின் முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் மற்றும் நெருக்கடித் தயார்நிலை என்பன பொருளாதார நெருக்கடித் தாக்கத்தினை நிதியியல் நிறுவனங்கள் எதிர்கொண்டு தொடர்ந்தும் தாக்குப்பிடிப்பதனை இயலச்செய்து, உள்நாட்டு நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தது. 2023 காலப்பகுதியில், வங்கித்தொழில் துறையிலுள்ள அமைப்பியல்சார் பலவீனங்களை அடையாளம் காண்பதற்கும் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மையினைக் கட்டியெழுப்புவதற்கும் ஒன்பது முக்கிய வங்கிகளுக்கான சொத்துத் தர மீளாய்வொன்று நிறைவுசெய்யப்பட்டது. அதேவேளை, நாட்டின் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையின் வகிபாகத்தினை வினைத்திறனாக ஆற்றும் பொருட்டு நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பினை வலுப்படுத்துவதுடன் கட்டமைப்புக்கள் மற்றும் முறையியல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும் விதத்தில், இலங்கையின் நிதியியல் உட்சேர்க்கையின் ஊக்குவிப்பானது பிராந்திய அபிவிருத்தி தொடர்பில் மத்திய வங்கியின் கொள்கை முன்னுரிமையொன்றாகத் தோற்றம்பெற்றது. மேலும், இலத்திரனியல் கொடுப்பனவுகளையும் இ-பணப் பணிகள் என்பவற்றை ஊக்குவிக்கின்ற வேளையில் எல்லைகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களை முனைப்புடன் வசதிப்படுத்துவதில் மத்திய வங்கி சிறந்த முறையில் முன்னேற்றம் கண்டது. வினைத்திறன்மிக்க நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்கும் பொருட்டு சந்தை நடத்தைக் கண்காணிப்பினைத் தொடங்குவதற்கு மத்திய வங்கியினை இயலச்செய்கின்ற ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டன. அதேவேளை, உலக வங்கியினால் வழங்கப்பட்ட நிதியளிப்புப் பொறிமுறையொன்றின் ஊடாக இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் வலுப்படுத்தப்பட்ட வேளையில் காப்பு நிதியிடல் ஏற்பாடுகள் நிதியமைச்சுடன் இணைந்து தாபிக்கப்பட்டன.**

## 2.1 நாணயக் கொள்கைக் கட்டமைப்பு

**2023 செத்தெம்பரில் புதிதாக இயற்றப்பட்ட 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம் (மத்திய வங்கிச் சட்டத்தின்) மூலம் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கான மத்திய வங்கியின் ஆணை வலுப்படுத்தப்பட்டுள்ளது.** உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைந்து பேணுவதானது மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளாகக் காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கிச் சட்டம் குறித்துரைக்கின்றது. இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலினை முறையாக அங்கீகரிப்பதுடன் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு உடன்படிக்கையொன்றில் நிதியமைச்சரும் மத்திய வங்கியும் கையொப்பமிடுவதனைத் தேவைப்படுத்தி, அடையப்பட வேண்டிய பணவீக்க இலக்கினை நிர்ணயிக்கின்றது. காலப்போக்கில் மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினை நோக்கிப் படிப்படியாக நகர்ந்த போதிலும், நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினை முறையாகப் பின்பற்றுவதனைத் தேவைப்படுத்துகின்ற சட்டவாக்கங்கள் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் அறிமுகத்துடனேயே நடைமுறைக்கு வந்தன. இதற்கமைய, முதன்மைப் பணவீக்கத்தினை 5 சதவீத இலக்கொன்றில்[1] பேணும் பொருட்டு 2023 ஒத்தோபரில் மத்திய வங்கி நிதியமைச்சருடன் உடன்படிக்கையொன்றை மேற்கொண்டது. பணவீக்கத்திற்கான இலக்கு ஒவ்வொரு மூன்று ஆண்டுகளில் அல்லது விதிவிலக்கான சூழ்நிலைகள் அதனைத் தேவைப்படுத்தும் பட்சத்தில் அதற்கு முன்னர் மீளாய்விற்குட்படுத்தப்பட வேண்டும். மத்திய வங்கியினது மேம்பட்ட வெளிப்படைத்தன்மைக்கும் பொதுப் பொறுப்புக்கூறலிற்குமான ஏற்பாடுகளை இலங்கை மத்திய வங்கிச் சட்டம் உள்ளடக்கின்றது. இதற்கமைய, மத்திய வங்கி பணவீக்க இலக்கினைப்[2] பூர்த்திசெய்யத் தவறுமாயின், மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபை பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் இது பொதுமக்களுக்குக் கிடைப்பனவாகவும் இருத்தல் வேண்டும். பணவீக்க இலக்கினை அடையத் தவறியமைக்கான காரணங்கள், மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள நிவாரண நடவடிக்கைகள் மற்றும் பணவீக்க இலக்கு எந்தக் காலவரையினுள்

1 2023 ஒத்தோபர் 5ஆம் திகதியிடப்பட்ட 2352/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் பொதுமக்களுக்குத் தொடர்பூட்டப்பட்டது.

2 காலாண்டு சராசரி (ஆண்டிற்கு ஆண்டு) முதன்மைப் பணவீக்கம் (கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த) தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளுக்கு ±2 சதவீதப் புள்ளிகளைக் கொண்ட எல்லையொன்றில் இலக்கு வீதத்தினைத் தவறவிடுமாயின்.

எய்தப்படக்கூடுமோ அக்காலவரையறையின் ஒரு மதிப்பீடு என்பவற்றினை அறிக்கை நிர்ணயிக்கும். அதேவேளை, இலங்கை மத்திய வங்கிச் சட்டம் மத்திய வங்கிக்கு அதிகரித்தளவிலான தொழிற்பாட்டு மற்றும் நிதியியல் சுயாதீனத்தினை அனுமதிப்பதுடன் அதன்மூலம் அதன் ஆணையை வினைத்திறனாக நிறைவேற்றுவதனை இலக்காகக் கொண்ட கொள்கைகளை வலுப்படுத்துகின்றது. இதற்கமைய, சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளைத் தவிர்த்து, வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நாணய நிதியளித்தலானது தடைசெய்யப்பட்டுள்ளது. அரச செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான தற்காலிக முற்பணங்களுக்கும் வரையறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் இலங்கையின் பணவீக்கம் எதிர்வருகின்ற காலப்பகுதியில் தாழ்ந்த மற்றும் நிலையான மட்டங்களில் பேணப்படுமென்பதனை நிச்சயப்படுத்தத் துணைபுரியும் வேளையில் பணவீக்க எதிர்பார்க்கைகள் தொடர்ந்து நன்கு நிலைநிறுத்தப்பட்டிருப்பதனையும் நிச்சயப்படுத்துவதுடன் அதன்மூலம் பொருளாதாரத்தில் உள்ள அனைத்து ஆர்வலர்களுக்கும் பயனளிக்கும். அதேவேளையில், ஒருங்கிணைப்புப் பேரவையின் நிறுவுதலினூடாக இறை, நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டுக் கொள்கைகளின் ஒருங்கிணைப்பை மத்திய வங்கி இயலச்செய்கிறது. ஒருங்கிணைப்புப் பேரவையில் அதன் தவிசாளராகவும் செயற்படும் மத்திய வங்கியின் ஆளுநர் திறைசேரி மற்றும் பொருளாதாரக் கொள்கை[3] தொடர்பான அமைச்சிற்கான செயலாளர்கள் உறுப்பினர்கள் ஆவர். அண்மைக்கால பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள், தோற்றப்பாடு மற்றும் இடர்கள் பற்றிய அதனது கருத்துக்களை பரிமாறுவதற்கு ஒருங்கிணைப்புப் பேரவை காலாண்டு அடிப்படையில் கூடுகிறது.

## 2.2 நாணயக் கொள்கை நிலைப்பாடு மற்றும் வழிமுறைகள்

**2023இல் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாடானது 2022இல் நடைமுறைப்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்களவு இறுக்கமடைகின்ற நாணயக் கொள்கையிலிருந்து 2023இன் பிற்பகுதியில் தளர்த்தப்பட்ட நிலையொன்றிற்கான படிப்படியான மாறுதலடைதலொன்றினைப் புலப்படுத்தியது.** பணவீக்கத்தின் குறிப்பிடத்தக்க மிதமடைதல் மற்றும் நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள், மெதுவடைந்த உள்நாட்டுக் கேள்வி நிலைமைகளுக்கு மத்தியில் குறைந்தளவிலான பொருளாதார நடவடிக்கை மற்றும் வெளிநாட்டுத் துறை அழுத்தங்களின் தளர்வடைதல் என்பன ஆண்டு காலப்பகுதியில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடொன்றினை மத்திய வங்கி பின்பற்றுவதற்கு வழிவகுத்தது. 2022 செத்தெம்பரில் பணவீக்கம் உச்சத்தினை எட்டியமையினாலும் எதிர்பார்க்கப்படுகின்ற பணவீக்க வீழ்ச்சிப் பாதையுடன் இசைந்து செல்லும் விதத்திலும் 2022 பிற்பகுதியிலிருந்து வட்டி வீதங்களை அவற்றின் உச்சளவிலான மட்டங்களிலிருந்து குறைக்கும் பொருட்டு மத்திய வங்கி தார்மீக ரீதியிலான கடப்பாடுகளை மேற்கொள்ளத் தொடங்கியது. 2022இன் பிற்பகுதியிலிருந்து விஞ்சியளவிலான சந்தை வட்டி வீதங்களின் படிப்படியான மிதமடைதலிற்கு மத்தியில், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டினை இறுதிப்படுத்துவதற்கு பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த 'முன்கூட்டிய நடவடிக்கைகளை' நிறைவேற்றுவதற்குக் கொள்கை வட்டி வீதங்களை அதாவது, துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் 2023 மாச்சு முற்பகுதியில் 100 அடிப்படைப் புள்ளிகளினால் உயர்த்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. இருப்பினும், இவ்வதிகரிப்பின் பரிமாணம் ஆரம்ப சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் திட்டமிடப்பட்ட சீராக்க மட்டத்திலும் பார்க்க குறிப்பிடத்தக்களவு கீழாகக் காணப்பட்டது. கொள்கை வட்டி வீதங்களில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு மத்தியில், மத்திய வங்கியின் முனைப்பான தொடர்பூட்டல் சந்தை வட்டி வீதங்கள் மீதான இத்தகைய அதிகரிப்பின் தாக்கத்தினைத் தணித்தது. பணவீக்கத்தின் நீடித்ததன்மையிலான மிதமடைதலொன்றின் சமிக்ஞைகளை அவதானித்த மத்திய வங்கி 2023 யூலை முற்பகுதியில் தளர்வடைகின்ற நாணயக் கொள்கையினைத் தொடங்கியதுடன் கொள்கை வட்டி வீதங்கள் ஆண்டு காலப்பகுதியில் நான்கு சந்தர்ப்பங்களில் மொத்தமாக 650 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. ஒட்டுமொத்த சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களில் ஏற்பட்ட

3 நிதியமைச்சர் தவிர்ந்த ஏனைய அமைச்சர் ஒருவருக்கு அத்தகைய விடயம் குறித்தொதுக்கப்படும் பட்சத்தில்.

ஓரளவு மந்தமான கீழ்நோக்கிய சீராக்கத்தினைக் கருத்திற்கொண்டு, 2023 ஓகத்து பிற்பகுதியில் மத்திய வங்கியினால் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன்வழங்கல் உற்பத்திகளின் வட்டி வீதங்கள் மீது உச்ச எல்லைகள் விதிக்கப்பட்டதுடன், இது தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில் அவ்வுற்பத்திகளின் விஞ்சியளவிலான வட்டி வீதங்களில் குறைவொன்றினைக் கட்டாயப்படுத்தியது. ரூபாய்க் கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பன மீதான ஒட்டுமொத்த சந்தை வட்டி வீதங்களில் கீழ்நோக்கிய சீராக்கமொன்றினைத் தூண்டும் பொருட்டு, 2023 இறுதியளவில் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் குறைந்தபட்சம் 350 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட வேண்டுமென்பதனைத் தேவைப்படுத்துகின்ற பரந்தளவிலான வழிகாட்டுதல்கள் வங்கிகளுக்கு வெளியிடப்பட்டன. ஒட்டுமொத்த சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் கொள்கை வட்டி வீதங்களுடன் இசைந்து செல்கின்ற மட்டங்களுக்கு வீழ்ச்சியடைவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு வங்கித்தொழில் துறையுடன் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் மூலம் இவ்வழிமுறைகள் வலுப்படுத்தப்பட்டன. 2024 மாச்சில், கொள்கை வட்டி வீதங்களை 50 அடிப்படைப் புள்ளிகளினால் குறைப்பதன் மூலம் நாணயக் கொள்கையினை மேலும் தளர்த்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இது தாழ்ந்தளவிலான பணவீக்கப் பின்னணியில் சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களில் எதிர்பார்க்கப்படுகின்ற மேலதிக குறைப்பினூடாக கொடுகடன் வளர்ச்சிக்கும் பொருளாதார நடவடிக்கையின் மீளெழுச்சிக்கும் ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**2023இல் உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மை நிலைமைகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** 2023 ஓகத்து வரை முன்னோக்கிச் செல்கின்ற காலப்பகுதியில் உள்நாட்டுப் பணச் சந்தையின் ஒட்டுமொத்த திரவத்தன்மை பாரியளவில் பற்றாக்குறையினைக் கொண்ட மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் இது சந்தை வட்டி வீதங்கள் மீதான நாணயக் கொள்கைத் தளர்வடைதல் வழிமுறைகளின் வினைத்திறனை தடைப்படுத்தியிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய, தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில், உள்நாட்டுப் பணச் சந்தையில் காணப்பட்ட விடாப்பிடியான திரவத்தன்மைப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு பல்வேறு கொள்கை வழிமுறைகளை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியது. இதன் விளைவாக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்குப் பொருந்தக்கூடிய நியதி ஒதுக்கு விகிதம் 2023 ஓகத்து 16இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 4.00 சதவீதத்திலிருந்து 2.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதுடன் இது ஏறத்தாழ ரூபா. 200 பில்லியன் தொகையினை உள்நாட்டுப் பணச் சந்தைக்கு வெளியிட்டது. மேலும், அழுத்தத்திற்குட்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளின் திரவத்தன்மை நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் விசேட திரவத்தன்மை உதவி வசதிகளை மத்திய வங்கி வழங்கியது. மேலும், முன்னெச்சரிக்கையொன்றாக, மத்திய வங்கி அதன் அவசரகாலத் திரவத்தன்மை உதவிக் கட்டமைப்பினை வலுப்படுத்தி, ஏதேனும் சாத்தியமான நிதியியல் பீதி ஏற்படும் பட்சத்தில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு நிதியங்களை வழங்குவதனை இயலச்செய்தது. ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களுக்கு மேலதிகமாகத் தேவைப்பட்டவாறு தவணை நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களுக்கூடாக தவணை அடிப்படையொன்றில் திரவத்தன்மையை உட்செலுத்துகின்ற முனைப்புடனான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளையும் மத்திய வங்கி மேற்கொண்டது. மேலும், நிரந்தர அடிப்படையொன்றில் திரவத்தன்மையை உட்செலுத்துகின்ற நோக்கொன்றுடன் திறைசேரி முறிகளின் உடனடிக் கொள்வனவுகளுக்கான ஏலங்கள் 2023இலும் அதனைத்தொடர்ந்து 2024இன் முதலாவது சில வாரங்களிலும் நடாத்தப்பட்டன.

**மத்திய வங்கியின் ஓரிரவு நிதியிடல் வசதிகள் மீது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மிதமிஞ்சிய தங்கியிருத்தலைக் குறைப்பதன் மூலம் பணச் சந்தைகளை மீளச்செயற்படுத்துவதற்கான வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன.** 2023 சனவரி 16 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிளிற்கான துணைநில் வசதிகளின் அணுகல் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதற்கமைய, துணைநில் வைப்பு வசதியின் பயன்பாடானது நாட்காட்டி மாதமொன்றிற்கு உயர்ந்தபட்சம் ஐந்து (05) தடவைகளுக்கு வரையறுக்கப்பட்ட வேளையில் துணைநில்

கடன்வழங்கல் வசதியானது ஏதேனும் வழங்கப்பட்ட நாளொன்றில் ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினதும் நியதி ஒதுக்கு விகிதத்தின் 90 சதவீதத்திற்கு வரையறுக்கப்பட்டது. உரிமம்பெற்ற வங்கிகள் திரவத்தன்மை முகாமைத்துவத்திற்காக மாற்றுத் தெரிவுகளை ஆராய்வதனை இவ்வரையறைகள் தூண்டின. இதன் விளைவாக, உள்நாட்டுப் பணச் சந்தை நடவடிக்கைகளில் மீள்செயற்பாடொன்று பதிவுசெய்யப்பட்ட வேளையில், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மத்திய வங்கி வசதிகள் மீதான அவற்றின் தங்கியிருத்தலினைக் குறைத்தன. பணச் சந்தைகளில் பதிவுசெய்யப்பட்ட மேம்பாடுகளைக் கருத்திற்கொண்டு, துணைநில் வசதிகளின் பயன்பாடு மீதான கட்டுப்பாடுகளைப் படிப்படியாகத் தளர்த்துவதற்கு படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் துணைநில் கடன்வழங்கல் வசதி மீதான வரையறைகள் நீக்கப்பட்ட வேளையில், துணைநில் வைப்பு வசதிகள் மீதான வரையறைகள் 2024 பெப்புருவரி நடுப்பகுதியிலிருந்தான ஒதுக்குப் பேணுகைக் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நாட்காட்டி மாதமொன்றில் பத்து (10) தடவைகளென்றவாறு ஆரம்பத்தில் தளர்த்தப்பட்டதுடன் 2024 ஏப்பிறலிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அதனை முழுமையாக நீக்குவதற்கான கொள்கைத் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டது.

**மேற்கூறிய நாணயக் கொள்கை வழிமுறைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, சந்தை வட்டி வீதங்கள் தளர்த்தப்பட்டதுடன் ஒட்டுமொத்த கொடுகடன் நிலைமைகள் 2023இல் மேம்பட்டன.** நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் சந்தை வட்டி வீதங்களை வழிப்படுத்துவதற்கான தொழிற்பாட்டு இலக்கொன்றாக மத்திய வங்கியின் மூலம் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகின்ற குறுங்கால வட்டி வீதமொன்றாக விளங்குகின்ற சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் 2023 காலப்பகுதியில் துணைநில் வீத வீச்சின் தாழ்ந்தளவிலான எல்லையை நோக்கி வீழ்ச்சியடைந்தது. இவ்வபிவிருத்திகள் மற்றும் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை மற்றும் இடர்நேர்வு மிகையுடன் இணைந்த வீழ்ச்சி என்பவற்றுடன் ஆண்டு காலப்பகுதியில் அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்து, ஒட்டுமொத்த சந்தை வட்டி வீதங்களில் குறிப்பிடத்தக்க குறைப்பொன்றிற்கு வழிவகுத்தன. இதன் விளைவாக, தனியார் துறைக்கான கொடுகடனின் ஓரளவிலான விரிவாக்கத்திற்கு ஆதரவளிக்கின்ற மட்டங்களிற்கு சில்லறை சந்தைக் கடன்வழங்கல் வீதங்களைக் குறைத்தலுடன் பொருளாதாரத்தின் வட்டி வீதக் கட்டமைப்பானது இயல்புநிலைக்குத் திரும்பியது. இதற்கமைய, 2022 நடுப்பகுதியிலிருந்து தொடர்ச்சியான சுருக்கங்களை எதிர்கொண்ட தனியார் துறைக்கான கொடுகடன் 2023 யூனிலிருந்து திரும்பலொன்றினைக் குறித்துக்காட்டி, ஆண்டின் இறுதி வரையான காலப்பகுதியில் மாதாந்த அடிப்படையொன்றில் கொடுகடன் விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்தமையானது உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சிக்கு ஆதரவளித்தது. மீட்சிக்கு மத்தியில், 2023 சனவரி தொடக்கம் மே வரையான காலப்பகுதியில் கொடுகடன் குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்தமையினால் தனியார் துறைக்கான கொடுகடன் 2023 இறுதியளவில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 0.6 சதவீதம் கொண்ட சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, அரச மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளை உள்ளடக்கிய பொதுத் துறைக்கான வங்கித்தொழில் முறைமையினால் வழங்கப்பட்ட கொடுகடன் 2023இல் சுருக்கமொன்றினை எடுத்துக்காட்டியது. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டவாக்கத்துடன் நாணய நிதியளிப்பு குறித்த மத்திய வங்கியின் கொள்கை முழுமையான பரீட்சிப்பிற்குட்படுத்தப்பட்டது. நாணய நிதியளிப்பினைப் 18 மாதங்களுக்குத் தொடர்வதனை அனுமதிக்கின்ற இடைக்கால ஏற்பாடுகள் காணப்படுகின்ற போதிலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில் அரச பிணையங்களின் கையிருப்புக்களைக் குறைப்பதன் மூலம் அரசிற்கான வெளிநின்ற தேறிய கொடுகடனை மத்திய வங்கி கட்டம் கட்டமாக நிறுத்தியது. மத்திய வங்கியின் அரச பிணையக் கையிருப்புக்களின் படிப்படியான தளர்வு மற்றும் உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மையின் மேம்பாடுகள் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதியின் பயன்பாடு மீதான வரையறைகள் என்பன காரணமாக துணைநில் கடன்வழங்கல் வசதியிலிருந்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் முதனிலை வணிகர்களினாலும்

பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியங்களின் குறைவு என்பவற்றுடன் மத்திய வங்கியின் மூலமான அரசிற்கான தேறிய கொடுகடன் 2023இல் சுருக்கமடைந்தது. அதேநேரத்தில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்பும் பொருட்டு, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்தான மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களை மேம்படுத்துவதற்குப் பங்களித்தன.

**2023 காலப்பகுதியில் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைத் தொடர்பூட்டல் உபாயமானது பணவீக்க வீழ்ச்சிச் செயன்முறையின் தொடர்ச்சி, உள்நாட்டுப் படுகடன் மேம்பாட்டுத் தொழிற்பாட்டினைத் தொடர்ந்து குறைக்கப்பட்ட இடர்நேர்வு மிகையுடன் இசைந்து செல்லும் விதத்தில் சந்தை வட்டி வீதங்களின் குறைவு மற்றும் ஆண்டின் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் விரைவான ஊடுகடத்தலொன்றினைத் தோற்றுவித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.** 2023இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில், மத்திய வங்கியின் தொடர்பூட்டல் உபாயமானது பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துவதன் மூலம் பணவீக்க வீழ்ச்சிச் செயன்முறையின் தொடர்ச்சியினை நிச்சயப்படுத்தல் மற்றும் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகைத் தொழிற்பாட்டுடன் இணைந்த நிச்சயமற்றதன்மைகளுக்கு மத்தியில் அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்களில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட கணிசமானளவிலான மிகையினால் சந்தை வட்டி வீதங்களுக்கும் கொள்கை வட்டி வீதங்களுக்கும் இடையில் ஏற்பட்ட பாரியளவிலான இடைவீச்சினைக் குறைப்பதற்கு நிதியியல் நிறுவனங்களை இணங்கச்செய்தல் என்பவற்றில் கவனம் செலுத்தியது. ஆண்டின் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில், மத்திய வங்கியின் தொடர்பூட்டலானது பொதுமக்களின் நலனுக்காகத் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையின் ஊடுகடத்தலினைத் துரிதப்படுத்துவதில் கவனம் செலுத்தியது. ஆண்டு காலப்பகுதியில் நாணயக் கொள்கைத் தொடர்பூட்டலினை மேம்படுத்தும் பொருட்டு மரபார்ந்த வழிமுறைகள் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகிய இரண்டினதும் கலவையொன்று மத்திய வங்கியினால் பயன்படுத்தப்பட்டது. நாணயக் கொள்கை அறிவிப்புக்கள் மூன்று மொழிகளிலும் ஊடக வெளியீடுகளின் ஊடாக தொடர்பூட்டப்பட்டதுடன் அவை மத்திய வங்கியின் ஆளுநரின் தலைமையிலான ஊடக மாநாடுகளினால் முழுமைப்படுத்தப்பட்டன. இவ்வூடக மாநாடுகள் சமூக ஊடகங்களின் வாயிலாக நேரலையாக இடம்பெற்றதுடன் முக்கியமான செய்திகள் மத்திய வங்கியின் சமூக ஊடகங்களின் வாயிலாக குறுகிய காணொளித் துணுக்குகளாகக் கிடைப்பனவாகவிருந்தன. பொருளாதாரத்தின் ஆர்வலர்களுக்குப் பணவீக்கத்தின் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகள் தொடர்பில் வழிகாட்டுவதுடன் அதன்மூலம் நடுத்தர கால பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்தத் துணைபுரியும் பொருட்டு நாணயக் கொள்கை மற்றும் பணவீக்க ஊடக அறிக்கையிலும் பணவீக்க வீச்சு வரைபடத்தினை வெளியிடுகின்ற நடைமுறை ஆண்டு முழுவதும் தொடர்ந்தது. இவ்வணுகுமுறையானது மத்திய வங்கியின் நாணயக் கொள்கைத் தொடர்பூட்டல் உபாயத்தில் முக்கியமானதோர் அபிவிருத்தியைக் குறித்ததுடன் இது முன்னோக்கிய பார்வையிலமைந்த தகவல்கள் முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுகின்ற நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் ஒத்திசைந்து செல்கின்றதாகவுள்ளது. அதேவேளை, பல்வேறு நேர்காணல்கள், மாநாடுகள், கருத்தரங்குகள், கோரப்பட்ட விரிவுரைகள், வலைத்தளக் கருத்தரங்குகள் மற்றும் நாணயக் கொள்கை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். அதேபோன்று, ஆண்டறிக்கை உட்பட மத்திய வங்கியின் கிரமமான வெளியீடுகள் காலந்தவறாததொரு முறையில் பூர்த்தி செய்யப்பட்டன. 2023 யூலையில் மத்திய வங்கியின் முதலாவது நாணயக் கொள்கை அறிக்கையின் வெளியீடானது மத்திய வங்கியின் நாணயக் கொள்கைத் தொடர்பூட்டல் உபாயத்தில் முக்கியமானதொரு படிமுறையாகக் காணப்பட்டது. தொடர்புடைய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கைத் தீர்மானங்களுக்கான நியாயபூர்வதன்மையினைத் தொடர்பூட்டுவதுடன் அதன்மூலம் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை வகுத்தலின் பொறுப்புக்கூறலினை மேம்படுத்துவதற்குப் பங்களிப்பதானது இவ்வெளியீட்டின் முக்கிய நோக்கமாகக் காணப்படுகின்றது. மேலும், முக்கிய பேரண்டப்பொருளாதார மாறிகளின் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகளைத் தொடர்பூட்டுகின்ற முக்கிய வழிமுறையொன்றினை வழங்குவதன் மூலம்

நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பில் முக்கிய நோக்கொன்றினை நாணயக் கொள்கை அறிக்கை நிறைவேற்றி, அதன்மூலம் பொருளாதாரத்தின் ஆர்வலர்கள் முன்னோக்கிய பார்வையிலமைந்த தகவல்கள் உள்ளடங்கலாக தகவலறிந்த பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் துணைபுரிகின்றது. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் நியதித் தேவைப்பாடுகளிற்கமைய, நாணயக் கொள்கை அறிக்கையினை அரையாண்டிற்கு ஒரு தடவை வெளியிடுவதற்கு மத்திய வங்கி தேவைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதற்கமைய, நியதிச்சட்ட வெளியீடொன்றாக ஆண்டிற்கான முதலாவது நாணயக் கொள்கை அறிக்கையானது 2024 பெப்புருவரியில் வெளியிடப்பட்டது. இந்நாணயக் கொள்கை அறிக்கையின் வெளியீட்டுடன் இணைந்து, அறிக்கையின் உள்ளடக்கமானது பரந்தளவிலான அவையோருக்குச் சென்றடைவதனை மேம்படுத்துகின்ற நோக்குடன் வெளியீட்டின் முக்கிய செய்திகளை எடுத்துக்காட்டுகின்ற குறுகியளவிலான தொழில்நுட்ப அறிவைத் தேவைப்படுத்தாத காணொளித் துணுக்குகள் மத்திய வங்கியின் சமூக ஊடகங்களினூடாகக் கிடைப்பனவாகவிருந்தன. மேலும், ஊடகவியலாளர்கள் மற்றும் கல்வியலாளர்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் ஆகியோருக்குத் தனித்தனியான தொழில்நுட்ப விழிப்புணர்வு அமர்வுகள் நடாத்தப்படுவதன் மூலம் இரண்டு நாணயக் கொள்கை அறிக்கைகளின் வெளியீடுகளும் முழுமைப்படுத்தப்பட்டன. பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துதல், கொள்கை ஊடுகடத்தலினை மேம்படுத்துதல், நிச்சயமற்றதன்மையைக் குறைத்தல் என்பன வினைத்திறனான நாணயக் கொள்கைத் தொடர்பூட்டலிற்குத் துணைபுரிவதுடன் இவையனைத்தும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளினை அடைவதற்கு அத்தியாவசியமாக விளங்குகின்றன. மேலும், தெளிவான தொடர்பூட்டலானது நாணயக் கொள்கையின் நம்பகத்தன்மையினையும் வினைத்திறன்தன்மையினையும் மேம்படுத்தி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தாங்கியிருக்கும் தன்மை என்பவற்றிற்குப் பங்களிக்கின்றது. இதற்கமைய, ஏனைய காரணிகளுக்கு மத்தியில், நாணயக் கொள்கைத் தொடர்பூட்டலின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு 2023 காலப்பகுதியில் மத்திய வங்கியின் முயற்சிகள் பணவீக்க வீழ்ச்சிச் செயன்முறைக்கு, சந்தை வட்டி வீதங்களின் இடர்நேர்வு மிகையில் குறைவு மற்றும் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் விரைவான ஊடுகடத்தல் என்பவற்றிற்குப் பங்களித்துள்ளன.

## 2.3 வெளிநாட்டுத் துறைக் கொள்கைகள்

### 2.3.1 செலாவணி வீதக் கொள்கை

**2023இன் அநேகமான காலப்பகுதியில் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பொன்றினை இலங்கை பின்பற்றியது.** உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் திரவத்தன்மையில் ஏற்பட்ட மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு, 2022 மே தொடக்கம் சந்தைக்கு வழங்கப்பட்ட நாளாந்த வழிகாட்டுதலினை இடைநிறுத்துவதன் மூலம் 2023 மாச்சு 07இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் செலாவணி வீத நிர்ணயத்தில் பாரியளவிலான நெகிழ்ச்சித்தன்மையினை மத்திய வங்கி அனுமதித்தது. இதற்கமைய, செலாவணி வீதத்தில் ஏதேனும் விஞ்சியளவிலான தளம்பலினைத் தடுப்பதனையும் சந்தையிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகளினூடாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைத் திரட்டுதலினையும் நோக்காகக் கொண்டு மத்திய வங்கியின் மூலமான வரையறுக்கப்பட்ட தலையீடுகளுடன் மாத்திரம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளின் அடிப்படையில் செலாவணி வீதமானது நிர்ணயிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. முன்னதாக, 2021 காலப்பகுதியிலும் 2022இன் முற்பகுதியிலும், 2022 மாச்சு முற்பகுதியில் செலாவணி வீதத்தில் அளவிடப்பட்ட சீராக்கமொன்று அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் இலங்கை ரூபா உறுதியான மட்டங்களில் பேணப்பட்டது. இருப்பினும், செலாவணி வீதத்தின் பாரியளவிலான தேய்மானத்தின் காரணமாக இச்சீராக்கத்தின் பெறுபேறு குறித்த எதிர்பார்க்கை எதிர்பார்த்ததற்கு மாறாகக் காணப்பட்டது. இதற்கமைய, 2022 ஏப்பிறல் இறுதியளவில் இலங்கை ரூபா குறிப்பிடத்தக்களவு தேய்வடைந்தது. இந்த உறுதிப்பாடற்றதன்மை காரணமாக 2022 மே 13 தொடக்கம் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு நாளாந்த சந்தை வழிகாட்டுதலினை மத்திய வங்கி வழங்கத்

தொடங்கியதுடன் இது குறிப்பிடத்தக்களவிலான ஒரே நாளுக்குள்ளேயான தளம்பலிலிருந்து செலாவணி வீதத்தினை உறுதிநிலைப்படுத்தத் துணைபுரிந்தது. நடுத்தர உடனடிச் செலாவணி வீதமொன்றினையும் நடுத்தர உடனடிச் செலாவணி வீதத்தின் இரு பக்கங்களில் ஒன்றின் (+/-) மீதான வேறுபாட்டு எல்லையொன்றினையும் நாளாந்த அடிப்படையொன்றில் வெளியிடுவதன் மூலம் இது நடைமுறைப்படுத்தப்பட்டது. ரூ. 1.00 - ரூ. 10.00 கொண்ட வீச்சொன்றில் எல்லை வேறுபட்டதுடன் நடுத்தர உடனடிச் செலாவணி வீதத்தின் மீது சமச்சீரான அல்லது சமச்சீரற்ற ஆகிய முறைகளிலொன்றில் இது காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்பட்டது. இவ்வழிமுறைகளுடன், ஆண்டு காலப்பகுதியில் செலாவணி வீதத்தில் பாரியளவிலான உறுதிப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டமையானது இக்கொள்கையின் வினைத்திறன்வாய்ந்த தன்மையினைப் பிரதிபலித்தது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் அதன் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் சந்தையினால் உந்தப்பட்ட செலாவணி வீதமொன்றினை மீட்டெடுத்தல் ஆகியவற்றினை நோக்காகக் கொண்டு, மத்திய வங்கி நாளாந்த வேறுபாட்டு வீச்சின் படிப்படியான தளர்த்தலொன்றினைத் தொடங்கிய வேளையில் கட்டாய விற்பனைத் தேவைப்பாட்டினைத் தளர்த்தியது. 2023 மாச்சு மாத முற்பகுதியளவில், சந்தைக்கு வழங்கப்பட்ட நாளாந்த வழிகாட்டல் இடைநிறுத்தப்பட்ட வேளையில், மாற்றப்பட்ட உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்பில் (வாராந்த அடிப்படையொன்றில் மத்திய வங்கிக்கு வெளிநாட்டுச் செலாவணியினை விற்றல்) உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் பணிகள் துறையுடன் தொடர்புடைய ஏற்றுமதிப் பெறுகைகள் மற்றும் பொருட்களின் மாற்றப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சிய பெறுமதி என்பன மீது விதிக்கப்பட்ட கட்டாயத் தேவைப்பாடு போன்று 2022இல் நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி மாற்றல்களுடன் தொடர்புடைய கொள்கைகள் 2023 மாச்சு காலப்பகுதியில் இரத்துச்செய்யப்பட்டன. இதற்கமைய, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் மனோபாவங்கள் என்பன குறிப்பிடத்தக்களவு மேம்பட்டன. மேலும், உள்முக முதலீட்டுப் பரஸ்பர பரிமாற்றங்கள் திட்டம் தொடர்பில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு 2020இல் வெளியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும் 2023இல் இரத்துச்செய்யப்பட்டன. மேற்கூறிய வழிமுறைகள் திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் சந்தை மனோபாவங்கள் என்பவற்றை மேம்படுத்துவதற்குத் துணைபுரிந்து, 2023இல் இலங்கை ரூபாவின் உயர்வடைதலிற்கு வழிவகுத்தன.

**இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டவாக்கமானது நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினை முழுமைப்படுத்துவதற்கான நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பொன்றின் முக்கியத்துவத்தினை மீள்வலியுறுத்துகின்றது.** இலங்கை மத்திய வங்கிச் சட்டத்திற்கமைய, உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைந்து பேணும் பொருட்டு நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கி பொறுப்பாக்கப்பட்டுள்ளது. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பானது ஆழமானதும் அதிகளவிலான திரவத்தன்மையினைக் கொண்டதுமான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையொன்றினை மேம்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினால் கட்டாயப்படுத்தப்பட்ட நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக் கொள்கையொன்றின் பின்பற்றலுடன் மிகைப்படுத்தப்பட்ட நாணயமொன்றினூடாக கடந்த காலத்தில் நிலவிய ஏற்றுமதிச் சார்பிற்கு எதிரான நிலை எதிர்காலத்தில் நீக்கப்பட்டு, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணியின் கேள்வி மற்றும் நிரம்பல் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் செலாவணி வீதம் நகரும். நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக் கொள்கையின் பின்பற்றலுடன் சந்தை நம்பிக்கை குறிப்பிடத்தக்களவு மேம்பட்டு, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்குக் குறிப்பிடத்தக்களவிலான தேறிய உட்பாய்ச்சல்களைத் தோற்றுவித்தது. இதன் விளைவாக, சந்தை அடிப்படைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2023 இறுதியளவில் 12.1 சதவீதத்தினாலும் 2024 மாச்சு இறுதியளவில் 7.6 சதவீதத்தினாலும் செலாவணி வீதமானது ஐ.அ.டொலரிற்கெதிராக உயர்வடைந்தது. 2023இல் ஐ.அ.டொலர் 1.7 பில்லியன்

தொகைக்கும் 2024இன் முதலாம் காலாண்டுப் பகுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.1 பில்லியன் தொகைக்கும் தேறிய அடிப்படையொன்றில் (பெறுமதித் திகதியின் அடிப்படையிலமைந்த) மத்திய வங்கி கொள்வனவு செய்வதனை இவ்வபிவிருத்திகள் இயலச்செய்தன. மேலும், செலாவணி வீதமானது அதிர்வுகளிற்குப் பதிலிறுத்தும் விதத்திலான சீராக்கத்திற்கு அனுமதிக்கப்படுமென்பதனால் இலங்கைக்கான வெளிநாட்டு அதிர்வுகளின் தீவிரமான தாக்கங்களிலிருந்து இக்கொள்கை நாட்டைப் பாதுகாக்குமென்பதுடன் அதன்மூலம், சென்மதி நிலுவைச் சீராக்கங்களினூடாக வெளிநாட்டுத் துறை உறுதிப்பாடு இறுதியில் மீட்டெடுக்கப்படும்.

### 2.3.2 செலாவணிக் கட்டுப்பாடுகள் மற்றும் மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகள்

**வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை நிலவிய போது அறிமுகப்படுத்தப்பட்ட அநேகமான நிர்வாக வழிமுறைகள் 2023இல் படிப்படியாகத் தளர்த்தப்பட்டன.** முன்னைய காலப்பகுதியிலும் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் பொருளாதார நெருக்கடியேற்பட்ட காலப்பகுதியிலும், மத்திய வங்கியுடன் கலந்தாலோசித்து அரசாங்கம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் கடுமையான வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையினை வெற்றிகொள்ளும் பொருட்டு பல்வேறு பரிவர்த்தனைக் கட்டுப்பாடுகளையும் மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகளையும் விதித்தது. மேலும், நாட்டிலிருந்தான வெளிநாட்டு வெளிப்பாய்ச்சலினைக் கட்டுப்படுத்தும் வேளையில் அதிகளவிலான உட்பாய்ச்சல்களை ஊக்குவிப்பதற்கும் பல்வேறு வழிமுறைகளை மத்திய வங்கி சுயமாக நடைமுறைப்படுத்தியது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் திரவத்தன்மை நிலைமைகளில் படிப்படியான மேம்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்திலும் பன்முக துறைகள் மீதான வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாட்டினை மேம்படுத்துகின்ற நோக்கிலும் பெரும்பாலான இத்தகைய பரிவர்த்தனைக் கட்டுப்பாடுகள் மற்றும் ஏனைய வரையறைகள் 2023இல் நீக்கப்பட்டன. நாணயக் கடிதங்கள், கொடுப்பனவிற்கெதிரான ஆவணங்கள் மற்றும் ஏற்புக்கெதிரான ஆவணங்கள் ஆகிய கொடுப்பனவு நியதிகள் தொடர்பில் குறித்த சில இறக்குமதிப் பொருட்கள் மீது ஓராண்டிற்கு முன்னர் விதிக்கப்பட்ட வருவாயீட்டாத காசு எல்லை வைப்புத் தேவைப்பாடு 2023 மேயில் நீக்கப்பட்டது. அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்காக மத்திய வங்கியின் மூலமான வெளிநாட்டுச் செலாவணியின் பங்கீடு மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக்கான அணுகலினை முன்னுரிமைப்படுத்தும் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான மத்திய வங்கியின் முறைசாரா வழிகாட்டல் என்பவற்றினை மீளப்பெறப்பட்ட ஏனைய அத்தகைய கட்டுப்பாடுகள் உள்ளடக்கின்றன. குறித்த சில நடைமுறைப் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களிற்காக இலங்கை ரூபாவினை வெளிநாட்டுச் செலாவணியாக மாற்றுதல் மீதான குறித்த சில மட்டுப்பாடுகளை நீக்குதல் மற்றும் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து பெறப்பட்ட பெறுகைகளின் புலம்பெயர்ந்தோர் மூலமான மீளனுப்பல் தொடர்பில் குறித்த சில வரையறைகளை நீக்குதல் ஆகிய நோக்கங்களிற்காக 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவசியமான ஒழுங்குவிதிகளையும் பணிப்புரைகளையும் நிதியமைச்சரும் மத்திய வங்கியும் வெளியிட்டனர். பொருட்கள் ஏற்றுமதிப் பெறுகைகளை மீளனுப்புவதற்கான கட்டாயத் தேவைப்பாட்டின் மீது 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நடைமுறையிலிருந்த முன்னைய விதிமுறைகள் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2019 ஒத்தோபரில் மீள்வெளியிடப்பட்டன. அத்தகைய மீளனுப்பப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகள் மீதான கட்டாய மாற்றல் தேவைப்பாடு 2021 பெப்புருவரியில் அறிமுகப்படுத்தப்பட்டது. பொருட்கள் ஏற்றுமதிகளுக்கு மேலதிகமாக, 2021 ஒத்தோபரில் ஏற்றுமதிப் பெறுகைகளின் மீளனுப்பல் மற்றும் கட்டாய மாற்றல் தேவைப்பாட்டில் பணிகள் ஏற்றுமதிப் பெறுகைகளும் உள்ளடக்கப்பட்டன. இருப்பினும், பணிகள் ஏற்றுமதிப் பெறுகைகளுடன் தொடர்புடைய மாற்றல் தேவைப்பாடு 2022 ஓகத்தில் நீக்கப்பட்டன.

**மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகளாக மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கப்பட்ட குறித்த சில இடைநிறுத்தல்கள் மற்றும் வரையறைகள் என்பனவும் 2023 காலப்பகுதியில் தளர்த்தப்பட்டன.** நெருக்கடியான காலப்பகுதியில், நாட்டில் காணப்பட்ட சென்மதி நிலுவை நிலைமைகளுக்கு

ஆதரவளிக்கும் பொருட்டு வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சல்களை ஊக்கமிழக்கச் செய்வதற்கு அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் பல்வேறு மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. சென்மதி நிலுவை நிலைமைகள் மேம்படுவதற்குத் தொடங்கியவுடன், முன்னர் விதிக்கப்பட்ட சில மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டன. இதற்கமைய, இலங்கையில் வசிக்கின்ற நபர்கள் வெளிநாடுகளில் முதலீடுகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினூடாக செலுத்தப்படும் கொடுப்பனவுகள் மீதான தற்காலிக இடைநிறுத்தம் குறித்ததொரு மட்டத்திற்குத் தளர்த்தப்பட்டது. இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட மூலதனப் பரிவர்த்தனைகளுக்கு வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினூடாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதன் மீதான வரையறைகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. மேலும், இலங்கையில் வசிக்கின்ற நபர்களினால் வைத்திருக்கப்படும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாக மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிமுகப் பணவனுப்பல்கள் மீதான வரையறைகளும் மேலும் தளர்த்தப்பட்டன. இருப்பினும், இலங்கையில் வசிக்கின்ற நபர்களினால் வைத்திருக்கப்படும் தனிநபர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாக மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிமுகப் பணவனுப்பல்கள் மீது விதிக்கப்பட்ட தற்காலிக மட்டுப்பாடுகள் தொடர்கின்றன. மேலும், புலம்பெயர்வுப் படியின் கீழ் புலம்பெயர்ந்தோர் இலங்கைக்கு வெளியே நிதியங்களைப் பரிமாற்றுதல் குறித்த வரையறைகள் மேலும் தளர்த்தப்பட்டன. வெளிநாட்டுத் துறை நிலைமைகளில் சில மைல்கற்களை எட்டுவதற்கு உட்பட்டு, எஞ்சியுள்ள மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகளைப் படிப்படியாக நீக்குவதற்கான திட்டமொன்றினை அரசாங்கமும் மத்திய வங்கியும் வகுத்துள்ளன.

**மேலும், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு ஆண்டு காலப்பகுதியில் மேலதிக கொள்கை வழிமுறைகளை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது.** நாட்டிற்குள் வருகின்ற வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை ஊக்குவிப்பதற்கான வழிமுறையொன்றாக, பங்கு மூலதனமாகக் கிடைக்கப்பெற்ற பெறுகைகளில், சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளை - இலங்கையிலுள்ள கம்பனிகளுக்காக முதலீட்டைப்பெறுபவர் திறந்து பேணுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளிற்கான வசதிகள் என்பன தொடர்பில் பணிப்புரைகளும் விடுக்கப்பட்டு, கடல்சார் எரிபொருள் (நீர்க்கலம்), போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டு வசதிகள் ஆகிய வியாபாரங்களில் ஈடுபட்ட நிறுவனங்களுக்கிடையே குறித்த சில வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள் விரிவுபடுத்தப்பட்டன. மேலும், நாட்டிற்கான ஏற்றுமதிப் பெறுகைகளின் மீளனுப்பலினைக் கண்காணிப்பதனை வலுப்படுத்துவதற்கான வழியொன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதிகளைப் பணவனுப்பல்களுடன் இணங்குவிப்பதற்கான அணுகலினை வழங்கும் பொருட்டு 2022 யூனில் நடைமுறைப்படுத்தப்பட்ட தன்னியக்கப்படுத்தப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளைக் கண்காணிக்கின்ற முறைமையானது ஆண்டு காலப்பகுதியில் மேலும் மேம்படுத்தப்பட்டது. மேலும், பன்முக நாணய நடைமுறைகளாக பன்னாட்டு நாணய நிதியத்தினால் அடையாளம் காணப்பட்ட (i) நாணயக் கடிதங்கள், ஏற்புக்கெதிரான ஆவணங்கள் மற்றும் கொடுப்பனவிற்கெதிரான ஆவணங்கள் ஆகிய கொடுப்பனவு நியதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட குறித்த சில இறக்குமதிப் பொருட்கள் மீதான வருவாயீட்டாத காசு எல்லை வைப்புத் தேவைப்பாடு (ii) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடனான குறித்துரைக்கப்பட்ட முன்னோக்கிய உடனடிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான இருபுடையில் கோரப்படாத மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகளுக்கான வாராந்த அளவு நிறையேற்றப்பட்ட சராசரி வீதத்தின் பயன்பாடு (iii) அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கு மிகவும் சாதகமான வினைத்திறன்மிக்க செலாவணி வீதமொன்றினைத் தோற்றுவிக்கின்ற தொழிலாளர் பணவனுப்பல்களின் கொடுக்கல்வாங்கல் செலவினைத் திருப்பிச் செலுத்துதல் போன்ற உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்களுக்கான ஊக்குவிப்பினை வழங்குதல் போன்ற வழிமுறைகள் 2023இல் நீக்கப்பட்டன.

### 2.3.3 இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்வு

**வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் நீங்கலாக, முன்னுரிமை அடிப்படையொன்றில் தளர்வினை நடைமுறைப்படுத்துமாறு மத்திய வங்கியிடமிருந்து முன்வைக்கப்பட்ட பரந்தளவிலான பரிந்துரைகளின் பேரில் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் 2023இல் நீக்கியது.** உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் பதிவுசெய்யப்பட்ட மேம்பாடுகளையும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் படிப்படியான கட்டியெழுப்பலினையும் உன்னிப்பாகப் பரிசீலனையிற்கொண்ட வேளையில் பொருளாதார நடவடிக்கைகள் மீதான தொடர்ச்சியான இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் மெதுவடைந்து செல்கின்ற தாக்கத்தினையும் கருத்திற்கொண்ட பின்னர் தனிநபர் உந்து ஊர்திகள் நீங்கலாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட இறக்குமதிப் பொருட்கள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்துமாறு 2023 மேயில் நிதியமைச்சிற்கு மத்திய வங்கி பரிந்துரை செய்தது. இதற்கமைய, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட இறக்குமதிப் பொருட்கள் மீதான கட்டுப்பாடுகள் 2023 யூன், யூலை மற்றும் ஒத்தோபர் ஆகிய மூன்று கட்டங்களில் நீக்கப்பட்டு, உந்து ஊர்திகள் மாத்திரம் தற்காலிக இடைநிறுத்தலின் கீழ் பேணப்படுகின்றன. குறித்த சில கொடுப்பனவு நியதிகளின் கீழான இறக்குமதிகள் முக்கியமாக, திறந்த கணக்கு நியதிகள் மீது 2022 மேயில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் 2023 ஆண்டு முழுவதிலும் தொடர்ந்தும் காணப்பட்டன. இருப்பினும், ஏற்புக்கெதிரான ஆவணங்கள் மற்றும் கொடுப்பனவிற்கெதிரான ஆவணங்கள் ஆகிய நியதிகளின் கீழான இறக்குமதிகளிற்கான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தான முன்கூட்டிய ஒப்புதலினைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாடு 2024 பெப்புருவரி இறுதியளவில் நீக்கப்பட்டது. 2023 நடுப்பகுதியிலிருந்து அரசாங்கத்தின் மூலமான இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தலுடன் இணைந்து இத்தளர்த்தல்கள் இறக்குமதிகளில் படிப்படியான அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்து, பொருளாதார நடவடிக்கைகளின் மீளெழுச்சிக்கும் இறக்குமதிப் பொருட்களின் குறைந்தளவிலான விலை மட்டங்களிற்கும் ஆதரவளித்தன.

**2023இல் பின்பற்றப்பட்ட மேற்கூறிய கொள்கை வழிமுறைகள் ஆண்டு காலப்பகுதியில் பாரியளவிலான உறுதிப்பாட்டினை வெளிநாட்டுத் துறை அடைவதற்குத் துணைபுரிந்தன.** சந்தையினால் உந்தப்பட்ட இக்கொள்கை வழிமுறைகள் நாட்டிற்கான அதிகளவிலான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை ஊக்குவித்ததுடன் இதன் விளைவொன்றாக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் சந்தை மனோபாவங்கள் என்பன குறிப்பிடத்தக்களவு மேம்பட்டு, இலங்கை ரூபாவின் சடுதியான பெறுமான உயர்வொன்றிற்கு வழிவகுத்தன. உள்நாட்டுச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணிகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கி பன்னாட்டு ஒதுக்குகளைக் கணிசமானளவில் கட்டியெழுப்புவதனை இந்நிலைமைகள் இயலச்செய்தன.

2

## 2.4 நிதியியல் துறைக் கொள்கை வழிமுறைகள்

### 2.4.1 பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையின் குறித்துரைப்பு

**மத்திய வங்கிச் சட்டம் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக மத்திய வங்கியைக் குறித்துரைக்கிறது.** சட்டமானது, நிதியியல் உறுதிப்பாட்டினை அடையும் விதத்தில் பேரண்ட முன்மதியுடைய குறிக்கோள்களைத் தொடர்வதற்கு ஏற்ற விதத்தில் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளைச் செயற்படுத்த, நிகழ்த்த மற்றும் பிரயோகிப்பதற்கான பொறுப்பாணையுடன் மத்திய வங்கிக்கு அதிகாரங்களை வழங்கியிருக்கிறது. மூன்று இடைநிலை பேரண்ட முன்மதியுடைய குறிக்கோள்கள் பற்றி சட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அவையாவன மோசமான பொருளாதார மற்றும் நிதியியல் நிலைமைகளின் கீழும் கூட, நிதியியல் பணிகளுக்கு ஆதரவினை வழங்கும் விதத்தில் நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பேணுதல்; கொடுகடன் மற்றும் முடுக்கி உறுதியற்ற விதத்தில் அதிகரிப்பதனால் தோன்றும் இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்தல்; நிதியியல் முறைமைக்குள்ளேயான உள்ளக இணைப்புக்களிலிருந்தான இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் தனிப்பட்ட முறைமையியல் சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் முறிவடைவதனால் ஏற்படும் இடர்நேர்வினைக்

2

கட்டுப்படுத்தல் என்பனவாகும். பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபை என்ற ரீதியில் மத்திய வங்கிக்கு மற்றைய பல விடயங்களுடன் நிதியியல் முறைமையில் கட்டியெழுப்பப்படும் இடர்நேர்வுகளையும் பாதிக்கப்படும் தன்மையினையும் கண்காணிப்பதற்கு அடையாளம் காண்பதற்கு அல்லது மதிப்பிடுவதற்கு; பேரண்ட முன்மதியுடைய குறிக்கோள்களை எய்துவதற்காகத் தரவுகள், தகவல்கள் மற்றும் புள்ளிவிபரங்களைக் கோருதல், சேகரித்தல், தொகுத்தல், பகுப்பாய்வு செய்தல் அல்லது வெளியிடுதல்; அழுத்தப் பரீட்சிப்புக்களை நடத்துதல் மற்றும் கணனி முறையில் உருவகக்காட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்; முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நிதியியல் துறை பங்கேற்பாளர்களைக் குறித்துரைத்தல்; மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் நிதியியல் நிறுவனங்கள் பேரண்ட முன்மதியுடைய சாதனங்களைப் பின்பற்றுமாறு செய்தலும் அச்சாதனங்களைப் பிரயோகித்தலும்; அடையாளம் காணப்பட்ட முறைமையியல் சார்ந்த இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு அல்லது கட்டுப்படுத்தவதற்கான உபாயங்களையும் கொள்கைகளையும் வடிவமைத்தல்; முறைமையியல் சார்ந்த இடர்நேர்வுகளை ஏற்படுத்தக்கூடிய ஒழுங்குவிதிகளிலுள்ள இடைவெளிகளை அடையாளம் காணுதல் போன்றவற்றிற்கான அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், மத்திய வங்கியின் நேரடி மேற்பார்வை அல்லது ஒழுங்குமுறைப்படுத்தலின் கீழ்வராத துறையின் விடயங்களை பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளுடன் இசையச் செய்வதன் மூலம் நிதியியல் முறைமையின் உறுதித்தன்மைக்குப் பங்களிப்பதற்கும் அதனை அடைந்து கொள்வதற்கும் கொள்கை வழிமுறைகளில் இணைக்கப்பட்ட வழிமுறைகளை விதந்துரைப்பதனை உறுதிப்படுத்துவற்கு நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழுவொன்றினை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் சட்டம் குறிப்பிடுகின்றது. மேலும், மத்திய வங்கிச் சட்டத்தில் அடையாளம் காணப்பட்ட கணியசம்சார் மற்றும் தரம்சார் பேரண்ட முன்மதியுடைய சாதனங்களின் அடுக்கிற்குப் புறம்பாக புதிய சாதனங்களையும் வழிமுறைகளையும் நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான விதத்தில் பின்பற்ற முடியும்.

**2023ஆம் ஆண்டுப்பகுதியில் முறைமையியல் இடர்நேர்வுகளை தணிப்பதற்கு அல்லது நீக்கி விடுவதற்கான பரந்த கொள்கை நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மத்திய வங்கி அதன் பேரண்ட முன்மதியுடைய சாதனங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அவற்றைத் தொடர்ந்து அபிவிருத்தி செய்து வருகிறது.** இதற்கமைய, மத்திய வங்கி வீட்டுத்துறையினருக்காக வருமானத்திற்கான படுகடன் தீர்ப்பனவு விகிதம்; வீடமைப்பு நோக்கங்களுக்கான கொடுகடன் வசதிகளுக்கு உரிய பெறுமதிக்கான கடன் மீதான உச்ச எல்லை மற்றும் எதிர் சுழற்சி வட்ட மூலதனத்தாங்கிருப்பு என்பனவற்றை அறிமுகப்படுத்துவதற்காக வழிமுறைகளையும் கட்டமைப்புக்களையும் உருவாக்கியிருக்கிறது. வருமானத்திற்கான படுகடன் தீர்ப்பனவு விகிதம் மற்றும் பெறுமதிக்கான கடன் விகிதம் என்பன கடன்பாட்டாளர்களை அடிப்படையாகக் கொண்ட பேரண்ட முன்மதியுடைய சாதனங்களாக இருப்பதுடன் இவை மிகையான கொடுகடன் கேள்வியைத் தணிப்பதுடன் முறைமையியல் இடர்நேர்வுகள் கட்டியெழுப்பப்படுவதனைத் கட்டுப்படுத்தும் அதேவேளை வங்கிகளின் சாத்தியமான கொடுகடன் இழப்புக்களைக் கட்டுப்படுத்துவதுடன் மிகையான படுகடன் சுமைகளுடன் தொடர்பான இடர்நேர்வுகளைத் தணிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. எதிர் சுழற்சி வட்ட மூலதனத்தாங்கிருப்பின் நோக்கம் யாதெனில் நிதியியல் முறைமை நிதியியல் சுழற்சி வட்டத்துடன் இணைந்து செல்வதனைக் கட்டுப்படுத்தப்படுவதனையும் அதன் மூலம் சுழற்சியின் வளர்ச்சி காலத்தில் மிகையான கொடுகடன் வளர்ச்சியிலிருந்து வங்கித்தொழில் துறையைப் பாதுகாப்பதும் சுழற்சியின் கீழ் நோக்கிய காலத்தின் போது பொருளாதாரத்திற்கு கொடுகடன் வழங்கலை வசதிப்படுத்துவதுமாகும். நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்தும் விதத்தில் முறைமையியலின் தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்காக, தேவையான வேளைகளில், மத்திய வங்கி, பயன்படுத்துவதற்காக 2023இல் வடிவமைக்கப்பட்ட பேரண்ட முன்மதியுடைய சாதனங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, பேரண்ட நிதியியல் அபிவிருத்திகளை மிக நெருக்கமாகக் கண்காணிக்கும்.

## 2.4.2 உரிமம்பெற்ற வங்கிகளுடன் தொடர்பான கொள்கைகள்

**2023 காலப்பகுதியில் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு ரீதியான தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதற்கும் அதன் மூலம் வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல் வாய்ந்த தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் மத்திய வங்கி கொள்கை வழிமுறைகளையும் ஒழுங்குவிதிகளையும் தொடர்ந்தும் அறிமுகப்படுத்தியது.** பேரண்டப் பொருளாதார நிலைமைகள் நிலவிய காலத்தில் அதிலிருந்து தோன்றுகின்ற உரிமம்பெற்ற வங்கிகளின் திரவத்தன்மை மற்றும் மூலதன நிலைமைகளின் மீது ஏற்படக்கூடிய சாத்தியமான மோசமான தாக்கங்களைத் தணிப்பதற்கு "உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள்" மீது வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதேவேளை, திரவத்தன்மை மற்றும் மூலதனத்தினைச் சரியான மட்டத்தில் பேணுவதனை உறுதிப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணிப்புரைகளின்படி உரிமம்பெற்ற வங்கிகள், 2023ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள்/ இடைக்கால நிதியியல் கூற்றுக்களின் வெளிவாரிக் கணக்காய்வு நிறைவு செய்யப்படும் வரை 2023ஆம் ஆண்டிற்கான காசு பங்கிலாபங்களையும் இலாபங்களையும் கொடுப்பனவு செய்வதனை தாமதிக்குமாறு அறிவுறுத்தப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் பங்குகளை மீளவாங்கும் நடவடிக்கைகளிலிருந்தும் பணிப்பாளர் சபைக்கான முகாமைத்துவப் படிகளையும் கொடுப்பனவுகளையும் அதிகரிப்பதிலிருந்தும் இன்றியமையாதனவல்லாத அத்துடன்/ அல்லது அவசரமல்லாத செலவினங்களை மேற்கொள்ளல் என்பனவற்றிலிருந்து விலகியிருக்குமாறும் அதேவேளையில் 2023 இறுதி வரை மூலதனச் செலவினங்கள் உறப்படும் போது கடுமையான உரிய விழிப்புக் கவனத்தினையும் முன்மதியுடையதன்மையினையும் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டன. உரிமம்பெற்ற வங்கிகள் அத்தியாவசியமல்லாத, அவசியமல்லாத அத்துடன்/ அல்லது வங்கியினால் மூலதனச் செலவினங்களை ஏற்படுத்தக்கூடிய விடயங்களை மதிப்பீடு செய்து ஒப்புதலளிப்பதற்காக இவ்வாண்டுக்காலப்பகுதியிலும் 2024ஆம் ஆண்டுப்பகுதியிலும் தொழிற்படும் விதத்தில் சபை மட்டத்திலான துணைக்குழுவொன்றினை உருவாக்கிக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டன. உரிமம்பெற்ற வங்கிகள் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள், முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் பணிப்பாளர் சபைக்கான கொடுப்பனவுகள் அதன் மீது குறித்துரைக்கப்பட்ட பரிசீலனைகளுக்கு உட்பட்டு, மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவினால் முன்மொழியப்பட்ட பணிப்பாளர் சபையினால் அதிகரிப்புக்கள் ஒப்புதலளிக்கப்பட்டிருந்தாலொழிய அத்தகைய அதிகரிப்புக்களிலிருந்து விலகியிருக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளை அறிவுறுத்தும் விதத்தில் அதன் பின்னர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**வங்கிகளின் திரவத்தன்மை நிலைமைகளுடன் தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் பல நுண்பாக முன்மதியுடைய வழிமுறைகள் இலக்கிடப்பட்டன.** சாத்தியமான விதத்தில் ஏற்படக்கூடிய திரவத்தன்மை தடைகளையும் தனிப்பட்ட வங்கிகள் மற்றும் ஒட்டுமொத்த நிதியியல் துறையின் உறுதித்தன்மை மீது அவை கொண்டிருக்கக்கூடிய தாக்கத்தினையும் செயலூக்கத்துடன் கட்டுப்படுத்துவதற்காக, தகைமைபெறும் நிதியல்லா கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் மற்றும் தகைமைபெறும் நிதியல்லா பொதுவான பங்குகள் என்பனவற்றைத் தீர்மானிப்பதற்காக பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் திரவத்தன்மை காப்பு விகிதம் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளில் வரையறை செய்தவாறு வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் விடுக்கப்பட்டதுடன் உரிமம்பெற்ற வங்கிகளின் நியதி திரவத்தன்மை சொத்து விகிதத்தின் கணிப்பில் திரவச் சொத்துக்களாக அவை கருதப்படுதல் வேண்டும்.

**தகவல் பாதுகாப்பு மற்றும் இன்றியமையாத தகவல் முறைமைகளுக்கான தாக்குப்பிடிக்கும் தேவைப்பாடுகள் என்பனவற்றை மேம்படுத்தும் நோக்கத்துடன் இவ்வாண்டுப்பகுதியில் "தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தாக்குப்பிடிக்கும் தன்மை மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு" மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைக்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட வேளையில், வங்கித்தொழில் துறைக்காக உயர் இடர்நேர்வு முகாமைத்துவ வழிமுறையொன்று நிறுவப்பட்டது.** திருத்தங்கள், இன்றியமையாத தகவல் முறைமைகளை அடையாளம் காண்பது, மூன்றாந்தரப்பு பணி வழங்குவோரை அங்கீகரிப்பது

2

2

தொடர்பான தேவைப்பாடுகள், பயன்படுத்துநர் அணுகுவழிகளின் காலஇடைவெளியினை மீளாய்வு செய்தல், உடமையினைத் தீர்மானிப்பதற்கான பிரமாணம் மற்றும் தகவல் முறைமை உட்கட்டமைப்பு முகாமைத்துவம் என்பனவற்றைக் குறிக்கின்றன. மேலும், தங்கள் தொழில்கள் அல்லது வருமான வழிகளைப் புத்துயிரளிக்கும் திறன் கொண்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளையும் தனிப்பட்டவர்களையும் ஊக்குவிக்கும் நோக்கில், அதேவேளை நிதியியல் துறையில் எந்த உயர் அழுத்தத்தையும் பிரயோகிக்காதவாறு, இவ்வாண்டில் நிலவிய அசாதாரண நிலைமைகள் காரணமாக பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு தனித்தனி அடிப்படையில் அவர்களுக்குப் பொருத்தமான சலுகைகளைப் பிராந்திய வலையமைப்புக்களினூடாக வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளிடம் கோரப்பட்டது.

### 2.4.3 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் தொடர்பான கொள்கைகள்

**பங்கிலாபங்களை வெளிப்படுத்தும் போது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் ஏற்கனவேயுள்ள ஒப்புதல் செய்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக இலாபத்தன்மை, மூலதனப் போதுமாந்தன்மை மற்றும் பங்குடமையாளரின் இலாபத்தினைப் பரிசீலனையில் கொண்டு பங்கிலாபங்கள்/ இலாபங்களைத் திருப்பியனுப்புதல் பற்றிய வெளிப்படுத்துகை மீதான வழிகாட்டல்கள் இவ்வாண்டுப்பகுதியில் விடுக்கப்பட்டன.** இதன் மூலம் நிச்சயமற்ற காலப்பகுதியின் போது எழக்கூடிய பொருளாதார அதிர்வுகளை ஈர்த்துக் கொள்வதற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையும் இயலாற்றலும் வலுப்படுத்தப்படும் அதேவேளையில் வாடிக்கையாளர்களின் கொடுகடன் தேவைகளுக்கு வசதியளிப்பதற்கான அவற்றின் இயலாற்றலும் உறுதிப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**அண்மைய ஆண்டுகளில் நிலவுகின்ற சவால்மிக்க பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் காரணமாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளையும் தனிப்பட்டவர்களையும் பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறைகள் சலுகை வழிமுறைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.** இவ்வழிமுறைகள், தமது வியாபாரத்தினை அல்லது வருமான வழிகளை புத்துயிரளிக்கக்கூடிய வாய்ப்புக்களைக் கொண்டிருக்கின்ற அதன் மூலம் கடன்களின் மீள்கொடுப்பனவுகளை ஆரம்பிக்கக்கூடிய நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் மீட்சிக்கு வசதிகளை வழங்குவதனை கவனத்தில் கொண்டுள்ளன. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் வழங்கப்படும் அத்தகைய சலுகைகள் செயற்படுகின்ற மற்றும் செயற்படாத கடன்பாட்டாளர்களுக்கான கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல் மற்றும் மீளஅட்டவணைப்படுத்தல், தனித்தனி அடிப்படையில் செயற்படாத கொடுகடன் வசதிகளுக்கெதிரான அறவிடல் நடவடிக்கைகளை இடைநிறுத்துதல், மற்றும் நேரகாலத்துடனான தீர்ப்பனவுகளுக்கும் எதிர்கால வட்டிக் கொடுப்பனவுகளுக்கும் குறைந்த வீதங்களை அறவிடல் என்பன மூலம் தற்போதுள்ள செயற்படும் அல்லது மீள்அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகளை நேரகாலத்துடன் தீர்ப்பனவு செய்ய ஊக்குவித்தல் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

**2020இல் வெளியிடப்பட்ட வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் திரட்சிப்படுத்தலுக்கான முதன்மைத் திட்டம் நடுத்தர காலப்பகுதியில் வலுவான, இயக்கவாற்றல் மிக்க மற்றும் தாக்குப்பிடிக்கக்கூடிய உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை உருவாக்குவதற்குத் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் இதன் மூலம் வைப்பாளர்களின் நலவுரித்துக்கள் பாதுகாக்கப்படுவதுடன் நிதியியல் முறைமையின் உறுதிப்பாடும் பேணப்படும்.** மேலும், 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் விதிகளுடன் இணங்காத உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் முதன்மைத் திட்டத்தினைப் பின்பற்ற முடியாதவர்களும் அவர்களது உரிமங்கள் இரத்துச் செய்யப்படுவதனைத் தொடர்ந்து சந்தையிலிருந்து வெளியேற பணிக்கப்படுவர்.

**முன்மதியுடைய பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாத, மற்றும் உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்டிருக்கின்ற அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ள கம்பனிகளுக்கெதிராக இவ்வாண்டுப்பகுதியில் விரைவான முறையில் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் தீர்மான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.** இவ்வாண்டுப்பகுதியில் நேரகாலத்துடனான தலையீடுகள் நிதியியல் இடர்ப்பாடுகள் ஏற்படக்கூடிய அல்லது முறிவடைந்து போவதற்கான சாத்தியத்தன்மையை தணித்திருப்பதுடன் வைப்புக் காப்புறுதி நிதியத்தின் மீது ஏற்படக்கூடிய தேவையற்ற சுமைகளைக் கட்டுப்படுத்தவும் உதவியுள்ளது. இது தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள், வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் தொடர்பில் இணங்கிக் கொள்ளாத உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மீது கட்டுப்பாடுகளை விதித்தமை, முதனிலை வணிகரொருவரின் வியாபார இடைநிறுத்தல் நீடிக்கப்பட்டமை மற்றும் வர்த்தக உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கிணங்க உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ள அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ள நான்கு முறிவடைந்த உரிமம்பெற்ற கம்பனிகளுக்காக ஒடுக்கிவிடுபவர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை என்பனவற்றை உள்ளடக்குகிறது.

## 2.4.4. பொதுப்படுகடன் முகாமைத்துவக் கொள்கைகள்

**நிதி, பொருளாதார உறுதித்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு இலங்கையின் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகள் மீதான அதன் கொள்கையினை 2023 யூலை 4ஆம் நாள் அறிவித்தது.** பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் கீழ், இலங்கையின் பொதுப்படுகடன் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய தன்மையினை மீளக் கொண்டு வரும் முயற்சியில் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடு முக்கியமானதொரு முன்னெடுப்பாகும். இதன்படி, தகைமையுடைய உடமையாளர்களினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி முறிகள், மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படும் திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரசாங்கத்திற்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்கள், இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பன தனிப்பட்ட முதலீட்டாளர்களினால் வைத்திருக்கப்பட்டவை மற்றும் உள்நாட்டுச் சட்டங்களின் கீழ் விடுக்கப்பட்ட

**அட்டவணை 2.1 உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகைத் தொழிற்பாட்டின் சுருக்கம்**

| விடயம் | நிறைவேற்றப்பட்ட திகதி | தொகை (ரூ.பில்.) |
|---|---|---|
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 2023 ஓகத்து 15 | 252 |
| திறைசேரி முறிகள் | 2013 செத்தெம்பர் 14 | 3,204 |
| மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்கள் | 2023 செத்தெம்பர் 21 | 2,713 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வங்கிக் கடன்கள் நீங்கலாக ஏற்புடைத்தானவாறு மாற்றப்பட்டன அல்லது நீண்ட கால திறைசேரி முறிகளுக்கு பரிவர்த்தனை செய்யப்பட்டன. உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகள் பல கட்டங்களில் நிறைவேற்றப்பட்டன. 2023 நவெம்பர் முடிவில் அனைத்து வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறிகளும் ஒன்றில் மாற்றப்பட்டன அல்லது முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டன. உள்நாட்டுச் சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட எஞ்சிய வங்கிக் கடன்கள் தற்பொழுது மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன. உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகைத் தொழிற்பாடு நிறைவேற்றப்படுகின்றமையானது குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலம் வரை அரசாங்கத்திற்கு மிகத் தேவையாகவுள்ள இறை செயலாற்றத்தினை உருவாக்க உதவுகின்றன. அண்மையில் பன்னாட்டு கொடுகடன் தரமிடல் முகவர்களினால் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு நாணயக் கொடுகடனின் தரமிடல் மதிப்பீடுகள் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் நிறைவடைந்தமையினைத் தொடர்ந்து, உள்நாட்டு நாணயக் கடப்பாடு மீதான இலங்கையின் கொடுகடன் நம்பகத்தன்மை பற்றி அவர்களது முன்னோக்கிய கருத்தில் இவ்வபிவிருத்தியை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதேநேரம் மத்திய வங்கி அரசாங்கத்திற்கும் நியமிக்கப்பட்ட நிதியியல் மற்றும் சட்ட ஆலோசகர்களுக்கும் வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையின் மீது தொடர்ந்தும் ஆதரவளிக்கின்றது.

## 2.4.5. நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கொள்கைகள்

**மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டமையினைத் தொடர்ந்து, அதிகரித்த நிதியிடல் வசதிக்குட்படுத்தல் மற்றும் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதியியல்**

**முறைமைக்கான தேவையுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கையில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பது பிராந்திய அபிவிருத்தி தொடர்பான மத்திய வங்கியின் கொள்கை முன்னுரிமையொன்றாக தோற்றம்பெற்றிருக்கிறது.** தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தும் உபாய நடவடிக்கைத் திட்டம் ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 2021இல் ஆரம்பிக்கப்பட்ட தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய நடவடிக்கைத் திட்டத்தின் கட்டம் 1 2024ஆம் ஆண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, நிதியியல் கல்வி அறிவு கொண்ட சமூகத்தினரை உருவாக்கும் தன்மையைக் கொண்ட நிதியியல் அறிவிற்கான வழிகாட்டலொன்று வெளியிடப்படும்.

**மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டதனைத் தொடர்ந்து, புதிய கடன் திட்டங்களைப் படிப்படியாக நீக்கிவிடும் கொள்கைத் தீர்மானம் காணப்படுகின்ற போதும் அரசாங்கம் மற்றும் கொடைமுகவர்களின் சார்பில் நடைமுறைப்படுத்தப்பட்ட தற்போதுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சி கடன் திட்டங்களை அக்கடன் திட்டங்கள் முடியும் வரை தொடர்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.** அநேக கடன் திட்டங்களின் தொழிற்பாட்டுக் காலங்கள், சந்தையிலுள்ள இளைஞர் பிரிவின் நிதியிடல் தேவைகள் மற்றும் சிறு உடமை வேளாண்மையாளர்களின் தேவையைப் பரிசீலனையில் கொண்டு இவ்வாண்டுப்பகுதியில் நீடிக்கப்பட்டுள்ளன. முன்னர் அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட கடன் திட்டங்களின் செயற்பரப்பினை விரிவாக்கும் நோக்குடன் சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட நிதியியல் இடையேற்பாட்டாளர்களின் வரைவிலக்கணச் செயற்பரப்பினை விரிவாக்கும் விதத்தில் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டுள்ளன. மேலும், அரசாங்கத்தின் சார்பில், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் முறைசார்ந்த மார்க்கங்களினூடாக நாட்டிற்குத் தமது வெளிநாட்டுச் செலாவணியினை அனுப்புவதனை ஊக்குவிப்பதற்காக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் ஒத்துழைப்புடன் 2023இல் இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

## 2.4.6. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு மீதான கொள்கைகள்

**இவ்வாண்டுப்பகுதியில் மத்திய வங்கி டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகளை ஊக்குவிப்பதற்காக பல்வேறுபட்ட கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்திய வேளையில் கொடுப்பனவு முறைமையின் பாதுகாப்பும் உறுதித்தன்மையும் உறுதிப்படுத்தப்பட்டது.** டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஊக்குவிப்பதற்கும் அதிகரிப்பதற்குமாக மத்திய வங்கி அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டதுடன் உடனடிக் கொடுப்பனவு முறைமைகளூடாகச் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மீது, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் கொடுக்கல்வாங்கல்கள் மீது கவனம் செலுத்தியது. அதற்கமைய, பாரியளவிலான கொடுக்கல்வாங்கல்களுக்கு இடமளிக்கும் வகையில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழிக்கு ஏற்புடைத்தான பல்அடுக்கப்படுத்தப்பட்ட பொறுப்பு முகாமையாளர் வரையறைக் கட்டமைப்பு திருத்தப்பட்டது.

**அரச நிறுவனங்களுக்கான நிகழ்நிலை கொடுப்பனவுகளுக்கு வசதியளிப்பதற்காகவும் பொதுமக்களுக்கான அணுகுதன்மையினையும் வினைத்திறனையும் அதிகரிப்பதற்காகவும் 2024இல் லங்காபே நிகழ்நிலை கொடுப்பனவு தளத்துடன் ஒருங்கிணையுமாறு மத்திய வங்கி வர்த்தக வங்கிகளைப் பணித்தது.** இதற்கமைய, லங்காபே நிகழ்நிலை கொடுப்பனவுத் தளத்தினூடாக லங்காபே இனால் வசதியளிக்கப்படும் அரச டிஜிட்டல் கொடுப்பனவுத் தளத்தில் பங்கேற்குமாறு மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவுறுத்தியது. இவ்வொருங்கிணைப்பு உள்ளகத் தகவல் தொழில்நுட்ப முறைமைகள் இல்லாமலேயே அரச நிறுவனங்கள் பொதுமக்களிடமிருந்து டிஜிட்டல் கொடுப்பனவுகளை, குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்களின் மட்டத்தில் ஏற்றுக்கொள்ள இயலுமைப்படுத்தும்.

**தூர இடங்களுக்கு டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மத்திய வங்கி கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் பணவனுப்பல்களுக்காக இலத்திரனியல் பணப் பணிகளின் பயன்பாட்டினை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.** இவ்வழிமுறைகள் ஆரம்பத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த உயர்ந்தபட்ச பெறுமதியினை ஆரம்ப மற்றும் மேம்படுத்தப்பட்ட இலத்திரனியல் பணக்

## சிறப்புக்குறிப்பு 05
## இலங்கையின் நிதியியல் அறிவு வழிகாட்டல் (2024-2028) : நிதியியல்ரீதியிலான அறிவூட்டுதலை நோக்கி

### 1. அறிமுகம்

தகவலறிந்த நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தேவையான அறிவையும் திறன்களையும் உள்ளடக்குகின்ற நிதியியல் அறிவானது உலகெங்கிலுமுள்ள தனிப்பட்டவர்களுக்கும் சமூக பொருளாதார நலனோன்புகைக்கும் ஒருங்கிணைந்தவொன்றாகக் காணப்படுகின்றது. நிதியியல் அறிவின் முக்கியத்துவமானது பல்வேறு பரிமாணங்களில் பரவியிருக்கின்றது. நிதியியல் பணிகளின் சிக்கலான உலகை வழிநடாத்திச் செல்வதற்கும், முன்மதியுடைய முதலீட்டுத் தெரிவுகளை மேற்கொள்வதற்கும், படுகடன்களைச் செயற்றிறன்மிக்க வகையில் முகாமைசெய்வதற்கும், மற்றும் எதிர்கால நிதியியல் உறுதிப்பாட்டினைத் திட்டமிடுவதற்கும் தனிப்பட்டவர்களை வலுப்படுத்துவதன் மூலம் தனிப்பட்டவர்களின் பொருளாதார விளைவுகளில் இது செல்வாக்குச்செலுத்துகின்றது (Lone & Bhat, 2022). தனிப்பட்ட நிதியியல் நலனோன்புகைக்கு அப்பால், இது தகவலறிந்த வாடிக்கையாளர் நடத்தையைப் பேணிவளர்ப்பதன் மூலம் நிதியியல் சந்தைகளின் வினைத்திறனை மேம்படுத்துதல், ஒட்டுமொத்த முறைமையின் இடர்நேர்வுகளைக் குறைத்தல், நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவித்தல், மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்தல் போன்றன மூலம் பேரண்டபொருளாதார அமைப்பு முறைகளை வடிவமைப்பதன் முக்கியமானதொரு வகிபாகத்தை ஆற்றுகின்றது (Lusardi & Mitchell 2013).

### 2. நிதியியல் அறிவை மேம்படுத்துவது தொடர்பான உலகளாவிய மதியுரை மற்றும் அனுபவமும் அதன் இலங்கைக்கான பொருத்தப்பாடும்

தேசிய நிதியியல் அறிவு மட்டங்களை மேம்படுத்துவதற்கான உலகளாவிய மதியுரையானது பன்முக முயற்சியாக விளங்குகின்றது. இது புத்தாக்க உபாயங்கள், தொழில்சார் கூட்டணிகள், மற்றும் நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான ஈடுபாடு என்பனவற்றின் கூட்டிணைப்பினை எடுத்துரைக்கின்றது. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஒழுங்கமைப்பு, உலக வங்கியின் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டணி போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் பன்னாட்டு நியமங்களை அமைப்பதிலும், வழிகாட்டல்கள், வளங்கள் மற்றும் ஆதரவுகளை வழங்குவதிலும் அத்துடன் தமது நிதியியல்சார் கல்வி கட்டமைப்புக்களை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட நாடுகளுக்கு ஆதரவுவழங்குவதிலும் முக்கியப் பங்காற்றுகின்றன.

ஒட்டுமொத்தமாக, பொது மக்களின், குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு வடிவமைக்கப்பட்ட, இலக்கிடப்பட்ட மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்களின் முக்கியத்துவத்தை இந்நிறுவனங்கள் வலியுறுத்துகின்றன (AFI 2021, OECD 2005). முழுமையான கருவியொன்றாக, மேம்பட்ட நிதியியல் அறிவு மட்டங்களினூடாக மேம்பட்ட நிதியியல் வசதிக்குட்படுத்தல் அமைப்பு முறைகளை நோக்கிய சாதகமான மாற்றமொன்றைத் தூண்டுவதற்கு அரசாங்கங்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களின் மூலம் உலகளாவியரீதியில் தேசிய நிதியியல் அறிவு உபாயங்கள் அல்லது நிதியியல் அறிவு வழிகாட்டல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன (World Bank, 2014).

இலங்கையின் பின்னணியில், இவ்வாறான தேசிய முயற்சியை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெறக்கூடிய நன்மைகள் கணிசமானவையாகவும் பன்முகத்தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றன. 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் அறிமுகத்துடன், மத்திய வங்கியானது நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதற்கு நியதிஒதுக்குச் சட்ட கடப்பாட்டினைக் கொண்டிருக்கின்றது. எனவே, பரந்தளவில் தேசிய அளவிலான நிதயியல் அறிவு முன்னெடுப்பானது உயர்ந்தளவிலான நிதியியல் வசதிக்குட்படுத்தல் மட்டங்களை அடைவதற்கு மிகப் பொருத்தமான கருவியாகக் கருதப்படலாம்.

### 3. இலங்கையின் தற்போதைய நிதியியல் அறிவுசார் அமைப்பு முறை

2021இல், இலங்கையின் நிதியியல் அமைப்பு முறைமையை அடையாளங்காணும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கியானது உலக வங்கியின் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் இலங்கையில் முதன் முறையாக தேசியளவில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் நிதியியல் அறிவு கணக்கெடுப்பை நடாத்தியது.

2

ஒப்பிடக்கூடிய கணக்கெடுப்பு பெறுபேறுகளுடன், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கையர்களின் நிதியியல் அறிவு திருப்திகரமான மட்டங்களில் காணப்படுகின்றன என்பதை நிதியியல் அறிவு கணக்கெடுப்பானது வெளிப்படுத்தியிருந்தது. எனினும், நிதியியல் நடத்தையானது பின்தங்கியுள்ளதுடன் கொள்கைவகுப்பாளர்களை கவனமாகப் பரிசீலனை செய்வதற்கு தேவைப்படுத்தியுள்ளது. நிதியியல் அறிவை உண்மையாள நிதியியல் நடத்தையாக மாற்றுதலானது நிதியியல் எண்ணப்பாங்குகளிலுள்ள பிரச்சனைகள், நடத்தை சார்புகள், நடைமுறைசார் அனுபவமின்மை, சமூக பொருளாதார தடைகள், மற்றும் உணர்வு ரீதியிலான காரணிகள் போன்ற காரணிகளின் அளவிலிருந்து தோன்றுகின்ற பன்முகப்படுத்தப்பட்ட பிரச்சனையாக விளங்குகின்றது. இக்கூறுகள் உலகச் சூழலில், தனிப்பட்டவர்களுக்கு தமது நிதிக் கொள்கைத்தொடர்பானப் புரிந்துணர்வை செயற்றிறன்மிக்க வகையில் பிரயோகிப்பதற்கு சவாலாக அமைகின்ற விதத்தில், கூட்டாகப் பங்களித்து இவ் இடைவெளியை விரிவுபடுத்துகின்றன. மோசமான நிதியியல் நடத்தையானது பொருளாதார அதிர்வுகளுக்கு தனிப்பட்டவர்கள் பாதிக்கப்படும்தன்மையை தீவிரப்படுத்தி, குறைக்கப்பட்ட சேமிப்புக்கள் மற்றும் உயர்ந்தளவிலான படுகடன், அதிகரித்த சமமின்மைகள் போன்றவற்றினூடாக பேரண்டபொருளாதார உறுதிப்பாடின்மைக்கு பங்களிப்புச்செய்கின்றதுடன் அரசாங்க உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான அதிகரிக்கப்பட்ட தங்கியிருத்தலின் காரணமாக, பொது வளங்களில் தாக்கம் செலுத்துகின்றது.

மேலும், நிதியியல் வசதிக்குட்படுத்தலில் பாலின இடைவெளி அவதானிக்கப்படாதபோதும் கூட, நடுத்தரளவான பாலின இடைவெளியானது இலங்கையின் நிதியியல் அறிவு மட்டங்களில் அவதானிக்கப்பட்டது (CBSL 2021a, 2021b). இதற்கமைய, பாலினப் பிரிவினையைக் குறைப்பதற்கு பாலின உணர்திறன் அணுகுமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். எனவே, இலங்கையர்களின் சாதகமான நிதியியல் நடத்தைக்கு நிதியியல் அறிவு, அதாவது நிதியியல் அறிவு மற்றும் திறன்களைப் பரிமாற்றுதலை ஆதரிப்பதற்காக இலக்கிடப்பட்ட நடத்தைசார் தலையீடுகள் தற்போதைய சூழ்நிலையில் கொள்கை முன்னுரிமையொன்றாக கருதப்பட வேண்டும்.

**4. கொள்கைக் கட்டமைப்பு: இலங்கையின் நிதியியல் அறிவு வழிகாட்டல்**

2021ஆம் ஆண்டின் நிதியியல் அறிவு அளவீட்டின் கண்டறியப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை மத்திய வங்கியானது நிதியியல் துறை ஒழுங்குபடுத்துநர்கள், அமைச்சர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஏனைய பொது மற்றும் அரசத் துறை நிறுவனங்கள் உள்ளடங்கலாக, 40இற்கும் மேற்பட்ட ஆர்வலர்களுடன் இணைந்து, இலங்கையின் முதல் நிதியியல் அறிவு வழிகாட்டலை உருவாக்குவதற்கு வழிவகுத்தது (வழிகாட்டல்).

**5. நிதியியல் அறிவு வழிகாட்டலைத் தொழிற்படுத்துதல்: நடவடிக்கைத்திட்டமும் தொழிற்பாட்டுத் தூண்களும்**

இலங்கையர்களின் நிதியியல் நடத்தையை மேம்படுத்தலின் அடிப்படை குறிக்கோளுடன், 2024 தொடக்கம் 2028ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ள 05 ஆண்டுகால நடவடிக்கைத் திட்டத்தை வழிகாட்டல் உள்ளடக்குகின்றது. நடவடிக்கைத் திட்டமானது தற்போது 48 நடவடிக்கைகளைக் கொண்டுள்ளதுடன் வழிகாட்டலின் 04 உபாய முன்னுரிமைகள் முழுவதும் 10 குறிக்கோள்களை அடைவதற்கு உருவாக்கப்பட்டுள்ளது.

கூட்டிணைதலை வலுப்படுத்தல், ஆர்வலர்களின் மூலம் நிதியியல் அறிவு விடயங்களைத் தரப்படுத்தல், பாடசாலை மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகிய காலத்தில் தேசிய மட்டத்தில் அரச மற்றும் தனியார் கல்வி பங்காளர்களுடன் இணைந்து, அவர்களை நிதியியல் ஆற்றல்மிக்க தனிப்பட்ட நபர்களாக மாற்றுவதற்கு ஆதரவளித்தல், மற்றும் நிதியியல் அறிவு தலையீடுகளின் செயற்றிறன்மிக்க வழங்கலுக்கான தற்போதுள்ள வழங்கலைப் பயன்படுத்துதல் என்பனவற்றில் இந்நடவடிக்கைகள், பிரதானமாக கவனம் செலுத்தும். நடவடிக்கைத் திட்டத்தைத் தொழிற்படுத்துவதற்கு ஆதரவளிக்கும்வகையில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தில் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய செயலகத்தைத் தாபித்தது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் தற்போதுள்ள ஆளுகைக் கட்டமைப்பானது வழிகாட்டலின் செயற்றிறன்மிக்க நடைமுறைப்படுத்தலை மேற்பார்வைசெய்து உறுதிசெய்கின்றது.

தேசிய மட்டத்திலான நிதியியல் அறிவு முன்னெடுப்புக்களின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலுக்கு பொருளாதாரத்தின் மாற்றமடைகின்ற மற்றும் இயக்கவாற்றல்மிக்கதுமான

நிதியியல் அறிவு தேவைகளை இனங்காண்பது இன்றியமையாததாகும். எனவே, வழிகாட்டலின் நடவடிக்கைத் திட்டமானது இயக்கவாற்றல்வாய்ந்த மற்றும் திறந்த ஆவணமாக இருக்கக்கூடும். இது, தேவைக்கேற்றவாறு, அத்தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இற்றைப்படுத்தப்படும்.

### 6. முன்னோக்கிய பயணம்

வழிகாட்டலில் குறிப்பிடத்தக்க கொள்கை அர்ப்பணிப்பும் வெற்றிகரமான அபிவிருத்தியும் காணப்பட்டபோதிலும், முன்னோக்கிச் செல்லும் பாதை சவால்கள் நிறைந்ததாக காணப்படுகின்ற அதேவேளை நம்பிக்கையளிக்கக்கூடிய வாய்ப்புக்கள் மேம்படுத்தப்படுவதற்கு எதிர்பார்த்துள்ளன. வழிகாட்டலின் வெற்றியானது தேசியக் கொள்கைகளுடன் அணிசேர்தல், வளர்ந்துவரும் நிதியியல் அமைப்புமுறை மற்றும் உலகளாவிய போக்குகளைப் பின்பற்றுதல், அணுகக்கூடிய மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் அறிவுத் தலையீடுகள், பங்குடைமையைப் பேணிவளர்த்தல், மற்றும் செயற்றிறன்மிக்க கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பினைத் தாபித்தல், போன்ற பல்வேறு முக்கிய காரணிகள் மீது தங்கியுள்ளது. நிதியியல் அறிவுத் தலையீடுகளின் தாக்கத்தையும் நிலைபெறத்தக்கத்தன்மையையும் உயர்த்துவதற்கு இப்படிமுறைகள் இன்றியமையாதவையாகும். இவை, இறுதியில், நிதியியல் அறிவினைக் கொண்ட மற்றும் வலுப்படுத்தப்பட்ட குடிமக்களுக்கும் வழிகுக்கும். மேலும், நிதியியல் அறிவு மற்றும் திறன்களின் தற்போதைய மட்டங்கள், நிதியியல் பணிகளுக்கான பரந்துபட்ட அணுகல், மற்றும் அதிகரித்த டிஜிட்டல் ஊடுகடத்தல் போன்ற தற்போதுள்ள வளங்களைத் தங்கியிருத்தலானது தலையீடுகளின் தாக்கத்தை ஊக்குவிக்கலாம். ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ள வழங்கல் வழிகள் மற்றும் சமுதாய நல வலையமைப்பு, பெண்கள் அபிவிருத்தி அலுவலர் வலையமைப்பு, மற்றும் வழிகாட்டலின் கீழ் நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்கான வேளாண்மை மற்றும் சமுர்த்தி சங்கங்கள் போன்றவற்றை பயன்படுத்துதலானது வளப்பயன்பாட்டை மேம்படுத்தும். மேலும், 40இற்கு மேற்பட்ட தேசிய மட்டத்திலான ஆர்வலர்களுடன், வழிகாட்டலின் விரிவாக்கமானது குறிப்பிடத்தக்க வகையில் விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பில், ஆர்வலர் நிறுவனங்களின் நீண்டகால

**இலங்கையின் நிதியியல் அறிவு வழிகாட்டலின் கொள்கைக் கட்டமைப்பு (2024-2028)**

**தொலைநோக்கு** "நிதியியல்ரீதியாக அறிவூட்டப்பட்ட இலங்கை"

**பணி** மக்களின் நிதியியல் நலனோன்புகையை அதிகரிப்பதற்கு நன்கு அறியப்பட்டதும் பொறுப்புவாய்ந்ததுமான நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நிதியியல் அறிவு, திறன்கள் மற்றும் நம்பிக்கை என்பனவற்றின் தேவைப்பாட்டுடன் பெருமளவிலான நிதியியல் வசதிக்குட்படுத்தலை நோக்கி அனைத்து இலங்கையர்களையும் வலுப்படுத்தல்

**உபாய முன்னுரிமைகள்**
(i) செயற்றிறன்மிக்க ஒத்துழைப்பும் இணக்க உள்ளடக்கமும்
(ii) அதிகரிக்கப்பட்ட சாதகமான நிதியியல்சார் நடத்தை
(iii) விழிப்புடைய மற்றும் பாதுகாக்கப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர்கள்
(iv) தலைமுறைசார் நடத்தை மாற்றம்

**இலக்குக் குழுக்கள்**
(i) இளையோரும் பாடசாலை சிறுவர்களும்
(ii) இனங்காணப்பட்ட பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் (பெண்கள், புலம்பெயர் தொழிலாளர்கள் போன்றோர்)
(iii) நடுத்தர, சிறிய மற்றும் நுண்பாக தொழில்முயற்சிகள்
(iv) தொழில்சார் நிபுணர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்கள்

**முக்கிய உள்ளடக்கங்கள்**
(i) பொருளாதார மற்றும் நிதியியல் சூழல்
(ii) டிஜிட்டல் நிதியியல் அறிவு
(iii) நிதியியல் முகாமைத்துவம்
(iv) வாடிக்கையாளர் பாதுகாப்பு

அர்ப்பணிப்பானது வழிகாட்டல் நடைமுறைப்படுத்தலின் செயற்றிறனையும் தொடர்ச்சியையும் உறுதிசெய்வதற்கு அவசியமாகும். மிக முக்கியமாக, இத்தேசிய முயற்சியின் முன்னெப்பொழுதுமில்லாத தன்மையைக் கருத்திற்கொண்டு, மிகவும் அவசியமான தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு பல்புடை அபிவிருத்திப் பங்காளர்களின் ஈடுபாடானது பயன்படுத்தப்படுகின்றது. எவ்வாறெனினும், வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலை நோக்கிய இணக்கமான முயற்சிகள் முக்கியமாக காணப்படுவதால், நடைமுறைப்படுத்தல் செயன்முறையானது சவால்மிக்கதாகக் காணப்படுகின்றது. வழிகாட்டலுக்கு உயர்ந்தளவிலான முன்னுரிமையை வழங்குவதை உறுதிப்படுத்தும் வகையில், தேசியளவிலான நிகழ்ச்சித்திட்டமொன்றாக, பரந்தளவிலான பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகளுடன் வழிகாட்டலை இணைத்தலானது அரசாங்கம், நிதியியல் நிறுவனங்கள், மற்றும் கல்வியாளர்கள் உள்ளடங்கலான முக்கிய ஆர்வலர்களுக்கு மத்தியில் செயற்றிறன்மிக்க ஒத்துழைப்பை ஏற்படுத்துகின்றது. பார்வையாளர்களின் பலதரப்பட்ட தேவைகளை நிவர்த்திசெய்தல், நிதியியல் புத்தாக்கங்களின் துரிதமான மேம்பாடுகளுடன் வேகத்தைப் பேணுதல், இலக்குக் குழுக்களின் செயற்றிறன்மிக்க ஈடுபாட்டையும் தலையீடுகளுடன் அவர்களின் அணுகல்தன்மையையும் உறுதிசெய்தல் என்பன செயற்றிறன்மிக்க நடைமுறைப்படுத்தலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம். மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, செயற்றிறன்மிக்க விதத்தில் நிதியியல் மோசடிகளை எதிர்த்தல், மிகையான கடன்சுமைகளைக் குறைத்தல், வறுமையை ஒழித்தல், மற்றும் வறுமைப் பொறிக்குள் அகப்படுவதை தகர்த்தல் போன்றவற்றின் மூலம் குறிப்பிடத்தக்க பொருளாதார மற்றும் சமூக நன்மைகளுக்கான உறுதியான வாக்குறுதியொன்று காணப்படுகின்றமையினால், நிதியியல் அறிவு வழிகாட்டலின் மூலமாக முன்வைக்கப்படும் முயற்சிளை முன்னெடுப்பதற்கு அனைத்து ஆர்வலர்களினதும் குறிப்பிடத்தக்க கவனம் தேவைப்படுவது நிரூபணமாகின்றது. தனிப்பட்டளவிலும் தேசிய அளவிலும் பெருமளவிலான சேமிப்புக்களையும் முதலீடுகளையும் இது மேலும் ஊக்குவிக்கின்றது. இதன்மூலம், உள்ளக மூலதன உருவாக்கம் ஊக்குவிக்கப்படுகின்றதுடன் பொருளாதார வளர்ச்சியும் எளிதாக்கப்படுகின்றது.

**உசாத்துணைகள்**

1. Alliance for Financial Inclusion (2021) National Financial Education Strategies Toolkit Available at https://www.afi-global.org/wp-content/uploads/2021/07/NFES_toolkit_22082022.pdf
2. Annamaria Lusardi and Olivia S. Mitchell (2013) "The Economic Importance of Financial Literacy: Theory and Evidence", Journal of Economic Literature, American Economic Association, vol. 52(1), pages 5-44 , Available at http://www.nber.org/papers/w18952
3. CBSL (2021a), National Financial Inclusion Strategy of Sri Lanka: "Better Quality Inclusion for Better Lives" Available at https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2021/en/13_Box_10.pdf
4. CBSL (2021b) Financial Literacy Survey – Sri Lanka – 2021 https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/financial_literacy_servey_sri_lanka_2021_e.pdf
5. OECD (2005) Recommendation on Principles and Good Practices for Financial Education and Awareness, Available at https://www.oecd.org/finance/financial-education/35108560.pdf
6. Umer Mushtaq Lone and Suhail Ahmad Bhat (2022) "Impact of financial literacy on financial well-being: a mediational role of financial self-efficacy, Journal of Financial Services Marketing", Volume 29, pages 122–137 , Available at https://doi.org/10.1057/s41264-022-00183-8.
7. World Bank (2014) Financial Education Programs and Strategies; Approaches and Available Resources, Available at https://documents1.worldbank.org/curated/en/901211472719528753/pdf/108104-BRI-FinancialEducationProgramsandStrategies-PUBLIC.pdf

கணக்குகளுக்கு உயர்த்துவதற்காக பயன்படுத்தப்பட்டது. இச்சீராக்கங்களின் நோக்கம் தூர இடங்களிலுள்ள தனிப்பட்டவர்களுக்கு பாரியளவில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதும் வசதிகளை வழங்குவதும், டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளைப் பின்பற்றுவதனை பேணி வளர்த்துக் கொள்வதுமேயாகும். மேலும் மத்திய வங்கி, குறைந்தபட்ச செலவில் டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதற்கு சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகர்களை ஊக்குவிப்பதற்காக லங்கா கியூஆர் வணிக கழிவிடல் வீதத்தினை 0.5 சதவீதத்தில் பேணுவதற்குத் தீர்மானித்தது.

**மத்திய வங்கி, எல்லைகடந்த சில்லறைக் கொடுப்பனவுகளுக்கு வசதியளிப்பதற்காக சீனாவும் இந்தியாவும் இலங்கைக்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட நாடுகள் என்ற அவற்றின் முக்கியத்துவத்தினைப் பரிசீலனையில் கொண்டு அந்நாடுகளுடனான கொடுப்பனவு வலையமைப்பினை ஒருங்கிணைப்பதற்கு தேசிய கொடுப்பனவு வலையமைப்பு தொழிற்பாட்டாளரான லங்காபே (பிறைவேற்) லிமிடெட்டிற்கு ஒப்புதலளித்தது.** இவ்வொருங்கிணைப்பு சீனா மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு லங்காகியூஆர் குறியீட்டினைக் கொண்ட வியாபாரிகளுடன் கொடுப்பனவுகளை மேற்கொள்ள இயலுமைப்படுத்தும்.

வெளிநாட்டுக் கொடுக்கல்வாங்கல் செயலி மூலம் முன்னெடுக்கப்படும் கொடுக்கல்வாங்கல்களுக்கு இந்தியாவிலும் சீனாவிலுமுள்ள நிதியியல் நிறுவனங்களுக்கும் இலங்கை வணிகர்களினால் செலுத்தப்பட வேண்டிய உயர்ந்த பரிமாற்றல் கட்டணத்தினைப் பொறுத்தவரை எல்லோருக்கும் சமமான வாய்ப்பினை வழங்க வேண்டும் என்ற நோக்குடன் கொடுக்கல்வாங்கல் தொகையொன்றிற்கான உயர்ந்தபட்ச வணிகர்கள் கழிவிடல் வீதம் லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்றவாறு இருக்கும் விதத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களின் ஒட்டுமொத்த தரத்தினையும் மேம்படுத்தும் நோக்குடனும் டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளைப் பெருமளவிற்கு பின்பற்ற ஊக்குவிக்கும் விதத்திலும் டிஜிட்டல் கொடுப்பனவுகளின் பாதுகாப்பினை அதிகரிப்பதற்காக மத்திய வங்கி பல்வேறு வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தியது.** இவ்வழிமுறைகள் கொடுகடன் மற்றும் படுகடன் கொடுக்கல்வாங்கல்களுக்கான அதேநேர அறிவித்தலைக் கட்டாயமாக்குதல், அதேபோன்று டிஜிட்டல் மார்க்கங்களினூடாகச் செய்யப்படும் கொடுகடன் அட்டைகளுக்கான தீர்மானங்கள் உடனடியாக இற்றைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கின. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களுக்காக குறிப்பினை ஏற்றுக்கொள்ளும் களத்தினைக் கட்டாயமாக உருவாக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டதுடன் உரிமம்பெற்ற நிதியியல் கையேற்பாளர்கள் வணிகர் கழிவிடல் வீதத்தினை அவர்களது வணிகர்கள் வாடிக்கையாளர் மீது சுமத்த வேண்டாம் என அறிவுறுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. மத்திய வங்கி ஜஸ்ட்பே கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிக்கின்ற செல்லிடத் தொலைபேசிச் செயலிகள் கொடுக்கல்வாங்கல் தொகை ரூ.10,000 இற்குச் சமமானதாக அல்லது விஞ்சியதாக இருக்குமிடத்து இணைக்கப்பட்ட கணக்கின் பயன்படுத்துநரிடமிருந்து ஒரு தடவைக்கான கடவுச்சொற்களைக் கோருகின்றமையினை கட்டாயமாக்கியிருக்கிறது. ஜஸ்ட்பே எந்தவொரு நிதியியல் நிறுவனங்களிலுமுள்ள கணக்குகளைப் பயன்படுத்துநர்கள் அவர்களது செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுச் செயலிகளுக்கு இணைத்துக் கொள்வதனை இயலுமைப்படுத்துவதுடன் இவ்விணைக்கப்பட்ட கணக்குகளிலிருந்து எடுக்கப்படுகின்ற நிதிகளிலிருந்து கொடுப்பனவுகள் செய்யப்பட முடியும்.

### 2.4.7. பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

**2023ஆம் ஆண்டுப்பகுதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு, நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் விதந்துரைப்புக்களுடன் இசைந்து செல்லும் விதத்தில், நாட்டினால் எதிர்நோக்கப்படும் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், மதிப்பிடுதல் மற்றும் சிறந்த முறையில் புரிந்துகொள்ளும் நோக்கத்துடன் தேசிய இடர்நேர்வு மதிப்பீடு 2021/2022 இனை இணைத்ததுடன் நிறைவு செய்தது.** தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டு அறிக்கை, பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான மிகக் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல், பாதிக்கப்படும் தன்மை மற்றும் இலங்கை எதிர்நோக்கும் இடர்நேர்வுகள் பற்றி எடுத்துக்காட்டுகிறது. தேசிய இடர்நேர்வு மதிப்பீடு நாட்டிற்கான ஒட்டுமொத்தப் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இடர்நேர்வினை "நடுத்தரமானது" என மதிப்பிடப்பட்டுள்ளது. தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டின் மூலம் கண்டறியப்பட்டவற்றின் அடிப்படையில் 2023 - 2028 காலப்பகுதிக்கான தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கொள்கை தயாரிக்கப்பட்டு அமைச்சரவையினால் ஒப்புதலளிக்கப்பட்டது. 2025 மாச்சிலிருந்து தொடங்குவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ள பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பு மீதான பரஸ்பர மதிப்பீட்டிற்கான முக்கிய ஆர்வலர்களை ஆயத்தம் செய்யும் நோக்குடன் 24 தொடர்பான ஆர்வலர் நிறுவனங்களுக்கான ஆர்வலர் அடிப்படையிலான நடவடிக்கைத் திட்டத்திற்கும் நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பின் காத்திரமான தன்மையினையும் தொழில் இணங்குவிப்புக்களின் மட்டத்தினையும் மேம்படுத்துவதற்காக அமைச்சரவையினால் ஒப்புதல் வழங்கப்பட்டது. நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து தொடர்பான ஆர்வலர்களுடன் கலந்துரையாடுவதற்காக நிதியியல் உளவறிதல் பிரிவு தொடர்ச்சியாக பின்தொடர் கூட்டங்களை நடத்தியது. குறிப்பிட்ட நடவடிக்கைத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னேற்றங்களைப்

## சிறப்புக்குறிப்பு 6
## இலங்கை பற்றிய பரஸ்பர மதிப்பீடு 2025: அதன் தேசிய முக்கியத்துவம்

2

### 1. அறிமுகம்

பணம் தூயதாக்குதலும் பயங்கரவாதி நிதியிடலும் உலகின் நிதியியல் முறைமைகளுக்கும் அதேபோன்று தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றுக்கும் குறிப்பிடத்தக்க சவால்களைத் தோற்றுவிக்கின்றன. பணம் தூயதாக்குதலும் பயங்கரவாதி நிதியிடலும் நாடுகளின் பொருளாதாரங்களையும் சமூகங்களையும் நலிவடையச் செய்வதன் மூலம் உலகம் முழுவதுமுள்ள நாடுகளைப் பாதிக்கின்றன. பலவீனமான ஆளுகை மற்றும் ஊழல் காரணமாக சில நாடுகள் உயர்வான இடர்நேர்வில் காணப்படுகின்ற அதேவேளை, பணம் தூயதாக்குதலுடனும் பயங்கரவாதி நிதியிடலுடனும் இணையப்பெற்ற இடர்நேர்வுகளிலிருந்து ஒட்டுமொத்தமாக விடுபட்ட நாடு எதுவும் இல்லை. உலகம் முழுவதும் நிதியியல் குற்றங்கள் அதிகரித்தளவில் பரவியிருப்பதைக் கருத்திற்கொள்கையில், பணம் தூயதாக்குதலுக்கும் பயங்கரவாதி நிதியிடலுக்கும் எதிராகப் போராடுவது உலகளாவிய ரீதியிலான முன்னுரிமை ஒன்றாக தோற்றம்பெற்றுள்ளது. நிதியியல் முறைமையினைப் பாதுகாப்பதற்கும் இக்குற்றங்களின் இடர்நேர்வுகளை முறியடிப்பதற்கும் அரசாங்கங்கள் மற்றும் சட்ட அமுலாக்க முகவராண்மைகள், நிதியியல் நிறுவனங்கள், பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள், மற்றும் பன்னாட்டு அமைப்புக்கள் என்பவற்றுக்கிடையிலான ஒத்துழைப்பினை இது வேண்டிநிற்கின்றது.

பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தலுக்கான உலகளாவிய கொள்கை வகுக்கும் நிறுவனமான நிதியியல் நடவடிக்கைச் செயலணியானது உலகளாவிய தரநியமங்களைத் தாபித்தல் மற்றும் தேசங்கள் மத்தியில் ஒத்துழைப்பினை ஊக்குவித்தல் என்பன மூலம் பணம் தூயதாக்குதலையும் பயங்கரவாதி நிதியிடலையும் முறியடிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது.

நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் தரநியமங்கள் உடனான நாடுகளின் தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தலையும் பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் வழிமுறைகளின் செயல்திறன்வாய்ந்த நடைமுறைப்படுத்தலையும் மதிப்பிடுவதற்கு செயலூக்கமிக்க படிமுறையொன்றாக, நிதியியல் நடவடிக்கைச் செயலணியும் நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் பாணியிலான பிராந்திய நிறுவனங்களும் பரஸ்பர மதிப்பீடுகளை நடாத்துகின்றன. தேசிய முறைமைகளில் பலவீனங்களை அது இனங்காணுதல் மற்றும் அந்நாடுகளின் பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பினுள் மேம்படுத்தலுக்கான துறைகளை இனங்காணுதல் என்ற காரணத்தினால் இம்மதிப்பீட்டுச் செயல்முறையானது உறுப்பு நாடுகளுக்கு குறிப்பிடத்தக்க தேசிய முக்கியத்துவத்தினை கொண்டதாக விளங்குகின்றது. அதேவேளை உலகளவில் நாடுகள் மத்தியில் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை இது ஊக்குவிப்பதன் மூலம் ஒத்திசைவான அடிப்படையில் பணம் தூயதாக்குதலும் பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவற்றை ஊக்குவிக்கின்றது.

இலங்கை 2025இல் அதன் மூன்றாவது பரஸ்பர மதிப்பீட்டை சந்திக்கின்றது. நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் “சாம்பல் நிறப் பட்டியலிடல்” இலங்கை உள்ளடக்கப்படுவதற்கு காரணமாக அமைந்த இரு பரஸ்பர மதிப்பீடுகளுக்கு நாடு உட்பட்ட அதன் முன்கூட்டிய அனுபவம் மற்றும் அதனைத்தொடர்ந்துவந்த பொருளாதாரம் மற்றும் நிதியியல் மந்தநிலை என்பவற்றைக் கவனத்திற்கொள்கையில், வரவிருக்கும் பரஸ்பர மதிப்பீடானது நாட்டின் பொருளாதாரத்திலும் நிதியியல் முன்னேற்றத்திலும் முக்கிய நிகழ்வாக அமைந்திருக்கும்.

### 2. பரஸ்பர மதிப்பீட்டுச் செயன்முறை

பரஸ்பர மதிப்பீட்டுச் செயன்முறையானது சமதகைமைபெற்றோர் மீளாய்வொன்றைப் போன்றே மேற்கொள்ளப்படும் நாட்டின் பணம் தூயதாக்குதலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் முறைமை பற்றிய விரிவான பகுப்பாய்வினை ஈடுபடுத்துகின்றது. பரஸ்பர மதிப்பீடுகளானது 14-18 மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக நடாத்தப்படுவதுடன் அவை இரு முக்கிய கூறுகளைக் கொண்டவையாகும்: தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தல் மதிப்பீடு மற்றும் செயல்திறன் வாய்ந்ததன்மை பற்றிய மதிப்பீடு.

- **தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தல்:** *சட்டங்கள் மற்றும் அமுலாக்கத்தக்க வழிமுறைகளின் கட்டமைப்பு உள்ளடங்கலாக நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் பரிந்துரைகள் மற்றும் தகைமையுடைய அதிகாரிகளின் இருப்பு, தத்துவங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றின் குறிப்பான தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.*
- **செயல்திறன் வாய்ந்ததன்மை பற்றிய மதிப்பீடு:** *செயல்திறன் வாய்ந்ததன்மையென்பது பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாத அத்துடன் ஆயுதபெருக்கத்திற்கு நிதியிடல் இடர்நேர்வுகளையும் அச்சுறுத்தல்களையும் நிதியியல் முறைமைகளும் பொருளாதாரங்களும் தணிக்கின்ற அளவாகும். (அ) கொள்கை, சட்டம் அல்லது அமுலாக்கத்தக்க வழிகள் (ஆ) சட்ட அமுலாக்கம், மேற்பார்வை அல்லது உளவறிதல் செயற்பாடு பற்றிய நிகழ்ச்சித்திட்டம் அல்லது (இ) குறிப்பான வழிமுறைத்*

*தொகுதியொன்றினை நடைமுறைப்படுத்தல் என்பவற்றின் உத்தேசிக்கப்பட்ட பெறுபேற்றுடன் இது தொடர்புடையதாகவிருக்கலாம்.*

தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தல் மற்றும் செயல்திறன் வாய்ந்தத்தன்மை பற்றி மதிப்பிடப்படுகின்ற பரஸ்பர மதிப்பீட்டுச் செயன்முறை முழுவதுமான படிமுறைகள் பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

i. **தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தலை மதிப்பிடுதல் (4 மாதங்கள்):** நாடு அதன் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றிய தகவல்களை வழங்குதல்.

ii. **நோக்கிடல்:** செயல்திறன்வாய்ந்த மதிப்பீட்டுக்காகவும் தளத்திற்கான விஜயத்திற்காகவும் தயாராகின்றபோது மதிப்பீட்டாளர்கள் தளவிஜயம் பற்றி கவனத்திற்கொள்ளும் துறைகளை நிர்ணயிப்பதற்கு பூர்வாங்க நோக்கிடல் செயற்பாட்டினை மேற்கொள்கின்றனர்.

iii. **தள விஜயம் (2 வாரங்கள்):** தள விஜயத்திற்காக நாட்டிற்கு மதிப்பீட்டாளர்கள் பயணித்தல்.

iv. **அறிக்கை வரைதல்:** தள விஜயத்தினைத் தொடர்ந்து உடனடியாக செயல்திறன் வாய்ந்தத்தன்மை மற்றும் தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தல் மதிப்பீடு பற்றி கண்டறிந்தவைகளுடன் பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கையினை மதிப்பீட்டாளர்கள் இறுதிப்படுத்தல்.

v. **முழுநிறைவான கலந்தாராய்தல் (தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தல் மதிப்பீட்டின் பின்னர் 15 மாதங்கள்):** ஒவ்வொரு ஆண்டும் நிதியியல் நடவடிக்கைச் செயலணி நடாத்துகின்ற மூன்று கூட்டங்களில் ஒன்றில் மதிப்பீட்டாளர்கள் வரைவு அறிக்கையினை அதன் முழுநிறைவுக்கூட்டத்தில் சமர்ப்பித்தல்.

vi. **இறுதித் தர மீளாய்வு (அனுமதியின் பின்னர் 2 மாதங்கள்):** முழுநிறைவுக்கூட்ட அனுமதியினைத் தொடர்ந்து வலைத்தளத்தில் அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் தொழில்நுட்ப ரீதியான தரம் பற்றியும் ஒத்திசைவிற்கும் அறிக்கையினை மீளாய்வுசெய்தல்.

vii. **பின்தொடர்வு:** ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர், அறிக்கையில் இனங்காணப்பட்ட குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நாடுகள் வேண்டப்படுகின்றன. அடுத்த பரஸ்பர மீளாய்வு வரையிலும் இது ஆண்டுதோறும் பின்தொடரப்படும்.

### 3. பரஸ்பர மதிப்பீடுகளின் தேசிய முக்கியத்துவம்

பாதுகாப்பானதும் ஆற்றல்வாய்ந்ததுமான நிதியியல் முறைமையினை வினைத்திறனுடனும் செயல்திறன்மிக்கதாகவும் உறுதிசெய்கின்ற பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு பரஸ்பர மதிப்பீட்டுச் செயன்முறையானது நாடுகளைத் தேவைப்படுத்துகின்றது. அதற்கமைய, பரஸ்பர மதிப்பீட்டுச் செயன்முறையில் சாதகமான பெறுபேறொன்றைப் பெற்றுக்கொள்ளலானது உலகளாவிய நிதியியல் முறைமையில் நாட்டின் நிலைமையினைப் பாதுகாத்து, அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியினை துரிதப்படுத்துவதன் வாயிலாக நிதியியல் முறைமையினைப் பாதுகாப்பதை உறுதிசெய்கின்றது.

பரஸ்பர மதிப்பீடுகளின் தேசிய முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்ற காரணிகள் சில பின்வருமாறு:

i. **நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணிக்காத்தல்:** நிதியியல் முறைமையின் ஒருமைப்பாட்டையும் உறுதிப்பாட்டையும் பேணிக்காப்பதில் செயல்திறன்வாய்ந்த பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் வழிமுறைகள் முக்கிய பங்காற்றுகின்றன. நிதியியல் நடவடிக்கைச் செயலணிப் பரிந்துரைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் பன்னாட்டு வங்கித்தொழில் சேவைகளுக்கும் மூலதன சந்தைகளுக்குமான அவற்றின் பெறுவழியினை மோசமாகப் பாதிக்கக்கூடிய உயர் இடர்நேர்வுமிக்க நியாயாதிக்கமொன்றாகவிருக்கும் இடர்நேர்வினை நாடுகள் தணிக்கின்றன.

ii. **தேசிய பாதுகாப்பை மேம்படுத்தல்:** ஆற்றல்வாய்ந்த பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பானது தேசிய பாதுகாப்பிற்கு அத்தியாவசியமாக விளங்கி, பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கும் வேறு குற்றவியல் செயற்பாடுகளுக்கும் சட்டத்திற்குப் புறம்பான நிதியங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கின்றது. பரஸ்பர மதிப்பீடுகளுக்குட்பட்டு இனங்காணப்பட்ட பலவீனங்களைச் சீர்செய்வதன் மூலம் சட்டத்திற்குப் புறம்பான நிதியியல் பாய்ச்சலைத் தடுத்து, இதன்மூலம் தேசிய பாதுகாப்பு நலன்களை பாதுகாத்துக்கொள்வதற்கான அவற்றின் இயலளவை நாடுகள் வலுப்படுத்துகின்றன.

iii. **பன்னாட்டு தரநியமங்களுடனான இணங்குவித்தல்:** பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் பன்னாட்டு தரநியமங்களைக் கடைப்பிடிப்பதற்கான அவற்றின் கடமைப்பொறுப்பினை எடுத்துக்காட்டுவதற்கு பரஸ்பர மதிப்பீடுகளில் பங்கேற்பது நாடுகளுக்கு மிக முக்கியமானதாகும். இத்தரநியமங்களை பேணுகின்றமை உலகளாவிய நிதியியல் சமூகத்தில் நாட்டின் கீர்த்தியினை மேம்படுத்துகின்ற அதேவேளை சர்வதேச பங்காளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக்கையினை ஊக்குவிக்கின்றது.

iv. **பன்னாட்டு ஒத்துழைப்பினை வசதிப்படுத்தல்:** வெற்றிகரமான பரஸ்பர மதிப்பீடுகள், நிதியியல் குற்றங்களை முறியடிப்பதில் மிகுந்த பன்னாட்டு ஒத்துழைப்பினையும் நாடுகளுக்கிடையில் தகவல்களைப் பகிர்வதையும் ஊக்குவிக்கின்றது. நிதியியல் நடவடிக்கைச் செயலணி தரநியமங்களுடனான மேம்பட்ட இணங்குவித்தல் உலகளாவிய நிதியியல் முறைமையினுள் நாட்டின் நிலையினை மேம்படுத்தி விசாரணைகள் மற்றும் அமுலாக்க நடவடிக்கைகளில்

வேறு நியாயாதிக்கங்களுடன் வினைத்திறன் மிக்க ஒத்துழைப்பினை வசதிப்படுத்துகின்றது. உலகளவில் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தலை முறியடிப்பதற்கான கூட்டான முயற்சிகளை இவ்வொத்துழைப்பு வலுப்படுத்தி, நிதியியல் குற்றங்களை தடுப்பதிலும் நிறுத்துவதிலும் மிகவும் செயல்திறன்வாய்ந்த பெறுபேறுகளுக்கு வழிவகுக்கின்றது.

2

**v. பலவீனங்களை அடையாளம் காணல்:** நாடுகள் அவற்றின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்புக்களில் பலவீனங்களையும் இடைவெளிகளையும் இனங்காண்பதற்கு பரஸ்பர மதிப்பீடுகள் இயலச்செய்கின்றன. குற்றவாளிகளினால் சுரண்டப்படுவதைத் தடுப்பதற்கும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் வழிமுறைகளின் செயல்திறன்வாய்ந்த தன்மையினை மேம்படுத்துவதற்கும் இன்றியமையாதவையாக விளங்குகின்ற அமுலாக்கலில் சட்ட ரீதியான இடைவெளிகள் அல்லது குறைபாடுகள் போன்ற பாதிக்கப்படும் தன்மைகள் பற்றி நாடுகளுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றது.

**4. பரஸ்பர மதிப்பீடுகளை எதிர்கொள்வதில் இலங்கையின் கடந்தகால அனுபவம்**

பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழுமம், இந்தோ பசுபிக்கிற்கான நிதியியல் நடவடிக்கைச் செயலணி பாணியிலான பிராந்திய நிறுவனங்கள் மூலம் இரு பரஸ்பர மதிப்பீடுகளுக்கு இலங்கை உட்பட்டிருந்தது. இரு பரஸ்பர மதிப்பீடுகளும் 2006 மற்றும் 2014/15 ஆண்டுகளில் இடம்பெற்றன. இவ்விரு மதிப்பீடுகளும் பொதுவாக "சாம்பல் நிறப்பட்டியலிடல்" எனக் குறிப்பிடப்படுகின்ற அதன் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பில் உபாய ரீதியான குறைபாடுகளுடன்கூடிய ஆட்சிப்பிரதேசமாக நிதியியல் நடவடிக்கைச் செயலணி மூலம் இலங்கை பட்டியலிடப்படுவதற்கு வழிவகுத்தது. சாம்பல் நிறப்பட்டியலிடலானது இரு சந்தர்ப்பங்களிலும் மோசமான பொருளாதார மற்றும் நிதியியல் விளைவுகளை ஏற்படுத்தியது.

2015இற்குப் பின்னர் நிதியியல் நடவடிக்கைச் செயலணி மூலம் இலங்கையின் "சாம்பல் நிறப்பட்டியலிடல்" இனைத் தொடர்ந்து 2018 பெப்புருவரியில் பணம் தூ யதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் உபாய ரீதியான குறைபாடுகளுடன்கூடிய உயர் இடர்நேர்வுமிக்க மூன்றாம் நாடொன்றாக ஐரோப்பிய ஆணைக்குழுவும் இலங்கையைப் பட்டியலிட்டது. இது, இலங்கையின் நேரொத்த வங்கித்தொழில் உறவுகளைப் பாதித்தது.

2015இற்குப் பின்னர் அதன் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் முறைமையினை மேம்படுத்துவதற்கு இலங்கை குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்தமையினால் இலங்கை 2019 ஒத்தோபரிலும் 2020 மேயிலும் முறையே நிதியியல் நடவடிக்கைச் செயலணி மூலமும் ஐரோப்பிய ஆணைக்குழுவினாலும் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டது.

**5. வரவிருக்கும் பரஸ்பர மதிப்பீட்டிற்கான இலங்கையின் தயார்நிலை**

கடந்தகால மதிப்பீடுகளின் மோசமான தாக்கங்களைக் கருத்திற்கொள்கையில் நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துமாறு பரஸ்பர மதிப்பீடு இலங்கையை தேவைப்படுத்தும். அரசாங்கம் மற்றும் சட்ட அமுலாக்க முகவராண்மைகள், நிதியியல் நிறுவனங்கள், பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள் உள்ளடங்கலாக பங்குதாரர்களிடமிருந்தான இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவினால் ஒருங்கிணைக்கப்படும் கூட்டான நடவடிக்கையொன்றினை இது வேண்டுகின்றது.

இதன் பின்னணியில், நாட்டின் தயார்நிலை நிதியியல் குற்றங்களை முறியடிப்பதற்கான அதன் அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டுவது இன்றியமையாததாகும். இம்மதிப்பீடானது இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்புகள் பற்றிய முழுமையான மதிப்பீடொன்றினை வழங்கி வலிமைகள், பலவீனங்கள் மற்றும் மேம்படுத்தலுக்கான துறைகள் என்பவற்றை எடுத்துக்காட்டுகின்றது. அதற்கமைய, பரஸ்பர மதிப்பீட்டிற்கான தயார்படுத்துகையில் இதுவரையில் இலங்கையில் நிதியியல் உளவறிதல் பிரிவினால் பல முன்முயற்சிகளில் எடுக்கப்பட்டுவருகின்றன.

**i. பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் செயலணியொன்றைத் தாபித்தல்:** இனங்காணப்பட்ட இடைவெளிகளைத் தீர்ப்பதற்கும் தொடர்புடைய பங்குதாரர்களுக்கிடையில் ஒருங்கிணைப்பிற்கும் பங்குதாரர் அடிப்படையிலான நடவடிக்கைத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் பற்றிய முன்னேற்றத்தினை மேற்பார்வை செய்வதற்கும் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரொருவரின் தலைமைத்துவத்தின் கீழ் ஐந்து உறுப்பினர்களை உள்ளடக்குகின்ற பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தலுக்கான செயலணி அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டது.

**ii. தேசிய ஒருங்கிணைப்புக் குழுவுடனான ஒருங்கிணைப்பு:** பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவானது இலங்கையில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் பங்குதாரர்களுக்கிடையில் தேசிய மட்ட ஒருங்கிணைப்பினைப் பேணுகின்ற ஆலோசனைக் குழுவாகும். தேசிய ஒருங்கிணைப்புக் குழு மற்றும்

பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் செயலணி என்பவற்றின் தலைமைத்துவத்துடன் வரவிருக்கும் பரஸ்பர மதிப்பீட்டுடன் தொடர்புடைய அனைத்துப் பணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டுவருகின்றன.

iii. **2021/22இல் தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டினை நடாத்துதல்:** நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் பரிந்துரைகளுக்கிசைவாக நாடு எதிர்கொள்கின்ற பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வுகளை இனங்கண்டு, மதிப்பிட்டை புரிந்துகொள்வதற்கு 2021/22இல் இரண்டாவது தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டினை நிறைவுசெய்வதை நிதியியல் உளவறிதல் பிரிவு ஒருங்கிணைத்தது. அதற்கமைய, நாட்டின் ஒட்டுமொத்த பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியிடல் இடர்நேர்வு "நடுத்தரமானது" ஆக மதிப்பிடப்பட்டது. இது, நடுத்தர அச்சுறுத்தல் மட்டத்தினதும் நடுத்தர பாதிக்கப்படும் தன்மை மட்டத்தினதும் ஒருங்கிணைப்பாகும்.

iv. **பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தேசிய கொள்கை 2023 - 2028 இனை உருவாக்குதல்:** தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டில் கண்டறியப்பட்டவைகளின் அடிப்படையில் நாட்டில் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தலை செயல்திறன்வாய்ந்த விதத்தில் முறியடிப்பதற்கு இனங்காணப்பட்ட இடைவெளிகளைத் தீர்ப்பதற்காக அமைச்சரவையினால் அனுமதியளிக்கப்பட்ட 2023 - 2028 இற்கான தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கொள்கை தயாரிக்கப்பட்டது.

v. **பங்குதாரர் அடிப்படையிலான நடவடிக்கைத் திட்டங்களை உருவாக்குதல்:** அடுத்துவருகின்ற பரஸ்பர மீளாய்விற்காக முக்கிய பங்குதாரர்களை தயார்படுத்தும் நோக்குடன் தொடர்புடைய 24 பங்குதாரர் நிறுவனங்களுக்கான பங்குதாரர் அடிப்படையிலான நடவடிக்கைத் திட்டங்கள் நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பின் செயல்திறன்வாய்ந்த தன்மை மற்றும் தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தல் மட்டம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டது. பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவிற்கும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தலுக்கான செயலணிக்கும் அவர்கள் மூலம் வழங்கப்படும் கிரமமான இற்றைப்படுத்தல்களுடன் நடவடிக்கைத் திட்டங்கள் பங்குதாரர் மத்தியில் விநியோகிக்கப்பட்டன.

vi. **சட்டவாக்கத் திருத்தங்களை மேற்கொள்ளல்:** பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் மீதான சட்டக் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தும் பொருட்டும் பன்னாட்டு தரநியமங்களை கடைப்பிடிப்பதனை உறுதிசெய்வதற்கும் முக்கிய சட்டவாக்கங்களைத் திருத்தும் செயன்முறையினை நிதியியல் உளவறிதல் பிரிவு தொடர்ந்தும் முன்னெடுக்கின்றது. 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டம்; 2006ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணம் தூயதாக்குதலைத் தடுத்தல் சட்டம்; 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதி நிதியிடலை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் ஆகியவற்றை இது உள்ளடக்குகின்றது. 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கான திருத்தங்களை மேற்கொள்வதிலும் நிதியியல் உளவறிதல் பிரிவு உதவுகின்றது. இத்திருத்தங்கள் 2024இன் மூன்றாம் காலாண்டளவில் நிறைவுசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### 6. முடிவுரை

பன்னாட்டு பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தரநியமங்களுடனான இணங்குவித்தலை மதிப்பிடுதல், தேசிய கட்டமைப்புக்களில் பலவீனங்களை அடையாளங்காணல், தேசிய பாதுகாப்பை மேம்படுத்தல், பன்னாட்டு ஒத்துழைப்பினை வசதிப்படுத்தல் அத்துடன் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணிக் காத்தல் என்பவற்றில் அவை முக்கிய பங்காற்றுவதனால் நிதியியல் நடவடிக்கைச் செயலணி பரஸ்பர மதிப்பீடுகள் உறுப்பு நாடுகளுக்கு தேசிய முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்வுகளாகக் காணப்படுகின்றன. பரஸ்பர மதிப்பீட்டுச் செயன்முறையில் முனைப்புடன் பங்கேற்பதன் மூலம் நாடுகள் நிதியியல் குற்றங்களுக்கெதிரான வழிமுறைகளை வலுப்படுத்தி, பாதுகாப்பானதும் ஆபத்தற்ற நிதியியல் சூழலொன்றுக்குப் பங்களிக்கமுடியும். அதற்கமைய, இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பு வினைத்திறன்மிக்கதாகவும் செயல்திறன்மிக்க விதத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டு எதிர்வரும் பரஸ்பர மதிப்பீட்டில் சிறந்த இணங்குவித்தலை எய்துவதற்கும் உலகளாவிய நிதியியல் சமூகத்தினுள் இலங்கையின் நிலையினை வலுப்படுத்தும் என்பதை அனைத்து முக்கிய பங்குதாரர்களின் கூட்டாண பொறுப்பே உறுதிசெய்யும்.


**உசாத்துணைகள்**

1. FATF (2012-2023), International Standards on Combating Money Laundering and the Financing of Terrorism & Proliferation, FATF, Paris, France, www.fatf-gafi.org/en/publications/Fatfrecommendations/Fatf-recommendations.html
2. FATF (2013-2023), Methodology for Assessing Compliance with the FATF Recommendations and the Effectiveness of AML/CFT Systems, updated June 2023, FATF, Paris, France, http://www.fatf-gafi.org/publications/mutualevaluations/documents/fatf-methodology. html
3. FATF (2021). What are FATF mutual evaluations?, https://www.fatf-gafi.org/content/dam/fatf-gafi/methodology/Handout-5th-Round-Methodology.pdf
4. Basel Institute on Governance (2023), Basel AML Index 2023: 12th Public Edition Ranking money laundering and terrorist financing risks around the world.

பின்தொடர்வதற்காகவும் அடையாளம் காணப்பட்ட இடைவெளிகள் அனைத்தையுமுள்ளடக்கிய விதத்திலும் சரியான நேரத்திலும் காத்திரமான விதத்திலும் கட்டுப்படுத்தப்பட்டமையினை உறுதிப்படுத்துவதற்குமாக, அதேவேளை தொடர்புடைய ஆர்வலர்களுடன் காத்திரமாக ஒருங்கிணைக்கும் விதத்தில் அமைச்சரவையினால் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான செயலணிக் குழுவொன்று ஒப்புதலளிக்கப்பட்டது.

2

2023இல் **இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வைக்குப் புறம்பாக, நிதியியல் உளவறிதல் பிரிவு அதன் கூட்டு மேற்பார்வைக் கொள்கையினைப் பேணியது.** பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வைச் செய்முறையினையும் நிறுவன ரீதியான இணங்குவிப்புக்களையும் வலுப்படுத்தும் பொருட்டு, அறிக்கையிடும் நிறுவனங்களான உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், உண்மைச் சொத்து நிறுவனங்கள், உரிமம்பெற்ற காப்புறுதிக் கம்பனிகள், உரிமம்பெற்ற பங்குத்தரகர்கள், சட்டத்தரணிகள் மற்றும் நொத்தாரிசுகளுக்கு நிதியியல் உளவறிதல் பிரிவு சுற்றறிக்கைகளையும் வழிகாட்டல்களையும் விடுத்தது. மேலும், இவ்வாண்டுப்பகுதியில் 5 சிவப்பு துண்டு குறிகாட்டிப் பட்டியல்கள் விடுக்கப்பட்டன. இது, இலஞ்சம் மற்றும் ஊழல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் காப்புறுதித் துறை, பிணையங்கள் துறை மற்றும் பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணித் துறை என்பனவற்றிற்கான சிவப்புத் துண்டிடுதல் என்பனவற்றுடன் தொடர்பான சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அடையாளம் காண்பதனை உள்ளடக்குகிறது.

### 2.4.8. நிதியியல் வாடிக்கையாளர் பாதுாப்பிற்கான கொள்கைகள்

**மத்திய வங்கி நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான முன்னெடுப்புக்களை 2023இல் முன்னெடுத்தது.** நிதியியல் பணி வழங்குவோருக்காக, இவ்வாண்டுப்பகுதியில் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பின் மீது ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டது. இவ்வொழுங்குவிதிகள் நிதியியல் வாடிக்கையாளர்களின் நலவுரித்துக்களையும் உரிமைகளையும் பேணிக் கொள்ளும் விதத்தில் மத்திய வங்கியின் கடப்பாடுகளை வலியுறுத்துகின்ற வேளையில், நிதியியல் துறை முழுவதிலும் வெளிப்படைத்தன்மை, நியாயமான தன்மை மற்றும் பொறுப்பு வாய்ந்த வியாபார நடைமுறைகளையும் வலியுறுத்துகின்றது. இவ்வொழுங்கு விதி குறித்துரைக்கப்பட்ட இரண்டடுக்கு முறையீட்டு கையாளல் நடவடிக்கையுடன் சேர்த்து காத்திரமான நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான முக்கியமான பொறிமுறையான சந்தை நடத்தை மேற்பார்வையினை முன்னெடுப்பதற்கு மத்திய வங்கிக்கு அதிகாரமளிக்கிறது. நிதியியல் முறைமையின் ஒருங்கிணைந்த தன்மை நிதியியல் முறைமையின் உறுதித்தன்மை என்பனவற்றைப் பேணும் விதத்தில் 2024ஆம் ஆண்டு முழுவதும் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற வேளையில் இலங்கையில் வாடிக்கையாளர் நலன்புரிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. நிதியியல் வாடிக்கையாளர்களின் உரிமைகளையம் நலவுரித்துக்களையும் பாதுகாப்பதற்கான தேவை பற்றிய சிந்தனையுடன் நிதியியல் பணி வழங்குவோரிடையே ஒழுக்கவியல் சார்ந்த நியமங்களையும் ஊக்குவிப்பதுடன் 2024இல் உபாய முன்னுரிமையொன்றாக சந்தை நடத்தை மேற்பார்வையை ஆரம்பிப்பதற்கு மத்திய வங்கி எதிர்பார்க்கிறது.

### 2.4.9. வைப்புக் காப்புறுதி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் தீர்மானம் மீதான கொள்கைகள்

**மத்திய வங்கிச் சட்டம் மத்திய வங்கியை உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்களின் தீர்மான அதிகாரசபையாகக் குறித்துரைக்கிறது.** 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் மத்திய வங்கியினை தீர்மான அதிகாரசபையாக வரைவிலக்கணம் செய்ததுடன் உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனமொன்றினைச் சரியான நேரத்தில் தீர்மானத் தொழிற்பாட்டினை நடைமுறைப்படுத்தக் கூடிய வழிமுறைகளையும் குறித்துரைப்பதுடன் அத்தகைய நிதியியல் நிறுவனங்களை புத்துயிர்ப்படையச் செய்வதற்கு தொடர்ந்தியங்கும் நடவடிக்கையாக வைப்பாளர்களினதும் கொடுகடன் வழங்குவோரினதும் நலவுரித்துக்களை உறுதிப்படுத்தல், அது தொடர்பாக நிதியியல் முறைமையினை உறுதிப்படுத்தல் மற்றும் அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகளின் செய்முறையினை

ஒடுக்கிவிடுதல் என்பன பற்றி வரைவிலக்கணம் செய்கிறது. மத்திய வங்கி வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்திற்குரிய ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மான தொழிற்பாட்டினை தொழிற்படுத்துவதற்குமான பூர்வாங்க வழிமுறைகளை முன்னெடுத்திருக்கிறது. 2023இல் முன்னெடுக்கப்பட்ட இவ்வழிமுறைகள் தீர்மான கைநூலொன்றினை உருவாக்குதல், தீர்மானம் தொடர்பான தூண்டுதல்களை நிறுவுதல், உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்களுக்கான தரவுத் தளத்தினை உருவாக்குதல் மற்றும் தீர்மான திட்டமிடலுக்கான தரவு வார்ப்புருக்களை வடிவமைத்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. இந்நடவடிக்கைகள் உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்களுக்கான தீர்மான திட்டங்களைத் தயாரிப்பதற்கும் இறுதியாக உலகளாவிய நியமங்களுடன் இணைவதனை உறுதிப்படுத்துவதற்கும் வசதியளிப்பதுடன் இலங்கையில் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கு வலுவூட்டுவதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**இலங்கை மத்திய வங்கிச் சட்டமும் வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டமும் பொதுமக்களின் நம்பகத்தன்மையினை பற்றிக்கொள்வதற்கும் இலங்கையில் நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினை மேம்படுத்தவும் அதற்குப் பங்களிப்பதற்குமான கருவியாகவும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை உருவாக்குவதனை அங்கீகரித்திருக்கிறது.** வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவத்திற்கான தொழிற்பாட்டு நடைமுறைகளைத் தெளிவாக விளக்குவதுடன் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் வைப்புக் காப்புறுதியுடன் தொடர்பான தொழிற்பாடுகளையும் வழங்குகிறது. அரசாங்கம் மற்றும் உலக வங்கியின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்ட நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்பு வலுப்படுத்தல் செயற்றிட்டம் பன்னாட்டு நியமங்களுக்கிணங்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிதியியல் மற்றும் இயலளவினை வலுப்படுத்த எதிர்பார்க்கிறது. நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்பு வலுப்படுத்தல் செயற்றிட்ட முன்னெடுப்பின் கீழ் உலக வங்கியினால் முன்வைக்கப்பட்ட நிதியியல் பொறிமுறையினூடாக இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் வலுவூட்டப்பட்டதுடன் மேலதிக நிதியிடல் ஏற்பாடுகள் அரசாங்கத்துடன் ஏற்பாடு செய்துகொள்ளப்பட்டுள்ளன. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிதியியல் சந்தைகளின் பரந்தளவு வீச்சிலான சாதனங்களுடன் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை விரிவாக்கிக் கொள்வதற்காக புதிய முதலீட்டுக் கொள்கையொன்று வரையப்பட்டு வருகின்றது. இக்கொள்கைத் தூண்டல் அதிகரிப்புக்கள் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வைப்புக் காப்புறுதியாளர்களுக்கான பன்னாட்டு அமைப்பினால் வரையப்பட்ட மைய வைப்புக் காப்புறுதிக் கோட்பாடுகளுடன் இணைப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் இது இலங்கையின் நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்பினையும் வலுப்படுத்துகிறது.

2

## 2.4.10. நிதியியல் துறைக் கொள்கைச் சீர்திருத்தங்கள்

**அமைப்பியல் பலயீனங்களைக் கட்டுப்படுத்துதல், தாக்குப்பிடிக்கும் தன்மையினைக் கட்டியெழுப்புதல், நிதியியல் முறைமையில் உறுதிப்பாட்டினைப் பேணுதல் ஆகிய நோக்கங்களுடன் பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகள் மற்றும் பல்புடை முகவர்களின் ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, நிதியியல் துறை கணிசமானளவு கொள்கைச் சீர்திருத்தங்களுக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றது.** இவ்வாண்டுப்பகுதியில் சுயாதீனமான சொத்து தரமீளாய்வு உள்நாட்டு வங்கித்தொழில் சொத்துக்களில் 90 சதவீதத்திற்கு வகைகூறும் ஒன்பது வங்கிகளுக்கான ஆய்ந்தறிதல் நடவடிக்கைகளை நிறைவு செய்தது. சொத்துத் தரமீளாய்வு ரூபாக் கடன்கள் மற்றும் முற்பணம், வெளிநாட்டு நாணயக் கடன்கள், முற்பணங்கள் மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் என்பனவற்றை உள்ளடக்குகிறது. மத்திய வங்கி, சொத்துத் தரங்களின் மீளாய்விற்குட்பட்டு சொத்துத் தரமீளாய்வில் கண்டறியப்பட்டவற்றை கவனமாக மதிப்பீடு செய்தமை, முன்னோக்கிய அழுத்தப் பரீட்சிப்பு மற்றும் அரச படுகடன் மறுசீரமைப்பில் எதிர்பார்க்கப்பட்ட தாக்கம் என்பனவற்றினூடாக ஐந்து பாரிய வங்கிகளின் வங்கித்தொழில் முறைமை மூலதனம் மற்றும் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மைப் பற்றாக்குறை என்பனவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வழிகாட்டலொன்றினை உருவாக்கியிருக்கிறது. இதே போன்றதொரு செய்முறை சொத்துத் தரமீளாய்விற்குட்பட்டுள்ள மற்றைய நான்கு வங்கிகளுக்கும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தனியார் மூலவளங்களிலிருந்து மூலதனப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யமுடியாத ஆற்றல் வாய்ந்த வங்கிகளுக்கு அரச மூலதனமயப்படுத்தலுக்கான உபாயங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, 2024 வரவு செலவுத்திட்டத்தின் கீழ், வங்கித்தொழில் துறையின் மூலதனப் பெருக்கச் செயன்முறைக்கு ஆதரவாக ரூ.450 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வலுவூட்டுவதற்காகவும் ஏற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காகவும் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திற்கு திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**துறையின் நெருக்கடிக்கு ஆயத்தமாக இருக்கும் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழு மற்றும் நிதியியல் முகாமைத்துவம் தொடர்பான தொழில்நுட்பக் குழு என்பன நிறுவப்பட்டன.** இக்குழுக்கள் உள்ளக முகவர் இணைப்பு மற்றும் தொடர்பூட்டலுக்கு வசதியளிப்பதற்காக மத்திய வங்கியிலிருந்தான அலுவலர்களையும் நிதி அமைச்சிலிருந்தான அலுவலர்களையும் உள்ளடக்கியிருந்தது. இக்குழுக்களிடம் நிதியியல் துறையில் ஏற்படக்கூடிய முறைமையியல் சார்ந்த நெருக்கடிகளையும் உண்மைப் பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கத்தினையம் கட்டுப்படுத்துகின்ற பொறுப்புக்களும் நிதியியல் துறைக்கு ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கங்களைக் குறைக்கின்ற பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு குழுக்களும் இரு கட்டங்களில் தொழிற்படும். முதற்கட்டத்தின் போது இக்குழுக்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் திரவத்தன்மை இடர்நேர்வுகளையும் மூலதன மட்டங்களையும் நெருக்கமாகக் கண்காணிக்கும். இரண்டாவது கட்டத்தின் போது நெருக்கடிக்கு ஆயத்தமாகுதல், நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் நிதியியல் நெருக்கடிகளின் தாக்கத்தினையும் குறைக்கும் நிலையான கட்டமைப்பு நிறுவப்படும்.

## 2.4.11 ஏனைய கொள்கைகள்

**நிதியியல் முறைமையில் ஏற்படுகின்ற நேர்மறையான மற்றும் எதிர்மறையான ஆகிய இரண்டிலுமான அபிவிருத்திகள் தொடர்பில் பொதுமக்களின் விழிப்புணர்வினை மேம்படுத்தும் பொருட்டு ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** இலத்திரனியல் கொடுப்பனவு முறைகள் தொடர்பிலான வாடிக்கையாளர் கரிசனைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு மத்திய வங்கி முன்கூட்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கொடுப்பனவுப் பணிகள் தொடர்பிலான பாதுகாப்பற்ற, வலுவற்ற அல்லது நியாயமற்ற நடைமுறைகள் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை உருவாக்கும் பொருட்டு மத்திய வங்கியின் இணையத்தளத்தில் மும்மொழி இணையப் படிவமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. நாணயக் கொள்கை மாத்திரமன்றி மோசடிகள் மற்றும் தடைசெய்யப்பட்ட நிதியியல் திட்டங்கள் என்பன உள்ளடங்கலாக நிதியியல் முறைமையுடன் தொடர்புடைய அத்தியாவசியச் செய்திகள் உடனுக்குடன் பரப்பப்படுவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு சமூக ஊடகங்களின் சகல வடிவங்கள் தொடர்பில் மத்திய வங்கி தொடர்ந்து முனைப்புடன் காணப்படுகின்றது.

**ஆண்டு காலப்பகுதியில், ஆர்வலர்களின் ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்குப் படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** அனைத்து ஊடகத் தளங்களிலுமான ஈடுபாட்டினைக் கண்காணிப்பதற்கு மேலதிகமாக, ஏற்கனவே நடைமுறையிலிருந்த உபாயங்களின் வினைத்திறனைத் தொடர்ந்து மதிப்பிடும் பொருட்டு பல்வேறு அளவீடுகளும் ஏனைய இலக்கிடப்பட்ட குழுக் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன. மேம்பாட்டிற்கான பகுதிகளை அடையாளம் காண்பதற்கும் பொதுமக்களின் மனோபாவத்தினை அளவிடுவதற்கும் வளர்ச்சியடைந்து வருகின்ற தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு தொடர்பூட்டல் உபாயங்களைச் சீராக்குவதற்கும் இப்பின்னூட்டல் இணைப்புக்களின் நிறுவல் துணைபுரிந்துள்ளது. முன்மதியுடைய தொடர்பூட்டல் உபாயங்களினூடாக நிதியியல் முறைமையில் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புதலானது உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு இன்றியமையாததொன்றாகவுள்ளது. மேற்கூறப்பட்ட முயற்சிகளைக் குறைநிரப்பும் பொருட்டு பரந்தளவிலான அவையோருக்குப் பல்வேறு கல்விசார் விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன.

2

## முக்கிய சிறப்புக் குறிப்பு
## இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது அதனுடன் தொடர்புடைய முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகள்[1]

**மத்திய வங்கித்தொழில்**

| | |
|---|---|
| 2023 செத்தெம்பர் 15 | நாணய விதிச் சட்டத்தை (அத்தியாயம் 422) இரத்துசெய்வதற்காக, இலங்கை மத்திய வங்கியின் தாபித்தலை வழங்குவதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதன் இடர்நேர்விளைவான விடயங்களை வழங்குவதற்குமான சட்டமொன்றாக 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம் சட்டமாக்கப்பட்டது. |
| 2023 ஒத்தோபர் 03 | நிதி அமைச்சருக்கும் மத்திய வங்கிக்கும் இடையில் 2023 ஒத்தோபர் 05 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்பு உடன்படிக்கையானது 5 சதவீதத்தில் காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைப் பேணுவதற்கு தேவைப்படுத்தும் வகையில், மத்திய வங்கிக்கான பணவீக்க இலக்கிடலை நிர்ணயித்துள்ளது. |

**நாணயக் கொள்கை**

| | |
|---|---|
| 2023 சனவரி 02 | 2023 சனவரி 16 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில், குறித்த உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கான துணைநில் வைப்பு வசதியின் கிடைப்பனவானது கலண்டர் மாதமொன்றுக்கு உயர்ந்தபட்சம் ஐந்து (05) தடவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதேவேளை குறித்த உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கான துணைநில் கடன்வழங்கல் வசதியின் கிடைப்பனவு ஏதேனும் வழங்கப்பட்ட திகதியில் அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் 90 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. |
| 2023 மாச்சு 03 | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 100 அடிப்படை புள்ளிகளினால் முறையே 15.50 சதவீதத்திற்கும் 16.50 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன. |
| 2023 யூன் 01 | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 13.00 சதவீதத்திற்கும் 14.00 சதவீதத்திற்கும் 250 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. |
| 2023 யூலை 06 | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 11.00 சதவீதத்திற்கும் 12.00 சதவீதத்திற்கும் 200 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. |
| 2023 ஓகத்து 09 | 2023 ஓகத்து 16 தொடங்குகின்ற ஒதுக்குப் பேணுதல் காலப்பகுதி தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் நியதி ஒதுக்குத் தேவைப்பாடானது 2.00 சதவீதத்திற்கு 2.00 சதவீதப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டது. |
| 2023 ஒத்தோபர் 05 | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 10.00 சதவீதத்திற்கும் 11.00 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. |
| 2023 நவெம்பர் 24 | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 9.00 சதவீதத்திற்கும் 10.00 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. |
| 2024 பெப்புருவரி 09 | 2024 பெப்புருவரி 16 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில், நாட்காட்டி மாத காலப்பகுதியில் துணைநில் கடன்வழங்கல் வசதி மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டு துணைநில் வைப்பு வசதி மீதான கட்டுப்பாடு ஐந்து தடவைகள் தொடக்கம் (05) பத்து தடவைகள் வரை (10) தளர்த்தப்பட்டது. |
| 2024 மாச்சு 26 | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே, 50 அடிப்படைப் புள்ளிகளினால் 8.50 சதவீதத்திற்கும் 9.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| | 2024 ஏப்பிறல் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், துணைநில் வைப்பு வசதி மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டது. |

**சிறப்புக் கொடுகடன் திட்டங்கள்**

| | |
|---|---|
| 2023 செத்தெம்பர் 15 | 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டமாக்கலுடன், சௌபாக்யா கடன் திட்டம் மற்றும் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்திக் கடன் திட்டம் ஆகியவற்றின் தொழிற்பாடுகளை மத்திய வங்கி இடைநிறுத்தியது. |
| 2024 சனவரி 03 | மத்திய வங்கியின் ஆளுகைச் சபை எதிர்காலத்தில் புதிய அரசாங்கம் மற்றும் நன்கொடையாளர் நிதியளிப்பு கடன் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதில்லை என்ற கொள்கை தீர்மானத்தை எடுத்தது. |

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

| | |
|---|---|
| 2023 பெப்புருவரி 01 | யூனியன்பே இன்டர்நெஷனல் கோபரேஷன் லிமிடெட், சீன மற்றும் இந்திய தேசிய கொடுப்பனவுகள் கூட்டுத்தாபனம் இன்டர்நெஷனல் பேமன்ட்ஸ் லிமிடெட் ஆகியவற்றுடன் லங்காபே பிறைவட் லிமிடெட் இணைக்கப்பட்டு, சீன மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு லங்காகியூஆரின் (LANKAQR) மூலம் தமது கொடுப்பனவுப் பணப்பைகளைப் பயன்படுத்துவதற்கு இயலச்செய்தது. 2023 பெப்புருவரியிலிருந்து சீன சுற்றுலாப் பயணிகளால் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு இயலுமாகவிருந்ததுடன் 2024 பெப்புருவரி 12 தொடக்கம் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கான கொடுக்கல்வாங்கல்கள் தொடங்கப்பட்டன. |
| 2023 மே 08 | வெளிநாட்டு கொடுப்பனவு செயலிகளைப் பயன்படுத்தி, லங்காகியூஆரின் மூலம் செலுத்தப்படும் கொடுப்பனவுகளுக்கான 1.8 சதவீதம் கொண்ட வணிகர் கழிவிடல் வீதமொன்றுக்கு ஒப்புதலளிக்கப்பட்டது. உள்நாட்டு லங்காகியூஆர் கொடுப்பனவுகளுக்கு 0.5 சதவீதம் கொண்ட வணிகர் கழிவிடல் வீதம் காணப்படுகின்றது. |
| 2023 ஓகத்து 31 | கொடுப்பனவு நடைமுறைகள் அல்லது பணிகளுடன் தொடர்புடைய பாதுகாப்பற்ற, திருப்தியற்ற அல்லது நியாயமற்ற நடைமுறைகள் தொடர்பாக பொது மக்களிடமிருந்து தகவல்களைச் சேகரிப்பதற்கான மும்மொழி இணையத் தளப் படிவம் உருவாக்கப்பட்டது. |
| 2023 திசெம்பர் 29 | லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளம், நேரடிப் பற்று வசதி, பகிரப்படும் உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் வசதி, அத்துடன் அரசாங்க டிஜிட்டல் கொடுப்பனவுத் தளம் போன்ற பல்வேறு டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல் முன்னெடுப்புகளில் பங்கேற்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளை மத்திய வங்கி கட்டாயப்படுத்திய அதேவேளை கொடுக்கல்வாங்கல்களுக்கான உண்மை நேர அறிவித்தல்களை இயலச்செய்தல், பின்தங்கிய பிரதேசங்களில் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களை ஊக்குவித்தல், டிஜிட்டல் வழிகளின் மூலம் மேற்கொள்ளப்படும் கொடுகடன் அட்டைத் தீர்ப்பனவுகள் உடனடியாக இற்றைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தல் அத்துடன் வணிகர் கழிவிடல் வீதத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்க வேண்டாம் என்று உரிமம்பெற்ற நிதியியல் கையகப்படுத்துபவர்களுக்கு அறிவுறுத்துவதன் மூலம் டிஜிட்டல்கொடுக்கல் வாங்கல்ளுக்கான தொடர்புத் தளத்தை கட்டாயப்படுத்தல் போன்ற முன்னுரிமைகளை வலுப்படுத்தியது. |

[1] 2023 சனவரி 01 தொடக்கத்திலிருந்து 2024 மாச்சு 28 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகளையும் கிட்டிய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய கொள்கை வழிமுறைகளையும் உள்ளடக்குகின்றது.

இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது தொடர்புடைய கொள்கை வழிமுறைகளின் விரிவான பதிப்பும் 2023 சனவரி 01 தொடக்கம் 2024 மாச்சு 28 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய இறைக் கொள்கை வழிமுறைகள் எனும் இணையதள இணைப்பில் கிடைக்கப்பெறுகின்றன.

| | |
|---|---|
| 2023 திசெம்பர் 29 | இலத்திரனியல் பணப் பைகளின் மூலம் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களுடன் இணைந்து வெளிநாட்டுப் பணவனுப்பல்களை ஊக்குவிக்கும் வகையில், உயர்த்தப்பட்ட மற்றும் அடிப்படை இ-பணப் பை எல்லைகள் 2024 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில், முறையே ரூ.50,000.00 மற்றும் ரூ.10,000.00 போன்ற தொகைகளிலிருந்து ரூ.150,000.00 மற்றும் ரூ.20,000.00 தொகைகளுக்கு உயர்த்தப்பட்டது. |
| 2024 சனவரி 17 | 2024 ஏப்பிறல் 01 தொடக்கத்திலிருந்து கொடுப்பனவுத் தொகை ரூ.10,000 தொகைக்கு சமமானதாக அல்லது அதை விஞ்சுகின்ற கொடுக்கல்வாங்கல்களுக்கு இணைக்கப்பட்ட நிதியியல் நிறுவனத்திலிருந்து ஒரு தடவை கடவுச்சொல்லொன்றை கோருவதற்கு ஜஸ்ட்பே கொடுப்பனவு முறைமையைப் பயன்படுத்தும் வகையில் செல்லிடத்தொலைபேசி செயலிகளை மத்திய வங்கி கட்டாயப்படுத்தியது. எந்தவொரு நிதியியல் நிறுவனத்திலிருந்தும் கணக்குகளை இணைப்பதற்கும் செல்லிடத் தொலைபேசி செயலியினூடாக இணைக்கப்பட்டுள்ள கணக்குகளிலிருந்து நிதியங்களைப் பெறுவதன் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் ஜஸ்ட்பே பயனர்களுக்கு வசதிப்படுத்துகின்றது. |
| 2024 பெப்புருவரி 01 | நேபாள்பே கியூஆர் (NEPALPAY QR) செல்லிடத் தொலைபேசி செயலிகளின் மூலம் நேபாள சுற்றுலாப் பயணிகளினால் மேற்கொள்ளப்படும் லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களை ஏற்றுக்கொள்வதற்கான நேபாள் கிளியரிங் அவுஸ் லிமிடெட்டுடன் இணைவதற்கு லங்காபே (பிறைவட்) லிமிடெட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

**பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்**

| | |
|---|---|
| 2023 மாச்சு 03 | இணங்குவித்தல் குறைபாடுகள் மீதான உரிய விழிப்புக்கவனத்திற்காக அழைப்புவிடுத்து அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2023 யூன் 07 | உண்மைச் சொத்துத் துறை பற்றிய நிறுவனம்சார் இணங்குவித்தல் மீது 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கை உண்மைச் சொத்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. |
| 2023 யூன் 13 | உள்நாட்டு இலத்திரனியல் நிதிய மாற்றல் அடிப்படை அளவுக் கொடுக்கல்வாங்கல்களை நிதியியல் உளவறிதல் பிரிவின் goAML முறைமைக்கு அறிக்கையிடுவது பற்றி 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வழிகாட்டல் வழங்கப்பட்டது. |
| 2023 ஓகத்து 07 | 2023-2028 காலப்பகுதிக்கு இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் மீதான தேசியக் கொள்கையினைப் பின்பற்றுவதற்காக அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றது. |
| 2023 செத்தெம்பர் 01 | சட்டத்தரணிகள் மற்றும் நொத்தாரிசுகளுக்காக பணம் தூயதாக்கலுக்கெதிராக மற்றும் பங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் இணங்குவித்தல் மீது 2023இன் 02ஆம் இலக்க வழிகாட்டல் வழங்கப்பட்டது. |

**வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவமும் பன்னாட்டுத் தொழிற்பாடுகளும்**

| | |
|---|---|
| 2023 சனவரி 26 | "உள்முக முதலீடுகள் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள் - உள்முக முதலீடுகள் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள் திட்டம்" மீது விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை இரத்துச்செய்தல். |
| | மத்திய வங்கியின் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா வாங்குதல்-விற்றல் மற்றும் விற்றல்-வாங்குதல், வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்கள் என்பவற்றில் பங்கேற்பதன் மீது வங்கிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல். |
| 2023 பெப்புருவரி 24 | மாற்றல் செய்யப்பட்ட உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்களினதும் ஏற்றுமதி பெறுகைகளுடன்/வருவாய்களுடன் தொடர்புடைய மாற்றப்பட்ட பணித் துறையினதும் கட்டாயமாக மாற்றல்செய்யப்பட்ட ஏற்றுமதி பெறுகைகளின் எஞ்சிய பெறுமதியினதும் கணக்கில் உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் மத்திய வங்கிக்கு வாராந்த கட்டாய வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகளை 2023 பெப்புருவரி 27 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைத்தல். |
| 2023 பெப்புருவரி 27 | சிறப்பு வெளிநாட்டு நாணய கணக்கை - முதலீட்டாளர் திறந்து பேணுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அனுமதிக்கும் வகையில், 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2023 மாச்சு 03 | "உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" மற்றும் "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு மத்திய வங்கியினால் 2023 மாச்சு 07 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் மத்திய வங்கியினால் வழங்கப்படும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை இரத்துச்செய்தல். |
| 2023 யூன் 28 | கட்டளையின் திகதியிலிருந்து தொடங்குகின்ற ஆறு மாதகாலப்பகுதிக்கான தெரிவுசெய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய வெளிமுகப் பணவனுப்பல்களை இடைநிறுத்துவதற்கு/மட்டுப்படுத்துவதற்கு 2023 யூன் 28ஆம் திகதியிடப்பட்ட 2338/40ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் கட்டளை வெளியிடப்பட்டது. |
| 2023 திசெம்பர் 04 | 2019ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிச் சட்ட வர்த்தக மைய ஒழுங்குவிதிகளின் நியதிகளில் உள்நாட்டுச் சந்தைக்கு பொருட்களை/ சாதனங்களை விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட தொழில்முயற்சிகள் உள்ளடங்கலாக, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| | 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிச் சட்ட வர்த்தக கமைய ஒழுங்குவிதிகளின் நியதிகளில் உள்நாட்டுச் சந்தைக்கான பொருட்களை/சாதனங்களை அனுமதிக்கின்ற இலங்கையில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தொழில்முயற்சிகளுக்கான கொடுப்பனவுகளை அனுமதிக்கும் வகையில், வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடைமையாளர்களுக்கான கடன்வசதிகள் தொடர்பான 2023ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2023 திசெம்பர் 20 | கட்டளைத் திகதியிலிருந்து தொடங்குகின்ற ஆறுமாத காலப்பகுதிக்கு முன்னர் வழங்கப்பட்ட கட்டளைகளின் மூலம் விதிக்கப்பட்ட வெளிமுக மூலதனம் மற்றும் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய சில இடைநிறுத்தல்களை/மட்டுப்படுத்தல்களைப் படிப்படியாக தளர்த்தும் வகையில், 2023 திசெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2363/26ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் கட்டளை வெளியிடப்பட்டது. |
| 2024 சனவரி 01 | 2024 யூன் 30 வரை அதன் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதன் மூலம், நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு சிறப்பு வெளிநாட்டு நாணய கணக்குகள் - முதலீட்டாளர் தொடர்பாக 2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |

**படுகடன் முகாமைத்துவம்**

| | |
|---|---|
| 2023 பெப்புருவரி 13 | நேரடி வழங்கல் தள ஏற்பாட்டின் கீழ் இலங்கை அபிவிருத்தி முறிகளை வழங்குதல் இடைநிறுத்தப்பட்டது. |
| 2023 மாச்சு 16 | "2023ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் (தகவலை வெளிப்படுத்தல்) ஒழுங்குவிதிகள்" வழங்கப்பட்டன. |

| | |
|---|---|
| 2023 ஏப்பிறல் 04 | சாதாரண கட்டம் II கால இடைவெளியின் போது மத்திய வங்கியின் நாணயக் கொள்கை அறிவித்தல் அறிவிக்கப்படாமலிருக்கும் சந்தர்ப்பங்களில், திறைசேரி உண்டியல் ஏலமொன்றிற்குப் பின்னர் உடனடியாக ஒரு மணித்தியால காலப்பகுதியில் அல்லது ஏல நாளில் தொழிலை முடிவுறுத்தும் காலப்பகுதியில், எது இறுதியாக இடம்பெறுகின்றதோ அக்காலப்பகுதியில் குறித்த திறைசேரி உண்டியல் ஏலத்தின் கட்டம் II இல் நிறைவேற்றப்படுகின்றது. |
| 2023 மே 12 | 1923ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் திறைசேரி உண்டியல்கள் வழங்கல் மீதான மட்டுப்படுத்தலை ரூ. 5000 பில்லியனிலிருந்து ரூ. 6,000 பில்லியன் வரை அதிகரிப்பதற்கான தீர்மானமொன்றிற்கு பாராளுமன்றத்தால் ஒப்புதலளிக்கப்பட்டது. |
| 2023 யூன் 19 | புதிய வலைத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட திறைசேரி உண்டியல் வழங்கல் முறைமை 2023 யூன் 21 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2023 யூலை 04 | பன்னாட்டு நாணய நிதியத்துடன் ஒப்புதலளிக்கப்பட்ட படுகடன் நிலைபெறத்தக்க இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பங்களிப்புச்செய்வதற்கு விரிவாக்கப்பட்ட நிதிய வசதியுடன் நிலையாகும் விதத்தில், இலங்கையின் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை தொடர்பான கொள்கையொன்றை நிதி அமைச்சு அறிவித்தது. |
| 2023 ஓகத்து 21 | 2022ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2(1)(ஆ).ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், அரசாங்கத்தின் உயர்ந்தபட்ச கடன்பெறுகை எல்லையை ரூ.4,979.0 பில்லியனிலிருந்து ரூ.13,979.0 பில்லியனிற்கு திருத்துவதற்கான ஒதுக்கீட்டு (திருத்தம்) சட்டமூலத்திற்கு பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது. |
| 2023 செத்தெம்பர் 14 | உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளுக்கான பரிமாற்று விஞ்ஞாபனத்தின் பிரகாரம், திறைசேரி முறிகள் பரிமாற்றத்தின் தீர்ப்பனவு முன்னெடுக்கப்பட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்வைப்புக்கள் ரூ. 3,204.5 பில்லியன் தொகை கொண்ட புதிய திறைசேரி முறிகளாக மாற்றப்பட்டன. இவை, நீண்டகால முதிர்வுகளைக் கொண்டிருந்தன. மேலும், ரூ.110.9 பில்லியனைக் கொண்ட ஒன்றுசேர்ந்த வட்டி முதலீட்டாளர்களுக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட திறைசேரி முறி தொகை செலுத்தப்பட்டது. |
| 2023 செத்தெம்பர் 20 | 2023 செத்தெம்பர் 25 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் திறைசேரி முறிகளுக்கான நேரடி வழங்கல் தளத்திற்கான புதிய வலைத்தளம் அடிப்படையிலான முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2023 செத்தெம்பர் 21 | மத்திய வங்கியிலிருந்து அரசாங்கத்திற்கு ரூ.344.7 பில்லியன் கொண்ட வெளிநின்ற கொடுகடன்கள் (“தற்காலிக முற்பணங்கள்”) முதலாந்தரச் சந்தையில் மத்திய வங்கியினால் கொள்வனவுசெய்யப்படும் அரசாங்கத்தின் ரூ.2,368.4 பில்லியன் கொண்ட வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் ரூ.2,492.3 பில்லியன் கொண்ட இலங்கை ரூபாவில் பெயர்குறிக்கப்பட்ட பத்து (10) புதிய கிரமமாக குறைவடையும் நிலையான கூப்பன் திறைசேரி முறிகளாக மற்றும் ரூ.220.8 பில்லியன் கொண்ட பன்னிரண்டு (12) ஏற்கனவேயுள்ள திறைசேரி உண்டியல்களாக மாற்றம்செய்யப்பட்டு, மத்திய வங்கிச் சட்டத்தின் 129(2)ஆம் பிரிவு மற்றும் 2023ஆம் 12ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் (திருத்தம்) நியதிகளில், 2023 செத்தெம்பர் 21 அன்று தீர்ப்பனவுசெய்யப்பட்டது. |
| 2023 நவெம்பர் 03 | 2023 ஓகத்து 18 அன்று கைச்சாத்திடப்பட்ட மக்கள் வங்கியின் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவின் கடன் நிலுவையின் மறுசீரமைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவு கடன் பரிமாற்றமானது மக்கள் வங்கிக்காக நிறைவேற்றப்பட்டது. உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் கீழ் வழங்கப்பட்ட ஐந்து ஏற்கனவேயுள்ள திறைசேரி முறிகளுக்கு ரூ.27.7 பில்லியன் கொண்ட கடன் ஒதுக்கீடுசெய்யப்பட்டன. |
| 2024 மாச்சு 11 | திறைசேரி உண்டியல் கட்டம் IIஇன் போது வழங்கப்பட்ட தொகை கூட்டு ஏலப் பற்றாக்குறையாகக் குறைக்கப்பட்டு, 2024 மாச்சு 07 அன்று வழங்கப்பட்ட திருத்தப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில் 10 சதவீதம் கொண்ட வழங்கப்பட்ட கூட்டுத்தொகை அல்லது ரூ.5.0 பில்லியன் இதில் எது உயர்வாக காணப்படுகின்றதோ அது, 2024 மாச்சு 11 அன்று தொடக்கம் நடைமுறைக்கு வந்தன.<br><br>திறைசேரி முறி ஏலத்தின் நேரடி வழங்கல் இடைவெளியில் வழங்கப்பட்ட தொகை பன்னாட்டு அடையாள இலக்கங்களிலிருந்து வழங்கப்பட்ட 10 சதவீதம் கொண்ட தொகைக்கு குறைக்கப்பட்டுள்ளதுடன் 2024.03.07 அன்று வழங்கப்பட்ட திருத்தப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில் கட்டம் Iஇல் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இது 2024 மாச்சு 11 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் வந்தது. |

**நிதியியல் துறை**

**உரிமம்பெற்ற வங்கிகள்**

| | |
|---|---|
| 2023 சனவரி 02 | மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட பிந்திய கிடைக்கப்பெறும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதத்திற்கு இசைவாக +300 அடிப்படை புள்ளிகளின் ஒரு எல்லையுடன் வங்கி வீதத்தை சீராக்கும் வகையில் 2023 சனவரி 03 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. |
| 2023 சனவரி 31 | நிதியல்லா கூட்டாண்மைப் படுகடன் பிணையங்களைத் தகுதிப்படுத்தலையும் நிதியல்லா பொது மூலதனப் பங்குரிமை பங்குகளை தகுதிப்படுத்தலையும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் (உரிமம்பெற்ற வங்கிகள்) நியதி திரவச் சொத்து விகிதத்தின் கணிப்பீட்டில் திரவச் சொத்துக்களாக நிர்ணயிக்கும் வகையில் வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் வழங்கப்பட்டதுடன் அத்தகைய சாதனங்கள் பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் திரவத்தன்மை காப்பு விகிதம் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை நிவர்த்தி செய்தல் வேண்டுமெனவும் இத்தீர்மானம் வழங்கப்பட்டது. |
| 2023 பெப்புருவரி 02 | நிலவும் பேரண்டப் பொருளாதார நிலைமைகளையும் உரிமம்பெற்ற வங்கிகளின் நிலைபெறத்தக்க தன்மையை உறுதிப்படுத்துவதற்கு திரவத்தன்மை மற்றும் மூலதனத்தின் பொருத்தமான மட்டத்தைப் பேணுவதன் முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2023 பெப்புருவரி 16 | 2022 மே 19 திகதியிடப்பட்ட கட்டளையினால் உள்ளடக்கப்பட்ட ஏற்கனவேயுள்ள இணங்குவிப்பு குறியீடுகளுக்கு மேலதிகமாக, புதிதாக சேர்க்கப்பட்ட 64 இணங்குவிப்பு குறியீடுகளுக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான 100 சதவீத காசு எல்லை வைப்புத் தேவைப்பாட்டினைப் பேணுவது தொடர்பில் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் கட்டளையொன்று வழங்கப்பட்டது. |
| 2023 பெப்புருவரி 17 | இறக்குமதிகளுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள் மீதான 2022ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தமொன்று 64 புதிய இணங்குவிப்புக் குறியீடுகளுக்கான குறிப்பிடப்பட்ட பணிப்புரையின் ஏற்புடைத்தன்மையை நீடிக்கும் வகையில் வழங்கப்பட்டது. |
| 2023 மாச்சு 07 | நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளினதும் தனிநபர்களினதும் தொழிலை/ வருமானத் துறைகளை மீட்டெடுப்பதற்கான இயலாற்றலைக் கொண்டு அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு பொருத்தான சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கோரப்பட்டன. |

| | |
|---|---|
| 2023 ஏப்பிறல் 21 | உரிமம்பெற்ற வங்கிகளுடன் தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கங்களுக்கான தகைமையுடைய/ ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரப்படுத்தல் முகவராண்மையொன்றாக ஐசிஆர்ஏ லங்கா லிமிடெட்டை அங்கீகரிப்பதை நிறுத்துமாறு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2023 ஏப்பிறல் 25 | உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள் தொடர்பில் 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன. இதற்கமைவாக, எடுத்துக்காட்டப்பட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றாமல், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள், முக்கிய முகாமைத்துவ ஆளணிகளின் முகாமைத்துவ கொடுப்பனவுகளையும் பணிப்பாளர் சபைக்கான கொடுப்பனவுகளையும் அதிகரிப்பதிலிருந்து தவிர்ந்துகொள்ளுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. |
| 2023 மே 17 | 2022 மே 19 மற்றும் 2023 பெப்புருவரி 16 அன்று விதிக்கப்பட்ட நாணயக் கடிதத்திற்கு எதிரான குறைந்தபட்ச காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகளை மீளப்பெறுவதற்கு சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2023 மே 18 | இறக்குமதிகளுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள் மீதான 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளையும் 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளையும் இரத்துச்செய்யுமாறு, வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2023 ஓகத்து 25 | குறித்த கடன்வழங்கல் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களைக் குறைத்து இலக்கிடப்பட்ட தினங்களில் குறித்த சதவீதங்களின் மூலம் புதிய மற்றும் ஏற்கனவேயுள்ள ரூபாய் பெயர்குறிக்கப்பட்ட கடன்வழங்கல் சாதனங்களின் வட்டி வீதங்களைக் குறைக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளைக் கேட்டுக்கொள்ளும் விதமாக, உரிமம்பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா பெயர்குறிக்கப்பட்ட கடன்வழங்கல் சாதனங்கள் மீதான ஏற்புடைய வட்டி வீதங்கள் தொடர்பில் நாணய விதிச் சட்டக் கட்டளை வழங்கப்பட்டது. |
| 2023 நவெம்பர் 15 | 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமானது 2023 செத்தெம்பர் 14 அன்று பாராளுமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு 2358/46ஆம் இலக்க வர்த்தமானியில் கட்டளையின்படி வெளியிடப்பட்டதுடன், மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் 2023 நவெம்பர் 15 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் தொழிற்பாட்டிற்கு வந்தது. |
| | 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகளின்) சட்டப் பணிப்புரைகள் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் உறுப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. |
| 2023 நவெம்பர் 23 | 2024 மற்றும் 2025ஆம் ஆண்டுகளுக்கான ஏற்புடைய புதிய உரிமக்கட்டண கட்டமைப்பினை அறிவிக்கும் விதமாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வருடாந்த உரிமக் கட்டணம் தொடர்பான வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் வழங்கப்பட்டது. |
| 2023 நவெம்பர் 27 | வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட தீர்மானங்கள் 2360/02ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. |
| 2023 திசெம்பர் 08 | கடந்த அண்மைக் காலத்தில், நிலவிய அசாதாரண சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, பொது காலக்கெடுக்களும் குறித்த காலவரையறைகளும் நீடிக்கப்பட்டதற்கு மத்தியில், உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மை மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு தொடர்பான 2021ஆம் 16ஆம் இலக்க வங்கித்தொழில் பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன. |
| 2024 பெப்புருவரி 29 | பிரைஸ்வோட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் மற்றும் எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் போன்றன முறையே மேலே குறிப்பிடப்பட்ட பெயர்கள் டெலோயிட் பார்ட்னர்கள் மற்றும் டெலோயிட் அசோசியேட்ஸ்களாக என்ற மாற்றங்களுடன், “உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு தகைமையுடைய கணக்காய்வாளர்களின் பட்டியல்” மீதான 2019ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன. |
| 2024 மாச்சு 25 | வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்ததன்மையை உறுதிப்படுத்தும் வகையில், கொடுகடன் திரட்சி இடர்நேர்வுகளைத் தணிப்பதை நோக்காகக் கொண்டு, 2026 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு, “உரிமம்பெற்ற வங்கிகளின் பாரியளவிலான வெளிப்படுத்துகை” தொடர்பான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2024 மாச்சு 28 | அசாதாரண பேரண்டபொருளாதார சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் நிலைபெறத்தக்க மீட்பினை வசதிப்படுத்தி, உரிமம்பெற்ற வங்கிகளின் சொத்துத்தரத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு, “உரிமம்பெற்ற வங்கிகளின் வியாபார மீட்பு பிரிவுகளை தாபிப்பதற்கான வழிகாட்டல்கள்” மீதான சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் |
| | கம்பனி ஆளுகை மீதான திருத்தப்பட்ட பணிப்புரைகள் |
| **உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி, உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள்** | |
| 2023 சனவரி 05 | பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய மத்திய வங்கியின் நாணயச் சபையானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொருட்டு 2023 சனவரி 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகர் ஒருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தலை நீடித்தது. |
| 2023 சனவரி 18 | 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் 9.1(ஏ) பிரிவின் நியதிகளுக்கமைய பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனமொன்றாக சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் பதிவு இரத்துச்செய்யப்பட்டுள்ளது. |
| 2023 சனவரி 31 | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை ஒன்றிணைக்கும் முதன்மைத் திட்டத்தின் பாகமொன்றாக எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சியுடன் எல்ஓஎல்சி டெவலெப்மன்ட் பினான்ஸ் பிஎல்சியை ஒன்றிணைப்பதைத் தொடர்ந்து, மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் நிதித் தொழிலை முன்னெடுக்கும் பொருட்டு எல்ஓஎல்சி டெவலெப்மன்ட் பினான்ஸ் பிஎல்சிக்கு வழங்கிய உரிமத்தை இரத்துச்செய்துள்ளது. மேலும், நிதி குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எல்ஓஎல்சி டெவலெப்மன்ட் பினான்ஸ் பிஎல்சியின் பதிவானது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது. |
| | போதியளவு மூலதனத்தைப் பேணுவதன் மூலம் நிச்சயமற்ற நேரத்தில் எழக்கூடிய பொருளாதார அதிர்ச்சிகளை ஈர்த்துக்கொள்வதற்கும் வாடிக்கையாளர்களின் கொடுகடன் தேவைகளை தொடர்ச்சியாக ஆதரவளிப்பதற்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் இயலாற்றலையும் வலுப்படுத்துவதற்காக பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்தல் அல்லது இலாபங்களை மீள அனுப்புதல் மீதான வழிகாட்டல் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| 2023 பெப்புருவரி 02 | குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஐசிஆர்ஏ லங்கா லிமிடெட்டானது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் தர மதிப்பீட்டு நிறுவனமாக நீக்கப்பட்டுள்ளதாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டன. |
| 2023 பெப்புருவரி 08 | நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் நாணயச் சபையினால் 2018 யூலை 25 அன்று உரிமம் இரத்துச்செய்யப்பட்ட த ஸ்டான்டட் கிரெடிற் பினான்ஸ் லிமிடெட்டிற்கு கலைப்பாளரை நியமிக்க கொழும்பு வர்த்தக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. |
| 2023 மாச்சு 03 | தற்போது நிலவுகின்ற பேரண்ட பொருளாதார நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் பொருத்தமான சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. |
| 2023 மாச்சு 21 | நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் நாணயச் சபையினால் 2020 மே 22 அன்று உரிமம் இரத்துச் செய்யப்பட்ட த பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்கு கலைப்பாளரை நியமிக்க கொழும்பு வர்த்தக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. |
| 2023 ஏப்பிறல் 25 | மத்திய வங்கியின் நாணய சபையின் வழிகாட்டலின்படி 2023 ஏப்பிறல் 25 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் நிதித் தொழில் சட்டத்தின் 37 (1) ஆம் பிரிவின் கீழ் பிம்புத் பினான்ஸ் பிஎல்சிக்கு உரிமத்தை இரத்துச்செய்தல் தொடர்பான அறிவித்தலை வழங்கியுள்ளது. |
| 2023 யூன் 09 | நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் நாணயச் சபையினால் 2018 மாச்சு 05 அன்று உரிமம் இரத்துச் செய்யப்பட்ட சென்ட்ரல் இன்வெஸ்ட்மென்ட் அண்ட் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு கலைப்பாளரை நியமிக்க கொழும்பு வர்த்தக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. |
| 2023 யூலை 05 | பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய மத்திய வங்கியின் நாணயச் சபையானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொருட்டு 2023 யூலை 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகர் ஒருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தலை நீடித்தது. |
| 2023 யூலை 31 | முதன்மைத் திட்டத்தின் பாகமொன்றாக கன்றிச் பைனான்ஸ் லிமிடெட் 2023 யூலை 31 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் நே'ன் லங்கா பைனான்ஸ் பிஎல்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்துள்ள நிறுவனம் நே'ன் லங்கா பைனான்ஸ் பிஎல்சி ஆகும். |
| 2023 செத்தெம்பர் 01 | பிம்புத் பினான்ஸ் பிஎல்சி எதிர்கொண்ட நெருக்கடி நிலைமைகளை மீட்பதற்கு திருப்திகரமான முன்னேற்றம் எதுவும் மேற்கொள்ளாமையினால் பிம்புத் பினான்ஸ் பிஎல்சிக்கு நிதித்தொழிலை கொண்டுநடத்துவதற்காக வழங்கப்பட்ட உரிமத்தை மத்திய வங்கியின் நாணய சபையின் வழிகாட்டலின்படி 2023 செத்தெம்பர் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் இரத்துச்செய்யப்பட்டுள்ளது. |
| 2023 திசெம்பர் 15 | நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் ஈரிஜ பைனான்ஸ் லிமிடெட்டிற்கு கலைப்பாளரை நியமிக்க கொழும்பு வர்த்தக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. |
| 2024 சனவரி 05 | பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய மத்திய வங்கியானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொருட்டு 2024 சனவரி 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகர் ஒருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தலை நீடித்துள்ளது. |
| 2024 பெப்புருவரி 13 | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வியாபாரம் மற்றும் கூட்டாண்மை அலுவல்கள் முன்னெடுக்கப்படும் முறை அல்லது வேறு ஏதேனும் நோக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தகவல்களை உரிய காலத்திலும், துல்லியமாகவும், சீராகவும் மற்றும் முழுமையாகப் பெற்றுக்கொள்வதை குறிக்கோளாகக் கொண்டு, காலாந்திர அறிக்கையிடல் தேவைப்பாடுகள் மீதான பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | நடுத்தர காலத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவிலான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நீண்டகால நிலைபெறும் தன்மையினை உறுதிசெய்யும் முதன்மைத் திட்டத்தின் கட்டம் II இனை நடைமுறைப்படுத்தல்.<br><br>நடப்பு சந்தை அபிவிருத்திகளுக்கமைவாக நிதித்தொழில் சட்டம் மற்றும் நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம் என்பவற்றிற்கான திருத்தங்கள் உள்ளடங்கலாக தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைத் திருத்தம்செய்தல்.<br><br>வங்கியல்லாத் துறையின் உறுதிப்பாட்டினை மேம்படுத்துகின்ற அதேவேளை மேற்பார்வை மீளாய்வுச் செயன்முறையினை வலுப்படுத்துவதற்கு விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளைக் கொண்டுவருதல். |

**ஏனைய நிதியியல் துறையுடன் தொடர்புடைய கொள்கை வழிமுறைகள்**

| | |
|---|---|
| 2023 ஓகத்து 08 | நிதியியல் பணி வழங்குநர்களின் நியாயமான, வெளிப்படைத்தன்மையிலான, மற்றும் ஒழுக்கவியல் தொழில் நடைத்தையை ஊக்குவித்து, சந்தை நடத்தை மேற்பார்வை மற்றும் நடைமுறைப்படுத்தலை கொண்டுநடாத்துவதற்கு மத்திய வங்கிக்கான அடிப்படையை வழங்கும் வகையில், மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் பணி வழங்குநர்களுக்கான ஏற்புடைய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு மீதான ஒழுங்குவிதிகள் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 10(இ)ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டன. |
| 2024 சனவரி 31<br>2024 பெப்புருவரி 01<br>2024 பெப்புருவரி 06 | உலகவங்கியின் நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் உலக வங்கிக் குழு, நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியின் உறுப்பினராக விளங்கும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்புகளுக்கிடையிலான கடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. |

## அத்தியாயம் 3

# பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாடு


## சுருக்கம்

பாரியளவிலான பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டின் மீள்திரும்புகையால் பலப்படுத்தப்பட்டு, இலங்கைப் பொருளாதாரம் தொடர்ந்து மீட்சியடைந்து எதிர்வரும் காலப்பகுதியில் அதன் உள்ளார்ந்த ஆற்றலை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய விரைவான சீர்திருத்தங்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான பொருளாதார சீராக்கங்களின் தடையற்ற தொடர்ச்சியைக் கருத்தில்கொண்டு, பல்வேறுபட்ட பக்கங்களிலிருந்தும் உறுதிப்பாடு எதிர்பார்க்கப்படுகிறது. விரைவான பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையைத் தொடர்ந்து, குறைந்த கேள்வி நிலைமைகளுக்கு மத்தியில் வழங்கல் பக்க அதிர்ச்சிகளால் இடைக்கிடையே ஏற்படக்கூடிய தளம்பல்கள் இருந்தாலும், 2024ஆம் ஆண்டில் பணவீக்கம் சராசரியாக 5 சதவீத இலக்கை அண்மித்ததாக காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. பொருத்தமான கொள்கை நடவடிக்கைகளால் ஆதரவளிக்கப்பட்டு நடுத்தர காலத்தில் பணவீக்கம் இலக்கை அண்மித்து உறுதியாக காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. நாணயக் கொள்கை உருவாக்கத்தில் பொதுமக்களுக்கான உயர்வான பொறுப்புக்கூறலுடன் இணைந்த மத்திய வங்கியின் சுயாதீனம் நடுத்தர காலப்பகுதியில் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டைப் பேணுவதற்குரிய கருவியாகக் காணப்படும். 2023இன் இரண்டாம் அரையாண்டில் அவதானிக்கப்பட்ட பொருளாதார மீட்சியின் ஆரம்ப அறிகுறிகள் தொடர்ந்து வரும் காலகட்டத்தில் அனைத்துத் துறைகளிலும் பரந்த அடிப்படையிலான மீட்சியாக ஊடுகடத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைந்து இறக்குமதிகளின் மீட்சியினால் உந்தப்பட்டு வர்த்தகப் பற்றாக்குறையில் சாத்தியமான விரிவாக்கம் காணப்படும்போதிலும், புத்துயிரடைந்த சுற்றுலாத் துறை, தொழிலாளர் பணவனுப்பல்களின் அதிகரித்த மட்டம் மற்றும் எதிர்பார்க்கப்படும் கடன்களை உருவாக்காத வகையிலான உட்பாய்ச்சல்களோடு இணைந்து 2023இன் சாதகமான முன்னேற்றங்களோடு வெளிநாட்டுத் துறை கட்டியெழுப்பப்படுமென எதிர்பார்க்கப்படும் அதேவேளையில் வெளிநாட்டுத் தாங்கிருப்புக்களும் அதிகரிக்கும். 2023ஆம் ஆண்டில் ஆழமாக காணப்பட்ட பாதிப்படையக்கூடிய தன்மைகள் குறைந்து வருவதால், நிதியியல் துறையானது சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் தாக்குப்பிடிக்கும் தன்மையை அதிகரிப்பதோடு அதன் சேவை வழங்கலை எதிர்வரும் காலத்தில் விரிவுபடுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. இறைத்துறைப் பக்கத்தில், அரசாங்கம் அதன் இறைத் திரட்சி முயற்சிகளில் விடாமுயற்சியுடன் செயற்படுகின்ற அதேவேளையில் பொருளாதாரத்தை நீடித்து நிலைபெறும் பாதையை நோக்கி மாற்றுவதை உறுதிசெய்வதற்கு மிகவும் இன்றியமையாத சீர்திருத்த நடவடிக்கையை தொடர்ச்சியாக மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகின்றது. காலநிலை மாற்றம், முதுமையடையும் மக்கள்தொகை மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்கள் ஆகியவற்றிலிருந்து தோற்றம்பெறும் நீண்டகால சவால்களுக்கு மத்தியில், இலங்கைப் பொருளாதாரத்தின் நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கான ஒட்டுமொத்தத் தோற்றப்பாடானது கடன் மறுசீரமைப்பு செயன்முறையின் வெற்றிகரமான நிறைவுடனான பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஏற்பாட்டின் தொடர்ச்சியிலும் பரந்த அரசியல் மற்றும் சமூக இணக்கப்பாட்டுடன் கூடிய உற்பத்தித்திறன் மற்றும் செயற்றிறனை மேம்படுத்தும் சீர்திருத்தங்களை தடையின்றி செயற்படுத்துதலிலும் தங்கியிருக்கும்.

3

## 3.1 உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும்

**உலகளாவிய பொருளாதாரம் 2023இல் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையிலான சமிக்ஞைகளைக் காட்டியதுடன் மந்தமான வளர்ச்சி, விடாப்பிடியானதன்மையில் மெதுவடைகின்ற பணவீக்க வீழ்ச்சி மற்றும் புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மைகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகள் என்பன உள்ளடங்கலாக எண்ணிலடங்காத பல்வேறு பொருளாதார இன்னல்களிலிருந்து முன்னோக்கிச் செல்கையில் மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** 2024 சனவரியில் வெளியிடப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டு இற்றைப்படுத்தலிற்கமைய, உலகளாவிய வளர்ச்சி 2022இல் பதிவுசெய்யப்பட்ட 3.5 சதவீதத்திலிருந்து 2023இல் 3.1 சதவீதத்திற்கு மெதுவடைந்திருக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்கா உள்ளடங்கலாக பல்வேறு பெரிய பொருளாதாரங்களின் வலுவான மீளெழுச்சி மற்றும் சீனாவில் இறை ஊக்குவிப்பு என்பன காரணமாக உலகளாவிய வளர்ச்சி 2024இல் ஏறத்தாழ 3.1 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்படுமெனவும் 2025இல் 3.2 சதவீதத்திற்குத் துரிதமடையுமெனவும் எறிவுசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும், 2024-2025 ஆண்டுகளிற்கான எறிவுசெய்யப்பட்ட உலகளாவிய வளர்ச்சி வீதங்கள் 3.8 சதவீதம் கொண்ட வரலாற்று ரீதியிலான சராசரிக்குக் (2000-2019) கீழாகக் காணப்படுகின்றமையானது பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டுப்பாட்டு நாணயக் கொள்கைகளின் தாக்கம், பொருளாதார நடவடிக்கைகள் மீதான உயர்ந்தளவிலான படுகடன் நிறையேற்றத்திற்கு மத்தியிலான இறை இறுக்கமாக்கல் மற்றும் தாழ்ந்தளவிலான அடிப்படை உற்பத்தித்திறன் வளர்ச்சி என்பவற்றினைப் பிரதிபலிக்கின்றது. முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் வளர்ச்சி 2022இன் 2.6 சதவீதத்திலிருந்து 2023இல் 1.6 சதவீதத்திற்கும் 2024இல் 1.5 சதவீதத்திற்குமான வளர்ச்சி வீழ்ச்சியுடன் மெதுவடைதலொன்றினைக் கொண்டிருக்குமெனவும் பின்னர் 2025இல் 1.8 சதவீதத்திற்கு அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. உக்ரைன் போரின் தாக்கங்கள் படிப்படியாகக் குறைவடைந்து செல்கின்ற தன்மையின் காரணமாக ஐரோப்பிய வலயப் பொருளாதாரங்கள் மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பன 2024இல் அவற்றின் தாழ்ந்தளவிலான வளர்ச்சி வீதங்களிலிருந்து மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், ஐக்கிய அமெரிக்காவின் மெதுவடைதலுடன் நாணயக் கொள்கை இறுக்கமாக்குதல் மற்றும் இறுக்கமான இறைக் கொள்கைகள் என்பவற்றின் காலங்கடந்த தாக்கங்கள் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் மிதமான வளர்ச்சிக்கு முக்கிய காரணமாயமைகின்றது. ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கான மிகப்பெரிய ஏற்றுமதி நாடுகளாகக் காணப்படுவதனால் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் இவ்வெதிர்பார்க்கப்படுகின்ற வளர்ச்சி மிதமடைதலானது இலங்கையின் ஏற்றுமதிச் செயலாற்றத்தின் மீது, குறிப்பாக ஆடை ஏற்றுமதிகளில், பாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தக்கூடும். மேலும், முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் மெதுவடைந்த பொருளாதார வளர்ச்சியானது இலங்கையில் பெருமளவு எதிர்பார்க்கப்படுகின்ற உயர்ந்தளவில் செலவிடுகின்ற சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் மீளெழுச்சியிலும் தாக்கம் செலுத்தக்கூடும். அதேவேளை, தோற்றம்பெற்று வருகின்ற சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் 2022இல் காணப்பட்டதனைப் போன்று 2023 மற்றும் 2024 காலப்பகுதியிலும் 4.1 சதவீதம் கொண்ட

**அட்டவணை 3.1 — உலக பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடும் (அ)**

| | 2022 (ஆ) | 2023 (இ) | 2024 (எறிவு) | 2025 (எறிவு) |
|---|---|---|---|---|
| **உலக வெளியீடு** | **3.5** | **3.1** | **3.1** | **3.2** |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 2.6 | 1.6 | 1.5 | 1.8 |
| ஐக்கிய அமெரிக்கா | 1.9 | 2.5 | 2.1 | 1.7 |
| ஐரோப்பிய பிராந்தியம் | 3.4 | 0.5 | 0.9 | 1.7 |
| ஐக்கிய இராச்சியம் | 4.3 | 0.5 | 0.6 | 1.6 |
| யப்பான் | 1.0 | 1.9 | 0.9 | 0.8 |
| தோற்றம்பெற்று வரும் மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 4.1 | 4.1 | 4.1 | 4.2 |
| தோற்றம்பெற்று வரும் மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா | 4.5 | 5.4 | 5.2 | 4.8 |
| சீனா | 3.0 | 5.2 | 4.6 | 4.1 |
| இந்தியா | 7.2 | 6.7 | 6.5 | 6.5 |
| **உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்)** | **5.2** | **0.4** | **3.3** | **3.6** |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 7.3 | 4.6 | 2.6 | 2.0 |
| தோற்றம்பெற்று வரும் மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 9.8 | 8.4 | 8.1 | 6.0 |
| பண்டங்களின் விலைகள் | | | | |
| எண்ணெய் | 39.2 | -16.0 | -2.3 | -4.8 |
| எரிபொருள் அல்லாதவை | 7.9 | -6.1 | -0.9 | -0.4 |

(அ) வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலம்:* உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (சனவரி 2024), பன்னாட்டு நாணய நிதியம்

நிலையான வளர்ச்சியொன்றினைப் பேணுவதோடு 2025இல் 4.2 சதவீதத்திற்கு உயர்வடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பொருளாதாரங்களின் தாக்குப்பிடிக்கும் தன்மையானது இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் வலுவான வளர்ச்சி வீதங்களை முக்கியமாகப் பிரதிபலிக்கின்றது. இந்தியப் பொருளாதாரம் 2023இல் 6.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 2024 மற்றும் 2025 ஆகிய இரு ஆண்டுகளிலும் 6.5 சதவீதத்தில் தொடர்ந்தும் வலுவாகக் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளமையானது வலுவான உள்நாட்டுக் கேள்வியினைப் பிரதிபலிக்கின்றது. சீனாவின் பொருளாதார வளர்ச்சி 2023இல் 5.2 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இயற்கை அனர்த்தங்களுக்கு எதிராக இயலளவினைக் கட்டியெழுப்புவதற்கான அதிகரித்த இறை ஆதரவினைக் கருத்திற்கொண்டு 2024 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளில் முறையே 4.6 சதவீதம் மற்றும் 4.1 சதவீதமாகக் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பொருளாதாரங்களுடனான வலுவான பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் இணைப்புக்கள், குறிப்பாக வணிகப்பொருள் வர்த்தகம், சுற்றுலா, வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் நிதியியல் உதவி என்பன தொடர்பில் கருத்திற்கொண்டு சீனாவிலும் இந்தியாவிலும் எதிர்பார்க்கப்படுகின்ற உயர்ந்தளவிலான வளர்ச்சி வீதங்கள் இலங்கைப் பொருளாதாரத்தில் சாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**நாணயக் கொள்கை இறுக்கமாக்கல், மெதுவாக மேம்படும் தொழிலாளர் சந்தை மற்றும் தொடர்புடைய வலு விலைகளில் ஏற்படுகின்ற வீழ்ச்சியின் ஊடுகடத்தல் தாக்கங்கள் என்பன காரணமாக உலகளாவிய முதன்மைப் பணவீக்கம் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவாக வீழ்ச்சியடைந்து வருகின்றமையால் உலகளாவிய நாணய நிலைமைகளின் எதிர்பார்க்கப்படுகின்ற தளர்வடைதலிற்குத் தூண்டுதலளிக்கின்ற நிலைமைகளை உருவாக்கின்றது.** உலகளாவிய பணவீக்கம் 2022இல் பதிவுசெய்யப்பட்ட 8.7 சதவீதத்திலிருந்து 2023இல் 6.8 சதவீதத்திற்கும் 2024இல் 5.8 சதவீதத்திற்கும் படிப்படியாக வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. பண்ட விலைகள், முக்கியமாக எண்ணெய் விலைகள் அடுத்த இரண்டு ஆண்டுகளில் வீழ்ச்சியடைந்து, விரைவான பணவீக்க வீழ்ச்சிக்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், காசாவில் தோற்றம்பெற்றுள்ள முரண்பாடு மத்திய கிழக்குப் பிராந்தியத்திற்குத் தீவிரமடையும் சாத்தியப்பாடு மற்றும் செங்கடலில் காணப்படுகின்ற தொடர்ச்சியான தாக்குதல்கள் என்பன உள்ளடங்கலாக புவிசார் அரசியல் அதிர்வுகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற புதிய பண்ட விலை உயர்வுகள் உலகளாவிய பணவீக்கத்தினைத் துரிதப்படுத்தக்கூடும். உயர்ந்தளவிலான உலகளாவிய வலு விலைகள் அதிகரித்த இறக்குமதிச் செலவினங்களைத் தோற்றுவிக்கலாமென்பதுடன் அதன்மூலம் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைகின்ற அதேவேளையில் இலங்கை உட்பட பல நாடுகளின் பணவீக்கமும் நிறையேற்றப்படலாம். அதேவேளை, எல்-நினோ நிகழ்வுகளுடன் இணைந்து வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற வானிலையுடன் தொடர்புடைய அதிர்வுகள் உணவுப் பொருட்களின் விலை உயர்வுகளை ஏற்படுத்தலாமென்பதுடன் உலகளாவிய ரீதியில் விலை உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளைப் பாதிப்பிற்குட்படுத்தலாம். மேலும், அதிகரித்துச் செல்கின்ற படுகடன் பணிக்கொடுப்பனவுச் செலவுகளின் காரணமாக பல பொருளாதாரங்கள் குறிப்பிடத்தக்களவிலான படுகடன் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதுடன் இது இறைத் திரட்சி வழிமுறைகளைத் தேவைப்படுத்துவதுடன் வளர்ச்சி வாய்ப்புக்களை மேலும் தடைப்படுத்தக்கூடும்.

**அதிகரித்துச் செல்கின்ற பணவீக்க அழுத்தங்களைக் கருத்திற்கொண்டு 2022இல் படிப்படியாக இறுக்கமாக்கப்பட்ட உலகளாவிய நாணயக் கொள்கை நிலைப்பாடானது பணவீக்கம் விஞ்சியளவிலான நெகிழ்வற்றதன்மையினைத் தொடர்ந்தும் கொண்டிருந்தமையினால் 2023 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிலான உயர் மட்டங்களுக்கு மேலும் இறுக்கமாக்கப்பட்டது.** புவிசார் அரசியல் பதட்டங்கள் காரணமாக ஏற்பட்ட நிரம்பல் இடையூறுகள், உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நாணய மற்றும் இறைத் தூண்டலின் காலங்கடந்த தாக்கங்கள், உயர் பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் கூலி அழுத்தங்கள் என்பன பல முன்னேற்றங்கண்ட மற்றும் தோற்றம்பெற்று வருகின்ற சந்தைப் பொருளாதாரங்களின் பணவீக்கம்

3

3

நீடித்திருப்பதற்குப் பங்களித்த முக்கிய காரணிகளாகக் காணப்பட்டன. பணவீக்க மிதமடைதலின் சில முன்கூட்டிய சமிக்ஞைகள் பதிவுசெய்யப்பட்ட போதிலும், உள்நோக்கி வருகின்ற தரவுகள், மற்றும் கீழ்நோக்கிய இறுக்கமான மையப் பணவீக்க மட்டங்களுடன் இணைந்து மேற்கத்தியப் பொருளாதாரங்கள் சீனாவுடனான உறவுகளைத் தளர்வுறச் செய்துள்ளமையினால் ஏற்பட்டுள்ள பொருளாதாரத் துண்டிப்பு மற்றும் செங்கடலில் நிலவுகின்ற பதட்டங்கள் மற்றும் உலகளாவிய மற்றும் பிராந்திய நிரம்பல் சங்கிலிகள் மீதான அதன் தாக்கம் போன்ற ஏனைய சாதகமற்ற உலகளாவிய அபிவிருத்திகள் என்பன 2024இல் உலகளாவிய ரீதியில் மத்திய வங்கிகள் தமது நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தளர்த்துவதில் தொடர்ந்தும் எச்சரிக்கையாக இருப்பதற்கு வழிவகுத்துள்ளன. அதேவேளை, 2024இன் இதுவரையான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலரானது ஏனைய முக்கிய நாணயங்களிற்கெதிராக வலுவடைந்து காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதரத்திற்கான புதிய தொழில் வாய்ப்புக்களில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவிலான எழுச்சி உள்ளடங்கலாக ஐக்கிய அமெரிக்காவின் வலுவான பொருளாதாரச் செயலாற்றத்திற்கு இது பங்களித்திருக்கக்கூடும். மேலும், தொடர்ச்சியான பணவீக்க அழுத்தங்களிற்கு மத்தியில் வட்டி வீதங்களின் இயல்புநிலைக்குத் திரும்பலிலுள்ள தாமதமானது அண்மைய எதிர்காலத்தில் வலுவான ஐக்கிய அமெரிக்க டொலரொன்றிற்குப் பங்களிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3.2 உள்நாட்டுப் பொருளாதாரத் தோற்றப்பாடு

### 3.2.1 பணவீக்கத் தோற்றப்பாடு

**தாழ்ந்தளவிலான கேள்வி நிலைமைகளுக்கு மத்தியில் நிரம்பல் பக்க விலகல்களினால் ஏற்பட்ட இடைக்கிடையேயான தளம்பல்களிற்கு மத்தியில், பொருத்தமான கொள்கை வழிமுறைகளினால் ஆதரிக்கப்பட்டு பணவீக்கமானது நடுத்தர காலப்பகுதியில் இலக்கிடப்பட்ட மட்டங்களை அண்மித்து உறுதிநிலைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** துரிதமான பணவீக்க வீழ்ச்சிச் செயன்முறையினைத் தொடர்ந்து, பணவீக்கமானது 2023 இறுதியில் தாழ்ந்தளவிலான ஒற்றை இலக்க மட்டங்களை அண்மித்தது. இருப்பினும், 2024 சனவரியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரித் திருத்தங்களினால் முக்கியமாக உந்தப்பட்டு 2024 முற்பகுதியில் பணவீக்கத்தில் தற்காலிக உயர்வொன்று பதிவுசெய்யப்பட்டது. இருப்பினும், 2024இன் இதுவரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளானது மெதுவடைந்த கேள்விக்கு மத்தியில் பணவீக்கத்தின் மீதான பெறுமதி கூட்டப்பட்ட வரி மாற்றத்தின் இரண்டாம் சுற்று விளைவுகள் மற்றும் நேரடித் தாக்கம் என்பன ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதனைப் போன்று பாரியளவிலானதாகக் காணப்படாதென்பதைக் குறித்துக்காட்டுகின்றன. மேலும், 2024 மாச்சிலிருந்து நடைமுறைக்கு வந்த மின்சாரத் தீர்வைகளிற்கான குறிப்பிடத்தக்களவிலான கீழ்நோக்கிய திருத்தங்கள் மற்றும் உணவு விலைகளின் மிதமடைதல் என்பவற்றினால் இவ்வரி அதிகரிப்பின் விளைவுகள் பகுதியளவில் எதிரீடு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2024 மாச்சில் பதிவுசெய்யப்பட்ட பணவீக்கத்தின் கணிசமானளவிலான குறைப்பிற்கு இவ்விளைவுகள் பகுதியளவில் வகைகூறுவதுடன் மத்திய வங்கியின் தற்போதைய எறிவுகளின் பிரகாரம்,[1] 2024இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் பணவீக்கம் 5 சதவீத இலக்கிற்குக் கீழ் தொடர்ந்தும் காணப்படுவதற்கு இவை பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண்டின் பிற்பகுதியில் முதன்மைப் பணவீக்கத்திற்கான உத்வேகமானது மின்சாரத் தீர்வைகளுக்கான அடுத்த சுற்றுத் திருத்தங்கள் மற்றும் எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகளிற்கான செலவைப் பிரதிபலிக்கக்கூடிய மாதாந்தத் திருத்தங்கள் என்பவற்றினால் ஓரளவு தாக்கத்திற்குட்படக்கூடும். இருப்பினும், 2024 காலப்பகுதியில் பணவீக்கம் சராசரியாக 5 சதவீத இலக்கினை அண்மித்துத் தொடர்ந்தும் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது கிடைப்பனவாகவுள்ள

1 நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகளைப் அடைவதற்குப் பகுதியளவிலான கட்டமைப்புசார் பேரண்டப்பொருளாதார மாதிரியொன்றாகவுள்ள காலாண்டு ரீதியிலான எறிவு மாதிரியொன்றினை (Quarterly Projection Model) மத்திய வங்கி பயன்படுத்துகின்றது. பணவீக்கத் தரவுகளின் மாதாந்த வெளியீடுகள் மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தித் தரவுகளின் காலாண்டு ரீதியிலான வெளியீடுகள் மற்றும் உலகளாவிய பேரண்டப்பொருளாதார எதிர்வுகூறல்கள் என்பன உள்ளடங்கலாக பல்வேறுபட்ட அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பான தரவுகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு நாணயக் கொள்கைச் சுற்றிலும் எறிவுகள் இற்றைப்படுத்தப்படுகின்றன. தரவு இற்றைப்படுத்தல்களிற்கு மேலதிகமாக, அலுவலர் தீர்மானங்களுடன் இணைந்து முக்கிய பேரண்டப்பொருளாதார மாறிகளின் அண்மைக் கால அசைவுகளின் எதிர்வுகூறல் என்பன காலாண்டு ரீதியிலான எறிவு மாதிரியின் அடிப்படையிலமைந்த நடுத்தர கால எறிவுகளிற்கான முக்கிய உள்ளீடுகளாகக் கொள்ளப்படுகின்றன. 2023ஆம் ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வில் கலந்துரையாடப்பட்ட எறிவுகள் 2024 மாச்சு மாத எதிர்வுகூறல் சுற்றின் அடிப்படையிலமைந்துள்ளன.

தகவல்களின்படி, கூட்டுக்கேள்வி அழுத்தங்களில்லாத போது, 2024 முற்பகுதியில் வரித் திருத்தங்கள் காரணமாக பணவீக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் குறிப்பிடத்தக்க உணவுப் பணவீக்கம் என்பவற்றுடன் இணைந்த சாதகமான தளத் தாக்கத்தின் முக்கிய காரணமாக பணவீக்கம் 2025 முற்பகுதியில் குறுகிய காலமொன்றிற்கு வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, எதிர்பார்க்கப்படுகின்ற பொருளாதார வளர்ச்சி உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த மட்டங்களுக்குக் கீழாகத் தொடர்ந்தும் காணப்படுகின்ற போதிலும் பெறுமதி கூட்டப்பட்ட வரிக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களின் பாரியளவிலான காரணத்தினால் வரவிருக்கின்ற காலண்டுகளில் மையப் பணவீக்கம் அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. மைய நுகர்வுக் கூடையில் வலுவுடன் தொடர்புடைய செலவினங்கள் உள்ளடக்கப்படாமையினால் குறைந்தளவிலான மின்சாரத் தீர்வைகளின் நேரடித் தாக்கத்திலிருந்து பயனடையாதிருக்கலாமென்பதனாலும் மையப் பணவீக்கத்தில் பொதுவாகப் பதிவுசெய்யப்படுகின்ற ஒப்பீட்டளவில் உயர்ந்தளவிலான நீடித்ததன்மையினாலும் மையப் பணவீக்கத்தின் இவ்வெறிவுசெய்யப்பட்ட பாதை பங்களிக்கப்படுகின்றது. முதன்மைப் பணவீக்கத்தினைப் போன்றே மையப் பணவீக்கமும் 2025 முற்பகுதியில் வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கொன்றினைத் தொடர்ந்து, முதன்மைப் பணவீக்கத்திலும் பார்க்க தாழ்ந்தளவிலான பரிமாணமொன்றிலேனும் சாதகமான தளத் தாக்கமொன்றினால் பகுதியளவில் பங்களிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், மையப் பணவீக்கமானது பொருத்தமான கொள்கை வழிமுறைகளுடன் நடுத்தர காலத்தில் நடு ஒற்றை இலக்க மட்டங்களை அண்மித்து உறுதிநிலைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

3

வரைபடம் 3.1

**முதன்மைப் பணவீக்க எறிவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்***
**(காலாண்டுச் சராசரி, ஆண்டிற்காண்டு, %)**




*வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 காலாண்டு 4 வரையான அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்ட) அடிப்படையிலமைந்துள்ள வேளையில் இக்காலப்பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்ட) அடிப்படையிலமைந்துள்ளன.

**குறிப்பு : எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல**

2024 மாச்சு மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறுகின்ற தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன.

வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களின் நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப்பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையைத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக, தடிப்பான பச்சை நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளிகளை எடுத்துக்காட்டி உண்மையான பணவீக்க விளைவு இவ் இடைவெளிகளினுள் அமையப்பெறும் என்ற 50 சதவீத நிகழ்தகவினை உணர்த்துகின்றது. நம்பிக்கை இடைவெளி நீண்ட காலத்தில் பணவீக்கத்தின் எதிர்வுகூறலின் அதிகரிக்கின்ற நிச்சயமின்மையினைக் காட்டுகின்றது.

மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

அட்டவணை 3.2

**அண்மையகால பேரண்டபொருளாதார எறிவுகள் (அ)**

| குறிகாட்டி | அலகு | 2022 (ஆ) | 2023 (இ) | எறிவுகள் 2024 |
|---|---|---|---|---|
| **உண்மைத்துறை (ஈ)** | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | -7.3 (இ) | -2.3 | 3.0 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. | ரூ.றில் | 24.1 (இ) | 27.6 | 29.9 |
| தலைக்குரிய மொ.உ.உ. (உ) (ஊ) | ஐ.அ.டொ. | 3,464 (இ) | 3,830 | 4,075 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ இன் % | 28.6 (இ) | 25.3 | 25.8 |
| உள்நாட்டு சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 25.0 (இ) | 23.8 | 22.4 |
| தேசிய சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 27.2 (இ) | 27.2 | 26.3 |
| **வெளிநாட்டுத்துறை (ஈ)** | | | | |
| வர்த்தக இடைவெளி | மொ.உ.உ. இன் % | -6.7 | -5.8 | -7.8 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ. பில் | 13.1 | 11.9 | 12.9 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ. பில் | 18.3 | 16.8 | 20.0 |
| நடைமுறை கணக்கு நிலுவை (எ) | மொ.உ.உ. இன் % | -1.9 | 1.8 | 0.5 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | இறக்குமதி மாதங்கள் | 1.2 | 3.1 | 3.4 |
| **இறைத்துறை** | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ. இன் % | 8.4 (ஏ) | 11.1 (ஈ) | 13.0 (ஐ) |
| செலவினமும் தேறிய கடன் வழங்கலும் | மொ.உ.உ. இன் % | 18.6 (ஏ) | 19.4 (ஈ) | 22.3 (ஐ) |
| நடைமுறைக் கணக்கு மீதி | மொ.உ.உ. இன் % | -6.4 (ஏ) | -6.0 (ஈ) | -3.2 (ஐ) |
| முதலாந்தர கணக்கு மீதி | மொ.உ.உ. இன் % | -3.7 (ஏ) | 0.6 (ஈ) | 0.8 (ஐ) |
| முதலாந்தர கணக்கு மீதி (வங்கி மீள்மூலதனமாக்கலுடன்) | மொ.உ.உ. இன் % | - | - | -1.3 (ஐ) |
| திரண்ட வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை | மொ.உ.உ. இன் % | -10.2 (ஏ) | -8.3 (ஈ) | -7.3 (ஐ) |
| திரண்ட வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை (வங்கி மீள்மூலதனமாக்கலுடன்) | மொ.உ.உ. இன் % | - | - | -9.4 (ஐ) |
| மத்திய அரச படுகடன் | மொ.உ.உ. இன் % | 114.2 (ஏ) | 103.9 (ஈ) | 110.3 (ஐ) |
| **நாணயத் துறை மற்றும் பணவீக்கம்** | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_2b$) (ஒ) | % | 15.4 | 7.3 | 15.0 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_2b$ இல்) (ஒ) | % | 6.2 | -0.6 | 8.5 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் | % | 46.4 (ஓ) | 17.4 (ஔ) | 5.0 (ஔ) |

(அ 2024 மாச்சு நடுப்பகுதிவரை கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2024 மாச்சு 15இல் வெளியிடப்பட்ட (தள ஆண்டு 2015) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன
(உ) பிந்திய குடித்தொகை தரவுகளின்படி மதிப்பீடுகள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன
(ஊ) காலாண்டுச் சராசரிச் செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி ஐ.அ.டொலர் நியதிகளில் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையிலானது
(எ) திரட்டப்பட்ட அடிப்படையிலானது
(ஏ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2024 மாச்சு 15இல் வெளியிடப்பட்ட பிந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டுள்ளன
(ஐ) 2024இற்கான எறிவுகள் 2023 திசெம்பர் பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் அறிக்கையின் அடிப்படையிலானது
(ஒ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஓ) கொ.நு.வி.சுட்டெண் (2013=100) அடிப்படையிலானது
(ஔ) கொ.நு.வி.சுட்டெண் (2021=100) அடிப்படையிலானது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

**நிலவுகின்ற உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிச்சயமற்றதன்மைகள், பாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்கள் என்பவற்றைக் கருத்திற்கொள்கையில் தற்போதைய எறிவுகளுடன் இணைந்துள்ள இடர்நேர்வுகள் சாதாரண காலங்களிலும் பார்க்க உயர்ந்தளவிலேயே காணப்படுகின்றன.** உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகளின் எதிர்வுகூறல்கள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் படிப்படியான வளர்ச்சி மீட்சி, படுகடன் மறுசீரமைப்பு சூழ்நிலையின் கீழ் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி எறிவுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற உள்நாட்டு இறைப் பாதை மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினால் குறித்துக்காட்டப்பட்ட உலகளாவிய நிதியியல் நிலைமைகள் என்பன தொடர்பிலான நிபந்தனைக்குட்பட்டவையாகத் தற்போதைய எறிவுகள் காணப்படுகின்றன. மேலும், மாதிரி-நிலையான வட்டி வீதப் பாதை மற்றும் அதன் விளைவான பேரண்டப்பொருளாதார பதிலிறுப்புக்கள் என்பன தொடர்பிலான நிபந்தனைக்குட்பட்டவையாக எறிவுகள் காணப்படுகின்றன. இவ்வூகங்களில் ஏற்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்களவிலான மாற்றம் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து உண்மையான பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும். எறிவுகளில் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ ஏற்கனவே உள்வாங்கப்பட்ட எறிவு மட்டங்களிலிருந்து விலக்குகின்ற பல்வேறு காரணிகளின் சாத்தியப்பாடு மற்றும் எதிர்பார்க்கப்படாத ஏதேனும் அபிவிருத்திகள் என்பன காரணமாக எறிவிற்கான இடர்நேர்வுகள் தோற்றம்பெறுகின்றன. குறிப்பாக, நிச்சயமற்றதன்மைக்கு

மத்தியிலான உலகளாவிய உணவு மற்றும் வலு விலைகள் மீதான சாத்தியமான மேல்நோக்கிய அழுத்தங்களின் தாக்கம், வேளாண்மை உற்பத்தி மீதான பாதகமான வானிலையின் தாக்கம் மற்றும் அதன்மூலம் உணவு விலைகளில் ஏற்படக்கூடிய தாக்கம், ஏனையவற்றினுள் விலையுயர்ந்த வளங்களின் பயன்பாட்டை அதிகளவில் தேவைப்படுத்தும் வகையில் மின் உருவாக்கக் கலவையை பாதிப்படையச் செய்யக்கூடிய வானிலை மாற்றங்கள் ஒரு பங்களிக்கும் காரணியாக காணப்படுவதனால் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க அதிகளவிலான மின்சார விலைகளுக்கான சாத்தியமான மேல்நோக்கிய திருத்தம், உயர்ந்தளவிலான கூலிகளுக்கான கேள்வியின் சாத்தியமான அடையப்பெறல் போன்ற காரணிகளிலிருந்து தோற்றம்பெறுபவை பணவீக்க எறிவுகளிற்கு கணிசமானளவிலான மேல்நோக்கிய இடர்நேர்வுகளாக காணப்படுகின்றன. அதேவேளை, பணவீக்க எறிவுகளிற்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் நிரம்பல் நிலைமைகளின் விரைவானதொரு மீட்சி மற்றும் பொதுமக்களின் குறைவடைந்த கொள்வனவுச் சக்தியின் தொடர்ச்சியான தாக்கம் என்பவற்றினை உள்ளடக்கியுள்ளன. நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் தரவினால் உந்தப்பட்ட நாணயக் கொள்கை உருவாக்கத்தின் ஆதரவுடன், ஒவ்வொரு நாணயக் கொள்கைச் சுற்றிலும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைக்கு வரவிருக்கின்ற மாற்றங்களின் அடிப்படையில் பணவீக்கத் தோற்றப்பாட்டில் ஏற்படக்கூடிய சாத்தியமான விலகல்கள் குறித்து மத்திய வங்கி பொதுமக்களுக்குத் தொடர்ந்து தொடர்பூட்டும்.

## 3.2.2 வளர்ச்சி வாய்ப்புக்கள்

**ஆறு காலாண்டுகளாக பதிவுசெய்யப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு சுருக்கங்களைத் தொடர்ந்து, 2023இன் இரண்டாம் அரையாண்டில் நேர்மறையான செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்யப்பட்டதுடன் எதிர்வருகின்ற காலப்பகுதியில் நீடித்து நிலைத்திருக்கின்ற மீட்சியொன்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.** தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடு மற்றும் தாழ்ந்தளவிலான பணவீக்கச் சூழல் ஆகியவற்றின் பலன்கள் பொருளாதாரத்தினுள் தொடர்ந்து வழிப்படுத்தப்படுமென்பதனால் பொருளாதாரம் 2024இல் 3 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சுற்றுலாத் துறையின் எதிர்பார்த்ததிலும் பார்க்க விரைவான மீட்சியானது ஏனைய தொடர்புடைய துறைகள் மீதான நேர்மறையான கசிவுத் தாக்கங்களுடன் அண்மைக் காலத்தில் வளர்ச்சி உத்வேகத்திற்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்த்தல், வீழ்ச்சியடைந்து வருகின்ற கொடுகடன் செலவு மற்றும் மூலப்பொருட்களின் விலைகள் போன்ற அண்மைய நேர்மறையான அபிவிருத்திகளிலிருந்து கைத்தொழில் துறை பயனடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரசாங்கத்தின் பல்வேறு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் மீளாரம்பத்துடன் இணைந்து மேற்கூறிய அபிவிருத்திகளைக் கருத்திற்கொள்கையில் முன்கூட்டிய குறிகாட்டிகளும் கட்டடவாக்கத் துறை நடவடிக்கைகளில் மீளெழுச்சியொன்றினைக் காட்டுகின்றன. அண்மையில் முடிவடைந்த 2023/24 பெரும்போகமானது முக்கிய பயிர்களில் நேர்மறையான விளைச்சல்களைப் பதிவுசெய்திருக்குமென எதிர்பார்க்கப்படுவதானது வேளாண்மைத் துறையின் நேர்மறையான செயலாற்றத்தினை எடுத்துக்காட்டுவதுடன் கிடைப்பனவாகவுள்ள தகவல்களிற்கமைய, பாதகமான வானிலை நிலைமைகளினால் இடையூறிற்குட்படாதிருந்தால் இந்நேர்மறையான போக்கானது ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியிலும் நிலைத்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. பணவனுப்பல்களில் குறிப்பிடத்தக்களவிலான அதிகரிப்பும் கூட்டுக்கேள்வியினை அதிகரிப்பதற்கு ஆதரவளிக்கலாம். அண்மைக்காலப் பொருளாதார வளர்ச்சி உத்வேகமானது படுகடன் மறுசீரமைப்பின் நிறைவடைதலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற மேம்பட்ட இறை இடைவெளியினால் ஆதரவளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கூலிகளில் எதிர்பார்க்கப்படுகின்ற படிப்படியான சீராக்கமும் கேள்வி வளர்ச்சிக்குத் துணைபுரியும். பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு தொடர்பாக புதுப்பிக்கப்பட்ட மனப்பாங்கு காணப்படுகின்ற போதிலும், எதிர்பார்க்கப்படுகின்ற தேர்தல்களுக்கு மத்தியில் 2024 காலப்பகுதியில் பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்திற்குக் கொள்கை நிச்சயத்தன்மை மற்றும் தொடர்ச்சி என்பன தொடர்ந்தும் இன்றியமையாததாயிருக்கும்.

3

வரைபடம் 3.2

**எறிவுசெய்யப்பட்ட காலாண்டு ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, %)**




**குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல.**

2024 மாச்சு மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறுகின்ற தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன.

வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களின் நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப்பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக, தடிப்பான நீல நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளியினை எடுத்துக்காட்டி உண்மையான பணவீக்க விளைவு இவ் இடைவெளியினுள் அமையப்பெறும் என்ற 50 சதவீத நிகழ்தகவினைக் குறித்துக்காட்டுகின்றது. நம்பிக்கை இடைவெளி நீண்ட காலத்தில் பணவீக்கத்தின் எதிர்வுகூறலின் அதிகரிக்கின்ற நிச்சயமின்மையினைக் காட்டுகின்றது. தளம்பலடைகின்ற உலகளாவிய சூழல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் உள்ள நிச்சயமின்மைகள் என்பவற்றினைக் கருத்திற்கொள்கையில் அடிப்படை எதிர்வுகூறல்கள் பல்வேறு உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகளுக்கு வெளிப்படுத்தலுக்குட்பட்டுள்ளன. ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பட்ட பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும்.

மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

நடுத்தர காலப்பகுதியில் உள்நாட்டுப் பணிகளுக்கான குறிப்பாக சுற்றுலாத் துறையினூடான வெளிநாட்டுக் கேள்வி தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்படுவதோடு இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் மேம்பட்ட வளர்ச்சி வாய்ப்புகளுக்கு மத்தியில் ஏற்றுமதிகளை வலுப்படுத்தும் பொருட்டு தற்போது முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகளால் ஏற்றுமதிகளிற்கான சில புதுப்பிக்கப்பட்ட கேள்விகள் தோற்றம் பெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. அண்மை மற்றும் நடுத்தர காலப்பகுதியில் பொருளாதாரத்தின் நேர்மறையான வளர்ச்சிப் பாதையானது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் இலங்கையின் தொடர்ச்சி, படுகடன் மறுசீரமைப்பின் காலந்தவறாத நிறைவு மற்றும் கட்டமைப்புசார் சீர்திருத்த நிகழ்ச்சிநிரலுடன் வலுவானதொரு வேகத்தில் படிப்படியாக முன்னேற்றமடைவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு என்பவற்றில் தொடர்ந்து தங்கியுள்ளது. இச்சீர்திருத்தங்களினூடாக வளங்களைக் குறிப்பாக, அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுடன் தொடர்புடையவற்றினைப் பயன்படுத்தத்தக்க விதத்தில் கிடைப்பனவாக்குதல் மற்றும் உற்பத்தித் துறைகளினுள் அவற்றை மீளொழுங்குபடுத்துதல் என்பன உற்பத்தித்திறனிற்கான நீண்டகால மேம்பாடுகளைத் தூண்டுவதற்கும் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த தன்மையினை மேலும் வலுப்படுத்துவதற்கும் துணைபுரியும். இருப்பினும், மனித மூலதனத்தின் குறிப்பாக, முதுமையடைதலுடன் இணைந்த பாதகமான குடித்தொகையியல் அபிவிருத்திகளுக்கு மத்தியில் உயர்ந்தளவிலான ஆற்றல்வாய்ந்த தொழில்சார் நிபுணர்களின் தொடர்ச்சியான வெளிப்பாய்ச்சலானது பொருளாதார மீட்சிச் செயன்முறையில் முக்கியமான பலவீனமொன்றாகக் காணப்படுகின்றது. காலநிலை மாற்றத்தின் விரைவான தாக்கமானது வேளாண்மை உற்பத்தியில் மாத்திரமன்றி ஏனையவற்றிற்கிடையில் வலு உருவாக்கம், கட்டவாக்கம் மற்றும்

சுற்றுலாத்துறை போன்ற பொருளாதாரத்தின் ஏனைய அம்சங்களிலும் அடிக்கடி ஏற்படுகின்ற நிரம்பல் அதிர்வுகளினூடாக அண்மைக் காலத்திலிருந்து நடுத்தர காலத்தில் எதிர்பார்க்கப்படுவதிலும் பார்க்க பாரியளவிலான பாதமான விளைவுகளையும் ஏற்படுத்தலாம். துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்ற உலகளாவிய சூழலைக் கருத்திற்கொள்கையில், பொருளாதாரப் பன்முகப்படுத்தலின் பற்றாக்குறை பொருளாதாரத்தின் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த தன்மையினை மாத்திரமன்றி பொருளாதார பாதிப்படையக்கூடிய தன்மைகளின் மூலத்தினையும் தொடர்ந்து பின்னடையச்செய்கின்றது. மேலும், சகல முக்கிய பொருளாதார துறைகளிலும் ஒட்டுமொத்த உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சிகளும் இச்சூழ்நிலையில் இன்றியமையாதனவாயுள்ளன. நுண்பாக மட்டத்தில், வினைத்திறனை மேம்படுத்துதல் மற்றும் போதியளவிலான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் என்பன மூலம் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களை வலுப்படுத்துவதற்கான தற்போது முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகள் அண்மைக்கால தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மைகளைக் கட்டியெழுப்புவதற்கும் எதிர்வருகின்ற காலப்பகுதியில் பொருளாதார வலுவூட்டல் மற்றும் நீடித்துநிலைத்திருக்கின்ற அபிவிருத்தி என்பவற்றிற்கான வாய்ப்புக்களைத் தனிப்பட்டவர்கள் பற்றிப்பிடிப்பதனை இயலச்செய்வதற்கும் துரிதப்படுத்தப்பட வேண்டும். இறைத்துறையின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மைக்கு செலவினத்தை சிக்கனப்படுத்தல் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்ற வேளையில், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற முக்கிய சமூக உட்கட்டமைப்பு தொடர்பிலான அரச செலவிடலின் வினைத்திறன்தன்மை நீண்டகால வளர்ச்சியை நிலைநிறுத்திக் கொள்ளும் நோக்குடன் அத்தகைய பணிகளை எல்லோருக்கும் வழங்குவதை நிச்சயப்படுத்தும் பொருட்டு மேம்படுத்தப்பட வேண்டும். மேலும், ஆளுகைப் பலவீனங்கள் மற்றும் ஊழலால் பாதிப்படையக்கூடிய தன்மைகள் என்பவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு அடையாளம் காணப்பட்ட வழிமுறைகளைக் காலந்தவறாது நடைமுறைப்படுத்தலானது பொருளாதாரம் மற்றும் அதன் மக்கள் ஆகிய இரண்டினதும் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது.

### 3.2.3 நாணயத் துறைத் தோற்றப்பாடு

**கிடைப்பனவாகவுள்ள தரவுகளினால் பிரதிபலிக்கப்படுகின்றவாறு, சாதகமான பணவீக்க போக்கு மற்றும் தோற்றப்பாடு என்பவற்றினைக் கருத்திற்கொண்டு, மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாடு எதிர்வருகின்ற காலப்பகுதியில் தளர்த்தப்பட்டதாகத் தொடர்ந்தும் காணப்பட்டு, பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டுவதற்குத் துணைபுரியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** நாணயக் கொள்கைத் தளர்வடைதல் வழிமுறைகள், மேம்படுகின்ற உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் அரச பிணையங்கள் தொடர்பான இடர்நேர்வு மிகையில் ஏற்பட்ட குறைப்பு என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, சந்தை வட்டி வீதங்கள் குறிப்பாக, கடன்வழங்கல் வட்டி வீதங்கள் குறைவடைந்த நிதியியல் செலவுகளின் காரணமாக வியாபாரங்களுக்கும் குடியிருப்பாளர்களுக்கும் தேவையான நிவாரணங்களை வழங்குதலை மேலும் இயல்புநிலைப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2023 யூன் மாதத்திலிருந்து வங்கித்தொழில் துறையினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் பதிவுசெய்யப்பட்ட விரிவாக்க உத்வேகமானது கடன்வழங்கல் வட்டி வீதங்களை இயல்புநிலைக்குக் கொண்டுவருதல் மற்றும் வியாபார மனோபாவங்களில் மேம்பாடு என்பவற்றினால் தொடர்ந்து ஆதரவளிக்கப்படுமெனவும் அதன்மூலம் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற மீளெழுச்சி துரிதப்படுத்தப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, அரசாங்கத்தின் நிதியிடல் தேவைப்பாடுகளைக் குறைக்கும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையை மீட்டெடுப்பதுடன் இணைந்து தீர்க்கமான இறைச் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தலின் காரணமாக பொதுத்துறைக்கான வங்கித்தொழில் துறையின் வெளிப்படுத்துகை முன்னைய ஆண்டுகளிலும் பார்க்க தாழ்ந்தளவில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், எதிர்வருகின்ற காலப்பகுதியில் பல்புடை அபிவிருத்திப் பங்காளர்கள் மற்றும் இருபுடைப் பங்காளர்களிடமிருந்தான வெளிநாட்டு நிதியளித்தலினை மீளாரம்பிப்பதானது படுகடன் நிதியிடலிற்கான உள்நாட்டு வளங்கள் மீதான அரசாங்கத்தின் விஞ்சியளவிலான தங்கியிருத்தலினைக் குறைக்குமென்பதுடன், இது பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளின் மூலமான பயன்பாட்டிற்கான

3

3

வளங்களைப் பயன்படுத்துவதனை இயலச்செய்யும். வங்கித்தொழில் துறையின் மூலமான அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளிற்கான கொடுகடன் மிதமான விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் பொறிமுறைகளின் நடைமுறைப்படுத்தலிற்கு மத்தியில் வங்கி நிதியிடல் மீதான அரசிற்குச் சொந்தமான முக்கியமான வியாபாரத் தொழில் முயற்சிகளின் தங்கியிருத்தலானது தாழ்ந்தளவில் காணப்படக்கூடும். இதேபோன்று, வங்கித்தொழில் முறைமையின் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் முன்னோக்கிச் செல்கையில் தொடர்ந்தும் தாழ்ந்தளவில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது ஏதேனும் மேலதிக நாணய நிதியிடலைத் தடைசெய்கின்றது. நாட்டிற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் மற்றும் அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கான உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்தான மத்திய வங்கியின் மூலமான வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவுகள் என்பவற்றுடன் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் எதிர்வருகின்ற காலப்பகுதியில் மேலும் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டுக் கொடுகடனில் எதிர்பார்க்கப்படுகின்ற விரிவாக்கம் மற்றும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் மேம்பாடு என்பவற்றுடன் விரிந்த பண நிரம்பலின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியானது உள்நாட்டுப் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற விரிவாக்கம் மற்றும் நடுத்தர கால பணவீக்க இலக்கு என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் நடுத்தர காலத்தில் 2024இல் ஏறத்தாழ 15.0 சதவீதத்திற்கு துரிதப்படுத்தப்படுமெனவும் ஆண்டு ரீதியாக ஏறத்தாழ 10.0 - 11.0 சதவீத மிதமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்யுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாடு தரவினால் உந்துதலளிக்கப்பட்டதாகவும் முன்னோக்கிய பார்வையிலமைந்ததாகவும் தொடர்ந்து காணப்படும்.** மத்திய வங்கியின் கொள்கைகள் மற்றும் உபாயங்கள் என்பவற்றிற்கான காலந்தவறாத சீராக்கங்கள் வரவிருக்கின்ற தரவுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும். வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் நோக்குடன் மத்திய வங்கி அதன் கொள்கைகள், எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப்பொருளாதார பெறுபேறுகள் மற்றும் சாத்தியமான நாணயக் கொள்கை நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் பின்னணியிலுள்ள நியாயபூர்வத்தன்மை என்பவற்றினைத் தொடர்ந்து தொடர்பூட்டுமென்பதுடன் இது பொதுமக்களின் எதிர்பார்க்கைகளை முகாமைசெய்வதில் கருவியாயிருந்து அதன்மூலம் ஒட்டுமொத்த விலை மற்றும் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை அடைவதற்குப் பங்களிக்கும். இச்செயன்முறையின் பகுதியொன்றாக, பொருளாதாரத்தின் தோற்றப்பாடு குறித்து பொதுமக்களுக்குச் சிறப்பாகத் தெரிவிக்கும் பொருட்டு நாணயக் கொள்கை அறிக்கையினை அரையாண்டிற்கு ஒரு முறை மத்திய வங்கி தொடர்ந்து வெளியிடுமென்பதுடன் அதன்மூலம் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்ற நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் வெளிப்படைத்தன்மை மேலும் மேம்படுத்தப்படும்.

**பொருளாதாரம் மற்றும் அதன் ஆர்வலர்கள் தொலைநோக்கிலமைந்த கொள்கைகளின் பலன்களைத் தொடர்ந்து பெற்றுக்கொள்வதனை நிச்சயப்படுத்துவதற்கு மத்திய வங்கிச் சுயாதீனத்தினைப் பாதுகாத்தல் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது.** சடுதியான பணவீக்க வீழ்ச்சி மற்றும் தாழ்ந்தளவிலான வட்டி வீதச் சூழலொன்றிற்குத் திரும்பல் என்பன குறுகிய காலப்பகுதியொன்றினுள் அடையப்பட்டமைக்கு மத்திய வங்கியின் சுயாதீனமான மற்றும் காலந்தவறாத நாணயக் கொள்கைத் தலையீடுகள் முக்கிய காரணமாயமைந்துள்ளன. ஆதலால், முன்னோக்கிச் செல்கையில், இத்தகைய மேம்பட்ட மத்திய வங்கிச் சுயாதீனம் பாதுகாக்கப்படுவதும் நாணயக் கொள்கையின் ஏதேனும் இறை ஆதிக்கம் தடுக்கப்படுவதும் பொருளாதாரம் மற்றும் அதன் ஆர்வலர்களின் சிறந்த நலனிலுள்ளது.

## 3.2.4 வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாடு

**2024 மற்றும் அதற்கப்பாலுமான காலப்பகுதிக்கான வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாடு வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பின் வெற்றிகரமான நிறைவு**

## சிறப்பு குறிப்பு 7

## இலங்கையின் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு வெளியீடுகளை மேலும் நிலைபெறத்தக்கதாக்குதல்

இலங்கை சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு மீதியில் மிகையொன்றை 2023இல் பதிவுசெய்தது. வணிகப்பொருள் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி, சுற்றுலாவிலிருந்தான வருவாய்களின் கணிசமான அதிகரிப்பு மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட திடமான வளர்ச்சி என்பன இம்மிகைக்கு முக்கியமாக வகைகூறலாம். பல ஆண்டுகளாக, வணிகப்பொருள் வர்த்தக கணக்கில் ஏற்பட்ட பாரியளவு பற்றாக்குறைகளால் பிரதானமாக உந்தப்பட்டு வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளை தொடர்ச்சியாக இலங்கை அனுபவித்துள்ளது. பணிகள் கணக்கிலுள்ள வர்த்தகமும் இரண்டாந்தர வருமானக் கணக்கும் மிகைகளை பதிவுசெய்தபோதும், அத்தகைய மிகைகள் நடைமுறைக் கணக்கு மீதான வணிகப்பொருள் வர்த்தகம் மற்றும் முதலாந்தர வணிகக் கணக்குப் பற்றாக்குறைகளின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு போதியளவற்றுக் காணப்பட்டன (வரைபடம் சி.கு.7.1)

கடன் செலுத்தத் தவறுகைக்கு இட்டுச்செல்லும் சென்மதி நிலுவை நெருக்கடி போன்ற கணிசமானதொரு பொருளாதார அதிர்ச்சிக்குப் பின்னர், செலாவணி வீதத்தை அடுத்தடுத்து சீராக்குதல் மற்றும் திருத்தக் கொள்கை நடவடிக்கைகள் என்பன உடனடியாக நடைமுறைக் கணக்கு மிகையைத் தோற்றுவித்ததென வரலாற்று ரீதியான உலகளாவிய அனுபவங்கள் காண்பிக்கின்றன. இப்பின்னணியில், பொருளாதார சிக்கல் காலப்பகுதியைத் தொடர்ந்து சில நாடுகள் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரை நடைமுறைக் கணக்கில் மிகையொன்றை நிலைபெற்றதாக்குவதற்கு இயலுமாகவிருந்ததென வரலாற்று ரீதியான அனுபவங்கள் காண்பிக்கின்றன. அதேநேரம், பற்றாக்குறைகளை பதிவுசெய்யும்விதத்தில் தமது வரலாற்றுப் போக்கிற்கு திரும்புகின்ற நாடுகளும் காணப்பட்டன (வரைபடம் சி.கு.7.2). பொதுவாக, நீண்ட காலத்தில் அத்தகைய மிகைகளை நிலைப்பெற்றதாக்குவதற்கு இயலுமாக காணப்பட்ட சில நாடுகள் செலாவணி வீதத்தை முன்னைய நெருக்கடி மட்டமொன்றுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த மட்டமொன்றில் நிலைபெற்றதாக்குவதற்கு இயலுமாகவிருந்ததுடன் ஏற்றுமதி போட்டித்தன்மைக்கு ஆதரவளித்த அதேவேளை தாழ்ந்த மட்டங்களில் பணவீக்கத்தை முகாமைசெய்தன. இத்தகைய மிகைகளை நிலைபெற்றதாக்குதலென்பது உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை படிப்படியாக துரிதப்படுத்துவதை நோக்காகக்கொண்டு கொள்கைகளால் ஆதரவளிக்கப்பட்டதுடன் இறை செயலாற்றத்தையும் முன்னேற்றியது (அதாவது, மேம்பட்ட முதலாந்தர மீதியும் குறைவான வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையும்). இப்பின்னணியில், பொருளாதார அதிர்வுகளுக்குப் பின்னர் நடைமுறைக் கணக்கு மிகைகளின் நிலைபெறத்தக்கதன்மையில் தாக்கம்செலுத்துகின்ற காரணிகளையும் தொடர்ச்சியான நடைமுறைக் கணக்கு மிகைகள் அல்லது பற்றாக்குறைகளை பேணுகின்ற பொருளாதாரத் தாக்கங்களையும் ஆராய்வது அவசியமாக காணப்படுகின்றது.

நடைமுறைக் கணக்கு மீதியானது நாட்டில் சேமிப்பு - முதலீட்டு இடைவெளியை பிரதிபலிக்கின்றது. ஓர் நடைமுறைக் கணக்கு மிகையானது ஓர் நேர்மறையான சேமிப்பு-முதலீட்டு இடைவெளியை பிரதிபலிப்பதுடன், ஓர் பற்றாக்குறை எதிர்மறையான சேமிப்பு-முதலீட்டு

வரைபடம் சி.கு. 7.1

நடைமுறைக் கணக்கின் உள்ளடக்கம் : 1970 - 2023




மூலம்: இலங்கை மத்திய வங்கி

இடைவெளியை பிரதிபலித்தது. இலங்கையில், நடைமுறைக் கணக்கு மிகையுடன் இணைந்து, தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளியானது 2023இல் நேர்மறையான பெறுமதியை பதிவுசெய்வதற்கு ஏற்றம்பெற்றது. குறைக்கப்பட்ட உள்நாட்டு முதலீட்டின் ஒன்றிணைந்த தாக்கமும் உலகின் ஏனைய பகுதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தேறிய நடைமுறை மாற்றல்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் காரணமாக அமைந்ததுடன் தேசிய சேமிப்புகளில் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்தது என்பது இம்மிகைக்கு காரணமாகும்.

**நாடுகளின் அனுபவங்கள்**

1997-1998 வரையான கிழக்காசிய நிதியியல் நெருக்கடியான காலப்பகுதியில், தாய்லாந்து, தென் கொரியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் மலேசியா போன்ற நாடுகளானது தங்களது உள்நாட்டு நாணயங்களின் கடுமையான பெறுமானத்தேய்வு உட்பட எண்ணற்ற பேரண்டப்பொருளாதார அதிர்ச்சிகளுக்கு வழிவகுத்த சென்மதி நிலுவை இடர்பாடுகளை அனுபவித்தன. இதற்கு பதிலிறுப்பாக, இத்தகைய நாடுகளானது இறைத் திரட்சி, நிதியியல் துறைக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை வலுப்படுத்தல், பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புகளைப் பின்பற்றுதல், ஏற்றுமதி ஊக்குவிப்பு கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் அத்துடன் நெகிழ்ச்சியான செலாவணி வீத கட்டமைப்பிற்கு மாறுவதன் மூலம் வெளிநாட்டு தாங்கிருப்புக்களை வலுப்படுத்தல் போன்ற கட்டமைப்புசார்ந்த சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தின (Wellisz 2022). இதன் விளைவாக, இத்தகைய பொருளாதாரங்கள் பாரியளவான நடைமுறைக் கணக்கு மிகைகளால் வகைப்படுத்தப்படும் 'V' வடிவ மீட்சிகளை பதிவுசெய்ய இயலுமாகவிருந்தன. இருப்பினும், நீண்ட காலத்திலிருந்து நடுத்தர காலம் வரை இத்தகைய

3

வரைபடம் சி.கு. 7.2 நடைமுறைக் கணக்கு மீதி (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக): தெரிவுசெய்யப்பட்ட நாடுகள்




மூலங்கள்: உலக வங்கி, பன்னாட்டு நாணய நிதியம்

மிகைகளை நிலைநிறுத்துவதற்கு சில நாடுகளுக்கு மட்டும் இயலுமாகவிருந்தது. ஏற்றுமதிகளினால் முன்னெடுக்கப்படும் வளர்ச்சி உபாயங்கள், ஏற்றுமதிச் சந்தையின் பல்வகைத்தன்மை, அத்துடன் இத்தகைய பொருளாதாரங்களால் நிறைவேற்றப்படும் முன்மதியுடைய பேரண்டப்பொருளாதார முகாமைத்துவம் என்பன இத்தகைய நாடுகளால் அடையப்படும் தொடர்ச்சியான நடைமுறைக் கணக்கு மிகைகளுக்கு காரணமாகவிருக்கக்கூடும். உதாரணமாக, தென் கொரியாவின் ஏற்றுமதியை நோக்காக் கொண்ட வளர்ச்சி கொள்கைகளும், ஏற்றுமதிச் சந்தைகளின் பன்முகப்படுத்தல் என்பவை நடைமுறைக் கணக்கை பேணுவதற்கு இயலுமாகவிருந்து நெருக்கடிக்குப் பின்னரான அதன் பொருளாதார மீட்சிக்குப் பங்களிப்புச் செய்தன. தாய்லாந்து அதன் நாணயத்தை மிதக்கவிடுவதற்கு அனுமதிப்பதன் மூலம் நிலையான செலாவணி வீத கட்டமைப்பிலிருந்து சுயாதீனமான மிதக்கும் செலாவணி வீத கட்டமைப்பொன்றிற்கு மாறி இக்கட்டமைப்பு வெளிநாட்டு நிலுவைகளில் சீராக்கமொன்றை வசதிப்படுத்தியது (Sharma 2003). நெருக்கடியின் பின்னணியில் நடைமுறைக் கணக்கு மிகையை எய்திய பின்னர், குறிப்பாக சுற்றுலாத்துறைச் சார்ந்த பணிகள் ஏற்றுமதிகளை ஊக்குவித்தல் உள்ளடங்கலான பொருத்தமான கொள்கை வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் தசாப்தங்களாக நடைமுறைக் கணக்கு மிகையொன்றைப் பேணுவதற்கு தாய்லாந்திற்கு இயலுமாகவிருந்தது.

இந்தோனேசியா கடந்த தசாப்தமாக நெருக்கடிக்குப் பின்னரான நடைமுறைக் கணக்கு மிகைகளை தொடர்வதற்கு இயலுமாகவிருந்தபோதும், பண்ட விலைகளில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியானது இந்தோனேசியாவின் பண்ட ஏற்றுமதிகளை எதிர்மறையாக பாதித்ததனால் 2012இலிருந்து நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளை நாடு பதிவுசெய்ய ஆரம்பித்தது (IMF 2016). உலகத்தில் வேறு இடங்களை கருத்திற் கொள்ளும்போது, சாம்பியா 2020இல் வெளிநாட்டுப் படுகடன் நெருக்கடியை எதிர்கொண்டு கடுமையான செலாவணி வீத பெறுமானத் தேய்வையும் சென்மதி நிலுவைச் சவால்களையும் எதிர்கொண்டது. நெருக்கடியின் பின்னர் தற்காலிக நடைமுறைக் கணக்கு மிகைகளை சாம்பியா பதிவுசெய்யக்கூடியதாக இருந்தபோதிலும், செப்பு ஏற்றுமதிகளில் ஏற்பட்ட கணிசமான சுருக்கம் மற்றும் இறக்குமதிகள் உயர் மட்டத்திற்கு திரும்புவதன் காரணமாக 2023இல் பற்றாக்குறையொன்றிற்கு திரும்புமென மதிப்பிடப்பட்டுள்ளது (IMF 2023). ஆர்ஜென்டினா, மெக்சிகோ மற்றும் எக்குவடார் போன்றவற்றிலும் அதையொத்தவற்றை அனுபவிக்கலாம். இங்கே, படுகடன் மீள்கட்டமைப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட படுகடன் நெருக்கடிக்குப் பின்னர் இத்தகைய நாடுகளின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகள் மிகைகளாக மாறியுள்ளன. எவ்வாறாயினும், இத்தகைய மிகைகள் தொடர்ந்திருக்கவில்லை. நெருக்கடிக்குப் பின்னரான நடைமுறைக் கணக்கு மிகைகள் தொடர்பில் கலப்பு அனுபவங்களை நாடு கொண்டுள்ளது என்பது சான்றுபடுத்தப்பட்டுள்ளது. கட்டமைப்பு சார்ந்த சீர்திருத்தங்கள், பல்வகைமை உபாயங்கள், முன்மதியுடைய பேரண்டப்பொருளாதார முகாமைத்துவம் அத்துடன் வெளிநாட்டு ஏய்துநிலைகளுக்கெதிராக தாக்குபிடிக்குந்தன்மை உள்ளடங்கலான பல காரணிகளில் தங்கியுள்ளது.

**நடைமுறைக் கணக்கு மிகைகள் எப்போதும் நன்மையானவையா?**

நடைமுறைக் கணக்கு மிகையானது ஒதுக்குகளைக் கட்டியெழுப்பும் நோக்கத்திற்காக சாதகமாகனது என கருதலாம். எவ்வாறாயினும், தொடர்ச்சியான மிகை உள்நாட்டு நாணயத்தின் கணிசமான பெறுமான உயர்விற்கு வழிவகுக்கலாம். இது, வர்த்தக போட்டித்தன்மையை பேணுவதை உறுதிப்படுத்துவதற்கு நாணயத்தின் காரணமற்ற பெறுமான உயர்வை தவிர்ப்பதற்கு உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தலையீடு செய்யவேண்டியதை அவசியப்படுத்தக்கூடும். எவ்வாறாயினும், நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு அத்தகைய நடத்தைகளைப் பின்பற்றுதலானது தமது வர்த்தக மிகைகளை ஊக்குவிப்பதற்கு ஏற்றுமதி மானியத்திற்கு ஒத்தான விளைவை ஏற்படுத்தும் நாணயங்களை குறைத்து மதிப்பீடுசெய்து பேணுகின்ற "நாணயத்தைக் கையாளும்" ஒத்தவடிவான நாடுகளாக பெயரிட வழிவகுக்கலாம். மேலும், மட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக கொள்கைகளின் காரணமாக குறைவான உள்நாட்டுக் கேள்வியின் விளைவாக அல்லது சுருக்கப்பட்ட இறக்குமதிகளின் விளைவாக நாணயக் கொள்கை மிகை அடையப்பட்டிருப்பின், இது, எதிர்கால பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கின்ற உள்நாட்டு நுகர்வையும் முதலீட்டுக்கு இடையூறாகலாம். பொருளாதார நெருக்கடியொன்றின் பின்விளைவில் நிலைபெறத்தக்க நடைமுறைக்கு கணக்கை அடையும் பொருட்டு, பொருத்தமான கொள்கை கலப்பொன்றை பின்பற்றுதல் அவசியமாகின்ற அதேவேளை, இடையூறான சீராக்கங்கள் எதுவுமிருக்காது என்று உறுதிப்படுத்தப்படவேண்டும். இப்பின்னணியில், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளை அடிப்படையாகக்கொண்டு செலாவணி வீதம் தீர்மானிக்கப்படும் நெகிழ்வான செலாவணி வீதக் கொள்கையைப் பின்பற்றுதல், தாழ்வானதும் உறுதியானதுமான பணவீக்கத்தை பேணுதல், ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் பல்வகைத்தன்மை மீது கவனத்தைச் செலுத்துதல் என்பன அவசியமாகும்.

**முடிவுரை**

நடைமுறைக் கணக்கு மீதியின் உகந்த மட்டம் அல்லது நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையொன்றை அல்லது மிகையொன்றை நாடு தொடர்ச்சியாக பேண வேண்டுமா என்பது தொடர்பில் கல்வித்துறை அல்லது கொள்கை வகுப்பாளர்களுக்கு மத்தியில் எந்தவொரு உடன்படிக்கை எதுவும் காணப்படவில்லை (Ghosh and Ramakrishnan 2006 Devadas and Loayza 2018; World Economic Forum 2023). நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையோ அல்லது மிகையோ மாத்திரம் பொருளாதாரமொன்றில் சாதகமாகவே அல்லது பாதகமாகவோ விளக்கப்படுத்தமுடியாது. வெளிநாட்டுப் பற்றாக்குறைகள் நாணய மற்றும் இறைக் கொள்கையில் உடனடி மாற்றமொன்றை அவசியப்படுத்தாதிருப்பின் அல்லது நாட்டின் பன்னாட்டு ஒதுக்கு மட்டம் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தும் ஓர் சென்மதி நிலுவை நெருக்கடியயை விளைவிக்காவிடின் அல்லது வெளிநாட்டுப் படுகடனைத் தீர்ப்பனவு செய்வதற்கான அதன் இயலாற்றல் மீது பாதகமான தாக்கங்களைக் கொண்டிருப்பின் நடைமுறைக் கணக்கு நிலைபெறத்தக்கதாக கருத்திற்கொள்ளப்படும். வரலாற்று ரீதியாக தொடர்ச்சியான பற்றாக்குறைகளைக் பதிவுசெய்த ஓர் பொருளாதாரத்திற்கு நடைமுறைக் கணக்கு மிகையொன்றை பதிவுசெய்தல் சாதகமிக்கவாறு கருதப்பட்டபோதிலும், தொடர்ச்சியான நடைமுறைக் கணக்கு மிகையானது கீழ்மதிப்பிடப்பட்ட நாணயத்தை பிரதிபலிக்கலாம் என்பதுடன் நாட்டின் உள்நாட்டு நாணயத்தின் பெறுமானத்தேய்வை தொடர்ச்சியாக அவசியப்படுத்தி வர்த்தக போட்டித்தன்மையொன்றின் இழப்பிற்கு வழிவகுக்கலாம். முடிவுறுத்தும் விதத்தில், உறுதியான செலாவணி வீதம், தாழ்வான பணவீக்க மட்டங்கள் மற்றும் படிப்படியான பொருளாதார வளர்ச்சிப் பாதை என்பவற்றைத் தோற்றுவிக்கக்கூடிய ஏற்றுமதி ஊக்குவிப்பும் பல்முகத்தன்மையும் கொண்ட பொருத்தமான கொள்கை சேர்மானத்தை இலங்கை பின்பற்றிப் பேணினால் நாடானது நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரை நிலைபெறத்தக்க நடைமுறைக் கணக்கு நிலுவையைப் பேணுவதற்கு இயலுமாகும்.

**உசாத்துணைகள்**


1. Devadas S and Loayza N (2018) *When is a Current Account Deficit Bad?*, World Bank Research and Policy Briefs No. 130415, World Bank.
2. Ghosh A and Ramakrishnan U (2006) *Do Current Account Deficits Matter?*, Finance and Development, 43:4, International Monetary Fund (IMF).
3. IMF (2023) *Zambia: Second Review Under the Arrangement Under the Extended Credit Facility - Staff Report*, IMF.
4. IMF (2016) *2015 Article IV Consultation - Press Release; Staff Report; and Statement by the Executive Director for Indonesia*, IMF Country Report No. 16/81, IMF.
5. Sharma S (2003) *The Asian Financial Crisis: Crisis, Reform and Recovery*, Manchester University Press.
6. Wellisz C (2022) *From the Asian Financial Crisis to Today*, Finance and Development, IMF.
7. World Economic Forum (2023) *What is a country's current account balance, and is a deficit good or bad for its economy?*, World Economic Forum.


**மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட மறுசீரமைப்புப் பாதையின் விடாமுயற்சி என்பவற்றில் தங்கியுள்ளது.** நிலவுகின்ற நிச்சயமற்றதன்மைகளை நீக்குவதற்கும் நாட்டின் மீதான உலகளாவிய பங்காளர்களின் நம்பிக்கையை நீடித்துநிலைத்திருக்கும் தன்மையில் மேம்படுத்துவதற்கும் இவை மிகவும் முக்கியமானவையாகக் காணப்படும். 2024இல் ஏற்றுமதி வருவாய்களில் எதிர்பார்க்கப்படுகின்ற மிதமான வளர்ச்சிக்கு மத்தியில், தளர்வடைகின்ற நாணய நிலைமைகளின் காரணமாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்வு, மேம்பட்ட பொருளாதார நடவடிக்கை மற்றும் பொதுமக்கள் மற்றும் வியாபாரங்களின் அதிகரித்தளவிலான செலவிடல் இயலளவு என்பவற்றினைப் பிரதிபலிக்கும் வகையில் இறக்குமதிக் கேள்வியில் ஏற்படும் சாத்தியமான அதிகரிப்பின் காரணமாக வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது 2024இல் விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இறக்குமதிச் செலவினத்தில் தொடர்ச்சியான வளர்ச்சியொன்று காணப்பட்டபோதிலும், ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் எதிர்பார்க்கப்படுகின்ற மீளெழுச்சி மற்றும் விரிவாக்கம் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு வர்த்தகப் பற்றாக்குறை நடுத்தர காலத்தில் நிர்வகிக்கக்கூடிய மட்டங்களை எட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்களில் எறிவுசெய்யப்பட்ட மேல்நோக்கிய வளர்ச்சி மற்றும் ஏனைய பணிகள் ஏற்றுமதிகளின் போட்டித்தன்மையில் எதிர்பார்க்கப்படுகின்ற மேம்பாடு என்பவற்றுடன் 2024 மற்றும் அதற்கப்பாலுமான காலப்பகுதியில் பணிகள் கணக்கு மிகை அதிகரிக்கக்கூடும். உலகளாவிய பொருளாதாரத்தின் படிப்படியான இயல்புநிலைத் திரும்புகை மற்றும் இத்துறையின் முழுமையான

உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த தன்மையினைப் பெற்றுக்கொள்வதற்கான தொடர்ச்சியான உபாயத் தூண்டுதல் என்பவற்றுடன் விரைவாக வளர்ச்சியடைந்து வருகின்ற சுற்றுலாக் கைத்தொழில் துறையிலிருந்து இலங்கை நடுத்தர காலப்பகுதியில் பயனடையக்கூடும். இருப்பினும், சுற்றுலாத்துறையில் எதிர்பார்க்கப்படும் எழுச்சியானது பன்னாட்டு தரநிர்ணயங்கள் மற்றும் நிலைபேறான சுற்றுலா நடவடிக்கைகளுடன் ஒத்திணைந்திருக்க வேண்டிய அதே வேளையில் மதிப்பிடப்பட்ட அரசிறையானது நாட்டிற்கு நன்மைகளை அறுவடை செய்யும் வகையில் முழுமையாக உணரப்படுவதை உறுதிசெய்தல் அவசியம். போக்குவரத்துப் பணிசார் நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற மீளெழுச்சி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்கின்ற பணிகள் துணைத்துறையில் உயர் வளர்ச்சி என்பவற்றுடன் பணிகள் கணக்கு மிகையும் நடுத்தர காலத்தில் வலுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையின் நிறைவு மற்றும் அதன் பின்னரான வட்டிக் கொடுப்பனவுகளின் குறைப்பு என்பவற்றின் பின்னர் முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை 2024இல் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்ச்சியான வட்டி மற்றும் பங்கிலாபக் கொடுப்பனவுகளின் காரணமாக முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறையானது அதன்பின்னர் நடுத்தர காலத்தில் விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தொழிலாளர் பணவனுப்பல்கள் 2024 மற்றும் அதற்கப்பாலுமான காலப்பகுதியில் உயர்வடைந்த மட்டங்களில் தொடர்ந்தும் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக, 2023இல் மிகையொன்றினைப் பதிவுசெய்த நடைமுறைக் கணக்கானது 2024இலும் தாழ்ந்தளவிலானதொரு மட்டத்திலேனும் மிகையொன்றினைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர காலப்பகுதியில், படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையின் மீட்டெடுப்பு மற்றும் வர்த்தகப்படுத்தத்தக்க துறைக்கு ஆதரவான கொள்கைகளின் எதிர்பார்க்கப்படுகின்ற பின்பற்றுகை என்பவற்றினைத் தொடர்ந்து நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது நீடித்துநிலைத்திருக்கும் மட்டங்களில் பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எந்தவொரு பெரிய வர்த்தகம் அல்லது நடைமுறைக் கணக்கு ஏற்றத்தாழ்வுகளின் பின்னணியில் செலாவணி வீதம் ஒரு நிலைப்படுத்தியாக செயல்படும்.

**பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறை என்பவற்றின் வெற்றிகரமான தொடர்ச்சியின் காரணமாக நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் நேர்மறையான முதலீட்டாளர் மனோபாவங்களினால் ஆதரவளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** மேலும், இருபுடை நிதியிடல் நிகழ்ச்சித்திட்டங்களின் எதிர்பார்க்கப்படுகின்ற மீளாரம்பத்துடன் இணைந்து பன்னாட்டு நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி போன்ற பல்புடை முகவராண்மைகளிடமிருந்தான வெளிநாட்டு நிதியிடல் உதவியானது நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்களை மேம்படுத்தும் வேளையில் 2024 மற்றும் அதற்கப்பாலுமான காலப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை வலுப்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், 2024இற்கு நிதியிடலிற்கான உறுதியான அர்ப்பணிப்புக்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் எஞ்சிய காலப்பகுதிக்கு நிதியிடலிற்கான வலுவான வாய்ப்புக்கள் என்பவற்றுடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமானது முழுமையாக நிதியளிக்கப்பட்டதொன்றாகக் காணப்படுகின்றது. 2027 வரையான காலப்பகுதியில் நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் இடைவெளிகள் படுகடன் மறுசீரமைப்பு மற்றும் புதிய நிதியிடல் என்பவற்றினூடாகப் பூர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**மேலும், குறிப்பாக கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் ஆகியவற்றிற்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் போன்ற நிதியியல் கணக்கிற்கான அரசிற்கான படுகடனல்லாத வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் நடுத்தர காலத்தில் வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** முதலீட்டு ஊக்குவிப்புக்காக நிறுவன ரீதியிலான ஏற்பாட்டிற்கு முன்மொழியப்பட்டுள்ள மேம்பாடுகள் மற்றும் வியாபாரம் செய்தல் நிலைமைகள் மீதான நீண்டகால பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகள் என்பன முதலீட்டாளர்களுக்கு மத்தியில் இலங்கை மீதான எதிர்மறையான உணர்வினைத் தணிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்கூறிய அபிவிருத்திகளின்

காரணமாக அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஆகியவற்றில் மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு முதலீடுகள் நடுத்தர காலப்பகுதியில் வலுவடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. சந்தையினால் நிர்ணயிக்கப்பட்ட மற்றும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதமொன்றினைப் பேணுவதற்கும் வெளிநாட்டு அதிர்வுகளிற்கு எதிரான தாங்கியிருப்புக்களாக தொழிற்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்தான தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகளினூடாக ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கும் மத்திய வங்கி தொடர்ந்தும் திடசங்கற்பம் பூண்டுள்ளது. மேலும், மத்திய வங்கியின் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு தலையீடும் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் செலாவணி வீதத்தின் ஏதேனும் விஞ்சியளவிலான குறுங்கால தளம்பலினைக் கட்டுப்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்கு மாத்திரமே வரையறுக்கப்படும்.

### 3.2.5 நிதியியல் துறைத் தோற்றப்பாடு

**கடந்த சில ஆண்டுகளாகச் சவால்மிக்க பேரண்ட நிதியியல் நிலைமைகளினூடாக பயணித்த நிதியியல் துறை, 2023இல் மீட்சிக்கான மற்றும் உறுதித்தன்மைக்கான அறிகுறிகளைக் காட்டியதுடன் எதிர்காலத்தில் அத்தகைய பாதிக்கப்படக்கூடிய தன்மைகள் மறைந்து, தாக்குப்பிடிக்கும் தன்மை மேம்பாடடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.** நிதியியல் துறையில் காணப்பட்ட பலயீனமான மற்றும் நிச்சயமற்றதுமான தன்மைகளின் வெளிப்படுத்தல், பொருளாதார, நிதியியல் துறையினைப் பேணி வலுப்படுத்தி மீளெழுச்சியுறச் செய்வதற்கு பரந்த வீச்சிலான கொள்கை வழிமுறைகளையும் அமைப்பியல் சீர்திருத்தங்களையும் மேற்கொள்வதற்கு மத்திய வங்கியைத் தேவைப்படுத்தின. குறைவடைந்த வட்டி வீத அசைவுகளினூடாகப் பிரதிபலிக்கப்பட்டவாறு, தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகள், வட்டி வீதங்களில் காணப்பட்ட நிச்சயமற்ற நிலைமைகளின் மறைவு என்பனவற்றின் காரணமாக தனியார் துறைக்கான கொடுகடன் 2023இல் பதிவுசெய்யப்பட்ட சுருக்கத்திலிருந்து 2024இல் மீண்டும் உத்வேகம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு சமயத்தில் தலைகீழாக இருந்த அரச பிணையங்கள் மீதான விளைவு வளையிகள் வழமைக்குத் திரும்பியமை, திருத்தம் செய்யப்பட்டு வருகின்ற இடர்நேர்வற்ற வீதங்கள் கடன்வழங்கல் வீதங்களிலும் பார்க்க உயர்வாக இருந்த முரண்பாடுகள் என்பவற்றால் வங்கிகள் சொத்து ஒதுக்குகளை மீளச்சமநிலைப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டிற்கான பிணையங்களுடன் அரச கடன்களைப் பரிமாற்றிக் கொள்ளக்கூடிய பயன்களை விளைவிக்கும் அரசின் வெளிநாட்டுச் செலாவணிகளில் குறித்துரைக்கப்பட்ட கடன்களில் செய்யப்படக்கூடிய சாத்தியமான மறுசீரமைப்பின் காரணமாக உடனடியாக எதிர்பார்க்கப்படுகின்ற வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு, கடன் ஏட்டின் சுருக்கம் காரணமாக நிதியியல் இடையேற்பாட்டில் ஒரே தடவையிலான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய அதேவேளையில் கடன்வழங்கலில் அரசை நோக்கி காணப்படும் சரிவு பகுதியளவில் சரிசெய்யப்படும். அரசிற்கான வங்கி இணைப்புக்களின் முக்கிய கூறுகளைக் கட்டுப்படுத்துவதற்காக, தார்மீக ரீதியிலான ஒழுங்குமுறைக் கடப்பாடுகள் மற்றும் பொருத்தமான ஒழுங்குவிதிகளுக்கூடாக வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக புத்துயிர் பெற்று வருவதனை பிரதிபலிக்கின்ற விதத்தில் சலிப்புக்குள்ளாகிய கடன்பாட்டாளர்களின் இயலாற்றல் உறுதியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றமை மற்றும் சந்தை வட்டி வீதங்கள் சரிசெய்யப்படுகின்றமை என்பனவற்றின் காரணமாக தனியார் துறைக்கான கொடுகடன் உத்வேகம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் வளர்ச்சி மற்றும் வர்த்தகம் தொடர்பான கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்வடைந்து வருவது மற்றும் மீள்கொடுப்பனவு இயலாற்றல் மேம்பட்டுவரும் தன்மை என்பன வங்கித்தொழில் துறையின் கொடுகடன் தரத்தினை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டிற்கான தேறிய வெளிநாட்டுச் செலாவணி கொடுகடன் மற்றும் திரவமற்ற வெளிநாட்டுச் செலாவணியின் நாட்டிற்கான சாதனங்கள் என்பன திரவத்தன்மை கொண்ட நாட்டிற்கான சாதனங்களுடன் பரிமாற்றிக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுவதனால், எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டுப் படுகடன்

மறுசீரமைப்புடன் வங்கிகளின் திரவத்தன்மை மட்டம் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்கூட்டியே மேற்கொள்ளப்படக்கூடிய கொள்கைத் தலையீடுகள் மற்றும் நடத்தை சார்ந்த பதிலிறுப்புக்களினூடாக பேரண்டப்பொருளாதார - நிதியியல் தாக்கத்தினைக் குறைப்பதன் மூலம் சுமூகமான வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பினை எய்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. வங்கித்தொழில் துறை அரச படுகடன் மறுசீரமைப்பிற்கு சுமூகமாக தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை வலுப்படுத்தும் நோக்குடன் அதன் உயர் அடுக்கிலுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக அனைத்தையுமுள்ளடக்கிய மீள்மூலதனமயப்படுத்தல் திட்டங்களை வடிவமைத்து வருகின்ற வேளையில், பொருளாதாரத்திற்குள்ளே எதிர்மறையான கசிவுத்தாக்கங்கள் ஊடுகடத்தப்படுவது தவிர்க்கப்படுகின்றது. பாரம்பரியமான கடன் சாதனங்களுக்கான வளர்ச்சி வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதன் காரணமாக வங்கித்தொழில் துறை தொடர்ச்சியாக பன்முகப்படுத்தப்பட்டு வருவதனைப் போன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறைக்கான கொடுகடன் வளர்ச்சியையும் உத்வேகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. பேரண்ட - நிதியியல் நிலைமைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற மீட்சி மற்றும் கொடுகடனின் மீளெழுச்சி என்பனவற்றின் காரணமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் துறையில் காணப்படும் கொடுகடன் இடர்நேர்வுகள் தளர்வுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பரந்தளவிலான அமைப்பியல், சட்டம் மற்றும் கொள்கை மட்டத்திலான சீர்திருத்தங்கள், புத்தாக்கங்கள், நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காகத் தொடர்ந்தும் திரட்டப்படும்.** திரட்சிப்படுத்தப்படுகின்ற முயற்சிகள் 2024இலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றமையானது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் வினைத்திறனையும் அதிகரிக்கும். நிகழ்நிலை வங்கித்தொழில் மற்றும் செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுச் செயலிகளினால் வசதியளிக்கப்படுகின்ற உடனடிக் கொடுப்பனவு முறைமையினூடாக கொடுக்கல்வாங்கல்கள் அதிகரித்தமையின் காரணமாக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் தோற்றப்பாட்டில் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களில் உத்வேகம் மிக்க வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. வாடிக்கையாளர்களினாலும் வணிகர்களினாலும் டிஜிட்டல் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதனை அதிகரிப்பதற்காக டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல் முறைமைகள் தொடர்பில் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. நாட்டில் பாதுகாப்பான, வினைத்திறன்மிக்க மற்றும் நம்பகமான டிஜிட்டல் கொடுப்பனவுப் பொறிமுறைக்கு ஆதரவளிப்பதற்காக மத்திய வங்கி நிதியியல் நிறுவனங்களுடன் நெருக்கமாக ஒத்துழைத்து வருகின்றது. மத்திய வங்கி, நாட்டின் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபை என்ற ரீதியில், நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பேணும் நோக்குடனும் மோசமான பொருளாதார மற்றும் நிதியியல் நிலைமைகளிலும் கூட சுமுகமான நிதியியல் பணிகளின் வழங்கலுக்கு ஆதரவளிக்கும் விதத்திலும் முறைமையியல் சார்ந்த தளம்பல் தன்மைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும் போது பொருத்தமான விதத்தில் அதன் பேரண்ட முன்மதியுடைய கருவிகளை நடைமுறைப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக தூண்டுதல் மிக்கதும் சரியான நேரத்தில் நடைமுறைப்படுத்தக்கூடியதுமான சிறந்த வரிசைப்படுத்தப்பட்ட - நிலையான கொள்கைகள் பயன்படுத்தப்படும்.** பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளில் எதிர்பார்க்கப்படுகின்ற தொடர்ச்சியான முன்னேற்றங்களுடன் கூடிய கொள்கைச் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் நிதியியல் துறையில் காணப்படக்கூடிய குறைபாடுகளையும் நலிவுற்ற தன்மைகளையும் கட்டுப்படுத்தும் எனவும் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் நம்பகத்தன்மையினையும் மேலும் வலுப்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் கூட, கொள்கைச் சீர்திருத்தப் பாதையிலிருந்து ஏதேனும் விதத்தில் விலகிச் செல்வது தீங்குகளைக் கொண்டுவந்து நிதியியல் முறைமைக்கும் பொருளாதாரத்திற்கும் சீர்செய்ய முடியாத விளைவுகளை ஏற்படுத்தி விடுமென்பதனால், அரசியல் நிச்சயமற்ற தன்மைகள், சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தின் மீது பாரிய அழுத்தத்தினைக் கொண்டிருக்கும்.

3

### 3.2.6 இறைத் துறைத் தோற்றபாடு

**பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் இறைத் திரட்சிப் பாதையினையும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை மீட்டெடுப்பதற்கான அதன் முயற்சிகளையும் அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுக்குமென எதிர்பார்க்கப்படுவதானது முன்மதியுடைய இறை முகாமைத்துவம் மற்றும் நீண்ட காலமாகத் தேவைப்பட்ட கட்டமைப்புசார் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல் என்பவற்றிற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டுகின்றது.** 2024ஆம் ஆண்டின் இறை முகாமைத்துவ அறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட திருத்தப்பட்ட நடுத்தர கால பேரண்ட இறைக் கட்டமைப்பிற்கமைய, 2027 ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15 சதவீதத்தை விஞ்சுகின்ற உயர்வான அரசிறை இலக்கொன்றினை அடைவதனை அரசாங்கம் நோக்காகக் கொண்டுள்ளது. அதேபோன்று, 2026இலிருந்து ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 சதவீதத்திற்குக் கீழாக கட்டுப்படுத்துகின்ற வேளையில் 2025 மற்றும் அதற்கப்பாலுமான காலப்பகுதியளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 2.3 சதவீதம் கொண்ட முதலாந்தர மிகையொன்றினை அடைவதற்குக் கடினமாக முயற்சிப்பதனை நோக்கியதாக முயற்சிகள் நெறிப்படுத்தப்படுகின்றன. இந்நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில், அரசாங்கம் 2022இன் நடுப்பகுதியிலிருந்து வலுவான இறை மேம்பாட்டு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியதுடன் இவ்விறைக் கொள்கைச் சீர்திருத்தங்களின் தாக்கம் 2023 தொடக்கம் அரசாங்கத்தின் நிதியிடல்களில் பிரதிபலித்து வருவதுடன், இது வரி அரசிறைச் சேகரிப்பில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்துள்ளது. மேலும், சொத்து வரி மற்றும் கொடை மற்றும் வழியுரிமை வரி என்பன 2025இல் அறிமுகப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் திட்டமிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்தப்படுமாயின் வரிச் சேகரிப்பை மேலும் அதிகரிக்கும். அரசிறை நிர்வாக வழிமுறைகளின் வலுப்படுத்தலினூடாக எதிர்வருகின்ற காலப்பகுதியில் அரசிறை மேம்படுத்தப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தனிநபர் வருமான வரிகளுக்காக தனிப்பட்டவர்களின் கட்டாயப் பதிவு, பாரியளவிலான வரி செலுத்துவோர் மற்றும் உயர்ந்தளவிலான சொத்து வரி செலுத்துவோர் அலகுகளை வலுப்படுத்தல், அரசிறை நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமையினை மேம்படுத்தல் மற்றும் எளிமையாக்கப்பட்ட பெறுமதிசேர் வரி முறைமையினை நீக்குதல் என்பன அரசிறைச் சேகரிப்பு முகவராண்மைகளின் அரசிறை நிர்வாக முயற்சிகளை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. வரி நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும் வரி ஏய்ப்பைக் குறைப்பதற்கும் நிதியியல் நிறுவனங்கள், கொழும்பு பங்கு பரிவர்த்தனை, பதிவாளர் நாயகம் திணைக்களம், கம்பனிகள் பதிவாளர் நாயகம் மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் என்பவை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடனான தகவல் பகிர்வை கட்டாயமானதாக்கும் அரசாங்கத்தின் சமீபத்திய முயற்சியானது அரச நிறுவனங்கள் மற்றும் அரசிறை அதிகாரசபையுடன் தொடர்புகளை உருவாக்குவதற்கான வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். இருப்பினும், எதிர்வரவுள்ள தேர்தல்களுக்கு முன்னரோ அல்லது அதற்குப் பின்னரோ கடின உழைப்பில் ஈட்டப்பட்ட இறைத்துறை அடைவுகளின் ஏதேனும் மீள்திரும்பல் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்தினைத் தடம்புரளச் செய்து, பொருளாதாரத்தை நிலைகுலையச்செய்யுமென்பதுடன் அதன்மூலம் 2022இல் காணப்பட்டதிலும் பார்க்க ஆழமான சமூக-பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி தூண்டப்படும். மேலும், நடுத்தர காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 20 சதவீதத்தினுள் செலவினத்தை முகாமைத்துவம் செய்வதனை அரசாங்கம் நோக்காகக் கொண்டுள்ளது. அரச செலவினத்தை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற அதேவேளையில், நடுத்தர கால பேரண்ட இறைக் கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு சுகாதாரம், கல்வி, பொதுப் போக்குவரத்து மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற பகுதிகளுக்கு முன்னுரிமையளிக்கும் வகையில் பொருத்தமான ஒதுக்கீடுகளை மேற்கொள்ளுதல் என்பன சீரானதும் விரைவானதுமான பொருளாதார மீட்சிக்கு இன்றியமையாதனவாயுள்ளன. பொது நிதியியல் முகாமைத்துவம் மற்றும் பொது கொள்வனவு என்பவற்றுடன் தொடர்புடைய புதிய சட்டவாக்கங்களை நடைமுறைப்படுத்துவதானது இறை விதிமுறைகள், மேம்பட்ட வெளிப்படைத்தன்மை, கண்காணிப்புப் பொறிமுறைகள் மற்றும் அரசாங்க கொள்வனவு மீதான கடுமையான ஒழுங்குகள்

ஆகியவற்றின் கட்டமைப்பொன்றினை நிறுவுவதனூடாக இறை ஒழுக்கவியலை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், செலவைப் பிரதிபலிக்கக்கூடிய முறையொன்றில் அபிவிருத்தி முன்னுரிமைகளுடன் மூலதனச் செலவினத்தினை ஒத்திசைவாக்கும் பொருட்டு மூலதனச் செயற்றிட்டங்களுடன் தொடர்புடைய கண்டிப்பான செயற்றிட்ட மதிப்பீடு மற்றும் முன்னுரிமைச் செயன்முறையொன்றினை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. அதேநேரத்தில், புதிய படுகடன் முகாமைத்துவச் சட்டமொன்றின் நடைமுறைப்படுத்தலுடன் பொதுப் படுகடன் முகாமைத்துவமானது தனியானதொரு பொதுப் படுகடன் முகாமைத்துவக் காரியாலயத்திற்கு மாற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**அதேவேளை, படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையானது பன்னாட்டு நாணய நிதியத்தின் நாட்டிற்கான இடர்நேர்வு மற்றும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் கட்டமைப்பின் கீழ் நிறுவப்பட்ட கணியம்சார் இலக்குகளினால் வழிகாட்டப்பட்டு தொடர்ந்து முன்னேற்றமடைந்து வருகின்ற வேளையில் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிச் சீர்திருத்தங்களின் நீண்டகால பிரச்சனைகளைச் சமாளிப்பதற்கும் ஏனைய ஊழல் மற்றும் வெளிப்படைத்தன்மை பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை நிவர்த்தி செய்வதற்குமான ஒரே நேரத்திலான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.** இவ்வகையில், 2023இல் வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு முயற்சிகளை முழுமைப்படுத்துவதற்கும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கின்ற தன்மையிலான இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கும் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகைத் தொழிற்பாட்டின் முக்கிய அம்சங்களை அரசாங்கம் நிறைவு செய்தது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்கம் உறுதியளித்துள்ள வெளிநாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலின் மறுசீரமைப்பின் நிறைவு மற்றும் இறைத் திரட்சிப் பாதையின் பின்பற்றுகை என்பன படுகடன் உத்வேகத்தினை நடுத்தர காலத்தில் நீடித்துநிலைத்திருக்கின்ற மட்டமொன்றிற்குக் கீழாகக் கொண்டுவருமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் பொறிமுறைகளின் நடைமுறைப்படுத்தலானது அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகள் கொண்டிருந்த நீண்டகால நிதியியல் அழுத்தத்தைக் குறைப்பதற்குத் துணைபுரிந்து, அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளின் நட்டங்களை அரச படுகடனிற்கு மாற்றுவதற்கான சாத்தியப்பாட்டினை வரையறுத்தது. உபாயமற்ற அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் முதலீடுகளை திரும்பப் பெறுதல் உள்ளடங்கலாக தற்போது முன்னெடுக்கப்படுகின்ற அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிச் சீர்திருத்தங்களுடன் இணைந்து இத்தகைய கொள்கைகளின் தொடர்ச்சி வரவு செலவுத்திட்டத்தின் மீது அவை தோற்றுவிக்கின்ற சுமையைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், கொள்வனவு ஒப்பந்தங்கள் பற்றிய விவரங்களின் வெளியீடு, குறித்த சில வரி விலக்களிப்புத் தகவல்களைப் பொதுத் தளத்தில் வெளிப்படுத்தல் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பிலான குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு ஆணையாளர்களை நியமித்தல் ஆகியவை வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்தல், பொறுப்புக்கூறும்தன்மையினை அதிகரித்தல் மற்றும் இலஞ்சம்சார் கரிசனைகளைத் தீர்த்தல் என்பன தொடர்பிலான பாராட்டத்தக்க படிமுறைகளாகக் காணப்படுகின்றன. பன்னாட்டு நாணய நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு அண்மையில் நிறைவடைந்த ஆளுகையினைக் கண்டறிகின்ற மதிப்பீட்டில் உள்ள பரிந்துரைகளிலிருந்து பெறப்பட்ட அரசாங்க நடவடிக்கைத் திட்டத்தின் வெளியீடு வெளிப்படைத்தன்மையினை வழங்குவதுடன் இப்பரிந்துரைகளின் முன்னேற்றத்தை விவரிக்கின்றது. இப்பரிந்துரைகளின் வெற்றிகரமான நிறைவானது சிறந்த ஆளுகையில் பொது மற்றும் சிவில் துறையின் நம்பிக்கையினை வலுப்படுத்தி, தோல்வியடைந்த அரசொன்றாக இலங்கை மாறுவதைத் தடுப்பதற்கு அத்தியாவசியமானதாயமையும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆர்வலர்களினால் ஆதரவளிக்கப்பட்டு, அரசாங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஒருங்கிணைந்த முயற்சிகள் இறைத்துறையில் உள்ள சவால்களைத் தீர்க்குமெனவும் பரந்த அடிப்படையிலான பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துமெனவும் அதன்மூலம் நடுத்தர காலத்தில் இறைத்துறை நீடித்துநிலைத்திருக்கும் தன்மை மீட்டெடுக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

3

# புள்ளிவிபரப் பின்னிணைப்பு[1]

அட்டவணை இல.


| | | |
|---|---|---|
| 1. | உண்மைத் துறை | 1 - 5 |
| 2. | வெளிநாட்டுத் துறை | 6 - 14 |
| 3. | இறைத் துறை | 15 - 16 |
| 4. | நாணய மற்றும் நிதியியல் துறை | 17 -19 |


[1] புள்ளிவிபரப் பின்னிணைப்பின் இணையதள வடிவம் “எக்சல்” தரவுத்தள வடிவத்தில் கிடைப்பனவாக இருப்பதுடன் மேலதிக தரவுகளை உள்ளடக்குகின்றது.

**வழி** - பிரதான பட்டியல் → வெளியீடு → பொருளாதார மற்றும் நிதியியல் அறிக்கைகள் → ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு → ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2023 → புள்ளிவிபரப் பின்னிணைப்பு

## நிறுத்தலளவையும் முகத்தலளவையும்

### மாற்றல் காரணிகள்

### பிரித்தானிய முறையிலிருந்து மெற்றிக் அலகுகட்கு

| | | | |
|---|---|---|---|
| 1 ஏக்கர் | | 0.405 | எக்டேயர்கள் (எ.டே) |
| 1 இறாத்தல் (இறா) | = | 0.454 | கிலோ கிறாம்கள் (கி.கி) |
| 1 லோங் தொன் (2,240இறா.) | = | 1.016 | மெற்றிக் தொன்கள் (மெ.தொன்) |
| 1 அந்தர் நிறை | = | 50.802 | கி.கி |
| 1 மைல் | = | 1.609 | கிலோ மீற்றர்கள் (கி.மீ) |
| 1 லோங் தொன் மைல் | = | 1.635 | மெ.தொன் கி.மீ |
| 1 இறா/ஏக்கரிற்கு | = | 1.121 | கி.கி/எக்டேயர் |
| 1 அந்தர்/ஏக்கரிற்கு | = | 125.535 | கி.கி/எக்டேயர் |
| 1 பைந்து | = | 0.568 | இலிற்றர்கள் |
| 1 இம்பீரியல் கலன் | = | 4.55 | இலிற்றர்கள் |

### மெற்றிக் முறையிலிருந்து பிரித்தானிய அலகுகட்கு

| | | | |
|---|---|---|---|
| 1 எக்டேயர் | = | 2.471 | ஏக்கர்கள் |
| 1 கிலோ கிறாம் | = | 2.205 | இறாத்தல்கள் |
| 1 மெற்றிக் தொன் (1,000 கி.கி) | = | 0.984 | லோங் தொன் |
| 1 மீற்றர் | = | 3.281 | அடி |
| 1 கிலோ மீற்றர் | = | 0.621 | மைல் |
| 1 மெற்றிக் தொன் கிலோ மீற்றர் | = | 0.612 | லோங் தொன் மைல் |
| 1 இலிற்றர் | = | 1.76 | பைந்துகள் = 0.220 இம்பீரியல் கலன்கள் |
| 1 கி.கி/எக்டேயரிற்கு | = | 0.892 | இறா./ஏக்கர் |

### நெல்/அரிசி மாற்றியமைத்தல்

| | | | |
|---|---|---|---|
| 1 புசல் நெல் (46இறா) | = | 20.87 | கி.கி |
| 1 மெற்றிக் தொன் நெல் | = | 47.92 | புசல்கள் நெல் |
| | = | 0.7 | மெ.தொன். அரிசி |
| 1 மெற்றிக் தொன் அரிசி | = | 68.46 | புசல்கள் நெல் |
| | = | 1.43 | மெ.தொன் நெல் |
| 1 புசல் நெல்/ஏக்கர் | = | 51.55 | கி.கி. நெல்/எக்டேயர் |

### தெங்கு மற்றும் தெங்கு உற்பத்தி மாற்றல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 மெ.தொ. தேங்காய் துருவல் | = | 8,960 | காய்கள் |
| 1 மெ.தொ. தேங்காய் எண்ணெய் | = | 9,250 | காய்கள் |
| 1 மெ.தொ. உலர்த்திய தேங்காய் | = | 5,500 | காய்கள் |
| 1 மெ.தொ. தேங்காய் பால் | = | 4,000 | காய்கள் |

## மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)

ரூ. மில்லியன்

| பொருளாதார நடவடிக்கை | நடைமுறை சந்தை விலைகள் | | | நிலையான (2015) விலைகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2021 (ஆ) | 2022 (ஆ)(இ) | 2023 (இ) | 2021 (ஆ) | 2022 (ஆ)(இ) | 2023 (இ) |
| உற்பத்தி அணுகுமுறை | | | | | | |
| தானியப் பயிர்ச்செய்கை | 1,092,133 | 1,367,845 | 1,423,553 | 644,773 | 619,434 | 641,080 |
| விலங்கு உற்பத்தி | 169,970 | 258,931 | 386,121 | 94,039 | 83,322 | 84,812 |
| காடாக்கலும் குத்திகளும், தாவர இனவிருத்தி, மற்றும் வேளாண்மை ஆதரவு நடவடிக்கைகள் | 98,006 | 143,234 | 160,305 | 74,181 | 84,958 | 81,518 |
| மீன்பிடி | 188,007 | 274,710 | 318,041 | 137,555 | 123,128 | 126,839 |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 355,214 | 450,745 | 400,852 | 287,969 | 198,612 | 154,291 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலையின் உற்பத்தி | 1,097,498 | 1,704,133 | 1,924,359 | 1,014,150 | 869,373 | 899,777 |
| புடவைகள், அணியும் ஆடை மற்றும் தோல் பொருட்களின் உற்பத்தி | 953,158 | 1,516,831 | 1,433,732 | 473,911 | 511,863 | 450,498 |
| ஏனைய தயாரிப்புகள் | 1,113,427 | 1,508,296 | 1,592,902 | 759,090 | 581,223 | 550,106 |
| மின்வலு உருவாக்கம், நீர்வழங்கல் மற்றும் வடிகால் | 184,103 | 71,461 | 298,262 | 230,014 | 220,187 | 213,563 |
| கட்டடவாக்கம் | 1,572,211 | 1,921,624 | 1,421,045 | 1,172,761 | 927,321 | 734,859 |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் | 2,254,632 | 3,344,708 | 3,863,407 | 1,675,083 | 1,675,534 | 1,677,928 |
| போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் | 1,644,942 | 2,644,080 | 3,633,369 | 1,344,119 | 1,384,459 | 1,438,759 |
| தங்குமிடம் மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள் | 164,560 | 350,895 | 517,732 | 130,743 | 166,030 | 209,140 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 475,127 | 575,547 | 559,248 | 418,083 | 416,328 | 361,295 |
| நிதியியல் மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள் | 1,120,638 | 1,687,303 | 2,165,247 | 744,764 | 608,635 | 576,239 |
| உண்மைத்துறை நடவடிக்கைகள் மற்றும் தொழில்சார், அறிவியல், தொழில்நுட்ப நிர்வாக மற்றும் ஆதரவுப் பணி நடவடிக்கைகள் | 1,203,953 | 1,461,518 | 1,714,004 | 932,460 | 802,924 | 775,825 |
| பொது நிர்வாக, பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள் | 1,770,239 | 1,947,566 | 2,055,478 | 1,172,791 | 1,169,143 | 1,162,374 |
| ஏனைய பணிகள் (சுய பணிகள் நீங்கலாக) | 1,206,712 | 1,708,257 | 2,048,824 | 992,662 | 995,154 | 998,877 |
| **அடிப்படை விலையில் மொத்தப் பெறுமதி கூட்டப்பட்டது** | **16,664,532** | **22,937,682** | **25,916,480** | **12,299,149** | **11,437,626** | **11,137,782** |
| பொருட்கள் மீது வரிகள் கழித்த மானியங்கள் | 947,839 | 1,126,080 | 1,713,185 | 826,356 | 723,576 | 743,954 |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **17,612,370** | **24,063,762** | **27,629,665** | **13,125,505** | **12,161,201** | **11,881,736** |
| செலவின அணுகுமுறை | | | | | | |
| நுகர்வுச் செலவினம் | 12,443,651 | 18,038,220 | 21,051,610 | 9,297,802 | 9,279,727 | 9,078,316 |
| தனியார் | 10,779,024 | 16,310,959 | 19,158,507 | 7,959,371 | 7,922,720 | 7,795,132 |
| அரசு | 1,664,627 | 1,727,261 | 1,893,103 | 1,338,431 | 1,357,007 | 1,283,184 |
| மொத்த மூலதன உருவாக்கம் | 6,469,768 | 6,883,029 | 6,990,752 | 4,627,584 | 2,872,361 | 2,644,879 |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு செலவினம்** | 18,913,420 | 24,921,249 | 28,042,363 | 13,925,386 | 12,152,088 | 11,723,195 |
| பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதி | 2,980,263 | 5,187,912 | 5,634,247 | 2,159,760 | 2,380,525 | 2,649,808 |
| பொருட்கள் மற்றும் பணிகள் இறக்குமதி | 4,281,313 | 6,045,399 | 6,046,945 | 2,959,641 | 2,371,412 | 2,491,267 |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **17,612,370** | **24,063,762** | **27,629,665** | **13,125,505** | **12,161,201** | **11,881,736** |
| வருமான அணுகுமுறை | | | | | | |
| ஊழியர் இழப்பீடு | 4,846,606 | 6,204,469 | 6,159,055 | 3,421,335 | 3,382,269 | 2,981,040 |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 5,806,619 | 8,116,619 | 9,833,760 | 4,335,046 | 3,737,065 | 3,838,854 |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 5,008,924 | 7,148,973 | 8,739,599 | 3,708,116 | 3,143,429 | 3,278,404 |
| நிலையான மூலதன நுகர்வு | 797,695 | 967,327 | 1,094,161 | 626,930 | 593,636 | 560,449 |
| மொத்த கலப்பு வருமானம் | 5,967,807 | 8,560,202 | 9,741,337 | 4,503,363 | 4,281,197 | 4,235,566 |
| தேறிய கலப்பு வருமானம் | 5,698,277 | 8,209,465 | 9,359,281 | 4,308,378 | 4,112,656 | 4,073,869 |
| நிலையான மூலதன நுகர்வு | 269,530 | 350,737 | 382,056 | 194,985 | 168,542 | 161,697 |
| உற்பத்தி மீது ஏனைய வரிகளை கழித்த மானியங்கள் | 43,500 | 56,711 | 182,329 | 39,405 | 37,094 | 82,322 |
| **அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டப்பட்டவை** | **16,664,532** | **22,937,682** | **25,916,480** | **12,299,149** | **11,437,626** | **11,137,782** |
| உற்பத்திகள் மீது வரிகள் கழித்த மானியங்கள் | 947,838 | 1,126,080 | 1,713,185 | 826,356 | 723,575 | 743,954 |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **17,612,370** | **24,063,762** | **27,629,665** | **13,125,505** | **12,161,201** | **11,881,736** |

(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (அடிப்படையாண்டு 2015)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## குடித்தொகை, தொழிற்படை மற்றும் வெளிநாட்டுத் தொழில்நிலை

| விடயம் | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 (அ) |
|---|---|---|---|---|---|
| **குடித்தொகையியல்** | | | | | |
| நடுவாண்டு குடித்தொகை, '000 (ஆ) | 21,803 | 21,919 | 22,156 | 22,181 | 22,037 |
| ஆண் | 10,556 | 10,613 | 10,727 | 10,470 | 10,670 |
| பெண் | 11,247 | 11,306 | 11,429 | 11,441 | 11,367 |
| நடுவாண்டுக் குடித்தொகை வளர்ச்சி வீதம், % | 0.6 | 0.5 | 1.1 | 0.1 | -0.6 |
| குடித்தொகை அடர்த்தி, சதுர கிலோ மீற்றர் ஒன்றிற்கு ஆட்கள் | 348 | 350 | 353 | 354 | 351 |
| **தொழிற்படைப் போக்குகள் (இ)** | | | | | |
| தொழிற்படை, '000 | 8,592 | 8,467 | 8,553 | 8,547 | 8,408 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (ஈ) | 52.3 | 50.6 | 49.9 | 49.8 | 48.6 |
| பால் அடிப்படையில் | | | | | |
| ஆண் | 73.0 | 71.9 | 71.0 | 70.5 | 68.6 |
| பெண் | 34.5 | 32.0 | 31.8 | 32.1 | 31.3 |
| தொழில்நிலை | | | | | |
| அரசதுறை ஊழியர்கள் | 14.9 | 14.8 | 15.2 | 15.2 | 14.6 |
| தனியார்துறை ஊழியர்கள் | 43.0 | 42.7 | 42.0 | 42.8 | 44.5 |
| தொழில் தருநர் | 2.6 | 2.5 | 2.7 | 3.0 | 2.6 |
| சுயதொழில் புரிவோர் | 32.5 | 33.2 | 33.4 | 33.0 | 32.8 |
| கொடுப்பனவற்ற குடும்பத் தொழிலாளர் | 7.0 | 6.8 | 6.6 | 6.0 | 5.5 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| பொருளாதார நடவடிக்கையின்படி தொழில்நிலை (உ) | | | | | |
| வேளாண்மை | 25.3 | 27.1 | 27.3 | 26.5 | 26.1 |
| கைத்தொழில் | 27.6 | 26.9 | 26.0 | 26.5 | 25.5 |
| பணிகள் | 47.1 | 46.0 | 46.7 | 47.0 | 48.4 |
| தொழில்வாய்ப்பின்மை, தொழிற்படையின் % ஆக | 4.8 | 5.5 | 5.1 | 4.7 | 4.7 |
| பால் அடிப்படையில் | | | | | |
| ஆண் | 3.3 | 4.0 | 3.7 | 3.7 | 3.6 |
| பெண் | 7.4 | 8.5 | 7.9 | 6.5 | 7.0 |
| இளைஞர் தொழில்வாய்ப்பின்மை (15-24 வயதுடையோர்) | 21.5 | 26.5 | 26.5 | 22.8 | 23.0 |
| **வெளிநாட்டுத் தொழில்நிலை** | | | | | |
| மொத்த வேலைவாய்ப்புகள் | 203,087 | 53,711 | 122,264 | 311,056 | 297,656 |
| பால் அடிப்படையில் | | | | | |
| ஆண் (%) | 60.2 | 60.5 | 66.3 | 60.1 | 55.3 |
| பெண் (%) | 39.8 | 39.5 | 33.7 | 39.9 | 44.7 |
| மனிதவலு வகையின்படி | | | | | |
| தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் (%) | 74.8 | 74.0 | 74.1 | 66.1 | 70.1 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் (%) | 25.2 | 26.0 | 25.9 | 33.9 | 29.9 |

(அ) தற்காலிகமானது
(ஆ) தரவுகள் குடித்தொகை தொகைமதிப்பு மற்றும் வீடமைப்பு - 2012இனை அடிப்படையாகக் கொண்டுள்ளன
(இ) 15 வயதிற்கும் அதற்கு மேற்பட்டதுமான வீட்டலகு குடித்தொகை
(ஈ) வீட்டலகு குடித்தொகையின் சதவீதமாக தொழிற்படை
(உ) பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தல் - திருத்தம் 4இனை அடிப்படையாகக் கொண்டது

*மூலங்கள்:* பதிவாளர் நாயகத் திணைக்களம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

அட்டவணை 3

## கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு, 2021 = 100)

| காலம் | | சுட்டெண் | | மாதத்திற்கு மாதம் சதவீத மாற்றம் | | ஆண்டுக்கு ஆண்டு சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | கொ.நு.வி.சு | கொ.நு.வி.சு (மையம்) | கொ.நு.வி.சு | கொ.நு.வி.சு (மையம்) | கொ.நு.வி.சு | கொ.நு.வி.சு (மையம்) |
| 2023 | சனவரி | 188.6 | 172.4 | 0.5 | 0.5 | - | - |
| | பெப்புருவரி | 189.5 | 172.3 | 0.5 | -0.1 | 50.6 | 43.6 |
| | மாச்சு | 195.0 | 171.9 | 2.9 | -0.2 | 50.3 | 39.1 |
| | ஏப்பிறல் | 192.3 | 171.5 | -1.4 | -0.2 | 35.3 | 27.8 |
| | மே | 192.3 | 171.0 | 0.0 | -0.3 | 25.2 | 20.3 |
| | யூன் | 192.3 | 169.9 | 0.0 | -0.6 | 12.0 | 9.8 |
| | யூலை | 190.2 | 170.4 | -1.1 | 0.3 | 6.3 | 5.9 |
| | ஓகத்து | 190.1 | 171.2 | -0.1 | 0.5 | 4.0 | 4.6 |
| | செத்தெம்பர் | 191.8 | 172.0 | 0.9 | 0.5 | 1.3 | 1.9 |
| | ஒத்தோபர் | 191.4 | 172.4 | -0.2 | 0.2 | 1.5 | 1.2 |
| | நவெம்பர் | 193.4 | 172.4 | 1.0 | 0.0 | 3.4 | 0.8 |
| | திசெம்பர் | 195.1 | 172.5 | 0.9 | 0.1 | 4.0 | 0.6 |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 4

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு, 2021 = 100)

| காலம் | | சுட்டெண் | | மாதத்திற்கு மாதம் சதவீத மாற்றம் | | ஆண்டுக்கு ஆண்டு சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மையம்) |
| 2023 | சனவரி | 201.8 | 189.8 | 0.7 | 1.0 | 53.2 | 52.0 |
| | பெப்புருவரி | 204.1 | 189.4 | 1.1 | -0.2 | 53.6 | 50.1 |
| | மாச்சு | 204.8 | 188.1 | 0.3 | -0.7 | 49.2 | 44.2 |
| | ஏப்பிறல் | 202.7 | 188.2 | -1.0 | 0.1 | 33.6 | 31.8 |
| | மே | 203.1 | 187.8 | 0.2 | -0.2 | 22.1 | 21.6 |
| | யூன் | 203.3 | 186.5 | 0.1 | -0.7 | 10.8 | 11.3 |
| | யூலை | 201.9 | 188.0 | -0.7 | 0.8 | 4.6 | 6.3 |
| | ஓகத்து | 201.9 | 188.7 | 0.0 | 0.4 | 2.1 | 4.1 |
| | செத்தெம்பர் | 203.5 | 189.0 | 0.8 | 0.2 | 0.8 | 1.7 |
| | ஒத்தோபர் | 203.6 | 189.2 | 0.0 | 0.1 | 1.0 | 0.6 |
| | நவெம்பர் | 206.0 | 189.3 | 1.2 | 0.1 | 2.8 | 0.8 |
| | திசெம்பர் | 208.8 | 189.7 | 1.4 | 0.2 | 4.2 | 0.9 |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## கூலி வீதச் சுட்டெண்கள்

| | சுட்டெண் | | வருடாந்த சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|
| | பெயரளவு | உண்மை (அ) | பெயரளவு | உண்மை (அ) |
| **அரச துறை ஊழியர்களின் கூலி வீதச் சுட்டெண் (2016=100) (ஆ)** | | | | |
| 2020 | 114.6 | 94.8 | 9.2 | 2.9 |
| 2021 | 114.6 | 88.7 | 0.0 | -6.4 |
| 2022 | 133.1 | 70.5 | 16.1 | -20.6 |
| 2023 (இ) | 133.1 | 58.1 | 0.0 | -17.5 |
| **முறைசார் தனியார் துறை ஊழியர்களின் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண் (திசெம்பர் 1978=100) (ஈ)** | | | | |
| 2020 | 4,282.0 | 88.8 (உ) | 0.2 | -4.2 |
| 2021 | 7,469.5 | 146.0 (உ) | 74.4 | 64.3 |
| 2022 | 8,198.6 | 112.9 (உ) | 9.8 | -22.7 |
| 2023 (இ) | 8,232.9 | 93.0 (உ) | 0.4 | -17.6 |
| **முறைசாரா தனியார் துறை ஊழியர்களின் கூலி வீதச் சுட்டெண் (2018=100) (ஊ)** | | | | |
| 2020 | 112.7 | 102.6 | 6.4 | 0.2 |
| 2021 | 123.1 | 104.7 | 9.2 | 2.0 |
| 2022 | 153.3 | 88.3 | 24.5 | -15.7 |
| 2023 (இ) | 170.8 | 82.0 | 11.4 | -7.1 |

(அ) தே.நு.வி.சுட்டெண் அடிப்படையில் (2013=100)

(ஆ) பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் 2016 பெப்புருவரி 25இல் வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016இல் பொதுத்துறை சம்பள கட்டமைப்பிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்களைப் பிரதிபலிப்பதற்காக பொதுத்துறை கூலி வீதச் சுட்டெண்ணின் அடியாண்டு 2016க்கு (2012 இலிருந்து) மீள்தளப்படுத்தப்பட்டது. அடிப்படை ஆண்டு தொடர்பான தரவு நவெம்பர் 2016இல் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட அரசு மற்றும் அரசுசார் துறை தொழில் நிலை கணக்கெடுப்பிலிருந்து தொழில்நிலை கட்டமைப்பு பெறப்பட்டது.

(இ) தற்காலிகமானது

(ஈ) 1978 திசெம்பர் 31இல் தொழிலிலுள்ளோரின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிலையான நிறைகளில் சுட்டெண்கள் கணிக்கப்படுகின்றன.சுட்டெண்களின் கணிப்புக்கு பயன்படுத்தப்பட்ட கூலி வீதங்கள், கூலி நிர்ணய சபையினால் ஒவ்வொரு வர்த்தகத்திற்கும் தீர்மானிக்கப்பட்ட குறைந்த கூலிகளாகும்

(உ) கொ.நு.வி.சுட்டெண் அடிப்படையில் (2006/07=100)

(ஊ) முறைசாரா தனியார் துறை கூலிகள் மற்றும் தொழில்நிலைக் கட்டமைப்பில் ஏற்பட்ட அண்மைய மாற்றங்களை கைப்பற்றும் நோக்கத்திற்காக முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண் 2018இற்கு (2012 இலிருந்து) மீள்தளப்படுத்தப்பட்டது. இச்சுட்டெண் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் மூலம் சேகரிக்கப்பட்ட முறைசாரா தனியார் துறை கூலித்தரவுகளைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. 2018இல் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட காலாண்டு தொழிற்படை அளவீட்டிலிருந்து அடிப்படையாண்டு தொழில்நிலை கட்டமைப்பு பெறப்பட்டது.

## ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்

ஐ.அ.டொலர் மில்லியனில் பெறுமதி

| வகை | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 (அ) | | மாற்றம் (%) 2022/2023 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெறுமதி | பங்கு (%) | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,461.9** | **2,336.2** | **2,729.5** | **2,568.0** | **2,566.5** | **21.5** | **-0.1** |
| தேயிலை | 1,346.4 | 1,240.9 | 1,324.4 | 1,258.8 | 1,309.9 | 11.0 | 4.1 |
| வாசனைத்திரவியங்கள் | 312.5 | 333.5 | 454.8 | 368.7 | 392.9 | 3.3 | 6.5 |
| தேங்காய் | 329.5 | 345.2 | 425.2 | 400.3 | 336.8 | 2.8 | -15.9 |
| கடலுணவு | 262.5 | 189.8 | 274.1 | 269.0 | 262.2 | 2.2 | -2.5 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 120.0 | 134.7 | 148.8 | 178.8 | 180.9 | 1.5 | 1.2 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 34.7 | 25.5 | 31.6 | 24.4 | 28.1 | 0.2 | 15.3 |
| இறப்பர் | 24.2 | 30.1 | 42.2 | 41.4 | 28.0 | 0.2 | -32.2 |
| காய்கறிகள் | 32.0 | 36.6 | 28.5 | 26.7 | 27.7 | 0.2 | 3.8 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **9,426.3** | **7,672.0** | **9,702.0** | **10,465.3** | **9,277.7** | **77.9** | **-11.3** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 5,596.5 | 4,423.1 | 5,435.1 | 5,952.0 | 4,878.9 | 41.0 | -18.0 |
| இறப்பர் உற்பத்திகள் | 866.1 | 786.1 | 1,050.4 | 977.0 | 902.2 | 7.6 | -7.7 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 400.0 | 337.5 | 500.9 | 580.9 | 598.2 | 5.0 | 3.0 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 521.1 | 373.6 | 506.4 | 568.0 | 539.4 | 4.5 | -5.0 |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 447.0 | 464.0 | 586.9 | 519.5 | 539.3 | 4.5 | 3.8 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 305.7 | 181.5 | 276.7 | 450.6 | 500.0 | 4.2 | 11.0 |
| இரசாயன உற்பத்திகள் | 176.3 | 172.7 | 223.2 | 223.5 | 193.5 | 1.6 | -13.4 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 176.5 | 110.9 | 156.4 | 176.7 | 178.3 | 1.5 | 0.9 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 145.9 | 71.4 | 148.2 | 129.3 | 149.3 | 1.3 | 15.4 |
| விலங்குத்தீன் | 129.0 | 102.9 | 149.4 | 170.5 | 145.6 | 1.2 | -14.6 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 129.4 | 99.3 | 129.9 | 136.9 | 114.0 | 1.0 | -16.7 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 102.9 | 53.9 | 58.4 | 85.8 | 71.2 | 0.6 | -17.0 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 73.5 | 176.3 | 78.6 | 60.9 | 56.3 | 0.5 | -7.6 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 48.3 | 47.9 | 50.0 | 53.1 | 55.1 | 0.5 | 3.9 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 30.1 | 24.0 | 37.4 | 38.1 | 34.0 | 0.3 | -10.7 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 278.1 | 247.0 | 314.1 | 342.4 | 322.5 | 2.7 | -5.8 |
| **கனிம ஏற்றுமதிகள்** | **33.9** | **25.1** | **44.5** | **50.0** | **38.5** | **0.3** | **-23.1** |
| **வகைப்படுத்தப்படாதவை** | **17.9** | **14.1** | **22.6** | **23.2** | **28.0** | **0.2** | **20.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **11,940.0** | **10,047.4** | **12,498.6** | **13,106.4** | **11,910.7** | **100.0** | **-9.1** |

(அ) தற்காலிகமானவை

*மூலங்கள்:* இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

## இறக்குமதிகளின் உள்ளடக்கம்

ஐ.அ.டொலர் மில்லியனில் பெறுமதி

| வகை | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 (அ) | | மாற்றம் (%) 2022/2023 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெறுமதி | பங்கு (%) | |
| **நுகா்வுப் பொருட்கள்** | **3,956.5** | **3,401.7** | **3,848.7** | **2,813.0** | **3,043.9** | **18.1** | **8.2** |
| **உணவு மற்றும் குடிவகைகள்** | **1,426.9** | **1,554.4** | **1,666.5** | **1,607.9** | **1,693.0** | **10.1** | **5.3** |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 201.2 | 277.1 | 288.8 | 257.8 | 435.5 | 2.6 | 68.9 |
| காய்கறிகள் (ஆ) | 310.0 | 352.9 | 384.3 | 318.4 | 358.6 | 2.1 | 12.6 |
| பால் உற்பத்திகள் | 311.9 | 333.8 | 317.7 | 225.3 | 273.7 | 1.6 | 21.5 |
| எண்ணெய்யும் கொழுப்பும் | 29.4 | 106.9 | 184.1 | 43.9 | 133.9 | 0.8 | 205.2 |
| வாசனைத்திரவியங்கள் | 115.4 | 126.9 | 127.2 | 136.6 | 133.4 | 0.8 | -2.4 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 36.1 | 33.6 | 97.4 | 430.5 | 116.9 | 0.7 | -72.8 |
| கடலுணவு | 214.6 | 188.6 | 122.3 | 66.4 | 79.4 | 0.5 | 19.6 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 208.4 | 134.7 | 144.7 | 128.9 | 161.6 | 1.0 | 25.3 |
| **ஏனைய நுகா்வுப் பொருட்கள்** | **2,529.6** | **1,847.3** | **2,182.2** | **1,205.1** | **1,350.9** | **8.0** | **12.1** |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 552.6 | 595.5 | 882.5 | 533.4 | 667.0 | 4.0 | 25.0 |
| புடவை மற்றும் துணைப்பொருட்கள் | 275.1 | 200.7 | 221.3 | 215.6 | 170.0 | 1.0 | -21.1 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 171.9 | 146.9 | 161.2 | 116.3 | 122.1 | 0.7 | 5.0 |
| தொலைத்தொடா்பூட்டல் சாதனங்கள் | 247.2 | 268.4 | 382.9 | 69.0 | 98.8 | 0.6 | 43.3 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 206.6 | 174.2 | 257.1 | 85.5 | 72.4 | 0.4 | -15.4 |
| தனியாள் ஊா்திகள் | 815.7 | 282.9 | 12.8 | 11.7 | 27.7 | 0.2 | 136.9 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 260.5 | 178.7 | 264.4 | 173.7 | 192.9 | 1.1 | 11.1 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **11,369.6** | **9,076.5** | **12,308.9** | **12,438.8** | **11,006.6** | **65.5** | **-11.5** |
| எரிபொருள் | 3,891.6 | 2,542.6 | 3,742.9 | 4,896.8 | 4,702.6 | 28.0 | -4.0 |
| மசகெண்ணெய் | 970.7 | 583.0 | 625.1 | 483.8 | 1,137.5 | 6.8 | 135.1 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 2,706.4 | 1,742.2 | 2,840.0 | 4,048.2 | 3,095.4 | 18.4 | -23.5 |
| நிலக்கரி | 214.6 | 217.3 | 277.8 | 364.8 | 469.8 | 2.8 | 28.8 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 2,909.4 | 2,335.1 | 3,066.9 | 3,065.2 | 2,371.2 | 14.1 | -22.6 |
| இரசாயன உற்பத்திகள் | 831.5 | 831.5 | 1,074.4 | 966.2 | 814.7 | 4.8 | -15.7 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 612.9 | 540.2 | 765.7 | 650.8 | 474.6 | 2.8 | -27.1 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 457.3 | 383.1 | 468.9 | 465.9 | 412.4 | 2.5 | -11.5 |
| கோதுமை மற்றும் சோளம் | 346.4 | 384.4 | 418.3 | 303.1 | 338.2 | 2.0 | 11.6 |
| அடிப்படை உலோகங்கள் | 562.8 | 460.3 | 866.4 | 323.2 | 313.8 | 1.9 | -2.9 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 201.4 | 117.2 | 143.6 | 203.8 | 268.4 | 1.6 | 31.7 |
| வளமாக்கி | 221.4 | 258.9 | 158.2 | 275.9 | 235.0 | 1.4 | -14.8 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 187.9 | 200.8 | 264.2 | 214.5 | 233.8 | 1.4 | 9.0 |
| ஊா்திகளும் பொறி உதிரிப்பாகங்களும் | 270.1 | 239.4 | 349.4 | 254.9 | 232.5 | 1.4 | - 8.8 |
| இறப்பா் மற்றும் அதன் பொருட்கள் | 238.9 | 218.7 | 400.7 | 334.7 | 200.2 | 1.2 | -40.2 |
| உணவுத் தயாரிப்புக்கள் | 227.7 | 235.1 | 269.9 | 189.7 | 171.3 | 1.0 | -9.7 |
| கனிம உற்பத்திகள் | 243.3 | 168.9 | 158.9 | 123.7 | 80.9 | 0.5 | -34.6 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 167.0 | 160.3 | 160.4 | 170.4 | 156.9 | 0.9 | -7.9 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,602.6** | **3,563.2** | **4,462.7** | **3,030.5** | **2,744.6** | **16.3** | **-9.4** |
| பொறி மற்றும் கருவிகள் | 2,489.7 | 2,176.1 | 2,809.5 | 1,969.0 | 1,867.6 | 11.1 | -5.1 |
| கட்டடப் பொருட்கள் | 1,508.7 | 1,035.6 | 1,248.9 | 926.3 | 775.1 | 4.6 | -16.3 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 596.6 | 348.3 | 398.5 | 132.1 | 98.5 | 0.6 | -25.4 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 7.6 | 3.2 | 5.8 | 3.0 | 3.3 | ... | 9.2 |
| **வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **8.3** | **14.0** | **17.1** | **8.8** | **16.0** | **0.1** | **82.9** |
| **மொத்த இறக்குமதிகள்** | **19,937.1** | **16,055.4** | **20,637.4** | **18,291.0** | **16,811.1** | **100.0** | **-8.1** |
| **எண்ணெய் அல்லாத இறக்குமதிகள்** | **16,045.4** | **13,512.8** | **16,894.6** | **13,394.2** | **12,108.5** | **72.0** | **-9.6** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

*மூலங்கள்:* இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

## வர்த்தகத்தின் போக்கு - ஏற்றுமதிகள் (அ)

ஐ.அ.டொலர் மில்லியனில் பெறுமதி

| நாடுகள் | 2019 | | 2020 | | 2021 | | 2022 | | 2023 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பங்கு (%) | பெறுமதி | பங்கு (%) | பெறுமதி | பங்கு (%) | பெறுமதி | பங்கு (%) | பெறுமதி | பங்கு (%) |
| **2023இல் பாரியளவில் ஏற்றுமதி செய்த நாடுகள்** | | | | | | | | | | |
| ஐக்கிய அமெரிக்கா | 3,141 | 26.3 | 2,500 | 24.9 | 3,108 | 24.9 | 3,321 | 25.3 | 2,769 | 23.2 |
| இந்தியா | 768 | 6.4 | 606 | 6.0 | 829 | 6.6 | 860 | 6.6 | 853 | 7.2 |
| ஐக்கிய இராச்சியம் | 998 | 8.4 | 908 | 9.0 | 938 | 7.5 | 963 | 7.3 | 849 | 7.1 |
| இத்தாலி | 528 | 4.4 | 455 | 4.5 | 581 | 4.6 | 641 | 4.9 | 675 | 5.7 |
| ஜேர்மனி | 648 | 5.4 | 570 | 5.7 | 758 | 6.1 | 742 | 5.7 | 589 | 4.9 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | 276 | 2.3 | 190 | 1.9 | 287 | 2.3 | 355 | 2.7 | 364 | 3.1 |
| நெதர்லாந்து | 301 | 2.5 | 290 | 2.9 | 426 | 3.4 | 428 | 3.3 | 343 | 2.9 |
| பிரான்சு | 191 | 1.6 | 184 | 1.8 | 252 | 2.0 | 249 | 1.9 | 304 | 2.5 |
| கனடா | 241 | 2.0 | 213 | 2.1 | 316 | 2.5 | 361 | 2.8 | 294 | 2.5 |
| சீனா | 240 | 2.0 | 225 | 2.2 | 277 | 2.2 | 255 | 1.9 | 279 | 2.3 |
| **ஏனைய ஏற்றுமதி செய்யப்படும் நாடுகள்** | | | | | | | | | | |
| அவுஸ்திரேலியா | 200 | 1.7 | 175 | 1.7 | 260 | 2.1 | 256 | 2.0 | 228 | 1.9 |
| ஆஸ்திரியா | 44 | 0.4 | 33 | 0.3 | 44 | 0.4 | 51 | 0.4 | 45 | 0.4 |
| அசர்பைஜான் | 56 | 0.5 | 53 | 0.5 | 49 | 0.4 | 69 | 0.5 | 51 | 0.4 |
| வங்காளதேசம் | 162 | 1.4 | 153 | 1.5 | 222 | 1.8 | 211 | 1.6 | 174 | 1.5 |
| பெல்ஜியம் | 356 | 3.0 | 295 | 2.9 | 341 | 2.7 | 310 | 2.4 | 223 | 1.9 |
| பிரேசில் | 57 | 0.5 | 43 | 0.4 | 60 | 0.5 | 65 | 0.5 | 73 | 0.6 |
| சிலி | 40 | 0.3 | 55 | 0.5 | 56 | 0.4 | 46 | 0.4 | 47 | 0.4 |
| ஹொங்கொங் | 135 | 1.1 | 108 | 1.1 | 179 | 1.4 | 168 | 1.3 | 173 | 1.4 |
| இந்தோனேசியா | 41 | 0.3 | 35 | 0.3 | 49 | 0.4 | 50 | 0.4 | 50 | 0.4 |
| ஈரான் | 112 | 0.9 | 79 | 0.8 | 78 | 0.6 | 82 | 0.6 | 43 | 0.4 |
| ஈராக் | 126 | 1.1 | 110 | 1.1 | 177 | 1.4 | 156 | 1.2 | 129 | 1.1 |
| அயர்லாந்து | 84 | 0.7 | 60 | 0.6 | 75 | 0.6 | 96 | 0.7 | 81 | 0.7 |
| இஸ்ரேல் | 119 | 1.0 | 103 | 1.0 | 234 | 1.9 | 189 | 1.4 | 180 | 1.5 |
| யப்பான் | 283 | 2.4 | 188 | 1.9 | 227 | 1.8 | 231 | 1.8 | 190 | 1.6 |
| ஜோர்டான் | 35 | 0.3 | 37 | 0.4 | 47 | 0.4 | 62 | 0.5 | 88 | 0.7 |
| கென்யா | 24 | 0.2 | 25 | 0.2 | 40 | 0.3 | 44 | 0.3 | 44 | 0.4 |
| லிபியா | 46 | 0.4 | 29 | 0.3 | 47 | 0.4 | 42 | 0.3 | 42 | 0.4 |
| மலேசியா | 48 | 0.4 | 57 | 0.6 | 74 | 0.6 | 66 | 0.5 | 62 | 0.5 |
| மாலைதீவு | 114 | 1.0 | 78 | 0.8 | 103 | 0.8 | 106 | 0.8 | 113 | 0.9 |
| மெக்சிக்கோ | 161 | 1.3 | 135 | 1.3 | 205 | 1.6 | 190 | 1.4 | 183 | 1.5 |
| நோர்வே | 17 | 0.1 | 16 | 0.2 | 22 | 0.2 | 29 | 0.2 | 36 | 0.3 |
| பாகிஸ்தான் | 82 | 0.7 | 74 | 0.7 | 92 | 0.7 | 78 | 0.6 | 74 | 0.6 |
| போலந்து | 67 | 0.6 | 64 | 0.6 | 81 | 0.7 | 72 | 0.5 | 62 | 0.5 |
| ருசியா | 167 | 1.4 | 163 | 1.6 | 152 | 1.2 | 139 | 1.1 | 144 | 1.2 |
| சவூதி அரேபியா | 86 | 0.7 | 76 | 0.8 | 76 | 0.6 | 98 | 0.7 | 99 | 0.8 |
| சிங்கப்பூர் | 120 | 1.0 | 93 | 0.9 | 101 | 0.8 | 131 | 1.0 | 123 | 1.0 |
| தென்னாபிரிக்கா | 41 | 0.3 | 33 | 0.3 | 41 | 0.3 | 35 | 0.3 | 39 | 0.3 |
| தென் கொரியா | 75 | 0.6 | 71 | 0.7 | 80 | 0.6 | 82 | 0.6 | 75 | 0.6 |
| ஸ்பெயின் | 69 | 0.6 | 70 | 0.7 | 93 | 0.7 | 101 | 0.8 | 89 | 0.8 |
| சுவீடன் | 73 | 0.6 | 74 | 0.7 | 108 | 0.9 | 111 | 0.8 | 97 | 0.8 |
| சுவிட்சர்லாந்து | 106 | 0.9 | 91 | 0.9 | 146 | 1.2 | 147 | 1.1 | 169 | 1.4 |
| சிரியா | 55 | 0.5 | 45 | 0.5 | 38 | 0.3 | 34 | 0.3 | 43 | 0.4 |
| தாய்லாந்து | 101 | 0.8 | 39 | 0.4 | 62 | 0.5 | 62 | 0.5 | 62 | 0.5 |
| துருக்கி | 210 | 1.8 | 208 | 2.1 | 178 | 1.4 | 120 | 0.9 | 196 | 1.6 |
| வியட்நாம் | 79 | 0.7 | 37 | 0.4 | 63 | 0.5 | 47 | 0.4 | 37 | 0.3 |
| ஏனையவை | 1,016 | 8.5 | 901 | 9.0 | 826 | 6.6 | 1,154 | 8.8 | 1,028 | 8.6 |
| **ஐரோப்பிய ஒன்றியம் (இ)** | 3,552 | 29.8 | 3,177 | 31.6 | 2,967 | 23.7 | 3,035 | 23.2 | 2,718 | 22.8 |
| **ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் (ஈ)** | 1,252 | 10.5 | 1,004 | 10.0 | 1,338 | 10.7 | 1,343 | 10.2 | 1,260 | 10.6 |
| **சார்க் பிராந்தியம் (உ)** | 1,133 | 9.5 | 917 | 9.1 | 1,259 | 10.1 | 1,259 | 9.6 | 1,217 | 10.2 |
| **மத்திய கிழக்கு (ஊ)** | 1,092 | 9.1 | 918 | 9.1 | 1,185 | 9.5 | 1,159 | 8.8 | 1,201 | 10.1 |
| **ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (எ)** | 1,247 | 10.4 | 1,058 | 10.5 | 1,410 | 11.3 | 1,409 | 10.7 | 1,383 | 11.6 |
| **பிம்ஸ்டெக் (ஏ)** | 1,046 | 8.8 | 812 | 8.1 | 1,127 | 9.0 | 1,139 | 8.7 | 1,092 | 9.2 |
| **சுதந்திர அரசுகளின் பொதுநலவாய நாடுகள் (ஐ)** | 271 | 2.3 | 265 | 2.6 | 250 | 2.0 | 245 | 1.9 | 234 | 2.0 |

(அ) இங்கு குறிப்பிடப்படாத நாடுகளிற்கான ஏற்றுமதிகள் ஒப்பீட்டளவில் சிறிய அளவானதாகும்.

(ஆ) தற்காலிகமானது

(இ ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளாவன: ஆஸ்திரியா, பெல்ஜியம், பல்கேரியா, குறோசியா, சைபிரஸ், செக்குடியரசு, டென்மார்க், எஸ்தோனியா, பின்லாந்து, பிரான்சு, ஜேர்மனி, கிரேக்கம், கங்கேரி, அயர்லாந்துக் குடியரசு, இத்தாலி, இலற்வியா, லித்துயேனியா, லக்சம்போர்க், மோல்டா, நெதர்லாந்து, போலந்து, போத்துக்கல், ருமேனியா, சிலோவாக் குடியரசு, சுலோவேனியா, இஸ்பெயின், சுவீடன் மற்றும் ஐக்கிய இராச்சியம். ஐக்கிய இராச்சியம் 2021 இலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ளடக்கப்படவில்லை.

(ஈ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய நாடுகளாவன: வங்காளதேசம், பூட்டான், இந்தியா, ஈரான், மாலைதீவு, மியன்மார், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை

(உ) பிராந்திய கூட்டுறவுக்கான தென் ஆசிய சங்கம். இதன் அங்கத்தவர்கள் ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை

(ஊ) மத்திய கிழக்கு நாடுகள்: பக்ரைன், ஈரான், ஈராக், இஸ்ரேல், யோர்தான், குவைத், ஓமான், பலஸ்தீனம், கட்டார், சவூதி அரேபியா, சிரியா, துருக்கி, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் யேமன்

(எ) ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை. இதன் அங்கத்தவர்கள் வங்காளதேசம், சீனா, இந்தியா, லாவோஸ், மொங்கோலியா, தென்கொரியா மற்றும் இலங்கை

(ஏ) பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காளவிரிகுடாவின் முனைவுகள். இதன் அங்கத்தவர்கள் வங்காளதேசம், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், தாய்லாந்து மற்றும் இலங்கை

(ஐ) பொதுநலவாய கூட்டமைப்பு சுதந்திர நாடுகளின் அங்கத்தவர்களாவன: ஆர்மேனியா, அசர்பைஜான், பெலாருஸ், கசகஸ்தான், கிர்ஜிஸ்தான், மோல்டோவா, ருசியா, தஜிகிஸ்தான், டேக்மனிஸ்தான், உக்ரெயின் மற்றும் உஸ்பெகிஸ்தான்

*மூலங்கள்:* தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

## வர்த்தகத்தின் போக்கு - இறக்குமதிகள் (அ)

ஐ.அ.டொலர் மில்லியனில் பெறுமதி

| நாடுகள் | 2019 | | 2020 | | 2021 | | 2022 | | 2023 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பங்கு (%) | பெறுமதி | பங்கு (%) | பெறுமதி | பங்கு (%) | பெறுமதி | பங்கு (%) | பெறுமதி | பங்கு (%) |
| **2023இல் பாரியளவில் இறக்குமதி செய்த நாடுகள்** | | | | | | | | | | |
| இந்தியா | 3,899 | 19.6 | 3,079 | 19.2 | 4,625 | 22.4 | 4,738 | 25.9 | 3,136 | 18.7 |
| சீனா | 4,034 | 20.2 | 3,579 | 22.3 | 4,756 | 23.0 | 3,285 | 18.0 | 3,030 | 18.0 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | 1,669 | 8.4 | 1,035 | 6.4 | 1,413 | 6.8 | 666 | 3.6 | 1,850 | 11.0 |
| சிங்கப்பூர் | 964 | 4.8 | 692 | 4.3 | 792 | 3.8 | 871 | 4.8 | 866 | 5.2 |
| மலேசியா | 853 | 4.3 | 611 | 3.8 | 803 | 3.9 | 969 | 5.3 | 828 | 4.9 |
| ஐக்கிய அமெரிக்கா | 542 | 2.7 | 495 | 3.1 | 511 | 2.5 | 378 | 2.1 | 504 | 3.0 |
| ருசியா | 206 | 1.0 | 232 | 1.4 | 191 | 0.9 | 376 | 2.1 | 414 | 2.5 |
| இந்தோனேசியா | 422 | 2.1 | 333 | 2.1 | 470 | 2.3 | 343 | 1.9 | 378 | 2.3 |
| ஓமான் | 132 | 0.7 | 191 | 1.2 | 95 | 0.5 | 115 | 0.6 | 343 | 2.0 |
| பாகிஸ்தான் | 370 | 1.9 | 324 | 2.0 | 394 | 1.9 | 342 | 1.9 | 323 | 1.9 |
| **ஏனைய இறக்குமதி செய்யப்படும் நாடுகள்** | | | | | | | | | | |
| அவுஸ்திரேலியா | 153 | 0.8 | 123 | 0.8 | 291 | 1.4 | 182 | 1.0 | 184 | 1.1 |
| ஆஸ்திரியா | 118 | 0.6 | 91 | 0.6 | 61 | 0.3 | 49 | 0.3 | 52 | 0.3 |
| வங்காளதேசம் | 41 | 0.2 | 48 | 0.3 | 83 | 0.4 | 82 | 0.4 | 67 | 0.4 |
| பெல்ஜியம் | 74 | 0.4 | 48 | 0.3 | 117 | 0.6 | 57 | 0.3 | 58 | 0.3 |
| பிரேசில் | 33 | 0.2 | 28 | 0.2 | 37 | 0.2 | 34 | 0.2 | 46 | 0.3 |
| கனடா | 224 | 1.1 | 208 | 1.3 | 119 | 0.6 | 102 | 0.6 | 124 | 0.7 |
| டென்மார்க் | 40 | 0.2 | 50 | 0.3 | 36 | 0.2 | 30 | 0.2 | 33 | 0.2 |
| எகிப்து | 16 | 0.1 | 17 | 0.1 | 18 | 0.1 | 13 | 0.1 | 39 | 0.2 |
| பிரான்சு | 220 | 1.1 | 116 | 0.7 | 137 | 0.7 | 110 | 0.6 | 195 | 1.2 |
| ஜேர்மனி | 388 | 1.9 | 316 | 2.0 | 347 | 1.7 | 286 | 1.6 | 257 | 1.5 |
| ஹொங்கொங் | 304 | 1.5 | 221 | 1.4 | 291 | 1.4 | 247 | 1.3 | 189 | 1.1 |
| ஈராக் | 29 | 0.1 | 9 | 0.1 | 37 | 0.2 | 25 | 0.1 | 84 | 0.5 |
| இஸ்ரேல் | 85 | 0.4 | 67 | 0.4 | 100 | 0.5 | 121 | 0.7 | 100 | 0.6 |
| இத்தாலி | 307 | 1.5 | 266 | 1.7 | 315 | 1.5 | 289 | 1.6 | 244 | 1.5 |
| யப்பான் | 875 | 4.4 | 528 | 3.3 | 419 | 2.0 | 252 | 1.4 | 188 | 1.1 |
| மாலைதீவு | 33 | 0.2 | 35 | 0.2 | 220 | 1.1 | 157 | 0.9 | 134 | 0.8 |
| நெதர்லாந்து | 123 | 0.6 | 82 | 0.5 | 87 | 0.4 | 79 | 0.4 | 89 | 0.5 |
| நியூசிலாந்து | 276 | 1.4 | 301 | 1.9 | 276 | 1.3 | 164 | 0.9 | 251 | 1.5 |
| பிலிபைன்ஸ் | 36 | 0.2 | 43 | 0.3 | 65 | 0.3 | 30 | 0.2 | 23 | 0.1 |
| போலந்து | 20 | 0.1 | 18 | 0.1 | 27 | 0.1 | 25 | 0.1 | 24 | 0.1 |
